கட்டுரைப் பொழில்

ஆசிரியர் :

காலஞ் சென்ற

பெருஞ்சொல் விளக்கனர்

முதுபெரும்புலவர்

அ. மு. சரவண முதலியார்

புத்தக விலை] 1959 [ரூ. 3-0-0

கட்டுரைப் பொழில்

ஆசிரியர் :
காலஞ் சென்ற
பெருஞ்சொல் விளக்கனார்
முதுபெரும்புலவர்
அ. மு. சரவண முதலியார்

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 1.

புத்தக விலை] 1959 [ரூ. 3-0-0

முத்தமிழ் அச்சகம், காஞ்சீபுரம்.

முன்னுரை

'கட்டுரைப்பொழில்' என்னும் இந்த நூலுள் 'வாயுறை வாழ்த்து' முதல் 'பொய்யாமொழி' இறுதியாக ஐந்து கட்டுரைகள் உள்ளன. நடுவிலுள்ள மூன்றாவது கட்டுரை 'திருக்குறளுட்சிலவும் திருத்தொண்டருட் சிலரும்' என்பது. எனவே மாணிக்க வாசகப் பெருமான், இறைவனை, 'முந்திய முதல் நடு இறுதியுமானாய்' எனத் திருவாசகத்துட்கூறியருளியது போல, இந் நூலுட் காணப்படுகின்ற முதலும் நடுவும் ஈறுமாய் உள்ள மூன்றும் திருக்குறளைப்பற்றியனவாய் அமைந்திருத்தல் மகிழ்ச்சிக்குரியது.

இக்கட்டுரைகள், பல கழகங்களில் என்னாற்சொற் பொழிவாக நிகழ்த்தப்பெற்றனவும், 1941-42ல் செட்டி நாட்டிலிருந்து 'இந்திரா' என்னும் பெயருடன் வெளி வந்த திங்கள் வெளியீட்டில் வெளிவந்தனவுமாகும். 'வாயுறை வாழ்த்து' என்னும் தலைப்பில் திருவையாற்று அரசினர் கல்லூரியில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், என் ஆருயிர் நண்பர், காலஞ்சென்ற பண்டித, நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் சிரிய தலைமையிற் பேசினேன். ஐயா அவர்கள் முடிவுரையிற் கூறியவற்றின் சுருக்கம்:

"வாயுறை வாழ்த்து என்ற தலைப்பில் யானும் பேசி இருக்கிறேன்; பிறர் பேசவும் கேட்டிருக்கிறேன். ஆனால், நாங்கள், திருக்குறளை வாயுறை வாழ்த்து என்ற பெயரால் வழங்கிய புலவர் மதுரை அறுவை வாணிகன் இள வேட்டனார் என்பவர் என்று சொல்லி, திருக்குறளைப் பற்றித்தான் பேசினோம். நம் அன்பர் (என்னை) முதலியார் அவர்களோ, தொல்காப்பியத்தில் வாயுறை வாழ்த் திற்குக் கூறிய இலக்கணம் திருக்குறளில் அமைந்து கிடப்பதாலேதான் அப்புலவர் அப்பெயரிட்டார் எனக் கூறி, அந்த இலக்கணம் திருக்குறளில் எங்கெங்குக் காணப்படுகிறதென்பதை எடுத்துக் காட்டியதோடு அந்தத் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு (இதனை

அக்கட்டுரையிற்காண்க) முன்னுள்ள உரையைத் தவிர, புதிய ஓர் உரையும் கூறி, அதற்கியையவும் திருக்குறளிற் சில பகுதிகளைக் காட்டிப்பேசியது இங்குள்ள மாணவர் களுக்கு—ஏன்! ஆசிரியர்களுக்குக்கூட ஒரு நூலை எப்படிப் படிக்கவேண்டுமென்பதற்கு ஓர் வழி காட்டியாக அமைந்துள்ளதென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் நண்பரிடம் (என்னை) ஓர் குறை யுண்டு. அதையும் சொல்லிவிடுகிறேன். அவர்கள் கருத்துக்களை எழுதி வெளியிடுவதில்லை. அவ்வாறு செய்ய வேண்டுமெனப் பல முறை சொல்லியிருக்கிறேன். இன்றும் இக்கழகச் சார்பிலும், என் சொந்த முறையிலும் இக்கருத்துக்கள் நூல் வடிவமாக வெளிவரச் செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறேன்,'' என்பது.

இந்த நூலைப்பற்றிய வகையில் தமிழறிஞர்களும் புலவர்களும் ஆதரித்து ஊக்குவார்களானால், அது யான் வேறு நூல்கள் வெளியிடுவதற்கு ஒரு தூண்டுகோலாய் இருக்குமென்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

அ. மு. சரவணன்

உள்ளுறை

வாயுறை வாழ்த்து ★ ★

'வாயுறை வாழ்த்து' என்பது உலகம் போற்றும் உயர் நூலாகிய திருக்குறளுக்குரிய பதினான்கு பெயர்களுள் ஒன்றாகும். மற்றவை: திருக்குறள், முப்பால், பொய்யாமொழி, திருவள்ளுவப் பயன், உத்தர வேதம், தெய்வ நூல், பொருளுரை, பான்முறை, வள்ளுவர் வைப்பு, திருவள்ளுவர், தமிழ் மறை, பொது மறை, முதுமொழி என்பன.

இப்பெயர்களும் இந்நூலாசிரியருக்கு வழங்கும் பதினொரு பெயர்களும், திருக்குறளைப் பாராட்டிப் பாடிய பழைய புலவர் பெருமக்களால் கூறப்பட்டனவே. இவற்றுள் 'வாயுறை வாழ்த்து' என்பது 'மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்' என்னும் புலவர் பெருமகனாராற் கூறப்பட்டது. அவர் பாடியதாகத் 'திருவள்ளுவ மாலை'யிற் காணப்படும் வெண்பா ஒன்று; அது,

> "இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
> மன்பதைக் கெல்லா மனமகிழ—அன்பொழியா(து)
> உள்ளி உணர உரைத்தாரே ஒதுசீர்
> வள்ளுவர் வாயுறை வாழ்த்து."

என்பது.

இப்புலவர் பெருமான் 'பொய்யாமொழி'யாகிய திருக்குறளை 'வாயுறை வாழ்த்து' என்னும் பெயராற் கூறியதற்குக் காரணம் யாது என்பதை ஆய்ந்து முடிவு செய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாயுறை வாழ்த்தின் இலக்கணம்

ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியனுர்,

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்,
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்(று)
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே."

என்று வாயுறை வாழ்த்திற்கு இலக்கணம் வகுத்தார். "உண்ணும்போது கைப்பாயிருப்பினும், பின்னர் நன்மை பயக்கும் மருந்து போல, கேட்குங் காலத்தில் செவி கைப்பத் துன்பம் பயந்தாலும், பின்பு நலந்தருமே" எனக் கருதி ஒரு நூலாசிரியன் தான் செய்யும் நூலில் 'வேம்பும் கடுவும்' போன்ற வெய்ய சொற்களைத் தடையின்றிக் கூறி வைப்பதுதான் வாயுறை வாழ்த்தின் இலக்கணம் என இத்தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிகிறோம்.

வாய்=வாய் மொழி; உறை=மருந்து; எனவே, 'வாயுறை' என்பது 'சொல்லாகிய மருந்து' எனப் பொருள் பட்டுப் பண்புத் தொகையாகவும், 'வாயின்கண் தோன்றிய மருந்து' என விரிந்து ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ள இடந்தருவதொன்று. இந்த இலக்கணத்தோடு பொருந்தியிருத்தலை அறிந்துதான் திருக்குறளுக்கு வாயுறை வாழ்த்து என்னும் பெயரை 'இளவேட்டனர்' என்னும் புலவர் வழங்கியிருக்கவேண்டு மாதலால், வேம்பும் கடுவும் போன்ற வெய்ய சொற்கள் திருக்குறளில் எங்கெங்குப் பயின்று வருகின்றன என்பதை இனி ஆராய்ந்து காண்போம்:

இதனைக் காணத் தொடங்குமுன், கற்ற—கேட்ட பெரியார் வாயிலிருந்து மக்களை நல்வழிப்படுத்த வெளி வரும் கடுஞ்சொற்கள், ஏனைய இழிஞர், தம் சினங் காரண மாகச் சொல்லும் வசை மொழிகள் போலன்றி, அறிஞர் கள் ஆழ்ந்து காணும் பொருளுடையனவாய் இருக்கு மென்பதை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். உடன்பிறந்தார் இருவருள் மூத்தவன் படிக்காத மூடன், இளையவன் கற்றறிந்த கவிஞன். பங்கு பிரித்தல் காரண

மாக இருவருள்ளும் கலகம் விளைந்தது. தமையன் தம்பியை நோக்கித் 'தடிப்பயலே, நீ செத்தால் யான் கவலையில்லாமலிருப்பேன்!' என்றான். இளையவன் படித்தவனாதலால் அவன் கருத்தையே அந்த வாய்பாட்டாற் கூறாமல், 'என் அருமை அண்ணா, என் மதனியார் தாலி பெருகினால் (அறுந்தால்) ஆகாதோ?' என்றான். இந்த இளைஞன் கூற்றுப் படித்தோர்க்கேயன்றி ஏனையோருக்கு வெளிப்படப் பொருள் தாராதவாறு போலவே, திருவள்ளுவர் கூறிய வேம்பும் கடுவும் போன்ற சுடுமொழிகளும் இருக்கும்.

'பிணம்' என்னும் பொருள் தரும் சுடுமொழிகள்

படிக்காத மக்கள் ஒருவரோடொருவர் பூசலிடுங்கால் 'போடா பிணமே,' எனவும், "'அட சவமே,' எனவும் சொல்லி ஏசிக்கொள்வதை உலக வழக்கில் கண்கூடாகக் காண்கின்றோம். உயிருடன் உலகில் உலாவும் ஒருவனை நோக்கி, உயிர்போன உடலுக்கிடும் பெயரிட்டுப் 'பிணமே' என்று சொல்லுதல் சுடுசொல்லாதலையும், அச்சொல்லைக் கேட்டவன் சினங் கொள்ளுதலையும் காண்கின்றோம் அல்லவா!

செந்நாவலர் (வள்ளுவர்) 'அன்பை முதன்மையாகக் கொண்டு, அதன் வழி நின்று வாழும் உடம்புகளே உயிர் நின்ற உடம்புகள்' என்றும், 'அன்பின்றித் திரியும் உடல்கள் எலும்பைத் தோலால் மூடிக்கொண்டு திரிவனவே யன்றி உயிர் நின்ற உடம்புகளாகா' என்றும் கீழ் வரும் குறள் வெண்பாவாற் கூறுகின்றார். அது,

> "அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்(கு)
> என்புதோல் போர்த்த உடம்பு."

என்பது. இத்திருக்குறளில் வரும் 'என்பு தோல் போர்த்த உடம்பு' என்னும் தொடரைச் சுருக்கமாகவும், வெளிப்படையாகவும் கூற வேண்டுமானால், 'பிணம்' என்று சொல்வதைத் தவிர, வேறு யாது கூற முடியும்? இவ்வாறே திருக்குறளிற் பல இடங்களிலும் பயின்று வரும் வள்ளுவர் வாய்மொழிகளை நோக்குவோம்:

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
தீமை புரிந்தொழுகு வார்."

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்."

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்."

"உளரென்னு மாத்திரையர் அல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

"உளரெனினும் இல்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்."

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்."

இத்திருக்குறள்களுள் மேலே காட்டிய 'பிணம்' என்ற பொருள் தரும் சொற்களைக் காண்க.

'சிலர் இருத்தலைவிட இறத்தல் நன்று,' என்பது

உயிர்கள் உடலிலிருந்து எத்துணைத் துன்பமடைந் தாலும் இவ்வுடலை விட்டு நீங்க விரும்பாமலிருப்பதும், நீங்கிவிடுமென்பதைத் தாம் நினைப்பினும், பிறர் கூறினுங் கூடத் திடுக்கென்று அச்சம் கொள்ளுதலும் அவற்றின் இயற்கை. இறப்புக்கு அஞ்சும் உயிர்களின் இயல்பை நன்கறிந்த வள்ளுவப் பெருந்தகையார், 'சாதலின் இன்னாததில்லை' எனச் சாற்றியருளினார். 'யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்கென்கடவேன்?' என்னும் மணி மொழியும் இக்கருத்தை வலியுறுத்தும். இவ்வியல்பை உலக நடையில் வைத்துத் தெள்ளத் தெளியக் காணலாம்.

பெருநோய் கொண்ட ஒருவன், அந்நோயால் கை விரல்கள் முதலியவை பாதி குறைந்தவனாய்ச் சாலையோரங்களிலுள்ள மரத்தடியில் தன்னுடம்பிலுள்ள புண்களில் மொய்க்கும் ஈ முதலியவற்றை ஓட்டும்பொருட்டு வலக்கை மணிக்கட்டினால் இடக்கை மணிக்கட்டைத் தட்டிக்கொண்டிருப்பான். அவ்வழியே சென்றான் இரங்

கும் உள்ளத்தை இயல்பாகவே கொண்ட இளைஞனொரு வன்; அப்பிணியாளனைக் கண்டான். அவன் உள்ளம் பதறுகிறது; உடல் நடுங்குகிறது. 'ஐயோ! இவன் இவ்வளவு இன்னலுறுகின்றனே! பார்த்த என்னாலேயே பொறுக்க முடியவில்லையே! இவன் எங்ஙனம் இந்நோயின் கொடுமையைத் தாங்கிக்கொள்கிறன்? ஆ! இவன் இவ்வாறு துன்பப்படுவதைவிடத் தற்கொலை செய்து கொள்ளுதல் நலமல்லவா!' என்று எண்ணுகிறன். அவ்வாறு கருதிய அவ்விளைஞன் உயிர்களின் இயல்பை அறியாமலோ, அல்லது கரை கடந்தெழுந்த தனது இரக்கத்தாலோ அவனிடம் தனது கருத்தைத் தெரிவிப்பானயின், அத்தொழுநோயாளியின் கடுஞ்சொல்லுக்கும் கல்லெறிக்கும் இலக்காவானென்பது உறுதி.

இன்னும், வயது முதிர்ந்த கிழவர்களுக்கும், வறுமையால் வாடி வதங்கும் மக்களுக்கும் இவ்வியல்பு உண்டென்பதைக் கண் கூடாகக் காண்கின்றோம். 'கிழவர்களிற் பலர் தம்மிடத் தன்புடையாரிடத்து, "என்னை எப்பொழுது கடவுள் அழைப்பாரோ!" என்று கவலைப்படுதலைக் காண்கின்றோம்!' எனின், அங்ஙனம் அவர் கூறுவது பொய்யேயன்றி மெய்யன்று; அஃது எவ்வாறு அறியப்படுமெனின், அம்முதியோர் தனியே இருக்குங் காலம் பார்த்து ஓர் இளைஞன் சென்று, அவரைக் கண்டு, சிறிது ஆச்சரியமுற்றவன் போல நடித்துத் 'தாத்தா, நேற்று நீங்கள் இறந்து போனதாக ஒரு மாணவன் சொன்னன்' என்று சொல்ல வைத்து, அதனல் அவரிடமிருந்து பொங்கி எழும் சினத்தால் அறியப்படும். வறுமை காரணமாகத் தற்கொலைக்கு மக்கள் துணிவதாயின், நமது நாட்டில் இத்துணைப் பிச்சைக்காரர்கள் இருக்கமாட்டார்கள் அல்லவா?

எனவே, நோயினலோ' முதுமையினலோ, வறுமையாலோ எல்லையற்ற இன்னலுறும் உயிர்களும் அவை காரணமாகத் தங்கள் உடலைவிட விரும்புவதில்லையெனின், மற்றையோரைப்பற்றிக் கூறவேண்டாவன்றே! உயிர்களின் இப் பொதுஇயல்பையும், இதன் காரணத்தையும் அறுதியிட்டறிந்த செந்நாப் போதார்

(திருவள்ளுவர்) இதனை ஓர் உவமம் வாயிலாக நமக்குச் செப்புந் திறத்தைத் தெரிந்து மகிழ்வோமாக.

"இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர்."

இத்திருக்குறளின் திரண்ட பொருள், 'சூதாடுகின்ற ஒருவன் பொருளை இழக்குந்தோறும் அச்சூதினை விடக் கருதாமல் விரும்பியாடுவது போல, ஓர் உயிர் உடலி லிருந்து துன்பத்தை நுகருந்தோறும் அந்த உடலைவிடக் கருதாமல் மேலும் மேலும் அதையே விரும்புகிறது,' என்பதாம்.

இனி, இக்குறட்பாவிற் காட்டிய உவமைக்கும் பொரு ளுக்கும் (உவமேயம்) உள்ள பொதுத் தன்மை யாது என் பதைப் பார்ப்போம்: சூதன், பொருள் போகப் போக மேலும் மேலும் விரும்பியாடுதற்குரிய காரணம் என்ன வெனில், 'அடுத்த ஆட்டத்தில் நமக்கு வெற்றி கிடைக் கும்; அடுத்ததில் கிடைக்கும்; போன பொருளெல்லாம் வந்துவிடும்; புதுப் பொருளும் வரும்,' என்ற நம்பிக்கை தான். இனி, தொழு நோயாலே பற்றப்பட்டு, உறுப்பு முதலியன குறைந்து, தனக்கும் பிறர்க்கும் பயனின்றித் துன்புற்றுத் திரிபவன் தற்கொலை செய்துகொள்ளக் கருதாமைக்குக் காரணம் யாதெனில், "இறைவன் என் காலமுள்ளவரையும் இந்த நோயோடு வைத்திருப்பானா? அவன் அருளில்லாதவனா? எனக்கேனும் கைகால் விரல் கள் பாதியுள்ளனவே! முழுவதும் குறைந்து துடுப்புப் போன்ற கையையுடைய சாத்தனுக்கு யாரோ ஓர் பெரியார் வந்து மூன்று வேளை மருந்து கொடுத்ததால் அவன் உறுப்புக்களெல்லாம் வளர்ந்து கட்டழகனாகிவிட் டானென்று கேள்விப்பட்டேனே! அது பொய்யாகுமா? கடவுளருளால் யாரேனும் ஒரு பெரியார் வருவார்; அவர் அருட்பார்வை என்மேற்பட்டாலும் போதுமே! யான் மன்மதனாகிவிடுவேனே!" என்று கருதும் நம்பிக்கையே தான். எனவே, பொருள் போகப் போகச் சூதினை விரும்பும் சூதனுக்கும், துன்பம் சுடக்சுட உடலை விரும்பும் உயிருக்குமுள்ள பொதுத் தன்மை நம்பிக்கையேதான்.

(இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர் கொண்ட உரை சிறிது மாறுபட்டதாகும்.)

இனி, பிணியால் மட்டுமன்றி, வறுமை முதலிய பிற வாற்ருல் துன்பம் அடைகிற மக்களும், 'நமக்கு நாளை நலம் ஏற்படும்,' என்ற நம்பிக்கையினுலேதான் உயிர் வாழ்கின்ருர்கள். நம்பிக்கையின்றேல், உலகியல் எங்ஙனம் நடைபெறும்? இந்த உண்மையைத் திருஞானசம்பந்தப் பெருந்தகையார்,

"இன்றின் நன்று நாளைநன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்."

எனத் தமது அருமைத் திருவாக்கால் விளக்கிக் காட்டுகிருர்.

இத்தேவாரத்தின் பொருள்:—"இன்றின் = இன்று நாம் அனுபவிக்கும் இன்பத்தைவிட, நாளை நன்று = நாளை வரப்போகும் இன்பம், நன்று = சிறந்ததாயிருக்கும், என்று நின்ற = என்று உங்கள் உள்ளத்தில் நிலைபெற்று நிற்கின்ற, இச்சையால் = விருப்பத்தோடு கூடிய நம்பிக்கையால், பொன்றுகின்ற = அழிந்து போகின்ற, வாழ்க்கையை = உலக வாழ்வினை, போகவிட்டு = அது உங்களை விட்டு நீங்குமாறு செய்துவிட்டு, போதுமின் = (உலகிர்) வருவீர்களாக," என்பது.

('இன்று நன்று நாளை நன்று' என்ற பாடமே இக்காலத்துப் பெருவழக்காய் உள்ளது.)

இன்னும் இந்நம்பிக்கையால் உலகியல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைச் சிறிது ஊன்றிச் சிந்திப்போமாயின், அது வியப்பை விளைவியாமலிராது. தம் பிள்ளையைப் பள்ளியில் வைக்கப் போவதாக அழைப்பு அனுப்புவார் அன்பர் ஒருவர். அவரிடம் 'உம் பிள்ளையை எதற்காகப் படிக்க வைக்கிறீர்?' என்று கேட்டால் (அறிவு பெறுதற்காக என்று கருதுவதோ—சொல்லுவதோ நம் நாட்டினின்றும் விடைபெற்றுக்கொண்டு சென்று பல ஆண்டுகளாயினமையால்) 'ஒவ்வோர் ஆண்டும் (எந்த வகையாலாவது) தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெற்று உத்தியோகத்திலமர்ந்து பொருளிட்டு

வதற்குத்தான்" என்று அவர் சொல்லுவது முக்காலும் உறுதி. அவர் அண்டை விட்டுப் பணக்காரரொருவரின் புதல்வன் ஒவ்வொரு வகுப்பிலும் வஞ்சகமில்லாமல் மும் மூன்றாண்டுகளிலிருந்து எட்டாவது வகுப்பை எட்டிப் பார்த்துவிட்டுப் படிப்பை நிறுத்திவிட்ட செய்தி பற்றி அவரைக் கேட்டால், 'என் மகன் அவ்வாறு செய்ய மாட்டான்' என்பர். அங்ஙனம் அவர் கூறுவதற்குக் காரணம் நம்பிக்கையேயன்றி, வேறுயாதாயிருக்க முடியும்! மற்றொருவர் பெரும்பொருளை முதலாகவைத்து வாணிகம் நடத்தக் கருதுவர். அவரிடம், அவரைவிடப் பெரும் பொருளை வைத்து வாணிகம் நடாத்தி அனைத்தையும் தொலைத்துவிட்டுச் சோற்றுக்கு ஆலா (ஓர் பறவை; இது பெரும்பாலும் தண்ணீருக்கு மேல் பறந்துகொண்டே யிருக்கும்) வைப்போல அலைந்து திரியுமொருவரை நினை வூட்டினால், தமக்கு அவ்வாறு நேராது என்றுதான் கூறுவார். காரணம் நம்பிக்கைதான். இன்னும் நம் நாட்டில் 'பட்சி சாஸ்திரம்' பார்க்கின்றவர்களும், 'இரேகை' பார்க்கின்றவர்களும் ஓரளவில் ஊதியம் பெறுவதை நாம் காண்கின்றோமல்லவா! அதற்குக் காரணம் மக்களுக்குத் தங்கள் எதிர்கால வாழ்விலுள்ள நம்பிக் கையேதான். இந்த நம்பிக்கை யில்லாவிட்டால் மக்கள் வானவூர்தி, புகை வண்டி முதலியவற்றில் செல்லத் துணிவார்களா? இவ்வளவிலும் பகுத்தறிவைப் பயன் படுத்தாத நாம் கடவுளைப்பற்றி மட்டும் நம்பிக்கை கொள்ளாமல் அதனைப் பயன்படுத்தத் தொடங்குதல் வியப்பிலும் வியப்பே!

எனவே, 'உயிர் உடலை விட்டு நீங்க எளிதில் விரும்புவ தில்லை' என்னும் இயல்பையும், அதன் காரணத்தையும் நன்கு உணர்ந்து கூறிய அப் பொய்யாமொழியாரே, 'சிலர் இருத்தலைவிட இறத்தல் நன்று' எனக் கூறுவாராயின், அக்கூற்றை 'வேம்பெனக் கைக்குஞ் சொல்' எனக் கூறுதல் மிகையாகாதன்றோ!

'பிறரைக் காணாதவிடத்து இகழ்ந்துரைத்துக் கண்ட விடத்துப் புகழ்ந்து பொய்யனாகி ஒருவன் வாழ் வதைவிட, அவன் இறந்துவிடுதல் நல்லது; ஏனெனில்,

அச்சாவு, அவனுக்கு அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும்; ஆதலால்,' என்னும் பொருளுடைய திருக்குறள் ஒன்று, 'புறங்கூறாமை' என்ற அதிகாரத்திலுள்ளது. அது,

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்,"

என்பது. இறந்த பின் புறங்கூறமாட்டானல்லவா? அவ்வளவில் புறங்கூறாமையாகிய அறத்தை மேற்கொள்பவன் எந்தப் பயனை அடைவானோ, அதனை இவனும் அடைவானன்றோ? ஆதலால், 'சாதல் அறங் கூறும் ஆக்கந்தரும்,' என்றார். இங்ஙனமே 'ஈகை' என்னும் அதிகாரத்தில்,

"சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை,"

என்பதும், 'மானம்' என்னும் அதிகாரத்தில்,

"ஒட்டார்பின் சென்றொருவன்வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று,"

என்பதும் சிந்தித்தற்குரியன.

இனி, அங்ஙனம் இறத்தற்குரியவர்கள் சாகாதிருந்தால், அவர்களைத் தாங்குதலே இந்நிலவுலகத்திற்கு ஒரு பெருஞ்சுமை எனவும், அதனால் இந்நிலம் பயன் குன்றும் எனவும், அத்தீவினையாளரைத் தாங்குதலே தனக்கு ஓர் அறமெனக் கருதி இந்நிலவுலகம் தாங்குங்கொல் எனவும் கீழ்வரும் குறள் வெண்பாக்களாற் கூறியிருத்தலையுங் காண்க. அவை,

"கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை."

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல(து)
இல்லை நிலக்குப் பொறை."

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்."

"அறநோக்கி யாற்றுங்கொல் வையம் புறநோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை?"

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை."

என்பன.

இங்குக் காட்டப்பட்டவற்றுள் 'வசையிலா' என்ற தொடக்கத்தையுடைய குறட்பாவில் புகழ் பெருத மக்களை 'நடக்கும் பிணம்' என்று கூறுதற்குத்தான் 'இசையிலா யாக்கை' எனக் குறிப்பாகக் கூறியதுங் காண்க.

உலகியலுள், தமக்கும் பிறருக்கும் பயனின்றித் திரியும் கயவர்களைப் 'பூபாரம்' என்று சிலர் சொல்லுவதைக் காதாற் கேட்கின்றேமல்லவா! அவ்வுலக வழக்கோடு இக்குறட்பாக்களின் கருத்துக்கள் ஒத்திருத்தலையுங் காண்க.

'குருடர்' எனச் சிலரைக் கூறுதல்

கண்ணுள்ளவனைப் பார்த்துக் 'குருட்டுப் பயலே' என்றுதல், 'பொட்டைப்பயலே' என்றுதல் வைதலையும், அம்மொழியைச் சுடுசொல்லாகக்கொண்டு வையப்பெற்றவன் சினங்கொண்டு சிறுதலையும் காண்கின்றேம். நம் தெய்வப் புலவர்,

"கண்ணுடையர் என்பவர் கற்றேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

எனக் கல்லாதவர்களைக் 'குருடர்' என வைதலையும், இங்ஙனமே,

"பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணேட்ட மில்லாத கண்!"

"கண்ணிற் கணிகலம் கண்ணேட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்."

"உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினுற்
கண்ணேட்டம் இல்லாத கண்?"

"கண்ணேட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்
கண்ணேட்டம் இன்மையும் இல்."

எனக் கூறுவதையுங் காண்க.

மரபு வழுச் சொற்களால் சிலரை வைதல்

'மரபு' என்பது எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த விதமாகப் பெரியோர்கள் சொல்லி வந்தார்களோ, அந்தப் பொருளை அந்தச் சொல்லாலேயே சொல்லுதலாகும்.

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே."

(நன்னூல்-ஙஅஅ)

எனவே, ஆடு மேய்ப்பவனை இடையன் என்றும், யானையை நடத்துபவனைப் பாகனென்றும் சொல்ல வேண்டுமென்பதாயிற்று. இந்த முறையை மாற்றிச் சொன்னால், அது 'மரபு வழு' என்னுங் குற்றத்தின்பாற் படும். ஆனால், பெருமக்கள் ஏதேனும் ஒரு காரணம்பற்றி இந்த முறையை மாற்றி நூல்களிற்கூறி வைத்திருப்பாரானால், அது 'மரபு வழுவமைதி' என்று கூறப்பட்டு, நன்மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இனி, 'செந்நாப்போதார் தம் அருமைத் திருக்குறளாம் உயர்தனிச் செம்மொழி நூலின்கண், மரபு வழுவாகிய சொற்களை அமைதியாக்கிக் கூறியது எங்கே? ஏன்?' என்பனவற்றை ஆராய்ந்து காண்போம்:

திருக்குறளில் 'மருந்து' என ஓர் அதிகாரமுண்டு. அதிகாரத்தின் பெயர் மட்டும் மருந்தே தவிர, அதிற் கூறப்படும் பத்துக் குறட்பாக்களுள் ஏழு குறள் வெண்பாக்கள் உணவைப் பற்றித்தான் கூறுகின்றன. உணவு மிகுதலாகாதென்றும், முன் உண்ட உணவு செரித்ததை உடம்பு இலேசாக இருத்தலாலும், தேக்கின் (ஏப்பம்) தூய்மையாலும், கருவிகள் தொழிற்குரியனவாதலாலும், பசி மிகுதலாலும் நன்கு தெரிந்த பின்னரே உண்ண வேண்டுமென்றும், அந்த உணவும் செரிக்கும் அளவினதாகவே இருக்க வேண்டுமென்றும், அங்ஙனம் உண்ணும் உணவும் உண்ணுவோரின் வாதப்பகுதி முதலியவற்றுக்கு ஒவ்வாமலும், சிறு பொழுது பெரும்பொழுதாகிய காலத்தோடு பொருந்தாமலும் இருத்தலாகாதென்றும், சுவை விரியங்களால் தம்முள் மாறுகொள்ளா

மல் (தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல ஆகாமல்) இருக்க வேண்டுமென்றும், உள்ளம் வேண்டிய அளவில் உண்ணாமல் நோய் வாரா அளவில் உண்ண வேண்டுமென்றும், இம்முறையில் உண்புவர்கள் உடலுக்கு மருந்தென ஒன்று வேண்டுவதில்லையென்றும், அவர்கள் நீண்டகாலம் நோயின்றி இயன்றஆக்கையோடு இருப்பார்களென்றும் கூறிய அப்பொய்யா மொழியார் ஆறுவது குறட்பாவில் கூறியருளிய ஒரு சொல் மிகவும் சிந்தித்தற்குரியது. அக்குறள்,

"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்."

என்பது.

'உணவைச் சிறிது குறைத்து உண்டால் வரும் நன்மையையறிந்து அம்முறையில் உண்கின்றவனிடம் இன்பம் நீங்காது நிற்பது போல, மிகப் பெரிய இரையை விழுங்குவோனிடம் நோய் நீங்காது நிற்கும்' என்பது இக்குறட்பாவின் பொருள். ஏனைய புலவர்கள் தாம் கூறும் பொருளை விளங்க வைப்பதற்கு உவமையைக் கருவியாகப் பயன்படுத்துவார்கள். பொருளை விளக்கு தற்குக் கருவியாகப் பயன்படுத்தும் அவ்வுவமையையும் தாம் எடுத்துக்கொண்ட பொருளாலேயே கூறுதல் தேவர் சிறப்பியல்பாகும். அவ்வியல்பை மேற்காட்டிய திருக்குறளில் காண்க.

மேற்காட்டிய திருக்குறளிற் காணப்படும் 'இரை,' என்ற சொல் விலங்குகள் உண்ணும் உணவைக் குறிக்குமேயன்றி மக்கள் உண்ணும் உணவைக் குறிக்காது. இவ்வுண்மையை நூல் வழக்கிலன்றி உலக வழக்கிலும் காணலாம். 'மாடு இன்று இரை எடுக்காமல் நிற்கிறது' என்று சொல்லப்படுதலும், 'பையன் இரை எடுத்துக்கொண்டு பள்ளி சென்றுவிட்டானா?' என்று சொல்லப்படாமையுங் காண்கின்றோமல்லவா! எனவே, 'இரை' என்ற சொல்லை மக்கள் உண்ணும் உணவுக்குப் பயன்படுத்தினால் அது 'மரபு வழு' என்னும் குற்றத்தின்பாற்படும். இங்ஙனமிருக்கவும், அச்சொல்லை 'மரபுவழுவமைதி'யாக மக்கள் உணவு என்ற பொருளில் தேவர் பயன்படுத்தியது எதனாலெனில், 'நாம் உணவைப்பற்றி இத்துணை

சொல்லியும் அதைப் பொருட்படுத்தாமல் அளவுக்கு மீறி உண்டு நோய்வாய்ப்படும் மக்களை மக்களென்று கருதாமல் விலங்கென்றுதான் கருதுவோம்' என்பதைப் புலப்படுத்தற்கே என அறிக. அதுதான் திருவள்ளுவர் கருத்து என்பதை, "இரையை அளவின்றி எடுத்து அதனால் வருந்தும் விலங்கோடொத்தலின் 'இரையான்' என்றார்" என்னும் பரிமேலழகர் உரைப்பகுதியானும் உணர்க.

இனி, 1800 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் உணவைப் பற்றிக் கூறிய இக்கருத்துக்கள் இப்போதைய உலகத்திற்கு எத்துணைப் பொருத்தமுடையனவும், இன்றியமையாதனவுமாக உள்ளன என்பது ஆழ்ந்து சிந்திப்போர்க்கு நன்கு புலனாகும்.

ஊழ்வினையாலோ, முயற்சிக் குறைவாலோ பொருள் படைக்காத வறுமையாளரின் உணவைப்பற்றிக் கவலைப் பட வேண்டுவதில்லை. ஆனால் பொருள் படைத்த செல்வர்களின் உணவு அஞ்சத்தக்கதாகவும் இரங்கத் தக்கதாகவும் உள்ளதென்பதை யாரே மறுக்க வல்லார்? நாப்புலனுக்கு அடிமைப்பட்ட இவர்கள் 'காலைக்குடி' அல்லது 'படுகைக்குடி' என ஒன்று உட்கொள்வது வழக்கமாம்: அதற்கு, 'பெட்காபி' என்பது பெயராம்; காலையுறக்கத்தில் மிகுதியாக ஈடுபடாத சிலர் எழுந்து படுக்கையிலிருந்தபடி சிறிது வாயைத் தூய்மை செய்து கொண்டு குடித்துவிட்டுப் பின் படுத்து உறங்குவார்களாம். 'அம்மட்டிற்கூட உறக்கங் கெடலாகாது' எனக் கருதுங் கும்பகருணன் உடன் பிறந்தார் சிலர் படுக்கையிற் கிடந்தவாறே கண்ணையும் திறவாமல் அருந்துவார்களாம். இரவு உண்ட உணவு காலை ஏழரை நாழிகை வரையிலுங்கூடச் செரிக்காமலிருக்கிறது என்பது சில மருத்துவர்களின் கருத்து. அது செரித்திருந்தாலும், இரவு முழுவதும் வேலை செய்யாமலும் தூய்மை செய்யப் படாமலுமிருந்த பற்கள் நச்சுத் தன்மையடைந்திருக்குமல்லவா! இரவு உண்ட பின் வாய் நன்கு கழுவப்படாமலிருந்தால் அவ்வுணவுப் பொருளுள் ஏதேனும் பற்களில் ஒட்டி நச்சுத் தன்மை அடைந்திருக்குமன்றே! வெற்றிலை போட்டுக்கொண்டு வாயைத் தூய்மை செய்யா

மல் தூங்குகிறவர்களையும், அதனோடு 'புகையிலை' என்னும் நச்சுப் பொருளையும் வாயிலடக்கிக்கொண்டு உறங்குகின்றவர்களையும் காண்கின்றோமல்லவா! இவர்களின் பற்கள் காலையில் எத்துணைத் தீய தன்மையடைந்திருக்கும்! இவற்றுள் ஒன்றையும் கருதாமல் காலையில் மேற்கூறியவாறு குடிப்பது எத்துணைத் தீய பழக்கமென்பதைச் சிறிது சிந்திப்பாரும் அஞ்சாமலும் வருந்தாமலும் இருக்க முடியாதல்லவா!

இனி, அங்ஙனம் குடித்துவிட்டு உறங்கும் பெரியார், சிறிது நேரம் சென்று விழித்துச் சிற்றுண்டி அருந்துவார்கள். 'காராட்டை வெள்ளாடு' என்று உலகோர் கூறுவதைப்போலப் பல வகைச் சுவையோடு பல வகை வடிவமெடுத்துப் பொருளாற் பேருண்டியாகக் காட்சியளிக்கும் அதனைச் சொல்லாற் சிற்றுண்டி என்கின்றோம். அவ்வுண்டியை விழுங்கிய பின் படிக் கணக்கிற் 'காபி'யைக் குடித்துவிட்டுச் சாய்வு நாற்காலியிற்சாய்ந்து, அன்று செய்தித்தாள் வாராவிட்டாலும் முதல் நாள் வந்ததையேனும் எடுத்துப் புரட்டிப் பார்த்துக்கொண்டு சிறிது நேரத்தைப் போக்குவர். எதிரே மாட்டியிருக்குங் காலக்கருவியானது, 'ஐயா! நேரமாகிவிட்டதே! இன்னும் சாப்பிடாமலிருக்கிறீர்களே! உங்கட்குப் பசிக்கவில்லையா!' என்று சொல்வதுபோல 'மணி' பத்து அடித்துக் காட்ட, வேலைக்காரருள் ஒருவன் ஓடி வந்து கை கட்டி, வாய் புதைத்து 'ஐயனே! வெந்நீர் சித்தமாகிவிட்டது' என்று கூற, எழுந்து சென்று நீராடுங்கால், ஒருவன் வெந்நீரைத் தலையில் விட, மற்றொருவன் உடம்பைத் தேய்த்து அழுக்கைப் போக்க, வேறொருவன் ஈரத்தைப் போக்க இன்னொருவன் உலர்ந்த உடையைக் கொய்து கொடுக்க அதனை மட்டும் தம் கையாலே அரையில் உடுத்துக்கொண்டு சாப்பிடும் அறைக்குட்புகுவர். பல வகைக் கறிகள், குழம்பு, மிளகு நீர் முதலியவற்றோடு விலாப் புடைக்க உண்டுவிட்டுப் புகையிலையை அதன் பெயருக்கு (புகை—இலை) மாறு படாமற் புகை வடிவமாகவோ, இலை வடிவமாகவோ நுகர்ந்து பெருந்தவளையை விழுங்கிய சிறு பாம்பு போலப் படுக்கையிற் கிடந்து புரளுவர்.

'சிற்றுண்டிக்குரிய நேரம் வந்துவிட்டது' எனச் செப்புதல் போலக் காலக் கருவி, 'கணிர், கணிர்' என நான்கு மணி அடிக்கிறது. உடனே எழுந்து, காலையில் வந்த சிற்றுண்டி வேறு வேறு வடிவமெடுத்து வந்திருப்பதை உண்டு, தேநீர் பருகி, இரவு எட்டு மணிக்கு நண்பகல் உணவுபோல உண்டு, ஏதேனும் வயிற்றிற் குறை யிருக்குமோ எனும் ஐயத்தை நீக்குதற்காகப் பழம் பால் அருந்தி உறங்கப்போதலைக் கண்குளிரக் காண்கின்றோ மல்லவா!

நம் நாட்டிலுள்ள படிப்பும் அறிவுமற்ற பெண்கள் கூட உலையில் முதலில் ஒரு படி அரிசியைப் போட்டு, அது அரை வேக்காடாக இருக்கும் போதே, சில விருந்தினர் வந்துவிட்டால் 'அவர்களுக்காக இன்னொரு முறை உலை ஏற்றுதல் வேண்டா' எனக் கருதி முதலிற்போட்ட பானையிலேயே இன்னும் அரைப்படி அரிசியைப் போட மாட்டார்களல்லவா; ஏன்? 'முன்னுள்ளது வேகாமல் இருக்கும்போதே பின்னும் போட்டால் இரண்டும் கெட்டு விடும்' என்று அறிந்திருப்பதனாலல்லவா! அங்ஙன மிருக்க, அறிவுடையவர்களாகத் தங்களைத் தாங்களே மதித்துக்கொண்டிருக்கும் செல்வர் சிலருக்கு முன்னுண்டது நன்கு செரித்துவிட்டது எனத் தாமறிந்துகொள்ளா மல், அறிவற்ற பொருளாகிய காலக் கருவி (கடிகாரம்) அதனையுணர்த்த, மேலும் மேலும் 'பஞ்சுப் பொதியடைப் பதுபோல வயிற்றை அடைத்துத் தமது அருமை உடலைக் கெடுத்துக்கொள்கின்றார்களே! இஃதென்ன அறி யாமை! தங்கள் இரைப் பையானது மெல்லிய தோலால் அமைந்தது என்று கருதுகின்றார்களா, அல்லது எவ்வளவு பிணங்களை வைத்தாலும் வேகச் செய்கின்ற சுடுகாடு என்று கருதுகின்றார்களா என்பது விளங்கவில்லை. வல்லுணவும் மெல்லுணவுமாக இவர்கள் உண்ணும் வேளையைக் கணக்கிட்டால் ஆறு வேளையல்லவா ஆகின்றன! இவர்கள்,

"ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே என்பான்—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே என்று புகல்."

என்னும் நீதி வெண்பா, "யோகி ஒரு போது உண்பான்; போகி (இல்லறத்தான்) இரண்டு வேளை உண்ண வேண்டும்; மூன்று வேளை உண்பான் நோய்வாய்ப்படுவான்; நான்கு போது உண்பவன் விரைவில் இந்த உலகத்தைவிட்டு வேறுலகம் சென்றுவிடுவான்," என்று கூறுவதை அறியாரோ? அன்றி, 'நான்கு போது அளவிற்குத்தானே கூறப்பட்டிருக்கிறது? ஆறு போதுண்ணும் நம்மைஅஃதென் செய்யும்?' எனக்கருதினரோ அறியோம். அவர்கள் படித்தவர்களாயிருந்தால் இரண்டாவதாகக் கூறியபடிதான் சொல்லுதல் கூடும். ஏனெனில், படித்தவர்கள் தீயவர்களாயிருந்தால், தங்கள் தீயொழுக்கத்திற்கு நூல்களிலிருந்து பல மேற்கோள்கள் கூறுதலும், சான்றோர்களின் செய்யுட்களுக்குத் தமது செயலுக்கு ஆதரவாமாறு பொருளைத் திரித்துக் கூறுதலும் உலகிற் காண்கின்றோமாதலால்.

'ஏன் ஐயா, நீங்கள் படித்திருந்தும் பொய் கூறுகிறீர்கள்!' என்று கேட்டால், அப்படித்த பொய்யர், "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்," என்னுந் திருக்குறளை அள்ளி வீசுவர். 'முழுப் பொய் சொல்கிறீர்களே!' என்று வினவின்,

"வான்கவிந்த-வையக மெல்லாம் பெறினும் உரையற்க,
பொய்யோ டிடைமிடைந்த சொல்."

என்ற நாலடியாரை மேற்கோள் கூறி 'பொய்யோடு கலந்த வார்த்தையைப் பேசாதே' என்ற குறிப்பால், கலப்பற்ற முழுப் பொய் கூறலாமல்லவா என்று விடுத்துப் பொருள் கூறுவார். அவர் கொலையும் புலையுமுள்ளவராயின், 'நோன்பென்பது கொன்று தின்னாமை' என்பதை எடுத்துக் கூறி, 'நோன்பு என்பது=விரதமென்று சொல்லப்படுவது யாதெனில், ஆ=பசுவையும், மை= ஆட்டையும்,கொன்று தின்=கொன்று உண்ணுதலாகும்' என்று பொருள் கூறி. "'தின்' முதனிலைத் தொழிற்பெயர்" என இலக்கணமுங் கூறுவர். 'ஊக்கமது கைவிடேல்','குணமது கைவிடேல்' என்னும் ஔவையாரின் அமுத மொழிக்கு 'ஊக்கம்=முயற்சியைத் தருவதாகிய, மது=கள்ளை, கைவிடேல்=கைவிடாதே' எனவும்,

இங்ஙனமே 'நல்ல குணத்தைத் தருவதாகிய மதுவை விடலாகாது' எனவும், படித்த குடியர் பொருள் கூறுவர்.

எனவே, கல்லாத தீயவர்களைவிடக் கற்ற கயவர்களே பெரிதும் அஞ்சத்தக்கவரெனவும், இவர்களைவிடக் "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் !" எனத் தாயுமான அடிகள் கூறியருளியது மிகமிகப் பொருத்தமுடையது எனவும் அறிந்துகொள்க.

இனி, திருநாவுக்கரசர் என்னும் சைவ சமய குரவர், 'இறைவனொருவன் உண்டெனக் கருதி அவனை உளத்தால் நினைத்து, நாவால் வாழ்த்தி, உடலால் வழிபாடு செய்யாதவர்கள் விலங்குகளோடு ஒப்பார்கள்,' எனக் கூறக் கருதி, அவர்கள் உண்ணும் உணவைத் திருவள்ளுவர்போல 'இரை' என்னும் மரபுவழுச் சொல்லாற் கூறியருளியதைக் கீழ் வரும் 'திருக்குறுந்தொகை' யாலறியலாம். அது,

> 'பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
> நாக்கைக் கொண்டரன் நாமம் நவிற்றிலார்
> ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
> காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.'

என்பது.

'மாக்கள்' எனச் சிலரை வைதல்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்கள் உயிர்களை அறிவுபற்றி 'ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர், எனப் பாகுபடுத்தியுள்ளனர். இப்பாகுபாடு அவ்வறிவுகட்கு இடமாயுள்ள மெய், நா, மூக்கு, கண், செவி, மனம் என்பவற்றை ஆதாரமாக உடையது. எனவே, மெய் மட்டுமிருந்து அதனாலறியும் ஊற்றறிவை (ஸ்பரிசம்) மட்டும் உடையவற்றை ஓரறிவுயிரென்றும், அதனோடு நாவையும் பெற்று அவற்றாலறியும் அறிவுடையவற்றை ஈரறிவுயிரென்றும், அவ்விரண்டோடு மூக்கையும் பெற்று அம்மூன்றாலும் அறியும் அறிவைப் பெற்றவற்றை மூவறிவுயிரென்றும், அம்மூன்றுடன் விழியையும் பெற்று அந்நான்கு பொறிகளாலும் அறியும் அறிவைப்பெற்ற உயிர்களை நாலறிவுயிரென்றும், அந்த நான்கு பொறிக

ளோடு செவியும் உடையனவாய் அந்த ஐந்தாலும் அறியும் அறிவுடையவற்றை ஐயறிவுயிரென்றும், ஐம்பொறிகளாகிய அப்புறக் கருவிகளோடு மனம் என்னும் அகக் கருவியையும் பெற்று அந்த ஆறாலும் அறியும் அறிவைப் பெற்ற உயிர்களை ஆறறிவுயிரென்றும் முடிவு கட்டிக் கூறினார்களென்று அறிகிறோம்.

இதனை,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே;
இரண்டறி வதுவே அதனொடு நாவே;
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே;
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே;
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே;
ஆறறி வதுவே அவற்றொடு மனனே;
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."

என வரும் தொல்காப்பியச் சூத்திரத்தானும், அவ்வுயிர்கள் எவ்வெவை என்பதை அச்சூத்திரத்தை அடுத்து வரும் ஆறு சூத்திரங்களானும் அறிக.

இவற்றுள் மெய்முதலாகச் செவியிருகவுள்ள புறக் கருவிகள் ஐந்தையுங்கொண்டு அறியும் அறிவையுடைய உயிர்களைவிட உள்ளம் என்னும் அகக் கருவிகொண்டு 'எது நல்லது, எது தீயது, எதைச் செய்யவேண்டும், எதைத் தவிரவேண்டும்' எனப் பகுத்து அறியும் அறிவையுடைய உயிர்களே எண்ணாலும், சிறப்பாலும் உயர்ந்தன என்பது பெறப்பட்டது. அவ்வறிவு மக்களிடத்து மட்டுமே காணப்படுவதால், உலகிலுள்ள ஏனைய உயிர்களை விட மக்களுயிரே சிறந்தனவாயின.

இனி, அம்மக்களுள்ளும் நன்மையையும் தீமையையும் பகுத்து அறியும் அறிவு வலிமையில்லாதவர்களை, விலங்குகளோடு வைத்து எண்ணி உடலமைப்பு முறையால் மக்களே போலக் காணப்படுவதால் அவ்விலங்கினும் வேருக 'மாக்கள்' என்னும் பெயர் கொடுத்தும், அப்பகுத்தறிவுடையவர்களை 'மக்கள்' என்னும் பெயர் கொடுத்தும் தொல்காப்பியர் கூறுவதை,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே" எனவும்,

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"
எனவும் வரும் நூற்பாக்களால் அறிக.

எனவே, மக்களினும் விலங்கிற்கு உடலமைப்பு முறையில் கால் அதிகமாயிருத்தல்போல, அம்மக்களைவிட மாக்களுக்கு எழுத்தமைப்பு முறையிலும் கால் அதிகமாயிருத்தல் பொருத்தமுடையதே! இனி அப்பகுத்தறிவுமட்டும் போதாது என்றும், அதனைப் பயன்படுத்துவதனாலே தான் மக்களாகக் கருதப்படுவர் என்றும் திருவள்ளுவர் கூறுவதை,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு."

என்னுங் குறட்பாவால் அறிக.

('நன்மை, தீமை-செய்வது, தவிர்வது-இவற்றை அறிவது மட்டும் போதாது; உள்ளம் தீய வழியிற் சென்றால், அதனை மடக்கி நல்வழியிற் செலுத்துவதுதான் அறிவு' என்று கூறும் இப் பொய்யாமொழி பொன்னே போலப் போற்றத்தக்கது.)

இவ்வாற்றால் மக்களை உயர்வாகக் கருதுவதற்கு அவர்கள் அறிவுதான் காரணமேயன்றிப் பிறப்பு முதலிய பிற காரணமல்லவென்பது பெறப்பட்டது. பெறவே, பகுத்தறிவும், மக்களின் தன்மையும் வாய்ந்த எந்த உயிரும் அறிஞர்களால் மக்களாகக் கருதப்பட்டு உயர்திணையில் வைத்தெண்ணப்படுமென்பது தெள்ளிதின் விளங்கும். 'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே,' என்னும் தொல்காப்பியமும் இங்குச் சிந்தித்தற்குரியது. இங்ஙனம் நாலாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே அறிவுக்கு முதலிடம் கொடுத்துத் திணைப் பாகுபாடு செய்த நமது அருமைத் தமிழ் நாட்டிலே பிறப்பாலேதான் உயர்வு தாழ்வு ஏற்படுகிறது என்று கருதுவது எத்துணை அறியாமை!

"நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை"

என்னும் நாலடியாரும்,

"ஆக்கும் அறிவான் அல்து பிறப்பினால்
மீக்கோள் உயர்விழிவு வேண்டற்க"

என்னும் நன்னெறிப் பாடலும் எத்துணைப் பொருள் செறிந்தன என்பதை அறிக.

திருக்குறளில், 'கேள்வி' என ஓர் அதிகாரமுள்ளது. அது கற்ற மக்களின் அறிவைத் திண்ணிதாக்கி, கல்லாத மக்களுக்கு அறிவைத் தருதலால் 'கல்வி, கல்லாமை' என்னும் இரண்டு அதிகாரங்களுக்குப்பின் இடம்பெற்று மிகமிகச் சிறப்பாகக் கூறப்படுவதொன்று. செவிச்சுவையாகிய கேள்வியையும், நாச்சுவையாகிய உணவையும் ஒருங்குவைத்தெண்ணி, முன்னதன் உயர்வையும், பின்னதன இழிவையும் தெள்ளத்தெளிய விளக்குவது. 'மக்கள் தம் வயிற்றுக்கு உணவு கொடுப்பதே, தாம் உயிரோடிருந்து பெரியோரிடம் நற்பொருளைக் கேட்பதற்குத்தான்' என அந்த அதிகாரத்துட் கூறப்படுமாயின், அக்கேள்வியின் உயர்வை வேறு வகையால் விளக்கவேண்டுவதில்லையல்லவா! அத்துணை உயர்ந்த கேள்வியைக் கேட்டுத் தம் உயிரைத் தூய்மைப்படுத்தாமல், தாம் இந்நிலவுலகிற் பிறந்ததே உண்பதற்குத்தான் எனக் கருதி நாப் புலனுக்கு அடிமையாகி இடையறாது தின்று தம் உயிரையேயன்றி, உடலையும் நோய்க்கு உட்படுத்துகின்ற மாக்கள் இந்நிலவுலகில் உயிரோடிருந்தால் வரும் ஊதியம் யாது? இறந்தால் வருங்கேடு யாது? இவ்விரண்டாலும் ஒன்றுமில்லை என்னும் இக்கருத்தை மிகக் கடுமையாகத் திருவள்ளுவர் கூறுவதை,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?"

என்னும் திருக்குறளால் அறியலாம்.

இக்குறளில் வாயால் நுகரப்படும் உணவின் சுவையாகிய கைப்பு, காழ்ப்பு முதலியவற்றை மட்டும் அறிந்து, செவியால் நுகரப்படும் கேள்வியின் வீரம், அவலம், காதல் முதலிய சுவையை அறியாதவர்களை 'மாக்கள்' எனவைதலைக் காண்க. இவ்வாறே 'கொல்லாமை' என்னும் அதிகாரத்தில் "கொலைவினையராகிய மாக்கள் புலைவினையர், புன்மை தெரிவார் அகத்து" எனக் கூறுதலையும் காண்க. இங்ஙனமே மக்களை 'விலங்கினை ஒத்தவர்' எனவும்

'விலங்கு' எனவும் கூறும் திருக்குறள்களாவன :-

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"
"குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போர் அனையரால் வேறு"

என்பன.

இவற்றுள் முன்னது, 'விலங்குக்கும் மக்களுக்கும் எத்துணை வேற்றுமை உண்டோ, அத்துணை வேறுபாடு உண்டு படிக்காதவர்கட்கும் படித்தவர்கட்கும்,' என்னும் கருத்தையும், பின்னது, 'ஒருவன் உள்ளத்திற் கருதியவற்றை அவன் சொல்லாமலே உணரும் ஆற்றலில்லாதவர் விலங்கேயாவர்' என்னுங் கருத்தையும் தந்து நிற்றல் காண்க.

சிலரை 'மரம்' எனச் செப்பல்

உலகியலில் அறிவு நுட்பமின்றிக் கேட்டதற்கு விடை கூறாமல் நிற்பவரைப் பார்த்து, 'என்னடா மரம போல நிற்கின்றாய்!' எனச் சொல்லுதலையும், பிறரிடம் அவனைப்பற்றிக் கூறுங்கால் 'இஃதொரு மரம்' என அஃறிணை வாய்பாட்டாற் கூறுதலையும் கண்கூடாகக் காண்கின்றோம். இம்முறையில் நமது பொய்யா மொழியாரும் "கூர்த்த மதியினராயினும் அவர்களிடம் மக்களுக்குரிய பண்புகள் இல்லாவிட்டால் அவர்கள் மரத்தையே ஒப்பாவார்கள்," என்று கூறுவதை,

"அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்."

என்னுந் திருக்குறளாலும், "கண்ணைப் பெற்று வைத்தும், அதன் பயனாகிய கண்ணோட்டமில்லாதவரை மண்ணிலுள்ள மரத்தை நிகர்ப்பார்" என்று கூறுவதை,

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர்"

என்னுந் திருக்குறளாலும், "தமக்கொவ்வாத இழி செயலைச் செய்வதில் நாணமில்லாத மாக்கள், உயிருடையார் போல இயங்கும் இயக்கம், மரத்தாற்செய்த பாவை

ஒன்று இயந்திரக் கயிற்றினாலாய தன் இயக்கத்தால் உயிருடையதாக மயக்கினாற் போலும்" என்று கூறுவதை,

"நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று."

என்னுந் திருக்குறளாலுங் காண்க. இத்திருக்குறள்களால் மாக்கள் சிலருக்கு மரத்தை உவமையாக்கிய வள்ளுவர் "உரமொருவற் குள்ள வெறுக்கை; அஃதில்லார், மரம்; மக்க ளாதலே வேறு," என்னுங் குறளால் 'மரம்' எனவே கூறிவிட்டார்.

இனி, 'வேம்பும் கடுவும் போன்ற பிற கடுஞ்சொற்கள் பெய்த திருக்குறள்கள் வருமாறு:

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி எனல்."

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்."

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று."

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி."

"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்."

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்."

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்."

"தேவ ரனையர் கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுக லான்:"

இவற்றுள் இறுதியிலுள்ள மூன்று குறட்பாக்களாலும் கயவர்களைப் புகழ்வது போல இகழ்ந்துரைத்தலைக் காண்க.

இதுகாறும் 'வாயுறை வாழ்த்து' என்னும் இக்கட்டுரையில் வாயுறை வாழ்த்தின் இலக்கணம் எவ்வாறு

தொல்காப்பியத்திற் கூறப்பட்டிருக்கிறதென்பதையும், அவ்விலக்கணத்திற்குத் திருக்குறள் எங்ஙனம் பொருந்தியிருக்கின்றதென்பதையும், அப்பொருத்தத்தை நன்கு அறிந்துதான் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்னும் புலவர் பெருமான் திருக்குறளை 'வாயுறை வாழ்த்து' என்ற பெயராற் குறிப்பிட்டாரென்பதையும் ஒருவாறு விளக்கினோம்.

இனி, மேலே காட்டிய 'வாயுறை வாழ்த்தே' என்று தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவை 'வாயுறை வாழ்த்து வயங்க நாடின் வழிநனி பயக்குமென்று வேம்புங் கடுவும் போல வெஞ்சொல் தாங்குதலின்றி ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்று' எனக் கொண்டு கூட்டி, வழி நனிபயக்கும் என்று = பின்னர் நன்மை பயக்குமென்று கருதி; வேம்பும் கடுவும் போல வெஞ்சொல் = வேம்பும் நஞ்சும் போன்ற கடுஞ்சொற்களை; **தாங்குதலின்றி** = **மேற்கொள்ளாமல்** [இனிய சொற்களால் என்றபடி] (முன்னுள்ள உரை 'தடையில்லாமல்' என்பது) என்றும் பொருள் கொள்ளலாமன்றே? கொள்ளலாம்: ஆனால், 'உறை' என்பது மருந்தல்லவா? அது கைக்கும் இயல்புடையதாயிற்றே! எங்ஙனம் அப்பொருள் பொருந்தும்?" எனின், மருந்தில் சுவையுடையதும் உண்டு எனவும், மருந்தின் நான்குவகைக் குணங்களுள் 'சுவை, வீரியம், விளைவாற்றல்களால் மேம்படுத'லும் ஒன்றெனவும், (திருக்குறள் 950இன் விசேடவுரை பார்க்க.) 'சுவை' என்னும் சொல் அடைமொழியின்றி வந்தால் அது இன்சுவையைத்தான் உணர்த்துமெனவும், 'அருந்துழியொருவன், தன் முகஞ்சுளித்துத் தலை நடுக்குற்றுக் கண்ணீர் வீழ்த்திக் கலுழ்ந்தனன்மாங்'தாமல் மகிழ்ச்சியோடு உண்ணும்படி சுவையுடைய மருந்தைக் கொடுத்துப் பிணியைப் போக்கும் மருத்துவர்களே நோயாளிகளாற் புகழப்படுவர் என்றுங் கூறி மறுக்கக் கடவர்.

'இனியவை கூறல்' எனத் தமது அருமைத் திருக்குறளில் ஓர் அதிகாரமும் கூறி, "அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை, நாடி யினிய சொலின்," என்னுந் திருக்குறளால் 'பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்கும்

சொற்களை ஒருவன் தன் அறிவால் நன்கு ஆராய்ந்து தெளிந்து, அச்சொற்களையும் கடுமையாகக் கூறுமல் இனிமையாகவே கூறுதல் வேண்டும்,' என்னும் தம் உள்ளக் கருத்தை வெளிப்படுத்திய நம் செந்நாப்போதாருக்கு நாம் கருதும் பொருள் பெரிதும் பொருத்தமுடையதல்லவா!

இனி, 'வாயுறை வாழ்த்து' எனத் திருக்குறளைக் கூறிய இளவேட்டனர் என்னும் புலவர் பாடிய 'இன்பமும்' என்று தொடங்கும் வெண்பாவிலுள்ள 'மன்பதைக் கெல்லாம் இன்பு ஒழியாது மனமகிழ உரைத்தார்' என்னுந்தொடரை ஊன்றி நோக்கின், 'அவர் மக்களனைவருக்கும் இன்சொல்லாலே வாயுறை வாழ்த்துக் கூறினர்,' என்னும் பொருளும் கிடைத்தல் காண்க. எனவே, 'இன்சொல் இனிதின்ற'லை நன்கறிந்த நம் தெய்வப் புலவர் அறப் பகுதிகளையும் பொருட்பகுதிகளையும் எத்துணை இனிமைபடக் கூறுகின்றுரென்பதை, ஏனைய நீதி நூல்களில் வரும் அப் பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு விளங்குமாதலால் எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் காட்டி இக்கட்டுரை முடிக்கப்பெறும்.

திருக்குறளோடு ஒரு புடை ஒப்ப வைத்தெண்ணக் கூடியது 'நாலடியார்' என்னும் நூலாகுமென்பதனைப் பலரும் அறிவர்.

"கல்லா தவரும் நனிநல்லர் கற்றுர்முன்
சொல்லா திருக்கப் பெறின்."

என்னும் தேவர் திருவாக்குத் திருக்குறளிற் 'கல்லாமை' என்னும் அதிகாரத்திலுள்ளது. இக்குறளின் பொருள், "படிக்காதவர்களும், தமது படிப்பின்மையைத் தாமறிந்து கொண்டு, கற்றவர்களின் கூட்டத்திற் சென்று தங்கி, அவர்கள்முன் யாதும் பேசாதிருப்பார்களேயாயின் மிக மிக நல்லவர்களே," என்பது. இக்குறளின் இறுதியில் வைத்த 'பெறின்' என்ற சொல்லால், 'கல்லாதார் கற்றுர் முன் ஏதேனும் சொல்லத் தொடங்கிவிடுவார்களேயன்றி, வாய் மூடி இருத்தல் மிகமிக அரிது' என்பதை நன்கு அறிந்துள்ளவர் நம் வள்ளுவர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

இனி, இக்கருத்தையே கூற வந்த நாலடியாரின் கூற்றைக் காண்போம். 'கல்லாமல் வீணே வளர்ந்த ஒருவன் நல்லறிவையுடையவர்களாகிய கல்வியாளர்களின் நடுவில் யாதுங் கூருமல் அமர்ந்திருந்தாலும் நாய் இருப்பது போலும்; அங்ஙனம் இராமல் சொல்லத் தொடங்கினும் நாய் குரைப்பது போலும்,' என்னும் பொருள் தருமாறு,

> கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
> நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
> இருப்பினும் நாயிருந் தற்றே யிரா அ(து)
> உரைப்பினும் நாய்குரைத் தற்று."

என்று கூறுகிறது.

இந்த இரண்டு கூற்றுக்களையும் நன்கு ஊன்றி நோக்குவாருக்கு இவற்றிலுள்ள வேற்றுமை நன்கு விளங்காமற்போகாது. பொய்யாமொழியார், கல்லாதவர்கள் மீது இரக்கம் கொண்டவராய், கற்றோராதற்குரிய வழியை ஆராய்ந்து, அவர்களுக்குக் கற்றோரிடம் சென்று இருக்குமாறு அனுமதியளித்து, ஆனல் வாய்மட்டும் திறக்கலாகாது எனக் கூறி, எல்லா மக்களும் தங்களைப் பிறர் 'நல்லவர்' எனக் கூறுதற்கே விரும்பும் இயல்புடையவராதலால், அவ்விருப்பமும் கற்றோர் முன் வாய் திறவாமலிருக்கும் கல்லாதவர்க்குக் கைகூடுமென்பார் 'நனிநல்லார்' என இன்மொழி கூறினர்.

நாலடியாரோ, அவர்களுடைய வளர்ச்சியில் கூட அருவருப்புக் கொண்டு, 'நீண்ட ஒருவன்' என்றும், அவர்கள் கற்றோரிடைச் சென்று இருத்தற்கும் உளம் பொருந்தாமல் 'இருப்பினும் நாயிருந்தற்றே' என்றும் 'பேசினுலும் நாய் குரைப்பது போலும்' என்றும் வன்சொல் வழங்குகின்றது. இவ்வாறு கூறின், கல்லாதவரும் இயல்பான மானவுணர்வுடையவராதலின், அவர்கள் கற்றோரிடையே போதலும், அவர்களிடம் நற்பொருள் கேட்டுக் கற்று நல்லோராதலும் எங்ஙனம் இயலும்?

இங்ஙனமே "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" எனவும் இது போலவும் வரும் குறட்பாக்களுக்கும்

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினர் ஈங்கில்லை"

எனவும், இதுபோலவும் வரும் நாலடி வெண்பாக்களுக்கு முள்ள வேற்றுமைகளை ஊன்றிச் சிந்தித்து அறிக.

இக்கட்டுரையிற் காணப்படும் தொகைப் பொருள்களாவன:—

'வாயுறை வாழ்த்து' என்பது திருக்குறளுக்குரிய பெயர்களுள் ஒன்று என்பதும், அதற்கு அப்பெயரிட்டவர் 'மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்' என்பதும், வாயுறை வாழ்த்துக்குத் தொல்காப்பியர் கூறும் இலக்கணம் இது என்பதும், அவ்விலக்கணத்திற்குத் திருக்குறள் எவ்வாறு ஒத்திருக்கிறது என்பதும், அக்கண்ணோடு பார்க்குமிடத்துப் பொய்யாமொழியார் 'பிணம்' என்னும் சுடுசொல்லால் யார் யாரை எங்கெங்குச் சொல்லிச் செல்கின்றார் என்பதும், சிலர் இருத்தலை விட இறத்தல் நன்று என்று எவ்வெவ்விடத்துக் கூறுகின்றார் என்பதும், 'குருடர்' எனச் சிலரைக் கூறுதல் எங்கெங்கு என்பதும், மரபு வழூச் சொற்களாற் சிலரை வைதல் யாண்டு யாண்டு என்பதும், உணவைப் பொறுத்த மட்டில் செல்வர்கள் எத்துணை விழிப்பாக இருந்து தம் உடலைப் பாதுகாக்க வேண்டும் என்பதும், கற்ற கயவர் சிலர் தம் கயமைக்கு எவ்வாறு சமாதானம் கூறுகின்றார் என்பதும், 'மாக்கள்' எனச் சிலரை வைதல் எங்கெங்கு என்பதும், மக்கள் சிலரை 'மரம்' என்று எங்கெங்குச் சொல்கின்றார் என்பதும், 'வாயுறை வாழ்த்து' என்று தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவுக்கு முன்னோர் கொண்ட பொருளுக்குச் சிறிது வேறாகவும் பொருள் கொள்ளலாம் என்பதும், அப்பொருளுக்கும் திருக்குறள் எங்ஙனம் ஒத்திருக்கிறது என்பதும், அம்முறையிற் பார்க்குங்கால் நாலடியார் முதலிய அறங் கூறும் நூல்களைவிடத் தமிழ் மறை எத்துணைச் சிறந்துள்ளதென்பதை அறியலாம் என்பதும் பிறவுமாம்.

இக்கட்டுரை முற்றும்.

எது செல்வம்?

'எது செல்வம்?' என்னும் கேள்வி நம்முட்பலருக்கு வியப்பை விளைக்கலாம். ஆனால், அற நூல்கள், நீதி நூல்கள், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் முதலிய நூல்களைப் படித்தவர்களுக்கு அக்கேள்வி வியப்பைத் தாராது. ஏனெனில் அவற்றில் பல விதமான செல்வங்கள் சொல்லப்படுவதால்.

உலகினர் அனைவரும் 'செல்வம்' என்பது 'பொருளுடைமை' என்றும், 'வறுமை' என்பது 'பொருளின்மை' என்றும் கருதியிருப்பது மறுக்க முடியாத ஒர் உண்மை; எனினும், நமது 'எய்ப்பினில்வைப்'பாகிய மேற்காட்டிய நூல்களில் பல வகைச் செல்வங்கள் சொல்லப்படுகின்றன. அந்நூலாசிரியர்கள், உலகத்தவர்களாற் கொள்ளப் படுகின்ற பொருட்செல்வத்தையும் விலக்காமல் ஏற்றுக் கொண்டே பல வகைச் செல்வங்களைக் கூறுகின்ற குறிப்பால், 'செல்வமென்பது பொருளுடைமையன்று' என்பதும் பல இடங்களிற் புலனாகின்றது. அவ்வாறு அவர்கள் குறிப்பதற்கு அடிப்படையான காரணமும் ஆழ்ந்து சிந்தித்தால் அறியமுடியாத தொன்றன்று.

செல்வம் (பொருளுடைமை) தன்னையுடையானுக்கு இன்பந் தரல் வேண்டும். வறுமை (பொருளின்மை) துன்பந் தரல்வேண்டும். இவ்வுண்மையைத் திருக்குறளிலுள்ள 'பொருள் செயல் வகை' என்னும் அதிகாரத்தினாலும், 'நல்குரவு' என்னும் அதிகாரத்தினாலும், அவ்வதிகாரங்களில் வருகின்ற 'பொருளல்லவரைப் பொரு

ளாகச் செய்யும், பொருளல்ல தில்லைப் பொருள்' எனவும், 'அறனினும் இன்பமுமீனும்' எனவும், 'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள், ஏனை யிரண்டும் ஒருங்கு' எனவும், 'இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னாதது,' எனவும், 'நல்குர வென்னும் இடும்பையுட் பல்குரைத் துன்பங்கள் சென்று படும்,' எனவும் வரும் திருக்குறள்களானும், 'அறம் பொருள் இன்ப மெனப்பகர்...நடுவண தெய்த இருதலை யும் எய்தும்' என்னும் நாலடியாராலும், இன்பந் தரும் செல்வத்தின் உயர்வைப் பலபட விரித்துக் கூறும் பிற்கால இலக்கியங்கள் பலவற்றாலும், தலைவன் தலைவியைப் பிரியுங் காரணங்களுள் பொருள் தேடுத லும் ஒன்று என்று கூறும் இலக்கணத்தாலும் தெள் ளத்தெளிய அறியலாம். இங்ஙனம் நூலிற் காணப் படுவது ஒருபுறமிருக்க, உயிர்களின் இயக்கமனைத்தும் துன்ப நீக்கத்திற்கும், இன்ப ஆக்கத்திற்குமேயன்றி வேறொன்றிற்கும் அன்று என்பது யாவருக்கும் ஒப்ப முடிந்ததொன்று. அங்ஙனம் இன்பம் பெற விரும்புபவர் கள், அதைத் தர வல்லது செல்வந்தான் என்பதை நன்கு தெளிந்து அதைத் தேடும்பொருட்டுச் 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்' அல்லும் பகலும் அலமருகின்றனர் என்பதை யாரே மறுக்க வல்லார்?

இன்னும், கல்வியறிவில்லாத மக்கள்கூட, தமது கடுமையான உழைப்பைக் கண்ட யாரேனும் 'ஏனையா இப்படி இரவும் பகலும் உழைக்கின்றீர்கள்?' என்று கேட்டால், 'என்னவோ ஐயா, இந்தச் சமயம் நாலு காசு சம்பாதித்துக் கொண்டால் பின்னால் கொஞ்சம் சந்தோஷ மாயிருக்கலாமென்றுதான் இப்படி அரும்பாடு படுகி றேன்,' என்று சொல்வதையும் கண்கூடாகக் காண்கின் றோமல்லவா!

இவ்வாறு, தான் காரணமாக நின்று இன்பமாகிய காரியத்தைச் செய்ய வல்லதாகிய செல்வமானது, எங்கும் அந்த இலக்கணத்திற்கு மாறுபடாமல் நிகழவேண்டிய தொன்றாயிருக்க, பல இடங்களில் அது மாறுபட்டு

இன்பந் தாரா திருத்தலையும், அம்மட்டிலன்றி ஒரோ வழித் துன்பந் தருதலையும் காண்கின்றோம். இனி, ஒவ்வோ ரிடத்து வறுமை, தன் காரியமாகிய துன்பத்தைத் தாரா திருத்தலையுங் காண்கின்றோம். இவ்வுண்மை எக்காலத் திலும் உள்ளதென்பதை, செல்வத்தின சிறப்பையும், வறுமையின் இன்னலையும் வானளாவக் கூறிய வள்ளுவப் பெருந்தகையாரே,

> "நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
> கல்லார்கட் பட்ட திரு."

என்று கூறுவதாலும், "தத்தம் நிலையினின்றும் மாறி நிற்றலால் தாமிடுக்கட்படுதலும், உலகிற்குத் துன்பம் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திருக் கல்லா ரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலின், வறுமையினும் திரு இன்னாது என்றார்," எனப் பரிமே லழகர் கூறிய அதன் விளக்க உரையாலும் காணலாம்.

உலகியலுள் இவ்வாறு நிகழ்தலைக் கண்கூடாகக் காணுவதனாலேதான் புலவர் பெருமக்கள், 'ஒரு காரணம் தன் காரியம் எதுவோ அதனைத் தாராவிடின் அதனைக் காரணம் என்று சொல்லுதல் பொருந்தாது,' என்னும் தருக்கமுறைப்படி சில இடங்களில் தானிருந்து இன்பம் தாராமையோடு, உலகிற்கும் தீங்கு செய்து, தனையுடை யவனையும் கெடுத்தலால் பொருளுடைமையைச் 'செல் வம்' என்ற சொல்லாற் கூறாதவரும், சில இடங்களில் அது தன் காரியமாகிய இன்பத்தைச் செய்தலால் 'செல் வம்' என்று கூறுவாருமாயினர். எனவே, 'செல்வம் என்பது பொருளுடைமைதான்; வறுமை என்பது பொரு ளின்மைதான்' என்று கூறலாகாது; 'செல்வம் என்ப தும் ஒரு பொருளுடைமைதான்; வறுமை என்பதும் ஓர் பொருளின்மைதான்' என்று கூற வேண்டுமென்பது அவர்கள் கருத்தென்பது பெறப்பட்டது.

இனி, நம்மால் மாமரம் என்று கருதப்பட்ட மரம் ஒன்றில் மாங்காய் காய்ப்பு இல்லாமையோடு, வேறு காய் அதில் தோன்றுமாயின, அதனை மாமரம் என்று சொல்லத் துணியோம். ஆனால், எந்தெந்த மரங்களில்

மாங்காய் காண்கின்றோமோ, அவற்றை எல்லாம் மாமர மென்றே சொல்வோமல்லவா? அது போல, எது எது மக்களுக்கு இன்பந் தருமோ, அதனை அதனைச் 'செல்வம்' எனப் புலவர்கள் கருதித் தாமியற்றிய நூல்களுட்கூறிப் போந்தனர். ஆதலாற் செல்வங்கள் பலவாயின. அச் செல்வங்கள் எவ்வெவை என்பதை இனி முறையாகக் காண்போம்:

தேவர் கண்ட செல்வங்கள்

தெய்வப் புலவர், தமது பொய்யாமொழியுட் கூறும் செல்வங்கள் சில. மக்கள் நுகரும் இன்பங்களுட்சிறந்து காணப்படுவது மகப்பேற்றால் வருவதே! ஐம்புல இன்பங்களையும் ஆரத்தரவல்லதும், அவ்வின்பத்தையும் அனைவருங் காண நுகருமாறு செய்வதும் மகவு ஒன்றுதான். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்,சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"; "குழலினிது யாழினிதென்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்பன மகப்பேறில்லாத வள்ளுவர் வாய்மொழிகள்.

அழகிச முதலியார் என்பவர் பெயருக்கேற்ற அழகும், அழகுக்கேற்ற அறிவும் படைத்தவர். திங்களொன்றுக்கு 250 'ரூபா' சம்பளம் பெறும் உத்தியோகம் பார்ப்பவர். அவருடைய நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியார் 'அழகு வல்லி' என்னும் அரும் பெயர் பூண்டவர். அவர் அழகிற்சிறந்தவரா, அறிவிற்சிறந்தவரா என யாரும் துணிய முடியாதவாறு அவ்விரண்டும் அவரிடம் போட்டியிட்டுக் காட்சியளிக்கும்! 'உடலும் உயிரும், மலரும் மணமும், நகமும் தசையும்' என இருவரும் உள மொனறி :வையத்துள் வாழ்வாங்கு வாழ்வு' நடத்தி வருகிறார்கள். அவர்களின் அற வாழ்வின் பயனாக அருமருந்து போலத்தோன்றினான் அழகிய புதல்வனொருவன். தவப்புதல்வன் மூன்றாது ஆண்டின் தொடக்கமுடையவனாய்ப் பெற்றோர்களை மகிழ்விக்கும் நாளில் ஓர் நாள் முதலியார் தம் அலுவலகத்திற்குக் காலையிலேயே சிற்றுண்டிகூட அருந்தாமல் 'பதினொரு மணிக்கு உணவுட்கொள்ள வந்துவிடுகிறேன்' என்று சென்றார். நண்பக

லாகியும் அவர் வரவில்லை. நாயகரை உணவால் மகிழ்விப்பது தம் கடமையில் சிறந்தது என்றுகருதும் அம்மையார், இலைபோட்டு உணவுப் பண்டங்களனைத்தையும் ஒருங்கே வைத்துக் கையில் நீருடன் வாயிலில் நின்று கணவர் வரவை எதிர் நோக்கி ஒவ்வொரு நொடிப்பொழுதையும் ஒவ்வோர் ஊழியாகக்கழித்து வருகிறார். உள்ளம் நாயகர் வருகையில் ஈடுபட்டு, அவர் குறித்த காலத்தில் வாராமையால், 'அந்தோ! பசியோடிருக்கின்றாரே!' என்ற அவலத்தில் தோய்ந்திருந்தமையால், புதல்வனைப்பற்றிய நினைவில்லாமலிருந்துவிட்டார். கடும்பசியுடன் கணவர் வந்தார். முகக்குறியால் அவர் பசியின் நிலையையறிந்த தலைவியார், தூய்மை செய்யும்பொருட்டு அவர் கையில் தண்ணீரைக் கொடுத்து, அவர் வந்து இலையில் அமர்வதற்குள் எல்லாம் வட்டித்துவிட்டார். முதலியார், தமது பசி மிகுதியால், அலுவலகத்திற்கு அணிந்துகொண்டு சென்ற மேலங்கி'உள்ளங்கிகளைக்கூடக்களையாமல் அமர்ந்தார். உணவைப் பிசைந்து உண்ணப்போங்கால் 'செல்வன் எங்கே?' என, 'அவன் வீதியில் விளையாடுகின்றான்' என்று மனைவியார் சொல்ல, 'அவனைத் தூக்கிக்கொண்டு வா' என்னும் கட்டளை பிறக்க, அம்மையார் விரைந்து வீதிக்குச் சென்றார். பிள்ளை ஓர் அங்கணத்தண்டை (சாக்கடை) அமர்ந்து; தன் காலால் அதில் ஓடும் அழுக்கு நீரைத் துழாவி, அதிலுள்ள பெரும் புழுக்களையும் சிறு புழுக்களையும் கணக்கிட்டுக்கொண்டிருக்கிறான். இக்காட்சியைக் கண்ட தாயார் மனம் புழுங்கி அவனது புழுதி படிந்த தோள்களைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு, வீட்டுக்குப் பின்புறமுள்ள கிணற்றடிக்குச் செல்வதைக் கண்ட நாயகர், 'எங்கே கொண்டுபோகிறாய்?' எனச் சிறிது அதட்டி வினவ, அம்மையார் அஞ்சும் உள்ளத்தவராய், தூய்மையில்லாதிருக்கிறான்; நீராட்டிக்கொண்டு வருகிறேன்,' என்று சொன்னதைக்கேட்ட அவர் சிறிது சினத்துடன், 'வேண்டா; கொண்டுவா' என்றார். மனைவியார் மகிழ்நர்முன் மைந்தனைக் கொண்டுபோய் விட்டார்.

செல்வப் புதல்வன் தனது திங்கனி வாய் திறந்து 'எப்பப்பா வந்தாய்? நீ வந்ததை யான் பார்க்கவில்லையே! நீ காலையில் சாப்பிடாமல் போய்விட்டாயல்லவா! அத

ுலே யானும் சாப்பிடவில்லையப்பா' என்று கட்டித்தழுவி மடியின்மீதேறினன். அவன் உடற்புழுதி அங்கிகளில் முத்திரை வைக்க, காலில் ஒட்டியிருந்த தூய்தல்லாத நீர், கட்டியிருந்த உடையில் முத்திரை வைத்தது; தனது புழுதி தோய்ந்த கையால் தந்தையாரின் இலையிற்படைத் திருந்த சோற்றைப் பிசைந்தான்; தந்தையார் வாயிலும் போட்டுத் தன் வாயிலும் சிறிது செலுத்தினன்; 'நன்றாயில்லை' என அவ்விலையிலேயே துப்பினன்; ஒரு பிடி சோற்றை எடுத்து அன்னையார்மேல் விசினன். இத்துணைச் செயலையும் கண்ட தந்தையார் பெருமகிழ்ச்சியோடு உண்டு பசி தீர்ந்தார்; தவப் புதல்வன் செயலால் அழுக்கேறிய உடைகளைக் களைந்து வேறு உடை உடுத்துக் கொண்டு சாய்வு நாற்காலியிற் சாய்ந்தார். திருவினும் அழகிய செல்வியார் வெற்றிலை மடித்துத் தம் அன்பையும் பணிவையும் வெளிப்படுத்து முகத்தாற்கொடுக்க, அதனை வாங்கி வாய்மடுத்த அவர், தமது அன்பனைத்தையும் தமது பார்வையாற் காதலியார்மேற் சொரிவாராயினர். அந்தச்சமயம் பார்த்துத் தமது தலையின் இடப் புறத்திலுள்ள ஓர் இடத்தில் கைவிரலாலே தடவித் துன்பக் குறியை உணர்த்த, அதனையறிந்த அன்பர், 'அழகுவல்லி, யான் விசிறிக்காம்பால் மெல்ல உன் தலையிலே தட்டிவிட்டு விடிகின்ற வரையில் தூங்காமலே துன்பப்பட்டுக்கொண்டிருந்தேன். நீ நன்றாகத் தூங்கிவிட்டாயாதலால் அதனை அறியாய்! நமக்குத் திருமணம் நடந்து ஐந்தாண்டுகளாயினவே! இது வரை உன்னைச் சினத்தோடு பார்த்துக் கூட அறியேனே! அவ்வாறுள்ள எனக்கு நேற்றிரவு ஏன் சினம்-வரவேண்டும்? சுகாதாரத்திற்குக் கேடு விளைக்கும் செயல் ஓரணுவளவும் நம் வீட்டில் நிகழலாகாது எனப் பல முறை உனக்குச் சொல்லியிருக்கிறேன். நீயும் படித்த பெண். சொல்வது போதாதென்று, ஒவ்வோராண்டும் நம் நகரத்தில் நடைபெறும் சுகாதார வாரக் கொண்டாட்டத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறேன். இந்த ஆண்டுக் கொண்டாட்டத்தில் பல மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி நீயும் நானும் சொற்பொழிவு கூட ஆற்றினோமே! இங்ஙனம் ஊராருக்கெல்லாம் சொல்லி விட்டு நாம் அதற்கு மாறாக நடக்கலாமா? நேற்றிரவு

'பால் ஆறிவிட்டதா? பார்,' என்றதற்கு உன் விரலைப் பாலில் விட்டுப் பார்க்கிறாயே? முன்னரும் இரு முறை இக்குற்றத்தையே செய்திருக்கிறாயல்லவா? உன் நகத்தி லுள்ள அழுக்கு அந்தப் பாலிற படிந்து அதனை அருந் தும் என் உடமபுக்குக் கேடு விளைக்குமல்லவா? இந்த முறை உனக்கு நினைவிருக்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணித்தான் விசிறிக் காம்பால் தலையிலே தட்டிவிட் டேன். யான் செய்த அக்குற்றத்தை மன்னித்தலோடு மறந்தும்விடு,'' எனக் கண்ணீர் துளும்ப, தொண்டை அடைக்க, நாத்தழுதழுக்க, காதலர் கூறிய அன்பு மொழிகளால் மகிழ்ந்த அழகுவல்லியார், "நீங்கள் அதற்கு வருந்த வேண்டா; யான் செய்த குற்றத்திற்கு இத் தண்டனை போதாது என்றே கருதுகிறேன். ஆனால், யானும் என்போல வீட்டு வேலைகளைக் கூலியாள் போடா மற் செய்கின்ற பெண்களுமாகிய எங்கள் கையில் நகமே வளருவதில்லை. அப்படியே சிறிது வளர்ந்திருந்தாலும் அதிற் படிந்திருக்கும் அழுக்கானது, யான் அதில் விரலை விட்டுப் பார்க்கும் ஓர் நொடிப் பொழுதிற் கரைந்து உங் கள் உடலுக்கு ஊறு விளைத்துவிடுமென்பது ஐயமே யன்றி, உறுதியில்லை. ஆனால், சிறிது நேரத்திற்குமுன் உங்கள் மகன், தனது அருமைத் திருக்கரத்தால் உங்கள் வாயில் சோற்றையள்ளி ஊட்டினானே; தேவாமிர்தம் உண்பவர் போல உண்டீர்களே! அவன் கையும் விரலும் இருந்த நிலையை யறிவீர்களே! அந்தப் புழுதிக் கையோடு அவன் கொடுத்த உணவை உண்டது எந்தச் சுகாதாரத் திற் சேர்ந்தது?'' என்று கேட்க, முதலியார் நடந்தவை அனைத்தையும் நினைவிற்குக் கொண்டுவந்து சிறிது வெட் கப்பட்டவராய், "அஃதென்ன? எனக்கு அதைப்பற்றி நீ சொல்லுகிற வரையிலும் யாதும் தோனறவில்லையே! அதற்குக் காரணமும் எனக்கு விளங்கவில்லை; நீ அறிந் தால் சொல், பார்ப்போம்.'' என்றார். மனைவியார் மணா ளரை நோக்கி, "உங்களுக்குத் தெரியாதது எனக்கு எப் படித் தெரியும்? அது பற்றி யானும் சிறிது வியப்போடு சிந்திக்குங்கால் திருவள்ளுவ தேவர் திருவாய் மலர்ந் தருளிய "அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை யளாவிய கூழ்'' என்ற திருக்குறள் என் நினை

விற்குவந்தது," என, இருவரும் திருவள்ளுவர் மக்கள் உள்ளங்களை அளந்தறிந்து கூறியிருக்கும் திறத்தைப் பாராட்டி வியந்தனர்.

இத்துணை மகிழ்ச்சியை ஏனைய பொருட்செல்வம் முதலியன தரமாட்டா ஆதலால், "பெறுமவற்றுள் யாம றிவதில்லை அறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" எனத் திருவள்ளுவர் செப்பியருளினர். எனவே, மகப்பேறு ஒரு சிறந்த செல்வம் என்பதைத் "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்னுங் குறட்பாவாற் குறிப்பிடுவாராயினர் அப் பொய்யாமொழியார்.

இனி, 'இம் மகச்செல்வத்தைப் பெறுது ஏனைப் பொருட்செல்வத்தை நிறையப் பெற்று உலக இன்பங் களை ஆரத் துய்த்தாலும், அவர்கள் வாழ்நாள் பயனு டையதாகாது,' என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் காவலனும் நாவலனுமாகிய பெருமகன்,

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே"

என்று கூறியதைப் புறநானூற்றிலே அறிகிறோம். மேலே காட்டப் பெற்ற கருத்துக்களை ஒட்டிப் பிற்காலத்து இலக்கியங்கள் கூறுவனவற்றை நிரம்பக் காணலாம்.

இனி, மற்றொரு வகையாலும் இம் மகச்செல்வத்தின் உயர்வை நம் முன்னோர்கள் காட்டியிருக்கின்றார்கள். ஒழுக்கம் என்ற சொல், நன்மை, தீமை, கூடாமை என்ற மூன்றுக்கும் பொதுவாக நின்று நல்லொழுக்கம், தீயொ ழுக்கம், கூடாவொழுக்கம் என வருவதாயினும், அவ் வடை மொழிகளுள் எதனையும் சேர்க்காது 'ஒழுக்கம்' என்று சொல்லின், அது உயர்ந்த பொருளாகிய நல் லொழுக்கத்தையே தழுவி வருவதை நூல் வழக்கிலும், உலக வழக்கிலும் காண்கின்றோம். அது போல, செயப்

படுபொருள் குன்றுத வினைப்பெயராகிய 'பெற்றோர்' என்ற சொல்லுக்குப் பொருளைப் பெற்றோர், புகழைப் பெற்றோர் என்று செயப்படு பொருள்களை விரிக்காமல், மக்களைப் பெற்றோர் என்ற பொருளிலே இருவகை வழக்கிலும் வருதலைக் காணும் போது அச்செல்வம் மிகமிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறதென்பதை அறியலாம்.

தனக்கு ஒரு கூலியாள் கிடைக்காமல் 'அரசன் ஒறுப்புக்கு ஆளாக நேருமே!' என்று எண்ணிக் கவன்று கண்ணீர் வடித்த 'வந்தி' என்பாள், கூலியாள் கிடைத்தவுடனே அடைந்த மகிழ்ச்சிக்கு, "செல்வமகத் தந்தபோதெழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம்போந்தாள்," எனப் பரஞ்சோதி முனிவர் தாமியற்றிய திருவிளையாடற் புராணத்துள் மகவின்மையாகிய வறுமையால் வாடியுழந்த ஒருவன், அந்த மகச் செல்வத்தைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியையே உவமையாகக் கூறியதும் இங்குக் கருதத்தக்கது.

இன்னும் அவ் வள்ளுவப் பெருந்தகையார், "ஒருவனுக்கு அழிவில்லாத பெருஞ்செல்வம் கல்வியேயன்றி, அழியும் தன்மையையுடைய பொன்னும் மணியும் ஆகா," என்றும், "அக்கல்விச் செல்வத்தாற் பெற்ற அறிவை நுண்ணிதாக்கி வலிமைப்படுத்துகின்ற கேள்விச் செல்வம் மற்றச் செல்வங்களைவிடச் சிறந்தது," என்றும், "அறிவுடையார் எல்லாமுடையாராகவே கருதப்படினும், 'பிறிதினோய் தந்நோய்போற் போற்றாக் கடை' அவ்வறிவாற் பெறும்பயன் யாதுமில்லையாதலால், அங்ஙனம் போற்றுவதற்கு ஏதுவாக உள்ள "அருட்செல்வமே செல்வத்துளெல்லாம் சிறந்த செல்வமாகும்; மற்றைப் பொருட்செல்வம் அற்பர்களிடத்திலும் இருக்கும்" என்றுங் கூறுவதை, முறையே கீழ் வரும் குறட்பாக்களாற் காணலாம்; அவை,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை."

" அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள."

என்பன. இவையெல்லாம் வள்ளுவர் வகுத்த வான் செல்வங்கள்.

நாலடியார் நவிலும் நற்செல்வம்

நுண்ணறிவுடையான் ஒருவன், தனக்கு எத்துணைத் துன்பம் நேரினும் தன் கூர்த்த மதியால் அவற்றைப் போக்குதற்குரிய வழி வகைகளை அறிந்து அவற்றாலே போக்குதலும், அவை பின்னர் வாராதவாறு முன்னறிந்து காத்தலுமாகியவற்றால் எஞ்ஞான்றும் இன்புற்றிருத்தலை யும், அஃதிலாத ஒருவன், தன்னிடம் இன்பந் தருதற் குரிய பிற கருவிகள் இருப்பினும், அவற்றைப் பயன் படுத்திக்கொள்ளும் முறையை அறியாமையாலும், பிற காரணங்களாலும் துக்கமென்பதைத் தன் பக்கத்திலே வைத்திருத்தலையும் கண்கூடாகக்காண்கின்றோமல்லவா? முன்னவன் இன்புறுதற்குக் காரணமாக இருப்பது அவன் நுட்பவுணர்வும், பின்னவன் துன்புறுதற்குக் காரணமாக இருப்பது அவன் நுண்ணுணர்வு இன்மை யுமேயாதலால், இன்பம் தருவதைச் செல்வமென்றும், துன்பந்தருவதை வறுமை என்றும் சொல்லும் முறை பற்றி.

" நுண்ணுணர் வின்மை வறுமை ; அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்"

என நாலடியார் நவின்றது.

குமரகுருபர அடிகள் கூறும் கோதிலாச் செல்வம்

இவ்வுலகத்திற் பொருளுடையாருட்பலர், தாம் மேலும் மேலும் அதனை ஈட்டும் அவா மிக்குடையவராய், அதற்குரிய முயற்சியை மேற்கொண்டு, அது கைகூடா வழியும், கூடினும் மேலும் ஈட்டும்பொருட்டும் நல்லுணவு முதலியவற்றால் உண்டாகும் எளிய இன்பத்தையும் நுகரப் பெறாதவராய் மன அமைதியின்றி அலைந்தொழி வதையும், எளிய மக்கள் பலர், தமக்கு அன்றன்று கிடைத்ததைக்கொண்டு மனமகிழ்ந்து, 'போதுமென்ற

மனம் பொன்மனம்,' என்ற பழமொழிக்கு இலக்கியமாய் இன்புறுதலையும் காண்கின்றோமல்லவா? இவ்விருதிறத்தாரும் துன்புறுதற்கும் இன்புறுவதற்கும் காரணம் முறையே 'மேலும் மேலும் வேண்டும்' என்றெண்ணுதற் கேதுவாக உள்ள அவாவும், 'கிடைத்தது போதும்' என்ற சிந்தை நிறையுமல்லவா! இவ்வுண்மையைக் குமர குருபர அடிகளார், தாமியற்றிய 'சிதம்பர மும்மணிக் கோவை' என்னும் நூலில்,

> "செல்வ மென்பது சிந்தையின் நிறைவே;
> அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"

எனக் கூறுமாற்றுல் இன்புறுதற்குக் காரணமாக வுள்ள சிந்தையின் நிறைவைச் செல்வம் என்றும், துன் புறுதற்கேதுவாகவுள்ள அவாவை வறுமை என்றும் அறுதியிட்டுக் கூறுகிருர். இங்ஙனம் கூறிய புலவர் பெருமான், முன்காட்டிய புலவர் பெருமக்களைப் போலக் காரியத்தைமட்டும் கூருமல், தமது முடிவுக்குக் காரணங் காட்டுதல் அறிந்து இன்புறத்தக்க தொன்ருதலால் அஃது அடியில் தரப்படுகின்றது:

> "கொடியும் முரசும் கொற்றவெண் குடையும்
> பிறர்கொளப் பொருஅன், தானே கொண்டு
> பொதுநீங்கு திகிரி திசைதிசை போக்கிச்
> செவியிற் கண்டு கண்ணிற் கூறி
> இருநிலம் புரக்கும் ஒருபெரு வேந்தன்."

ஒருவன்; அவன், இத்துணை ஆட்சிச் சிறப்பை உடைய வனுயினும், 'மாமிக்கோர் மாமியுண்டு,' என்னும் முது மொழிப்படி, உலகில் எங்கோ ஒரு பகுதியில், தன்னி னும் பெரியவனுக ஒரு மன்னன் வாழ்கின்ருனென் பதைக் கேட்டறிகிருன். அறிந்ததும் அவன் இடம் பொருள் முதலியவற்ருேடு, தனது இடம் பொருள் முதலியவற்றை ஒப்பிட்டு நோக்கத் தன் செல்வம் சுருங்கித் தோன்றுகிறது. அதனுல், மனமாழ்கி, 'அத் துணை ஈட்டுதும்' என ஈட்டத்தையே மேற்கொண்டதனுல் சுவையுள்ள உணவு அவற்கு நஞ்சாகத் தோன்றுகிறது. "பிரமானந்தமாக இரவு தூங்கினேன்!" என ஓர்

ஏழை மகனும் கூறி இன்புறுதற்குரியதும், பகல் முழுவதும் பாடுபடும் மக்களின் அகக்கருவிகளும் புறக்கருவிகளும் நன்கு ஓய்வெடுத்துக்கொண்டு, மறுநாள் அவை செய்யும் அலுவல்களுக்கு நன்கு பயன்படுதற் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற வரப்பிரசாதமாக உள்ளதுமாகிய உறக்கம் அவனால் மறக்கப்படுகிறது; பெருந்திருவையொத்த பேரழகும், அருந்ததியன்ன கற்பும் வாய்ந்த ஆருயிர் மனைவியார் நெருங்கி, "உங்கள் உடலுக்கென்ன நேர்ந்தது? மனக் கவலையோடு காணப் படுகின்றீர்களே! என்னிடம் கூறலாகாதா?" என அன்பு கனிந்த மொழியால் வினவினால், நாற்காற்பிராணிபோலச் சீறி அவர்மீது பாய்கிறான்; அவன் மூக்கிலிருந்து வரும் காற்று, கொல்லன் உலைத்துருத்தியிலிருந்து வெளிப் படும் காற்றுப்போன்று பெருமூச்சாய் இருக்கின்றது. இங்ஙனமாக இவன் கவலையுற்று அழிகின்றான் என்பதை,

> "மிக்கோன் ஒருவன் வெறுக்கை நோக்குழித்
> தொக்கதன் வெறுக்கை சுருங்கித் தோன்ற
> மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
> அயிற்சுவை பெறாஅன் துயிற்சுவை யுறாஅன்
> மாணிழை மகளிர் தோணலம் கொளாஅன்
> சிறுகாற்று வழங்காப் பெருமூச் செறிந்து
> இழப்புறு விழுமம் எய்தி அழுக் கறுத்துக்
> கவலையுற் றழிவதும் காண்டும்"

என்ற அடிகளாற்காட்டுகின்றார்.

இக்காட்சியைத் தாம் கண்டு நமக்குக் காட்டிய அம் மட்டிலமையாது, இதற்கு எதிரான காட்சி ஒன்றையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுவது போலக் காட்டுகின்றார். அது,

> "அதான்று, விறகெடுத் தூர்தொறும் சுமந்து விற்றுக்
> கூலிகொண்டு, புற்கையும் அடரும் மாந்தி மக்களொடு
> மனையும் பிறவும் நோக்கி அயல்மனை
> முயற்சியில் மகனை இழித்தனன் எள்ளி
> எனக்கிணை இல்லென வினையன்மற் றொருவன்
> மனக்களிப் புறீஇ மகிழ்வதுங் காண்டும்"

என்பது. "இந்த உலக நிகழ்ச்சியாலேதான் செல்வமென்பது சிந்தையின் நிறைவு; வறுமை என்பது அவாவாகும் என்ற முடிவுக்கு வந்தேன்" என்பார்,

"அதனால், செல்வம் என்பது சிந்தையின் நிறைவே;
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே."

என்று கூறியருளினர்.

கம்பர் காட்டிய கவின்மிகு செல்வம்

'கவியரசர்' எனப் புவியரசர்களாற் போற்றப்பெற்ற கம்பர் பெருமானாற் காட்டப்பெற்ற செல்வம் எதுவெனப் பார்ப்போம்:

சுக்கிரீவன் ஆணையால் முதல்முதலாக இராமபிரானையும், இலக்குவப்பெருமானையும் காணும்பொருட்டு மாணவனாய் வந்த ஆஞ்சநேயனை, அவன், தன் கேள்விக்கு விடையாகக் கூறிய விநய வார்த்தைகளால் மகிழ்ந்த சக்கரவர்த்தி திருக்குமாரன், இளைய பெருமானை நோக்கி,

"இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னுங் காட்சி [வன்?
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சொல்லின்செல்
வில்லார்தோள் இளையவீர! விரிஞ்சனே விடைவல்லானே?"

என வியந்து கூறியதாகக் கம்பநாடர் 'சொல்லைச் செல்வமாகக் கொள்ளவேண்டும்' என்னுந் தமது கருத்தை வெளியிடுகிறார். எனவே 'சொல்லின் செல்வன்' என்ற தொடருக்குச் 'சொல்–சொல்லாகிய, இன் – இனிய, செல்வன்–செல்வத்தை யுடையவன்' என்று பொருள் காண வேண்டும். இன்றேல் 'இன்' என்பதை 'அல்வழிக் கண் வந்த சாரியை' எனத் தள்ளிவிட்டுச் 'சொல்லாகிய செல்வத்தையுடையவன்' என்று பொருள் கொள்ளலாம்; இரண்டும் கருத்து வகையில் ஒன்றேயாயினும், முதலிற் காட்டிய பொருளில் 'இனிய' என்ற சொல்; இனிமையல்லாத செல்வத்தினின்றும் இச்சொற்செல்வத்தைப் பிரித்து இனம் விலக்க வந்த அடைமொழியாய்ப் பொருளைச் சிறப்பித்தல் காண்க.

இனி, எப்படிப் பேசினல் அது சொற்செல்வமாகும் எனக் கம்பநாடர் கருதுகிருரென்பதைச் சிறிது நுனித்து நோக்கி அறிவோமாக.

மாணவ வேடந்தாங்கி வந்த மாருதி, இராமபிரானை யும் இளையபெருமாளையும் நோக்கிக் 'கவ்வையின்ருக நுங்கள வரவு' என்ருன். இராமபிரான் அவ்வநுமானை நோக்கி, 'எவ்வழி நீங்கியோய்? நீ யார்?' என வினவ, அம்மாருதி இராமபிரான் தோற்றத்தில் ஈடுபட்டவனுய்,

"மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ண!"

என அப்பெருமானை விளித்து, "யான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அநுமனென்பேன்," என்று கூறிப் பின்னும்,

"இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன்: தேவ! நும் வரவு நோக்கி
விம்மலுற் றனையா னேவ வினவிய வந்தேன்."

என்று கூறினதாகக் கம்பர் எழுதுங் கவிகளின் உட்கிடையைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால், மேலே கூறியவாறு அவர் கருதும் 'சொற்செல்வம்' எது என்பதைத் தெள்ளத்தெளிய அறியலாம்.

இராமபிரான் மாருதியைக் கேட்ட கேள்விகள் இரண்டு. அவை 'நீ எங்கிருந்து வருகிருய்? யார்?' என்பன. இவ்விரு வினைக்களுக்கும் விடையாக 'யான் ரிசியமுகப் பருவதத்திலிருந்து வருகிறேன்; அநுமான் என்பது என் பெயர்' எனக் கூறினுற்போதும். ஆனல், மாருதி அவ்வாறு கூருமல், 'என் தந்தை பெயர் வாயு தேவன்; தாயின் பெயர் அஞ்சனுதேவி; யான் அநுமான் என்று வழங்கப்படுவேன்; நமக்கு எதிரில் இதோ தெரிகிறதே இந்த மலையில் எங்கள் அரசன் இருக்கிருன்; அவன் பணியாட்களுள் யான் ஒருவன்; அவன சூரியனுடைய புதல்வன். சுக்கிரீவன் என்பது அவன் பெயர்; தேவராகிய நுமது வரவை அறிந்து மகிழ்ந்து அவன் உங்களை

அறிந்து வருமாறு அனுப்பினன்; அவன் கட்டளையை மேற்கொண்டு வந்தேன்,'' எனமிகவிரிவாகக் கூறுகிருன். அங்ஙனம் கூறியதற்குக் காரணம் என்ன? மேலே காட்டியவாறு இரண்டு வினுக்களுக்கும் இரண்டு விடைகளே கூறியிருப்பின், அவன் வரலாறு முழுவதும் நன்கு அறிந்துகொள்ளக் கருதிய இராமபிரானுற் பல கேள்விகள் கேட்கப்படும்; அவையாவன, 'நீ யாருடைய புதல்வன்? அநுமானென்பதைத் தவிர வேறு பெயர் உனக்கு உண்டா? நீ இப்பொழுது என்ன தொழிலை மேற்கொண்டிருக்கிருய்? உன் தலைவன் யார்? அவன் யாருடைய மகன்?'' என்பன போன்றவை. ஒருவனை நன்கு அறிந்து கொள்ளக் கருதுகிறவர்கள் இத்துணைக் கேள்விகள் கேட்கவேண்டுமா எனின், அவற்றின் இன்றியமையாமையைக் கூர்ந்து நோக்கின், 'கேட்கவேண்டும்' என்பதை அறியலாம். சிலரை அவர்கள் தந்தை மூலமாக அறிந்து கொள்ளலாம்; அதுவும் தந்தை வியாபகமுள்ளவனுய் இருப்பின் அவன் பெயரைச் சுட்டி அவன் மகன் என்று சொல்வதே சாலவும் பொருத்தமாகும். ஒருவனுக்குப் பல பெயர்கள் இருக்கலாம்; தாய் தந்தையர் இட்ட பெயர் ஒன்று; அவர்கள் அழைக்கும் பெயர் மற்ருென்று; பள்ளிக்கூடத்துப் பெயர் வேருென்று, இப்பெயர்களுள் ஒரு பெயரால் அவனை ஒருவர் அறிந்திருக்கலாம்; ஆனல், மற்ருெரு பெயரால் அவனைச் சுட்டும்போது அவர் அறியார். 'நாமமும் அனுமனென்பேன்' என்றதாலே தன் பெயரைக் கூறியதோடு அமையாது, 'காற்றின் வேந்தன் மகன் யான்' என்றதனுல், காற்றுக்குள்ள பரியாய நாமங்களுள் 'மாருதம்' என்பதும் ஒன்ருதலால் காற்றின் பிள்ளையாகிய எனக்கு 'மாருதி' என்ற பெயரும் உண்டு என்றும், இன்னும் 'என் தாயின் பெயர் அஞ்சனை என்றதனுல்', யான் 'ஆஞ்சநேய'னென்றும் சொல்லப்படுவேனென்றும் கூறியதாகி, அக்கூற்றுக்கள் 'சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்' முதலிய பல அழகுகள் அமைந்து நயஞ்செறிந்து விளங்குதலை ஓர்க. இன்னும் அவன்கூறிய கூற்றுக்கள் மேலே காட்டிய வினுக்களுக்கெல்லாம் விடைகளாக அமைந்திருத்தலையும் உய்த்துணர்ந்து கொள்க.

இங்ஙனம் கூறியவாற்றால் ஒருவன் மற்றொருவனைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளக் கருதி அன்போடு 'நீயார்?' என ஒரு கேள்வி கேட்பின், கேட்கப்பட்ட அவன் அந்தக் கேள்விக்கு மட்டும் விடை கூறின், அதனை ஒட்டி எத்துணைக் கேள்விகள் வருமெனச் சிந்தித்துத் தெளிந்து, அத்துணைக் கேள்விகள் அவன் கேளாதவாறு அவற்றுக்குரிய விடைகளை நயம்படக் கூறுதலே 'சொற்செல்வம்' எனக் கம்பர் கருதுகிறார் என்று கொள்ளலாமன்றோ! அங்ஙனம் அநுமான் பேசிய சொற்செல்வத்தில் ஈடுபட்ட இராகவன் 'யார்கொலிச் சொல்லின் செல்வன்?' என்பதோடு அமையாது 'விரிஞ்சனோ? விடைவல்லானோ?' என்றும் கூறி, மேலும்,

"மற்றுமிவ் வுலகத் துள்ள முனிவர்வா னவர்க ளாரிச்
சொற்றிற முடையார்? மற்றுச் சுருதியின் தொகுதி யாவும்
முற்றறி தருமிம் மாமணி மொழிக்கெதிர் முதல்வ ராய
பெற்றியர் மூவர்க் கேயும் பேராற்ற லரிது மன்னோ"

என அவன் சொல் வன்மையைப் பலபடப் புகழ்ந்து கூறுகின்றான். மும்மூர்த்திகள் கூட இந்த அநுமான் பேசுவதுபோலப் பேசமாட்டார்கள் என்பதை இச்செய்யுள் காட்டுகிறது.

இங்ஙனமே இவன் பேச்சு வன்மையுளதென்பதை இராமாயணத்துள் அநுமான் பேசுவதாக வரும் பல பகுதிகளிற் பரக்கக் காணலாம். இராவணன் புதல்வன் இந்திரஜித்தினாற் கட்டிக்கொண்டு வரப்பெற்ற அநுமானை நோக்கி அந்த இராவணன் 'வாலி வலியன்கொல்' என்று வினவிய காலை, சொற்செல்வன் விடை கூறிய அழகு நினைந்து நினைந்து வியக்கத்தக்கதொன்று. இராவணன் கேள்வி, 'வாலி நலமாக இருக்கின்றானா?' என்பது. இவன் விடை, "அஞ்சலை அரக்க! பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே; வெஞ்சின வாலி மீளான்; வாலும்போய் விளிந்ததம்மா; அஞ்சன மேனியான்றன் அடுகணையொன்றால் மாழ்கித் துஞ்சினன் எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்," என்பது. இந்த விடையுள் 'பார்விட்டு அந்தரமடைந்தானன்றே' என்ற பின் 'வெஞ்சின வாலி மீளான்' என்றது, வாலி உயிரோடுள்ள போது அவன்

இந்திரன் புதல்வனனதால் தேவலோகம் சென்று மீளும் வலியுடையவனுதலால் இந்த முறையும் அப்படி அவன் வருவானே என இராவணனுக்கு உண்டாகும் ஐயத்தை நீக்குதற்பொருட்டேயாகும்.

இனி, 'அவன் இறந்தான்' என்று சொன்ன பின், 'அவன் வாலும் அழிந்து ஒழிந்தது!' எனக் கூறியது பொருள் நிறைந்ததும், நகைச்சுவை தரவல்லதுமாகும். இராவணனுக்கு வாலியினுலேற்பட்ட அச்சத்தைக் காட்டிலும், அவன் வாலாலுண்டான அச்சந்தான் மிகப் பெரிது. அதுதான் அவனைக் கட்டித் துன்புறுத்தியது. இச்செய்தியை இராமாயண உத்தரகாண்டத்திலுள்ள 'வாலி வாலாற் கட்டுண்ட படலம்' என்ற பகுதியிற் பரக்கக் காணலாம். அதனுலேதான் அவன் 'வாலும் போய் விளிந்தது' என நகைச்சுவைபடக் கூறினுன். 'அத்துணை உடல் வலியும், உள வலியுமுள்ள வாலியாகிய வீரன் இராகவன் வாளி ஒன்றே ஒன்றினுல் மிக வருந்தி இறந்தான்' என்ற குறிப்பால் இராகவனுடைய வலிமையை விளக்கி இராவணனுக்கு அச்சமுண்டாகும்படி செய்தான். 'அவன் இறந்தபின் உங்கள் அரசன் யார்?' என்ற கேள்வி இராவணனுற் கேட்கப்படாமலே, 'எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்' என்று கூறும் நயம் போற்றத்தக்கது. இன்னும் அநுமான் கூறிய இக்கூற்றிலுள்ள நயங்களனைத்தையும் உய்த்துணர்ந்து மகிழ்க.

இனி, சொற்செல்வமுடையவன் இருக்குமிடத்தில் எந்தச் செய்தி பேசப்படினும் அதனைப்பற்றிய தன் கருத்தை யாரேனும் ஒரு பெரியார் கேட்டாலன்றி முந்துறக்கிளக்கமாட்டான் என்பதையும் அநுமான் வாயிலாகக் கம்பர் விளக்கிக் காட்டுகிறுர். இராவணனுற் கடிந்து துரத்தப்பட்ட அவன் தம்பி விபீடணன் என்பான் இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்த காலை 'அவனைச் சேர்த்துக்கொள்ளுவதா, அன்றி நீத்துத் தள்ளுவதா?' என்பதுபற்றி ஒரு பெரிய ஆராய்ச்சி நடக்கிறது. அதில் வானர வீரர் பலரும் கலந்துகொள்கின்றனர். சுக்கிரீவன் முதல் நீலன் இறுதியாக உள்ளாரனைவரும் தத்தமக்குத் தோன்றிய காரணங்களைக் கூறி,

'அவனைத் தள்ளிவிடுவதே நலம்' எனக் கூறினர். அப்படிக் கூறுங்கால் ஒருவன் தன் கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மற்றொருவன் பேசுவதற்குத் துடித்துக்கொண்டிருப்பான். இங்ஙனமாக அநுமான் நீங்கலாக உள்ள வானர வீரர் அனைவரும் இராமன் கேட்பதற்கு முன்னரே தத்தம் கருத்தைத் தெரிவித்துவிட்டனர். இவர்களனைவரும் பேசி முடித்த பின்னரும் வாய் மூடியிருந்த மாருதியை நோக்கி இராமபிரான், 'இது பற்றிய நின் கருத்து யாது?' என வினவிய பின்னரே சொற்செல்வன் சொல்வானாயினன். நுணங்கிய கேள்வியனாதலால் வணங்கிய வாயினனாகி, இராகவனை நோக்கிப் 'பெருமானே! நீ அறியாததொன்றையா எம் போல்வார் கூறப்போகின்றனர்? நின்னைச் சார்ந்தவர் எம்மைப் போன்ற மடமையராயினும் அவர்களையும் கலந்தாலோசித்தே ஒன்றைச் செய்தல் உன் போன்ற பேரறிவாளராகிய பெருமக்கள் இயல்பு போலும்!' என்று அவன் பெருமையைக் கூறிய பின் தனக்கு முன்னே பேசியவர்களின் கருத்தையெல்லாம் ஒருங்கே மறுக்கப் புகுந்தவன், 'ஐயனே! உன் அவையிலுள்ள அறிஞரனைவரும் ஒரு பொருளை 'அன்று' என மறுத்த பின், அவர்கள் தகுதியுள் ஒரு சிறிதும் பெறாத யான் அதற்கு மாறாக என்ன மாற்றம் உரைக்கப்போகின்றேன்!' எனக் கூறுமுகத்தால் தனக்கு மாறுபட்ட கருத்துடையவர்களின் பெருமையையும், அவர்கள் முன் தனக்குள்ள சிறுமையையும், அவர்களிடம் தான் கொண்டுள்ள நன்மதிப்பையும் விளக்கிக் காட்டிவிட்டு, பின்னர் 'ஆயினும், தேவர் கேட்கும்போது அடியேனுக்குத் தோன்றும் கருத்தொன்றைச் சொல்லும் கடப்பாடுடையேன்,' என்று தொடங்கி, தனக்கு முன்னே இராமபிரான் கேட்காமலே ஒருவரில் ஒருவர் முந்தி முந்திச் 'சேர்க்கக்கூடாது' என்பதற்கு என்னென்ன காரணம் கூறினார்களோ அத்துணையும் மறுத்தொதுக்கிச் 'சேர்த்துக்கொள்வதே அறமும் நீதியுமாகும்,' என்ற தன் கருத்தை மறுக்க முடியாத காரணங் காட்டி நிலை நிறுத்தி வெற்றியும் பெற்றான். இந்த நிகழ்ச்சிகளைக் கீழ் வரும் கம்பநாடர் கவியோவியங்களாற் காண்க. அவை,

"உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினர்;
செறிபெருங் கேள்வியாய்! கருத்தென் செப்பென
நெறிதரும் மாருதி என்னும் நேரிலா
அறிவனை நோக்கினன் அறிவின் மேலுளான்.

"இணங்கினர் அறிவிலர் எனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நம்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினன்.

"எத்தனை யுளர்தெரிக் தெண்ண ஏய்ந்தவர்
அத்தனை வருமொரு பொருளை அன்றென
உத்தமர் அதுதெரிந் துணர வோதினர்
வித்தக இனிச்சில விளம்பல் வேண்டுமோ?

"தூயவர் துணிதிறன் நன்று; தூயதே
ஆயினும், ஒருபொருள் உரைப்பன் ஆழியாய்!
நீயனென் றிவனையான் அயிர்த்தல் செய்திலேன்
மேயின சிலபொருள் விளம்பல் வேண்டுமால்."

என்பன முதலியன.

இனி, 'சொற்செல்வமுடையார் முந்துறக் கிளத்தலை மேற்கொள்ளமாட்டார்' என்பதை மாருதி செயலாலேயன்றி, பாண்டவருள் இளையனாகிய சகாதேவனென்னும் அறிவாளியிடத்திலும் காணலாம். பாண்டவர் ஐவரும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிலே கழித்து, ஓராண்டு மறைந்து வதிந்து, பின்னர் நாடு போந்து, இழந்த தமது நாட்டைப் பெறுதற்குச் செய்த முயற்சிகளுள் ஒன்று, கண்ணபிரானைக் காவலனாகிய சுயோதனனிடம் தூதனுப்பியது. இக்கருத்தை (கண்ணனைத் தூதனுப்பவேண்டுமென்பதை) முதன் முதலில் வெளியிட்டவன் தருமன். ஆனால், அது சகாதேவனொழிந்த மற்றவர்களாற் கடுமையாகத் தாக்கிப் பேசி மறுக்கப்படுகின்றது. அங்ஙனம் மறுத்தவர் அனைவரும்கண்ணன் கேளாமலே மேல் விழுந்து மேல் விழுந்து பேசினர். ஆனால், சகாதேவனோ, அவரனைவரும் பேசி முடித்த பின்னரும், யாதொன்றும் கூறுமல் வாய்வாளாமையை மேற்கொண்டிருந்தனன். இதனையறிந்த கண்ணன் சகாதேவனை நோக்கி, 'எல்லோரும் தத்தம் கருத்தினை வெளிப்படுத்

தினர்; நின் கருத்து யாது?' என வினவிய பின்னரே அவன் பேசத் தொடங்கினனென்பதை,

"நகுலனிவை யுரைத்ததற்பின் நன்றெனக்கை
யமைத்தருளி, 'நகுலன் சொல்லும்
இகல்விசயன் தன்மொழியும் திறல்வீமன்
இயம்பியதும் யாவும் கேட்டோம்
புகலரிய வுணர்வுடையோய்! புகழுடையோய்!
திறலுடையோய்! புகல்நீ' என்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றனே."

என்னும் வில்லிபுத்தூராரின் பாரதப் பாட்டால் அறியலாம்.

இந்த விநய சம்பத்துடையவன் அப்போது பேசிய சொற்செல்வத்தினலேதான் மற்ற நால்வரும் கண்ணபிரானுற் காப்பாற்றப்பட்டனர் என்பதைப் பாரதம் படித்த அனைவரும் அறிவர்.

இளங்கோவடிகள் காட்டிய சொற்செல்வம்

இனி கண்ணகி என்னும் கற்புத் தெய்வத்தின் கட்டுக்கடங்காத சினம் வாயிலாக எழுந்த சொற்செல்வத்தை இளங்கோவடிகளின் களங்கமில் வாக்காலே காணலாம்:

கணவனையிழந்த கற்புத் தெய்வமாகிய கண்ணகி என்பாள் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சென்று, தன் நாயகனுகிய கோவலன் குற்றமுடையவன் அல்லன் என்பதை மெய்ப்பித்தற்பொருட்டு வழக்குரைத்த போது அவள் பேசிய பேச்சு, கம்பர், மக்கள் எப்படிப் பேசினல் அதனைச் சொற்செல்வம் எனக் கருதுகிருர் என நாம் மேலே காட்டிய கருத்தையொட்டி இருப்பதைக் கீழ்வரும் இளங்கோவடிகள் கூற்ருல் அறியலாம். கண்ணகி, மாறன் வாயிலில் வந்து நின்று, வாயில் காப்போனை நோக்கி,

"வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து

இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே"

என்று கூறும் அடிகளிலுள்ள உட்பொருள்களை ஊன்றி நோக்கி அறிந்து மகிழ்க. இதனைக் கேட்ட வாயில்காப்போன், அரசனிடம் சென்று அடி வணங்கி உரைக்க, அரசன், 'அழைத்து வருக' எனக்கட்டளையிட, அக்கட்டளையால் மன்னன் முன் சென்று, "காவி யுகுநீரும் கையிற் றனிச்சிலம்பும், ஆவி குடி போன அவ்வுடலும்" கொண்டு நின்ற மாபெருங்கற்புடையாளை நோக்கி அவன், "நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக்கொடியோய்?" என்று வினவ,

" தேரா மன்னா! செப்புவ துடையேன்:
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பதென் பெயரே."

என்று கண்ணகி விடையிறுக்கிருள்.

இப்பகுதியுள் பாண்டியன் கண்ணகியை நோக்கி, 'நீர் ஒழுகுங் கண்ணோடு இங்கு வந்த பெண்ணே! நீயார்?' என வினவியதற்குக் கண்ணகி என்பாள் தன் ஊரின் பெயரையும், அவ்வூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்த சோழ மன்னர்களின் ஆட்சிச் சிறப்பையும் கூறி, அவர்களின் செங்கோலைச் சிறப்பித்த குறிப்பால், பாண்டியன் கொடுங்கோலன் என்பதையும்,

அவ்வூரில் யாதொரு மாசுமின்றி வழிவழியாகப் புகழ் பூண்டு வந்த தன் கணவன் பெருங்குடிச் சிறப்பையும், குடிச் சிறப்பினை விதந்து கூறுங் குறிப்பாலே, அக்குடியிற் பிறந்த தன் கணவன் கனவிற்கூடத் தவறு செய்யானென்பதையும், 'பெருங்குடி' என்ற குறிப்பால் அக்காலத்து அரசர்கள் வணிகப் பெருமக்களை, அவர்கள் ஈட்டிய பொருளையும் புகழையும் கருதிப் பகுத்த 'இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகர்' என்ற பகுப்புக்களுள் ஒன்றுயுள்ளது அப்பெருங்குடி என்பதையும், பின்பு தன் கணவன் பெயரையும், தாங்கள் மதுரை போந்த காரணத்தையும், தன் கணவன் தனது காற்சிலம்பைவிற்கும்பொருட்டு வந்து பாண்டியனாற் கொலை செய்யப்பட்டானென்பதையும், 'என்காற் சிலம்பு' என்ற குறிப்பால் அவன் அதனை விற்பதற்கு உரிமையுடையவனென்பதையும், தனக்குரிய செயலை ஒருவன் செய்யும்போது குற்றஞ் சாட்டி அவனைக் கொலை செய்தல் அநீதிகளுள்ளே மிக்கதோர் அநீதி என்பதையும், தன் பெயரையும் விளக்கிக் கூறிய சொற்செல்வத்தைக் காண்க. இது துன்ப உணர்ச்சியிலும், சின உணர்ச்சியிலும் வெளி வந்த சொற்செல்வமானால், இன்பத்துள் அஃது எப்படி வெளி வந்து மகிழ்விக்குமென்பதை உய்த்துணரவல்லார் அறிவரன்றே!

சேக்கிழார் காட்டும் சொற்செல்வம்

இனி, பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணத்துட் காணப்படுகின்ற இரண்டுசொற்செல்வங்களைப் பார்த்துப் பயனடைவோமாக. அவற்றுள் ஒன்று, அப்பூதியடிகளுநாயனாரின் தண்ணீர்ப்பந்தரிலுள்ள பணியாளரிடம் காணப்படுவது. மற்றொன்று, சிறுத்தொண்ட நாயனாரின் மனைவியாரிடம் காணப்படுவது. முன்னதை முதலிற்காண்போம்.

அப்பூதியடிகளென்பார் அந்தணகுலத்தினர்; செந்தண்மை பூண்டவர்; குலச் செருக்கு என்னுங் குழியில் விழாதவர்; கல்வி, அறிவு, ஒழுக்கம், கடவுட்பேணல் முதலிய நலங்கள் எவரிடத்துக் காணப்படுகின்றனவோ,

அவருக்கு அடிமையாகும் மனப் பண்பு வாய்ந்தவர். இவர் தம் காலத்திலிருந்த திருநாவுக்கரசரின் திப்பிய வரலாற்றைக் கேட்டார்; அவர் ஆண்டவனிடம் வைத்த அகன்ற அன்பும், இறைவன் அவருக்குச் சுரந்த இனிய அருளும் ஆகியவற்றை அறிந்தார். அதனால், வேளாள மரபிலே தோன்றியருளிய அந்த நாவுக்கரசரையே தமது நற்றெய்வமாகப் பேணி வழிபடலானார். வழிபாடு முதிர்ந்து மனம், மொழி, மெய் என்ற மூன்றானும் முறுகி வெளிப்படுவதாயிற்று. மனத்தா லிடையறாது நினைந்து அன்பு செய்தார்; வாக்கினாலே தமது வீட்டிலுள்ள அறிவுடைப் பொருள் அறிவில்லாத பொருள் அனைத்தினுக்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே வைத்துச் செப்பலானார்; மெய்யினாலே, மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், சாலைகள், சோலைகள், குளங்கள் முதலிய பல அறநிலையங்கள் அமைத்து, அவையனைத்தும் திருநாவுக்கரசருக்கு உரியன எனப் பெயர் பொறித்தார். திருவையாற்றுக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள திங்களூர் என்னும் ஊரே அவர் பிறப்பதற்குத் தவம் செய்த ப யாகும். இச்செய்திகளை உணர்த்தும் பெரிய புராணப் பாடல்களாவன :

"தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தஅன் பினரா யுள்ளார்"

"களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால்உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்"

"வடிவுதாம் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பி ரானார் அருளுங்கேட் டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா வுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்"

என்பன. தடித்த எழுத்திலுள்ள மூன்று சொற்களாலும்

முறையே மனம், மொழி, மெய்களால் வழிபட்டாரென்பது உணரத்தக்கது.

இங்ஙிலையில் அவர் வாழ்க்கை நடத்துங்கால், அவரை முன்னர்க் கேட்டும் அறிந்துகொள்ளாத திருநாவுக்கரசர் திருப்பழனத்திலுள்ள சிவபிரானை வணங்கி, மற்றுமுள்ள திருப்பதிகட்குச் சென்று தேவதேவனை வணங்கும் பொருட்டுச் சாலை வழியே வருவார், அழகிய அறநீர்ச் சாலை ஒன்றைக் கண்டனர். கண்டவர் அங்குச் சென்று நீர் பருகினர்; மற்றும் அங்குள்ள செயலனைத்தும் அவருக்கு 'இந்த அறத்துக்குரியவர் தூய உள்ளம் படைத்தவராயிருத்தல் வேண்டும்; இவ்வறம் ஆரவாரத்திற்காகச் செய்யப்பட்டது அன்று' என்னும் எண்ணத்தை உண்டுபண்ணின. அதனால் வியப்புற்று வெளியே வருவார்; அறநீர்ச்சாலையின் நான்கு புறங்களிலும் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்' என அழகுபட எழுதியிருத்தலைக் கண்டார்; ஐயங்கொண்டார். அதற்குக் காரணம் அப்பெயர், தமக்குக் கடவுளாலே கொடுக்கப்பட்டுப் பலராலும் அறியப்படாதிருத்தலும், ஒருகால் இவ்வறஞ் செய்வார் பெயர் இதுவாக இருப்பின், இங்குள்ள மற்ற நிகழ்ச்சிகளை நோக்குமிடத்து அவர், தமது பெயரை இவ்வளவு அழகாக எழுதி விளம்பரப்படுத்த விரும்ப மாட்டாரென்பதுமே. ஐயுற்ற திருநாவுக்கரசர், அங்குள்ள பணியாளரை நோக்கி, 'இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கமைத்தார் யார்?' என்று வினவினர். அப்பணியாளர் தங்கள் தலைவரிடம் கொண்டுள்ள நன்மதிப்புக் காரணமாக, 'நமது அப்பூதியடிகளை யாரும் தெரியாதிருக்க முடியாது; ஆதலால், இவரும் தெரிந்திருப்பார். ஆனால், திருநாவுக்கரசர் என்ற பெயரால், அவர் பல அறங்களையும் செய்து வருகிறார் என்பதை அறியார் போலும்!' என்று கருதினர். அங்ஙனம் அவர்கள் கருதியதற்குக் காரணம் தங்கள் தலைவரிடம் கொண்டுள்ள அன்பும் மதிப்புமே யாகும். அப்படி அவர்கள் மதிப்பதற்குக் காரணம் அப்பூதியடிகள் தங்கள் பணியாளரை யாதொரு குறைவுமின்றிப் பேணிவந்ததேயாகும். முதலாளி தொழிலாளிகளின் மனப்பான்மை இப்படியிருக்குமானால், நாட்டில் பெரும்பாலும்

கலகங்கள் தோன்றுவன்றோ! அவ்வாறு கருதிய பணியாளர், அக் கருத்திற்கேற்ற விடை கூற எண்ணியவர்களாய், "ஐயா! ஆண்ட அரசெனும் பெயரால், செப்பருஞ்சீர் அப்பூதியடிகளார் செய்தமைத்தார்; இதுமட்டுமன்றி, தப்பின்றி எங்குமுள சாலைகுளம் கா" என று கூறினர். இதனைக் கேட்ட பெரியார், 'திருநாவுக்கரசர் என்னும் பெயர் இந்த நீர்ச்சாலைக்குரியவருக்கும் இருக்கலாமோ!' என முன் தோன்றிய ஐயம் நீங்கப்பெற்றார்; ஆனால், 'இந்த அறச்செயலாளரின் கருத்து யாதாயிருக்கும்!' என்பதில் உள்ளம் ஊன்றியது. அதற்குக் காரணம் அவருடைய உலக அநுபவமே! முற்றும் பிறர் பொருளைச் செலவிட்டுத் தமது புகழை நிலைநாட்டக் கருதுகின்றவர்களும், தமது பொருள் சிறிதும், பிறர் பொருள் பெரிதுமாகச் செலவிட்டுத் தம் பெயரை விளம்பரப்படுத்துகின்றவர்களுமாகிய இவர்களையே பெரும்பாலும் உலக அநுபவத்திற்கண்ட திருநாவுக்கரசருக்கு 'இவ்வளவு பெரிய அறத்தையும், இது போன்ற வேறு அறங்களையும் மற்றொருவர் பெயராலே ஒருவர் செய்வதற்குரிய காரணம் யாதாயிருக்கலாம்!' என்ற எண்ணம் உண்டானதில் வியப்பொன்றுமில்லையல்லவா! அங்ஙனம் கருதிய அவர், அப்பணியாளரை நோக்கி, 'அவர் எவ்விடத்தார்?' என வினவினர். அப்பணியாளர், 'நமது தலைவராகிய அப்பூதியடிகளை இவர் தெரியாதிருக்க முடியாது; ஆனால், நாவுக்கரசர் என்ற பெயரால் அவர் அறங்கள் செய்தலை அறியார்போலும் என நாம் முதலில் எண்ணி அதற்குரிய விடை கூறினோம். இவர் இப்போது கேட்பதை நோக்கின் நமது தலைவரைப்பற்றி யாதும் இவருக்குத் தெரிந்திராது எனக் கருதவேண்டியவர்களாயிருக்கிறோம்; அதனால், இவர் கேள்விக்குமட்டும் விடையாகத் 'திங்களூரார்' என்று கூறுவோமானால், 'அந்த ஊர் எங்குள்ளது? அவர் என்ன மரபினர்? இப்பொழுது அங்குச் சென்றால் அவரைப் பார்க்கமுடியுமா? அந்த ஊரில் அவர் வீடு எங்குள்ளது?' என்பன போன்ற பல கேள்விகள் இவராற் கேட்கப்படுமல்லவா! பாவம்! ஆண்டில் முதிர்ந்த பெரியார்! வெயில் கடுமையாய் இருக்கிறது! இந்த நிலையில் இவர் அவ்

வளவு கேள்விகளையும் கேட்டு வருத்தமடையாமல் அவ்வளவு கேள்விகட்கும் விடைகூறிவிட வேண்டும்,' என்று கருதியவர்களாய்,

"நிறைந்து, துன்றியநூல் மார்பரும்இத்
தொல்பதியார் மனைவியின்கட்
சென்றனரிப் பொழுததுவும்
செய்த்தன்று நணித்தென்றார்."

என அப்பணியாளரின் சொற்செல்வத்தைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் பாரித்துரைத்தமை காண்க. 'துன்றிய நூல் மார்பர்' என்றமையால் அவர் மரபையும், 'இத் தொல்பதியார்' என்ற அண்மைச் சுட்டால் ஊரின் அணிமையையும், அவர் பழங்குடிச் சிறப்பையும், 'மனையின்கட்சென்றனர் இப்பொழுது' என்றமையால், 'நீங்கள் இப்பொழுது போனால் அவரை விட்டிற்பார்க்கலாம் என்பதையும், 'அதுவும் (அந்த வீடு) செய்த்தன்று நணித்து,' என்றமையால் அவர் வீடு இருக்குமிடத்தையும் குறிப்பிட்டமையை உய்த்துணர்ந்து மகிழும் பேறு பெற்றார் வேறு துறையில் வரும் மகிழ்ச்சியையும் வேண்டுவரோ? வேண்டார்! வேண்டார்!!

இனி மற்றொரு சொற்செல்வமுடையாரையும் காண்போம். சிறுத்தொண்ட நாயனார் என்பவரின் இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. இவர் அரசனுக்குப் படைத் தலைவராய் இருந்தவர்; ஒரு முறை அந்த அரசன் ஆணைப்படி வடநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று, 'வாதாவி' என்னும் நகரத்தை அழித்தார்; அதன் அரசனாகிய இரண்டாம் 'புலிகேசி' என்பவனைப் புறங்கண்டார்; அங்கிருந்து யானை முதலிய பல பொருள்களைக் கொண்டு வந்து தங்கள் அரசனிடம் கொடுத்து வணங்கினார். அரசன் தனது அவையின்கண் இவரது ஆண்மையைப் புகழ்ந்துரைத்த போது இவரது ஆண்மைக்குரிய காரணத்தை நன்கறிந்த அமைச்சர்கள் அரசனை நோக்கி, 'மன்னர் மன்னரே! நமது படைத்தலைவர் மற்றவர்களைப்போன்றவர் அல்லர்; இவர் பழுத்த சிவனடியார்; ஆதலால் இந்த உலகமெல்

லாம் புலிகேசியாகத் திரண்டுவரினும் இவரை எதிர்த்து நிற்க முடியாது,' என்பதனை "மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த வலியுடைமையினால், எதிரிவருக் கிவ்வுலகி லில்லையென எடுத்துரைத்தார்" என்ற அடிகளால் சேக்கிழார் குறிப்பிடுவாராயினர். அந்த அரசன் நரசிங்க வர்மபல்லவன்; தன் தந்தையாகிய மகேந்திரவர்மபல்லவன் திருநாவுக்கரசரை நீற்றறையிலிடுதல் முதலிய கொடுஞ்செயல்கள் செய்தகாலத்தில் இறைவன் திருவடித் திருத்தொண்டினுறைப்பாலே அந்நாவுக்கரசர் அச்செயல்கள் பயன்படாமற் போகும்படி செய்த செயலைச் சிறுபிள்ளைப்பருவத்தில் பார்த்துக்கொண்டிருந்தவனாதலால், அப்பல்லவன் அடியார்களிடத்தில் அளவிலாத மதிப்புடையவனாய் இருந்தான். ஆதலால், தனது படைத்தலைவர் சிவனடியார் எனக்கேட்ட அளவில் "உம்பர்பிரானடியாரை உணராதே கெட்டொழிந்தேன்! வெம்புகொடும் போர் முனையில் விட்டிருந்தேனென வெருவுற்று, 'எம்பெருமான் இதுபொறுக்க வேண்டும்' என இறைஞ்சினான்." அரசன் இவ்வாறு கூறி வணங்கியவுடனே பரஞ்சோதியாரும் எதிர் வணக்கம் செய்து, "என்னுரிமைத் தொழிற்கடுத்த திறம்புரிவேன்; இதற்கென்ன தீங்கு?" என்று கூற மன்னவன் அவரை நோக்கி, 'பெருமானே! நீர் இனி என்னிடமிருந்து உமக்குரிய கடமையைச் செய்தலை யான் விரும்பவில்லையாதலால், உங்கள் விருப்பம் எங்கோ அங்குச் சென்று தங்கிச் சிவத்தொண்டு புரிவீர்களாக!' என்று விடைகொடுத்து அளவிலாத பொருளும் வழங்கினான்.

பரஞ்சோதியார், தமது பிறப்பிடமாகிய திருச்செங்காட்டங்குடி போந்து, நற்குணம் நிறைந்த கற்புடைமனைவியோடு நல்லறமாகிய இல்லறம் நடத்தி, நாடோறும் கிடைக்கும் அடியார்களுக்கு அமுதளித்துப் பின்னர், தாம் உணவருந்துவதையே மேற்கொண்டொழுகிவருங்காலை அவர் பணிவு நோக்கி, அவ்வடியார்களால் 'சிறுத்தொண்டர்' என வழங்கப்படுவாராயினர். சிறுத்தொண்டர் ஒருநாள் அடியார்களைத் தேடிச் சென்றார். ஒருவரும் அகப்படவில்லை. தொண்டர்கள் தமது தொண்டுக்கு முட்டு வருங்காலை, உயிரை விட்டு, அத்

தொண்டினை நிலைநிறுத்துவார்களேயன்றித் தொண்டினை விட்டு உயிரை வைத்திருக்கமாட்டார்களாதலால், எனது வாழ்க்கை இன்றுடன் ஒழிந்தது' என்ற முடிவை மேற்கொண்டவராய்த் தமது வீட்டிற்கு வந்தார். வந்தவர் மனைவியாரை நோக்கி, 'பெண்ணே! இன்று சிவனடியார் ஒருவரேனும் கிடைக்கவில்லையே! என் செய்வது!' எனக் கலங்கிய காலை, அம்மையார், 'இங்கு ஓர் அடியார் வந்தார்' என்று கூறினர். உடனே தொண்டர், 'ஓ! இன்னும் சில காலம் யான் உயிரோடிருத்தல் திருவருட்குறிப்புப்போலும்!' என்ற கருத்துடையவராய் மனைவியாரை நோக்கி, "அடியேன் உய்ந்தேன்! எங்குற்றார்? உரையாய்," என்று வினவினர். அவர் கேட்கும் விரைந்த நிலையும், 'அடியேன் உய்ந்தேன்!' என்ன அவர் சொன்ன சொற்களின் உட்கிடையும் அம்மையாரின் அறிவைக் கலக்கியிருக்குமல்லவா? அக்கலக்கத்தால் மன அமைதியை இழந்து, அவசரப்பட்டு 'ஆத்திமரத்தடியில் இருக்கிறார்' என்று சொல்லின், 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்ற பழமொழிப்படி மேற்கொண்டு எதையும் கேட்காமல் வேகமாக ஓடி ஒன்றிரண்டு ஆத்தி மரங்களைப் பார்த்துவிட்டு, மறித்தும் தம் வீடு வந்து, 'எங்கேயுள்ள ஆத்திமரம்?' என்று கேட்பார். 'கணபதீச்சுரத்தில் (திருச்செங்காட்டங்குடியிலுள்ள திருக்கோயிலின் பெயர்) உள்ள ஆத்திமரம்' என்று சொன்னால் அங்குச் சென்று பார்க்குங்கால் அம்மரத்தடியில் வேறு சிலரும் இருப்பார்களானால், தமது வீட்டிற்கு வந்த அடியார் யார் என்று தெரிந்தழைக்க வேண்டுமல்லவா! இவ்வளவையும் சிந்தித்து, மன அமைதி குலையாமல் நிதான புத்தியோடு, 'எங்குற்றார்?' என்ற கேள்விக்கு "வடிசேர் சூலகபாலத்தார்; 'வடதேசத்தோம்' என்றார்; வண்துடிசேர் கரத்துப் பைரவர்; கடிசேர் ஆத்தியின் நிழற்கிழிருந்தார் கணபதீச்சுரத்து," என்று கூறினர். இவ்வளவு கூறியதும் வியப்பல்ல; ஏனெனில், மற்றொரு கேள்விக்கு விடை வந்தாலன்றி, சொற்செல்வம் நிரம்பாது. அவ்வினா யாதென்பதைக் கூர்ந்து சிந்திக்க வேண்டும். இத்துணையும் கேட்ட நாயனார் அடியாரை அழைத்து வரும்பொருட்டுக் கணபதீச்சுரத்திற்குப்போகிறார்;போம்போது

அவர் என்ன நினைக்கக்கூடும்? "யான் அடியாரைத் தேடி வெளியே சென்றிருந்தபோது, நம் வீடு தேடி வந்த அடியாரை வீட்டிலிருக்கும்படி நம் மனைவி சொல்லாமல் திருக்கோயிலிற்போய் இருக்கும்படி சொன்னதற்குக் காரணம் யாது? ஒருகால் இத் துணை அடியார்க்குத்தான் உணவளிப்பதென ஓர் நியதி யிருப்பின் 'நமது நாயகர் அத்துணை அடியார்களை அழைத்து வந்துவிட்டால், வீட்டில் நாமிருக்கும்படி சொன்ன இந்த அடியார் அதிகப்படி ஆய்விடுவாரே!' என ஐயுறலாம்; அந்த நியதி நமது வீட்டிலில்லையே! எத்துணை அடியார்கள் வந்தாலும் உணவளிப்பது என்ற கொள்கை நம் மனைவி அறியாததொன்றல்லவே! அப்படியிருந்தும், வந்த அடியாரை என் வீட்டிலிருக்கச் சொல்லவில்லை!' என்று நினைக்கக்கூடுமல்லவா? அந்தக் கேள்விக்கு விடையாக 'யான் சொல்லியும் அவர் இங்கி ருக்கமாட்டேனென்று சொல்லிப்போய்விட்டார்' என்றால், 'நீ வீட்டிலுள்ள இன்றியமையா அலுவலில் ஈடுபட்டி ருந்தபோது, அவ்வீடுபாட்டால் அன்போடும் மரியாதை யோடும் சொல்லியிருக்கமாட்டாய்,' என்று கூறக்கூடு மல்லவா? அதற்கும் விடையாகத் திருவெண்காட்டு நங்கையென்னும் அப்பெண்மணியார், 'யானும் சொன னேன்; எனது தோழியாகிய சந்தன நங்கையென்பாளும் சொன்னாள். ஆனால், கேட்காமற்போய்விட்டார்' என "யாம் சொல்ல இங்கு மிராதேபோய்க், கடிசேராத்தியின் னிழற்கீ ழிருந்தார் கணபதிச்சுரத்து" என்று அம்மையார் கூறிய சொற்செல்வத்தைக் காணின், அஃதெத்துணை இன்பத்தை விளைக்கின்றது பாருங்கள்!

இனி, அச்செய்யுளின் முழுவடிவமும் வருமாறு:

"அடியேன் உய்ந்தேன் எங்குற்றார்
உரையா யென்ன அவர்மொழிவார்
வடிசேர் சூல கபாலத்தார்
வடதே சத்தோம் என்றார்வண்
துடிசேர் கரத்துப் பைரவர்யாம்
சொல்ல இங்கும் இராதேபோய்க்
கடிசேர் ஆத்தி யின்நிழற்கீழ்
இருந்தார் கணப தீச்சுரத்து"

இனி, நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், தாமியற்றியருளிய திருக்குறளுள் 'சொல் வன்மை' என ஓர் அதிகாரம் வகுத்தருளினர். அது சிறப்புப்பற்றி அமைச்சியலில் 'அமைச்சு' என்னும் அதிகாரத்துக்குப் பின் வைக்கப்படினும், பொதுவில் அவ்வன்மை எல்லோருக்கும் வேண்டுவதொன்றே! அந்த அதிகாரத்தில் திருவள்ளுவர் சொல்லைச் செல்வமென்று கூருவிடினும், "திறனறிந்து சொல்லுக சொல்லை அறமும் பொருளும் அதனினூஉங்கில்" என்ற குறளால் பொருட்செல்வத்திலும் இச்சொற்செல்வம் சிறந்தது என்று குறிப்பிடுகின்றார். இன்னும் செல்வமுடையான் ஒருவனை உலகம் மதித்து அவன் வழி நிற்பது போலச் சொற்செல்வமுடையான் ஏவலையும் அது மேற்கொள்ளும் என்னுங் கருத்தை,

> "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

என்ற குறட்பாவால் விளக்குகிறார்.

செல்வமுடையான் உலோபியாய் இருந்தால் மக்களால் மதிக்கப்படாமற் போவது போலவே, கல்வியுடையான் சொல்லாற்றலைப் பெற்றிராவிட்டால் மதிக்கப்படானென்பதை "இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது, உணர விரித்துரையா தார்" என்ற திருக்குறள் செவ்வியின் விளக்குகின்றது.

இனி, 'குட்டிக்குறள்' என்று அறிஞர்களாற் பாராட்டப்படுகின்ற நீதிநெறி விளக்கத்தில் "சொல் வளம், மல்லல் வெறுக்கையா" என்று கூறப்படுவதால், அதன் ஆசிரியராகிய குமரகுருபர அடிகளும் சொல்லைச் செல்வமாகக் கொண்டாரென்பது விளக்கமாகிறது. இன்னும் அவர், செல்வமுடையான் ஒருவன் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை அறிந்து வறியவர்களுக்கு வழங்காவிடில், அவன் பாவி என்று மக்களாற் கருதப்படுதல் போலவே, சொற்செல்வமுடையானும் அதனாற் பிறருக்கு நன்மை விளைக்காமற் கொன்னே கழிப்பானாயின், தீவினையாளனாகிறான் என்பதை,

"சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல"
என்ற வெண்பாவால் விளக்குகிறார்.

மேலான செல்வம்

மேலே கூறிய செல்வங்களெல்லாம் அழியுந் தன்மையையுடையனவும், ஒரோ வழித் துன்பந் தருவனவுமாகும். இக்குறைபாடு இல்லாததும், மற்றைச் செல்வங்கள் தரும் இன்பத்தினும் மேலான இன்பத்தைத் தரவல்லதும் எதுவெனில், 'மலர்மிசையேகினான் மாணடி சேர்த'லாகிய விட்டுச் செல்வம். இதனை வடமொழியில் 'மோட்ச சாம்பிராச்சியம்' என்றே சொல்வார்கள்.

பற்றற்ற இறைவன் திருவடியை இறுகப் பற்றி உலகப் பற்றை விட்ட மெய்யுணர்வுடையாருக்கு "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்" என்ற பொய்யாமொழியின்படி யாதொரு துன்பமுமில்லையன்றோ? 'இன்பமே யெந்நாளும் துன்பமில்லை' எனவும் 'திருப்புத்தூரனைச் சிந்தை செயச்செயக், கருப்புச் சாற்றினும் அண்ணிக்குங் காண்மினே' எனவும் திருநாவுக்கரசர் கூறிய அநுபவ வாக்கிற்கிணங்க, அம்மெய்யுணர்வுடையார் நுகரும் இன்பத்திற்கேதுவாகிய செல்வம், அவ்விறைவனது திருவடியை நினைந்து நினைந்து கசிந்து கசிந்து உருகுவதாகும் என்பதனை,

"செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

"கண்ணுதலான் வெண்ணீற்றான்
கமழ்சடையான் விடையேறி
பெண்ணிடமாம் உருவத்தான்
பிஞ்ஞகன்பேர் பலவுடையான்

விண்ணுதலாய்த் தோன்றியசீர்ப்
பிரமபுரம் தொழவிரும்பி

என்னுநலம் செல்வத்தை
இயல்பாக அறிந்தோமே''

என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்குக்களாலும்,

''வாழும் பான்மைய ராகிய வான்செல்வம்
தாழும் பான்மைய ராகித்தம் வாயினல்
தாழம் பூமணம் நாறிய தாழ்பொழிற்
கோழம் பாவெனக் கூறிய செல்வமே''

என்னும் திருநாவுக்கரசர் திருவாக்காலும் அறியலாம்.

திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய இத்திருக் குறுந்தொகையில் ''வாழும் பான்மையராகிய வான் செல்வம் என்ற குறிப்பு, ஏனைய செல்வங்கள் இருத்தற்கே பெரும்பான்மை பயனுடையனவாய், ஒரோவழி வாழ்தற்கும் பயனுடையனவாக இருக்க, 'கோழம்பா எனக் கூறிய செல்வம்' வாழ்தற்கே கருவியாக உள்ளது என்பதைக் காட்டுவதாகும். 'ஆயின், இருத்தல் வேறு, வாழ்தல் வேறா?' எனின், ஆம்; வேறுதான். பிறவியின் பயன் எது என உள்ளவாறு சிந்தித்து ஊன்றி உணராமல் உலகியலுள் ஈடுபட்டுத் திரிபவர்களெல்லாம், ஏன்? திரிவனவெல்லாம் இருப்பனவாகக் கருதப்படும். அப் பயனை ஐயந்திரிபற உணர்ந்து, அதனை அடைதற்குரிய வழியிற் காலெடுத்து வைத்தது முதல், அவர்கள் வாழ்வதாகக் கருதப்படுவார்கள். இந்த உண்மையை, அற நூல்களிலும், தோத்திர நூல்களிலும் சாத்திர நூல்களிலும் காணலாம்.* இருந்துதான் வாழவேண்டுமாதலால், வாழ்தலில் இருத்தல் உண்டு; ஆனல் இருத்தலில் வாழ்வில்லை. எனவே, வாழ்கின்றவர்களும், வாழ்கின்றனவும் ஆகிய எல்லோரும் இருக்கிறார்கள்; இருக்கின்றனவும் இருக்கின்றவர்களும் ஆகிய எல்லாம் வாழ்கின்றவர்களாகக் கருத முடியாது.

---

* காமனை யன்று கண்ணாற் கனலெரியாக நோக்கித்
தூமமுந் தீபங் காட்டித் தொழுமவர்க் கருள்கள் செய்து
சேமநெய்த் தான மென்னுஞ் செறிபொழிற் கோயின் மேய
வாமனை நினைந்த நெஞ்சம் வாழ்வுற நினைந்த வாறே.

இதுகாறும் மேலே காட்டியவாற்றால், செல்வங்கள் பல திறப்படுமென்பதும். அதற்குரிய காரணம் இது வென்பதும், அதனால் 'பொருளுடைமைதான் செல்வம்; அஃதின்மைதான் வறுமை' என்று கருதுவது தவறாகும் என்பதும், அச்செல்வங்கள் எவை எவை என்பதும், அவற்றுள் ஒன்றாகவுள்ள சொற்செல்வத்தின் இலக்கணம் இன்னதென்பதும், அச்செல்வமுடையார் யார் யார் என்பதும், அச்செல்வமுடையார் அதனை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதும், அவ்வாறு பயன்படுத்தாவிடில் அவருக்கு நேருவது என்னவென்பதும், முடிந்த மேலான செல்வம் எதுவென்பதும், அச்செல்வம் மேலாகக் கருதப்படுவதற்குக் காரணம் என்னவென்பதும், பிறவும் விளக்கப்பெற்றன.

கோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மை யெல்லாம்
விடவே சக்கரத்தா லெறிந்தபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடி வாழ் நெஞ்ச மே! நீ நன்னெறி யாகு மன்றே.

ஒருபிறப்பி லானடியை யுணர்ந்துங் காணார்
உயர்கதிக்கு வழி தேடிப் போக மாட்டார்,
வருபிறப்பொன் றுணராது மாசு பூசி
வழிகாணா தவர்போல்வார் மனத்த னாகி,
அரும்பிறப்பை யறுப்பிக்கு மதிகை யூரன்
அம்மான்றன் அடியிணையே யணைந்து வாழா
திருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற்கேட்
டேழையே னன்பன் டிகழ்ந்த வாறே.

என்ற திருநாவுக்கரசர் வாக்குக்களும்,

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!'

என்ற திருவாசகமும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

'திருக்குறள்' என்பது பொதுவாக எல்லா நாடுகளும், சிறப்பாகத் தமிழ்நாடும் செய்த தவத்தின் பயனாகச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் என்னும் தெய்வப் புலவர் திருவாக்காக வெளிவந்த நூல். திருத்தொண்டர்கள் வரலாறு கூறும் 'பெரிய புராணம்' என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் என்பது இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி புரிந்த இரண்டாங்குலோத்துங்கனென்னும் அநபாய சோழ மன்னன் வேண்டுகோளின்படி தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானால், தில்லையிலாடும் திருக்கூத்தன் திருவருள் பெற்றுப் பாடப் பெற்றது.

தண்டமிழ் நூல்களுள் எவை மேலானவை என்று கூறுவதும், உமாபதி சிவனார் வாக்காகக் கருதப்படுவதுமாகிய பின் வரும்,

"வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்."

என்னும் வெண்பாவால் திருக்குறளும் திருத்தொண்டர் புராணமும் மேலான நூல்கள் என்று அறிகிறோம்; ஆதலால், அந்த இரு நூல்களும் எந்த வகையிலே தொடர்புடையனவாய் மக்களுக்கு நலமளிக்கின்றன என்பதை அறிந்துகொள்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இவ்விரு நூல்களுக்குமுள்ள தொடர்பு

இந்த இரண்டு நூல்களுக்குமுள்ள தொடர்பை நோக்கினால் திருக்குறள் மக்கள், மக்களாக வாழ்வதற்கு வகுத்த விதி நூலாகவும், திருத்தொண்டர் புராணம் அவ் விதிப்படி நடந்த தொண்டர் யார் எனக் காட்டிய நூலாக வும் கொள்ளலாம். எனவே, மக்கள் வாழ்விற்கு இலக் கணம் கூறியது திருக்குறள்; அதற்கு இலக்கியங் கூறியது பெரிய புராணம். இக்கருத்தோடு பார்க்க வேண்டியதும் அவசியமும் முக்கியமுமாகும். ஏனெனில், திருவள்ளுவரே,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்."

என்று கூறியிருப்பதால். இத்திருக்குறள் 'வினைத் திட்பம்' என்னும் அதிகாரத்துள் கூறப்பட்டிருத்தலால், அதற்கேற்ற முறையில் பரிமேலழகர் பொருள் கூறினர். எனினும், இந்தக் குறளினுற் சொல்லப்படும் கருத்து, மேடையேறி மக்களுக்கு அறவுரை கூறுபவர்களும், நூல் வாயிலாக அதனை நுவல்பவர்களும் முதலிய பலருக்கும் பொருந்துமன்றே! சுருங்கக் கூறின், இக்குறட் கருத்துக்குத் தம்மை விலக்காகக் கருதித் திருவள்ளுவர் கூறியிருக்கமாட்டாரெனின், அஃது அவருடைய பெருந் தன்மைக்குப் பொருந்தியதொன்றன்றே! இவ்வாறு ஒரு குறளேனும், ஓர் அதிகாரமேனும் ஒரு சாராருக்குச் சிறப்பு வகையாற் சார்த்திக் கூறப்பட்டிருக்குமேனும், அவை பொது வகையால் எல்லோருக்கும் வேண்டப்படுவன வாகவே இருக்கும் என்பதை உய்த்துணர்ந்துகொள்க. உதாரணமாக, 'கல்வி', கல்லாமை என்ற அதிகாரங்கள் அரசியலிற் கூறப்படுவதால், ஏனையோர்க்குக் கல்வி வேண்டாவென்பது தேவரின் திருக்கருத்தன்று; எல்லோருக்கும் வேண்டுமென்பதுதான.'அங்ஙனமாயின், அதனை அரசருக்குக் கூறுவானேன்?' என்றால், ஒரு மனிதன் படிக்காத மூடனாய் இருந்தால், அவனாற் பாது காக்கப்படும் குடும்பம் மட்டுந்தான் துன்புறும்; ஆனால், ஒரு மன்னன் படிக்காதவனாய் இருப்பின் அவனால் ஆளப்படும் நாடு முழுவதும் நலிவுறுமல்லவா! அதைக்

கருதிக் கல்வியை அரசருக்குக் கூறியதென்க. 'சொல் வன்மை' முதலிய சிறப்புக்களை அமைச்சருக்குக் கூறிய தும் இக்கருத்தே பற்றி என உணர்க. எனவே, மேலே காட்டப்பெற்ற 'சொல்லுதல்' என்ற முதற்குறிப்பை யுடைய குறட்பாவும் அமைச்சியலில் வினைத்திட்பம் என்ற அதிகாரத்திற் கூறப்படினும் அனைவருக்கும் அது பொதுவென்றே கொள்ள வேண்டும்; கொள்ளவே, "பல ரும் 'மக்கள் இன்னின்னவாறு நடக்கவேண்டும் என எளிதாகச் சொல்லிவிடுவார்கள்; ஆனால், அப்படிச் சொன்னவர்களும், அதைக் கேட்பவர்களும், சொன்ன படியும், கேட்டபடியும் நடப்பது அரிது," என இக் குறளுக்குப் பொருள் காணவேண்டும்; 'அங்ஙனமாயின் பெரியோர் அருளிய நூல்கள் முதலியவற்றால் பயனில்லை யோ?' என ஐயமெழுமன்றே! அற நூலிற்கூறியவாறு நடந்தவர்களாகிய திருத்தொண்டர்களைக் காட்டுமாற்றால் அந்த ஐயத்தைப் போக்கிக்கொள்ளலாம்.

'சில' என்ற சொல்லின் பொருள்

இனி, இக்கட்டுரைத் தலைப்பிற் காணப்படுகின்ற 'சில' என்ற சொல் வரையறுக்கப்பட்ட பொருள் உள்ள சொல் அன்று. 'பல' என்ற சொல்லும் அப்படியேதான். நாம் பேசும் மொழியுள்ளே சில சொற்களுக்கு, சொல்லு கின்றவன் இருக்கும இடம் முதலியவற்றைக்கொண்டு பொருள் காணவேண்டும்; ஆனால், அப்பொருள் எல்லோ ருக்கும் பொருந்தாது. உதாரணமாகத் திசைப் பெயர்களை எடுத்துக்கொள்வோம். ஒருவன் தனக்குச் சிறிது தெற்கே யிருக்கிறவனைச் சுட்டிக்காட்டி 'இவன் எனக்குத் தெற்கே யிருக்கிறான்,' என்று சொல்லுகிறான். ஆனால், அவனாற் சுட்டிக் காட்டப்பட்டவனுக்குச் சிறிது தெறகேயுள்ளவன் அவனை வடக்கேயிருப்பதாகக் குறிப்பிடுன்கிறான். எனவே ஒரேயிடம் ஒருவனுச்குத் தெற்காகவும், மற்றொரு வனுக்கு வடக்காகவும் தோன்றுதலால், அச்சொல் வரை யறுக்கப்பட்ட பொருளுள்ள சொல் அன்று எனக் கருத வேண்டியிருக்கிறது; மற்றைக் 'கிழக்கு' முதலிய திசைப் பெயர்களும் இப்படியேதான். 'மேல், கீழ்' என்ற சொற் களும் இந்த இனத்தைச் சேர்ந்தனவே! 'சில,பல' என்ற

சொற்களும் இப்படியேதான். இருபது என்ற எண்ணை எடுத்துக்கொண்டால் அதில், ஒன்பது என்ற சொல் சில என்பதற்குப் பொருளாகவும், பதினொன்று என்ற சொல் பல என்பதற்குப் பொருளாகவும் இருக்கின்றன. ஆனால், பதினைந்து என்பதில், மேல் 'சில' என்ற சொல் லுக்குப் பொருளாயிருந்த 'ஒன்பது' என்பது 'பல' என்ற சொல்லுக்குப் பொருளாகிவிட்டது. 'பல' என்பது, லுக்குப் பொருளாயிருந்த பதினொன்று என்ற சொல், முப்பது என்ற எண்ணில் சில ஆதலைக் காண்கிறோம். எனவே, இவையெல்லாம் வரையறுக்கப்பட்ட பொருள் உள்ள சொற்களல்ல. இதனால் இவையெல்லாம் பல பொருள் ஒரு சொல்லாக இருக்குமோ என மயங்கி உணரலாகாது.

இனி, திருக்குறள், பாயிரம் உளப்பட ஆயிரத்து முந்நூற்று முப்பது என்ற எண்களையுடையது. திருத் தொண்டர்கள் தொகையடியார் நீங்கலாகத் தனியடியார் களாக உள்ளவர் அறுபத்து மூவர். மேலே காட்டிய இலக்கணப்படி ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்களுள் இரண்டு குறட்பாக்களை எடுத்துக் காட்டி அவற்றின்படி நடந்த இரண்டு தொண்டர்களைக் காட்டி விட்டால் 'சிலவும்,' 'சிலரும்' என்ற இக்கட்டுரை முடிந்துவிட்டதாகக் கருதலாம்.

'செல்லிடத்து' என்னும் திருக்குறளும் திருநாவலூரரும்

'வெகுளாமை' என்னும் அதிகாரம் திருக்குறள் அறத்துப்பாலில் துறவற இயலில் உள்ளது. இதற்கு, 'அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை' என்று பொருள் விரித்தார் பரிமேலழகர். அவ்வதி காரத்தின முதற்குறள்,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் ; அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கால் என்?"

என்பது. இதனால் வெகுளாமைக்கு இடம் வகுக்கின்றார் வள்ளுவப்பெருந்தகையார். ஒருவன சினம் செல்லு கின்ற இடம், செல்லாத இடம் என இரண்டாகப் பிரித்து, செல்லாத இடத்தில் வருகின்ற சினத்தைக்

காப்பவன் அச்சத்தாற் காக்கின்றவனேயன்றி அருளாற் காப்பவன் அல்லனென்றும், செல்லுமிடத்தில் சினம் வாராமற் காப்பவனே அருளாற் காப்பவன் என்றும் கூறுகின்றனர். செல்லிடம் எது, அல்லிடம் எது என உரையாசிரியர் வகுக்குங்கால், செல்லிடமென்பது சினஞ்செய்பவனைவிட மெலியார் எனவும், அல்லிடமென்பது வலியாரெனவும் வரையறை செய்கின்றார். ஒத்தவரும் இருப்பதை அவர் சிந்திக்கவில்லை. அவரும் உண்டு என்றும், அவரிடத்தும் வெகுளி செல்லாது என்றும் இந்தக் குறளுக்கு உரை கூறுவார் போலக் 'கற்பனைக் களஞ்சியம்' என்று புலவர்களாற் போற்றப்படுகின்ற சிவப்பிரகாச அடிகள் தாமியற்றிய 'பிரபு லிங்கலீலை' என்னும் நூலிற் கூறுவதைப் பின் வரும் செய்யுளால் அறியலாம்; அது

"வலியவ னிடத்தும் ஒத்தான் மாட்டிலும் வெகுளி காத்தல்
பொலிவுசெய் அறம தென்னப் பொருந்துறு தனையர் [தம்பால்
நலிவுறு வெகுளி செல்லா தாதலால் நலியலாற்று
மெலியவ ரிடத்துக் காக்கும் வெகுளியே அறமதென்பார்"

என்பது. இனி, அவரே, மேற்காட்டிய குறளுக்கு அடுத்ததாகவுள்ள,

"செல்லா விடத்துச் சினந்தீது அல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற"

என்ற குறளுக்கு விரிவுரை எழுதுவார் போன்று,

"பெரியவர் தம்மைக் காய்ந்தான்
பிறங்கல்கல் வியகோ லொப்பான்;
புரிவன புரியப் பட்டுப்
புலம்புவ னைத்தார்க் காய்ந்தான்;
எரிநர கதனில் வீழ்வான்
இழிந்தவர்க் காய்ந்தா னென்றால்;
ஒருவர்தம் மாட்டும் சீற்றம்
உறுமையே நன்று மாதோ,"

என்று கூறுவதிலும் வலியவர் மெலியவரே அன்றி ஒத்தவரும் கூறப்படுதல் காண்க. இனி, செல்லுமிடத்து வந்த சினத்தைக் காத்த செயலொன்றைச் சைவசமய குரவருள் ஒருவரும், கற்றுத் துறைபோய கலைஞரும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ற பெயராலே பெரும் பாலோரால் அறியப்படுபவரும் ஆகிய (ஆனால், அந்தப் பெயர் அவருக்கு இல்லை என்பதைப் பெரிய புராணம் படித்தவர் அறிவர்) நம்பியாரூரர் வாழ்க்கையில் வைத்துக் காண்போம்.

'வன்றொண்டர்' என்னும் பெயருடைய பெரியாராகிய அவர் இறைவனாலே தடுத்தாட்கொள்ளப்பட்டபின், அவன் கட்டளைப்படி திருக்கோயில்தோறும் சென்று தேவாரம் பாடி வருங்கால், திருவதிகை வீரட்டானம் சென்றார். ஆனால், அவ்வூருக்குட் சென்று அங்குள்ள இறைவனை வணங்காமல், மற்றோர் இடமாகிய 'சித்த வடமடம்' என்னும் மடத்திற்குப் போய்ப் படுத்துறங்குவாராயினர்; அதன் காரணத்தை இங்கு அறிந்துகொள்வது இந்தக் கட்டுரைக்குப் பொருத்தமுடையதல்லவாயினும், பொதுவாக எல்லாருக்கும், சிறப்பாக இளைஞர்களுக்கும் சிறந்ததோர் படிப்பினை அதில் அமைந்து கிடத்தலால், அந்த நற்பயனைக் கருதி அதனை அறிவோமாக.

"திருவதிகை வீரட்டானம், திருநாவுக்கரசர் இருந்து உழவாரப்பணியாகக் கைத்தொண்டு செய்த இடமாதலால் இதற்குள் அடியேன் கால் வைத்துப் போதற்குத் தகுதியுடையேனல்லேன்," என்று கருதியே சித்தவடமடத்திற் சென்று படுத்துறங்கினர் என்ற செய்தி,

"உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியை
மிதித்(து)
அடையுமதற் கஞ்சுவனென் றங்கரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையுட் சித்தவட மடம்புகுந்தார்"

என்ற பெரிய புராணச் செய்யுளால் அறிகிறோம். இது போலவே அந்த நாவலூர் நம்பி, சிதம்பரத்திலுள்ள தில்லைக் கூத்தனை வணங்கித் திருவாரூர் செல்லுங்கால் இடையேயுள்ள சீகாழிப் பதியைக் கண்டு, "இஃது எம் பெருமானாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் அவதாரம் செய்த இடமாயிற்றே! இதனுள் என் கால் வைத்துப்

போகேன்!'' எனக்கருதி ஊரினது எல்லைப்புறத்திலே வணங்கி வலமாகச் செல்லுங்காலை இறைவன் அவருக்கு எதிரே சென்று காட்சி கொடுத்தானென்பதை,

"பிள்ளையார் திருவவதா ரஞ்செய்த பெரும்புகலி
உள்ளும்நான் மிதியேனென் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுது மங்கையிடம்
கொள்ளுமால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள"

என்னும் செய்யுள் காட்டுகிறது. தமக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்து இறைவன் திருவடி நீழலையடைந்த திருஞானசம்பந்தரிடம் அவர் காட்டிய மரியாதைக்குரிய காரணங்களுள் ஒன்றை இங்கே அறிந்துகொள்வது மிகமிக முக்கியமானதாகும். அந்தக் காழிப் பிள்ளையார் அந்தண மரபிலே தோன்றியவர்; மூன்றாவது ஆண்டிலே இறைவனால் ஞானப்பால் ஊட்டப்பெற்று மெய்ஞ்ஞான முடையவராய்ச் சுட்டியறிய முடியாத பொருளைத் தம் தந்தையார்க்குத் "தோடுடையசெவியன் — — — — — இவனன்றே'' எனச் சுட்டிக் காட்டிய பெருமையுடையவர்; சமயகுரவருள் முதல்வராக வைத்து எண்ணப்படுபவர். அவர், தமக்கு முன்காலத்திலிருந்து 'மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்த' காரைக்காலம்மையார் தலையாலே நடந்து சென்ற திருவாலங்காட்டுக்குச் சென்ற போது, அதனுள் தமது காலால் மிதித்துச் செல்வதற்கு அஞ்சி, அவ்வூரையடுத்துள்ள மற்றோர் பதியுட் சென்று, அன்றிரவு தூங்கினார் என்னும் செய்தியைப் பின் வரும் செய்யுள் காட்டுகிறது. அது,

"இம்மையிலே புவியிலுள்ளோர் யாருங் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை ஆளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடாம் என்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பைவரும் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியின் அன்றிரவு பள்ளி சேர்ந்தார்."

என்பது. இத்துணைப் பெருமையுடைய அவ்வந்தணப் பெரியார், வணிகர் குலத்திலே தோன்றிய பெண்பாலாகிய

அம்மையாருக்கு மரியாதை செய்தாராதலால், அவருக் குப்பின் தோன்றிய தம்பிரான் தோழராகிய நம்பியாரூரர், அப்பிள்ளையாருக்கு மரியாதை செலுத்தினர். இதிலிருந்து நாமறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை என்னவெனின், நமக்கு முன் காலத்திலிருந்து மறைந்தவர்களிடம், நாம் அன்பும் மதிப்புங்கொண்டு போற்றுவோமாகில், நமது காலத்திற்குப் பின்னுள்ள மக்கள் நம்மை அவ்வாறே போற்றிப் புகழ்வார்கள். அங்ஙனமன்றி, நமக்கு முன்னிருந்தவர்களை நாம் 'முட்டாள்கள்' என்று கருதுவோமானுல், நமக்குப்பின் வருபவர்கள் நம்மை 'வடிகட்டின முட்டாள்கள்' என்பார்கள். அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ள யாரும் உடன்பட மாட்டார்களாதலால், அவர்கள் இந்த மரியாதை வரும் வழியையுணர்ந்து நடப்பார்களாக. இஃது இறந்தகால மரியாதை. நிகழ்கால மரியாதை என்பது நாம் வாழுங் காலத்தில் நம்மோடு பழகுவாரிடத்திற் காட்டுவது. நாம் அவர்களை எத்துணை மதித்து நடக்கின்றோமோ, அத்துணையே நாமும் அவர்களால் மதிக்கப்பெறுவோம். இன்னும், ஒரு மகன் தன் தந்தையை மதித்து நடந்தால், அவன் புதல்வன் அவனை மதித்து நடப்பான்; தம்பி ஒருவன் தமையனை மதித்து நடந்தால், அவன் தம்பி அவனை மதித்து நடப்பான். மரியாதைக் கிரமம் இது என்பது எக்காலத்தும் மறுக்கப்படாததும், அநுபவத்திலுள்ளதுமாகும். இவ்வுண்மையை நன்கறிந்து நம் இளைஞர்கள் நடப்பார்களாக.

நாவலூர் நம்பி சித்தவட மடத்தில் பல அடியார்களுடன் படுத்துறங்குகின்ருர். திருவிரட்டானத்திலுள்ள இறைவன் அவர் தன்னை வந்து பார்த்து வணங்கிப் போதலைத் திருவுளங்கொண்டு, ஓர் கிழ மறையவனுகி, அந்த மடத்திற்சென்று படுத்து அவருடைய முடியில் தனது காலை நீட்டினன். அதனையறிந்த வன்றொண்டர், "அருமறையோய், உன்னடி என் சென்னியில் வைத்தனை," என்ன, "திசையறியா வகைசெய்தது என்னுடைய மூப்புக்காண்" என்ருன். அதைக் கேட்ட நம்பி, தமது முடியை மற்ருேர் இடத்தில் வைத்துத் துயில்வாராயினர்.

அங்கும் தனது திருவடியை நீட்டி முடியில் வைத்தான் அப்பெருமான். 'யாரையா என்னை உதைப்பது?' என்பது கேள்வி; அதற்கு 'மூப்புப் பருவத்தால் திசையறியாத தனால் இது நேர்ந்தது என்னும் ஒரே விடைதான் கிடைப் பது. இவ்வாறு விடிகின்ற வரையில், அவர் வெவ்வே றிடத்திற் சென்று படுப்பதும், "பாதம் இரண்டும் வின விற் பாதாளமேழினுக் கப்பால்" என்ற மணிவாசகப்படி நீண்ட திருவடிகளையுடையவனாதலால், தான் படுத் திருந்த இடத்திலிருந்தபடியே திருவடியை நீட்டி அவர் முடிமேல் வைப்பதும், 'ஏன்' எனற கேள்விக்கு மேலே சொன்ன அந்த ஒரே விடையைக் கூறுவதும் நிகழ்கின் றன. வேண்டுமென்றே இச்செயல் செய்யப்படுகின்ற தென்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்வாறு செய்பவனோ, தம்மினும் வலியவனுமல்லன்; ஒத்தவனுமல்லன்; மிகமிக மெலியவன்; ஆனால், அவன் செய்யும் செயலோ, பொறு மையே வடிவமாகக் கொண்டவர்களையும் அதனை இழக் கும்படி செய்யும் இயல்புடையது. அவ்வாறிருந்தும் நமது நம்பி, சினம் செல்லிடமாகிய அவனை நோக்கி என்ன கேட்டார்? "இங்கென்னைப் பலகாலும் மிதித்த நீ யார்?" என்பதுதான் அக்கேள்வி. சினம் சிறிதும் வரவில்லை; ஆனால், அவ்வாறு விடியவிடியத் தம்மைத் தூங்க விடாமல் உதைத்துக்கொண்டே இருப்பதோடு, கேட்கும் போதெல்லாம் ஒரே விடையே சொல்லிவருகின்ற அந்த விசித்திர மனிதனை யார் என்று அறிந்துகொள்ளவேண்டு மென்ற அவா உண்டாயிற்றேயன்றி, வெகுளி உண்டாக வில்லை. காரணம் யாது? அருளேதான்.

இன்னும் அவர், நூலசைந்திலங்கு மார்பின் நுணங் கிய கேள்வி மேலோன்" என நூலாசிரியராற் போற்றப்படு கின்றார். 'நுணங்கிய கேள்வி'யராதலால், 'வணங்கிய வாயின'ராய், இங்கென்னைப் பலகாலும் மிதித்த நீ யார்?' என வினவினர்.

"நுணங்கிய கேள்விய ரல்லால் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது."

என்பது திருக்குறள். எனவே இதுவும், "செல்லிடத்துக் காப்பான் சினம காப்பான்" என்பதுமாகிய 'பொய்யா

மொழி'கட்கு மெய்யாகிய எடுத்துக்காட்டாக உள்ளது நம்பியின் இச்செயல். வாழ்க்கையில் இந்தச் சிறந்த பொறுமை ஒருவனுக்கு இருக்குமாயின், அவன் வையத்தில் இருப்பவனாயினும், வானுறையும் தெய்வத்துள் வைத்து அறிஞர்களாற் போற்றப்படுவானன்றே!

'சொல்லுக' என்று தொடங்கும் குறளும் அவரும்

இனி, நம்பியின் சொல் வன்மையைப்பற்றிச் சிந்திப்போம். திருவாரூரில், பரவை நாச்சியார் என்னும் மங்கையை மணஞ்செய்துகொண்டு வாழும் அவர், திருவொற்றியூர்த் தேவதேவனை வணங்கி, அங்குத் தங்கியிருந்தகாலை, ஒருநாள் "திரைநீக்கி முதல்வர் சாத்துப் பணிகொடுத்து, மின்போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்." (இந்தச் சங்கிலி நாச்சியார் வரலாற்றைப் பெரிய புராணம்—ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்துள் 206-வது செய்யுளிலிருந்து காண்க) இங்ஙனம் கண்ணுற்ற தம்பிரான் தோழருக்கு உள்ளம் மாறுபட்டது. எனவே, அவரைத் தமக்கு மணஞ்செய்து வைக்கவேண்டுமென்று, தம் தோழராகிய தியாகராஜப் பெருமானிடமே வேண்டிக்கொள்ளக் கருதினார் அவர். தோழமையில் மூன்று வகையுண்டு: நல்லவனும் நல்லவனும் கொண்ட நட்பு ஒன்று; நல்லவனும் தீயவனும் கூடும் நட்பு மற்றொன்று; இருவரும் எத்தர்களாகவே கூடுவது பிறிதொன்று. இந்த நட்பானது, நன்மக்களால் எத்துணை விழிப்போடு சிந்திக்கப்படவேண்டியதென்பதை, மக்களுக்கு இன்றியமையாத கல்வியைக்கூட இரண்டு அதிகாரத்தாற் கூறி முடித்த செந்நாப்போதார், நட்பின் பகுதியை ஐந்ததிகாரத்தாற் கூறியது கொண்டு உணரலாகும். மேலே காட்டிய மூவகை நட்புள், முதற்கண் உள்ளது நலந்தருவது. இறுதியிலுள்ளதைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை; ஏனெனில் இரண்டு பேரும் எத்தர்களாதலால், ஒருவனை ஒருவன் ஏமாற்ற முடியாது; ஏமாறினல் இருவருமே ஏமாறுவர். ஆதலால், அதுபற்றிச் சிந்திக்க வேண்டுவதில்லை. நடுவிலுள்ள நட்புத்தான் கவலையைத் தர வல்லது; ஏனெனில், தீயவன் செய்யுந் தீமையும், அவன்

தன்னை ஏமாற்றுவதும் தெரிகிறவரையில் நல்லவன் பல துன்பங்களுக்கு ஆளாக நேரும். எளிதிலும் விரைவிலும் தெரிந்துகொள்ளவும் அந்த நல்லவனால் முடியாது; காரணம், தன்னுடைய உள்ளம் போலவே, தன்னால் நட்கப்பட்ட அத்தீயவனுடைய உள்ளமும் இருக்குமென்ற நம்பிக்கைதான்.

இனி, முதலிற்கூறிய நல்லோர் நட்பு எழுமை எழுபிறப்புந் தொடர்வதாக உள்ளது. அவ்விருவரும் கொள்ளும் நட்பு, ஒருவனோடொருவன் நகை தோன்றப் பயனில்லாதவற்றைக் கூறி மகிழ்வதற்கன்று; அவருள் யாரேனும் ஒருவன் பழி பாவங்களை உண்டாக்கும் தீய தொழிலைச் செய்ய முற்படுவானாயின், மற்றொருவன் அவற்கு இடித்து நல்லறிவு கொளுத்தி நல்லவனுக்கும் பொருட்டுத்தான். அதனை நமது தெய்வப் புலவர்,

> "நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு."

என்னும் குறட்பாவால் கூறியருளுகின்றார். இந்த மூவகை நட்புள், முதலிற்கூறிய நட்பின்பாற்பட்டது இறைவ னோடு தமக்குள்ள நட்பு எனக் கருதிய திருநாவலூரர், "நாம் இறைவனிடம் சென்று, 'சங்கிலியாரை அடியே னுக்கு மணஞ்செய்து வைப்பீராக' என்று வேண்டினால், 'உனக்கு முன்னரே திருவாரூரில் ஒரு பெண்ணை மணம் செய்துவைத்திருக்கின்றேனல்லவா! இன்னொரு பெண் எதற்கு? வேண்டா,' எனக் கூறுவானன்றோ? அங்ஙனம் அவன் மறுத்துக் கூறாதவாறு பேச வேண்டும்," எனக் கருதி,

> "மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
> அன்றி மணிநீள் முடியின்கண்
> கங்கை தன்னைக் கரந்தருளுங்
> காதல் உடையீர்! அடியேனுக்(கு)
> இங்கு நுமக்குத் திருமாலை
> தொடுத்தென் உள்ளத் தொடையவிழ்த்த
> திங்கள் வதனச் சங்கிலியைத்
> தந்தென் வருத்தம் தீரும்."

என்று வேண்டிக்கொண்டதிற் காணப்படுகின்ற சொல் வன்மை,

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லும்சொல் இன்மை யறிந்து"

என்னுந் திருகுறளுக்கு இலக்கியமாகத் திகழ்தல் காண்க. இன்னும் இந்த வன்றொண்டரது சொல் வன்மையை, சேரமான் பெருமாள் நாயனுர் தமக்களித்த பொருள் அனைத்தையும் 'திருமுருகன் பூண்டி' என்னும் திருப்பதிக்கருகில் இறைவன் கட்டளையால் வேடர்களாக வேடம்பூண்டுவந்த பூதகணங்கள் அபகரித்துக்கொண்டு போக, அதனை ஏவலாளராலறிந்து, திருமுருகன் பூண்டியில் எழுந்தருளியிருக்கும் தேவதேவனிடம் சென்று "கொடுகு வெஞ்சிலை" என்று தொடங்கிப் பாடிய தேவாரப் பதிகத்தாலும், திருவாரூருக்கு அண்மையிலுள்ள குண்டையூரில் தமக்குக் கிடைத்த நெற்குவியலைத் திருவாரூரிற் கொண்டு வந்து சேர்க்கும்படி வேண்டி, "நீள நினைந்தடியேன்" என்று தொடங்கிப் பாடிய தேவாரப் பதிகத்தாலும் கண்டு மகிழ்க.

'கற்க—கற்பவை' என்ற குறளும் அவரும்

இனி, செந்நாப்போதாரின் நாவாகிய மலரினின்று ஒழுகிய தேன் துளிகளுள் ஒரு துளி,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்பது. இத்திருக்குறளிலுள்ள 'கற்பவை' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் "கற்பவை என்றதனால், அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருளுணர்த்துவன அன்றிப் பிறபொருளுணர்த்துவன சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா என்பது பெற்றும்" என உரை விரிக்கின்றுர். இனி, இதிலுள்ள 'கற்பவை' என்ற சொல்லும், "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல், கற்ருரோடேனையவர்" என்னும் குறட்பாவிற் காணப்படுகின்ற 'இலங்கு நூல்' என்பதும் ஒரே பொருளுடையனவாகும். எனவே, வள்ளுவரின் தெள்ளிய உள்ளம், 'பிறவியின் பயனை அடைதற்கு வழிகாட்டும் நூல்களையே மக்கள் கற்கவேண்டும்' என்பது.

இதன்படியேதான் நாவலூரார் கற்றிருந்தாரென்பதைக் கீழ்க்காணப்படுவனவற்ருல் அறிக.

வன்றெண்டரை இறைவன் தடுத்தாட்கொண்ட போது, "அர்ச்சனை பாட்டேயாகுமாதலால் மண்மேல் நம்மைச், சொற்றமிழ் பாடுக" என்று அசரீரியாகக் கட்டளையிட்டருளினன். அதனைக் கேட்ட தொண்டர், "கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன், யாதினையறிந்தென் சொல்லிப் பாடுகேன்?" என்று கூற, இறைவன், "முன்பெனைப் பித்தனென்றே மொழிந்தனை யாதலாலே, என்பெயர் பித்தனென்றே பாடுவாய்" என்று கட்டளையிட்டருளியவாறே அவர் பாடியது,

"பித்தா பிறைசூடீ பெருமானே யருளாளா"

என்று தொடங்கும் தேவாரப் பதிகம். இதில், 'பித்தா' என்ற சொல்லுக்குப் பின் 'பெருமானே' என்ற மோனை யுள்ள சொல்லை வைக்காமல் 'பிறைசூடீ' என்ற மோனை யுள்ள சொல்லை வைத்ததற்குக் காரணம் திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் அவருக்கு இருந்த பயிற்சியேயாகும். ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்குகளுள் ஒன்று "விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தி, பெண்ணாண் அலியாகும் பித்தா பிறைசூடீ" என்பது. இன்னும் அந்தக் காழி வள்ளல் திருவாரூர் சென்று பாடியருளிய பதிகத்துள் "எந்தை தானெனை யென்று கொளுங் கொலோ!" எனக் காணப்படும் தொடர், அந்தத் திருப்பதி சென்று இறைவனைப் பாடத் தொடங்கிய நம்பியாரூரருக்கு நினைவில் வந்ததன் காரணமாக, "எந்தையிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளிர்," என்று பாடியருளுகின்ருர். புகலிப்பதியைப் பாடிய திருஞானசம்பந்தர், "புகலியை, இடமா மேவினை தவநெறியருளெமக்கே" என்று கூறியருளியதையும், "திருத்துறையூர்த் தலைவா! உன்னை வேண்டிக்கொள்வேன் தவநெறியே" என ஓர் பதிகமுழுவதிலும் நாவலூரார் கூறியருளியதையும் ஒத்து நோக்குக. யாரைப் பெரியோர் என்று நாம் கருதுகின்ருேமோ, அவர் சென்ற வழியிலேயே செல்லுவதற்கு நாம விரும்ப வேண்டும் என்ற ஓர் உயர்ந்த

படிப்பினையும் இதில் அமைந்து கிடத்தலையுங் காண்க.

இனி, திருநாவுக்கரசர் தேவாரம் அந்த நாவலூர் நம்பியை எவ்வாறு ஆட்கொண்டிருந்ததென்பதையும் காண்போம்.

திருநாவுக்கரசர் திருநள்ளாறு சென்று அம்மையப்பரை அயரா அன்புடன் வணங்கிப் பாடியருளிய திருக்குறுந்தொகைப் பதிகத்துள் ஒரு பாடலின் ஈற்றடி, "மறவன் பன்றிப்பின் சென்ற மாயமே" என்பது. ஆளுடைய நம்பிகள் அங்குச் சென்று ஆண்டவனை வணங்கிப் பாடியருளிய பாடல் ஒன்றின் முதலடி, மேற்காட்டிய ஈற்றடியைக் கொண்டதாக "மறவனையன்று பன்றிப்பின் சென்ற மாயனை" என்று அமைந்திருத்தலைக் காண்க.

இன்னும் நமது நம்பி "கொய்யுலா மலர்ச்சோலைக் குயில் கூவ மயிலாலும் கொடுகுடிக் கோயில்" என்றருளிச் செய்த அடி, ஆளுடைய அரசு "கொய்யுலா மலர்சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூரர்" என்றருளிய அடியை எடுத்துக்கொண்டு பாடியதென்பதும் நினைவிற்கொள்ளத்தக்கது.

"அணிகொள்" என்று தொடங்கும் திருநின்றியூர்த் தேவாரத்தில்

"இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்'

என்று திருநாவுக்கரசர் பாடலுக்குத் தொகை கூறியதும் இக்கருத்தை வலியுறுத்துதல் காண்க.

இவை போல்வன பல உள. இன்னும் வாதவூரண்ணல் மலர்வாயினின்றும் வழிந்த திருவாசகத்தேனை நமது நம்பி எத்துணைச் சுவைத்தறிந்திருந்தாரென்பது காட்டப்படவில்லை. காரணம் ஆளுடைய அடிகள் நம்பிக்குக் காலத்தால் முற்பட்டவரா? பிற்பட்டவரா? என்று அறுதியிட்டு முடிவு செய்ய முடியாமையேதான்.

இவ்வாறு நம்பி தமக்கு முன்னிருந்த திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியருளிய தேவாரப் பாடல்களில் ஈடுபட்டுப் பயின்றிருந்ததற்குக் காரணம், வள்ளுவர் வாய் மலர்ந்தருளிய 'கற்பவை' என்ற

சொல்லுக்கும் 'இலங்கு நூல்' என்ற சொல்லுக்கும் அப்பாடல்கள் இலக்கியமாக இருந்தமைதான். அவர் அவற்றை அவ்வாறு கருதினரென்பதற்குச் சான்று "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன நாவினுக் கரையன்" என அவர் பாடியதேயாகும். இந்த அடியில் வரும் 'தமிழ்' என்ற சொல் மொழியென்ற பொருளைத் தாராமல் ஆகு பெயராக அதனால் ஆகிய பாட்டிற்கு ஆகும். 'நல் தமிழ்' என்ற தொடர், எளிய—இனிய—இலககிய இலக்கணம் அமைந்த பொருள்களபொதிந்த பாடல்கள் என்ற பொருளைக் குறிக்காமல், பிறவிப் பிணிக்கு மருந்தாக உள்ள பாடல்கள் என்ற பொருளைத் தருவதாகக் கொள்ள வேண்டும். 'நல்' என்ற சொல் இப்பொருள் தருவதை, "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்ருள் தொழாஅர் எனின்" என்ற குறட்பாவின் சிறப்புரையில் "பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்ருள் என்ருர்" எனத் தமது நுண்மா ணுழை புலத்தால் எழுதிய பரிமேலழகர் கூற்ருலறிக. இந்த நுட்பவுரையால் அறிந்து மகிழத்தக்க செய்தி ஒன்று இக்கட்டுரைக்குத் தொடர்பில்லையாயினும், நுட்பமான உரைகளை உள்ளத்தின்கண் மறவாமல் வைத்து நூலிற் பயில்வோமாயின் நமக்குக் கிடைக்கும் புதை பொருளை அறிந்துகொள்ளுவதாகிய பயனைக் கருதி இங்கு அறிந்து கொள்ளவேண்டும்.

அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர் மறையவர் மரபிலே தோன்றியவர். அவர், தமது பிறவிப்பிணியைப் போக்குவதற்குத் தவ முதலிய சாதனங்களை மேற்கொள்ளாமல், தமது காலத்திலிருந்தவரும், வேளாள மரபிலே தோன்றியருளியவரும், சைவசமயகுரவர் நால்வருள் ஒருவருமாகிய திருநாவுக்கரசர் என்பாரைக் காணுதற்கு முன்னரே, அவரிடம் அளவிறந்த அன்பு வைத்த காரணத்தால், அவர் பெயரை இடையருது சிந்தித்தும், வாயாற் கூறியும், அப்பெயராலே பல அறங்கள் செய்தும், மக்கட்பிறப்பா லடைய வேண்டிய குறிக்கோளை அடைந்தார். அவர் பெயர் அப்பூதியடிகள் என்பது. அவர் வரலாற்றைச் சுருக்கி 'நால்வர் நான்மணிமாலை' என்ற

நூலில்,

"உற்ருன் அலன்தவம் தீயில்நின் ருனலன் ஊன்புனலா
அற்ருன் அலனுகர் வுந்திருநாவுக் கரசெனும்ஓர்
சொற்ருன் எழுதியும் பேசியு மேஎன்றும் துன்பில்பதம்
பெற்ருன் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே."

என்று காணப்படும் சிவப்பிரகாச அடிகள் வாக்காலறிக. 'திருநாவுக்கரசர் என்ற பெயருக்குப் பிறவிப் பிணியைப் போக்குதற்குரிய ஆற்றல் உண்டா?' என்ற கேள்வி எழுமன்றே? அதற்கு விடையாகத் திருத்தொண்டர் புராணத்துள் வரும் பாட்டொன்றில் வரும் ஒரு சொல் அமைந்திருத்தலைக் காண்போம்.

திருநாவுக்கரசர் என்ற பெயர் அவருக்கு இறைவனுல் அசரிரி வாயிலாகக் கொடுக்கப்பெற்றது. 'மருள் நீக்கியார்' என்ற பிள்ளைத் திருநாமமுடைய அவர் தமக்கு உண்டாகிய வயிற்று வலியைப் பொறுக்கலாற்ருமல் திருவதிகை வீரட்டானத்திலுள்ள இறைவன் திருமுன் நின்று, "கூற்ருயினவாறு விலக்கிலிர்" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகம் பாடியருளி, அவ்வலி நீங்கப் பெற்ருர். அப்போதுதான் இறைவன் திருநாவுக்கரசர் என்ற திருநாமத்தைக் கொடுத்தருளினனென்பதை,

"மேவுற்றஇவ் வேலேயில் நீடியசீர்
வீரட்டம் அமர்ந்தபி ரான்அருளால்
பாவுற்றலர் செந்தமிழ் இன்சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினல்
நாவுக்கர சென்றுல கேழினுநின்
நல்நாமம் நயப்புற மன்னுகஎன்(று)
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா
னிடையே யொருவாய்மை எழுந்ததுவே."

என்ற பாடலாலறிக. இப்பாடலில் வரும் 'நல்நாமம்' என்னும் தொடரிலுள்ள 'நல்' என்ற அடைமொழி அப்பெயர் பிறவிப் பிணிக்கு மருந்தாகவுள்ளது என்ற பொருளைத் தந்து மேலே காட்டிய கேள்விக்கு விடையாக அமைந்திருத்தலை உய்த்துணர்ந்து மகிழ்க.

இனி, அப்பெரியார் அப்பூதியடிகள் வைத்து நடத்திய தண்ணீர்ப் பந்தலில் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப்

பந்தர்' என்று எழுதியிருத்தலைப் பார்த்து, "இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார்?" என்று வினவியதற்குக் காரணம், அப்பெயர் அக்காலத்துப் பலரும் வைத்துக்கொள்ளும் பெயராக இல்லாமையும், கடவுள் தமக்களித்த அப்பெயரை வெளியே யாருக்கும் தாம் வெளிப்படுத்தாதிருந்தமையுமேயாகும். அவ்வாறு வெளியே சொல்லாதிருந்ததற்குக் காரணம் அவரது தருக்கின்மையே. அவருடைய இச்செயல் "வியவற்க எஞ்ஞான்றும் தன்னை", "பணியுமாம் என்றும் பெருமை", "பெருமை பெருமிதம் இன்மை" என்ற குறளடிகளுக்கும் அவ்வடிகளுக்குப் பரிமேலழகர் எழுதிய நுட்ப உரைப்பகுதிகளுக்கும் இலக்கியமாகத் திகழ்தல் காண்க.

இன்னும் அவர், 'பிறவிப் பயனை அடைவதற்கு வழிகாட்டும் நூல்களுள் திருக்குறளும் ஒன்று' எனக்கருதி, அதனையும் நன்கு கற்றிருந்தாரென்பது அவர் பாடிய 'திருநெல்வாயில், திருவரத்துறைப்'பதிகத்தில் மட்டும் நான்கு திருக்குறட்பாக்களை எடுத்தாண்டிருத்தலால் அறியலாம். அவையாவன :-

"சிகர முகத்தில்———அகர முதலின் எழுத்தாகி நின்றாய்
அடியே னுய்யப் போவதோர் சூழல் சொல்லே."

"கறிமா மிளகும் ——— பொறிவா யிலிவ்வைந் தினையும்
அவியப் பொருதுன் னடியே புகுஞ்சூழல் சொல்லே."

"புற்று டரவம்———அற்றார் பிறவிக் கடலிந்தியே றி
அடியே னுய்யப்போவதோர் சூழல் சொல்லே."

"கோடுயர்————உறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி
———சொல்லே,"

என்பன. இந்த அடிகள் முறையே,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்னும் குறட்பாக்களை உள்ளத்திற்கொண்டு பாடப் பெற்றன என்பதைத் தெள்ளிதில் விளக்குதல் காண்க.

ஒரு குறளும் சில தொண்டரும்

இனி,

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை."

என்னும் திருக்குறளுக்குச் சேக்கிழார் கண்ட பொருளை யும், அப்பொருளுக்கு இலக்கியமாகக் காட்டிய திருத் தொண்டர்களையும் காண்போம்.

இந்தத் திருக்குறள் 'துறவற' இயலில் 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில் வைக்கப்பட்டிருப்ப தால் அவ்வியல் அதிகாரங்கட்கேற்ற முறையில், பரிமே லழகர் பொருள் காண்பாராயினர். ஆனால், சேக்கிழார் பெருமானே, இக்குறள் எல்லா மக்களுக்கும் பொருந்து மாறு உரை கண்டு, அவ்வுரைக்கேற்ப வாழ்க்கை நடத்திய திருத்தொண்டர் சிலரையும் காட்டுகின்றார். அவர் காணும் உரையாவது:

"பிறிதின் நோய்—மற்றோர் உயிர் படுந் துன்பத்தை (நீக்கும் ஆற்றலில்லாதவர்), தம் நோய்போல்—அந்த நோயைத் தமக்கு வந்ததுபோலக் கருதி, போற்றாக்கடை —அவ்வுயிர்களைக் காக்காவிடில், அறிவினான் ஆகுவது உண்டோ—(அவர்கள் பெற்ற) அறிவினால் பயன் யாது மில்லை," என்பதாம். இன்னும் அவர், பிற உயிர்படும் துன்பத்தைத் தமக்கு வந்ததாகக் கருதுபவர்கள், அவ் வுயிர் படுந் துன்பத்திற்குக் காரணம் யாது என்பதை அறிந்து, அதை நீக்கமுடியாத நிலையிலே தாமிருந்தால், அக்காரணத்தைத் தாம் ஏற்றுக்கொண்டாலன்றி அத் துன்பம் தமது அநுபவத்திற்கு வாராது என்பதையும் உணர்ந்து அதனை மேற்கொள்ளவேண்டும் என்றும் கருதுகிறார். உதாரணமாக, ஒருவன் தனது இல்லத்தில் வயிறு நிறைய உண்டுவிட்டு வீட்டின் முகப்பில் அமர்ந் திருக்கிறான். வேலை செய்ய ஆற்றலில்லாத நோயாளி ஒருவன் அவனிடம் வந்து, 'ஐயனே, யான் உண்டு மூன்று நாட்களாயின; பசி என்னைக் கொல்லுகிறது,'

என்று சொல்லிச் சோறு கேட்கிறுன். கேட்கப்படுபவன் வீட்டில் உணவு இருந்தால் அவனுக்குக் கொடுத்து அவன் துன்பத்தைத் துடைத்து விடலாம். தன் வீட்டிலும் சோறில்லையானுல் அவன் படுந் துன்பத்தை இவனும் மேற்கொள்ள வேண்டும். ஆனுல், பசி காரணமாக அவன் படுந்துன்பம், வயிறு நிறைய உண்டு உட்கார்ந்திருக்கும் இவனுக்கு அநுபவத்தில் வாராதல்லவா! 'யானும் இவன் படுந் துன்பத்தை அடைகின்றேன்' என்று அவன் சொன்னுல் அது பொய்யாகுமேயன்றி மெய்யாகாது. எனவே, உண்மையாக அத்துன்பத்தைத் தானும் அடையக் கருதும் இவன், அத்துன்பத்திற்குக் காரணமான பசியை (மூன்று நாட்கள் உணவில்லாமையை) மேற்கொள்ள வேண்டும். இங்குக் காட்டப்பட்டவற்றுள், முதற்பகுதி, உயிர் படுந் துன்பத்தை நீக்கும் ஆற்றலுடையவர்கள், தாம் துன்பப்படாமல் அத்துன்பத்தைப் போக்கி அவ்வுயிரை மகிழ்விக்க வேண்டுமென்பது. இரண்டாவது பகுதி, அந்த ஆற்றலில்லாதவர்கள் உயிரின் துன்பத்திற்குக் காரணம் எது என்பதையறிந்து, அதனைத் தாம் மேற்கொள்ளுமூலமாக அத்துன்பத்தைத் தாம் அடைய வேண்டுமென்பது.

முதற்பகுதிக்கு எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் பெருமானுற் காட்டப்பெற்ற திருத்தொண்டர் திருமூல நாயனுர் என்பவர்.

திருவாவடுதுறைக்கு அண்மையிலுள்ள சாத்தனூரிலுள்ள 'மூலன்' என்னும் பெயருடைய ஆயனெருவன் காவிரிக்கரை அருகில் உள்ள முல்லை நிலத்தில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் வாழ்நாள் முடிந்துவிட்டமையால் திடீரெனக் கீழே வீழ்ந்து இறந்துவிட்டான். இதனையுணர்ந்த பசுக்களெல்லாம் அவன் உடலை நக்கிக் கதறுவனவாய்த் துன்புற்றன. நல்ல தவயோகி ஒருவர் பல திருப்பதிகட்குச் சென்று ஆங்காங்குத் திருக்கோயில்தொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கி, திருவாவடுதுறை வந்து தேவதேவனை வழிபட்டுச் செல்பவர், மூலன் இறந்து கிடத்தலையும், அது

காரணமாகப் பசுக்கள் படுந் துன்பத்தையும் அறிந்தார். 'பசுக்களின் துன்பம் இவன் உயிர் பெற்றெழுந்தாலன்றி நீங்காது' எனக் கருதி, தமது யோகப் பயிற்சியால் அவனுடைய உடலினுள் தம்முயிரைப் புகுத்தி அத்துன்பத்தை நீக்கினாரென்பதை,

"அந்தணர்தஞ் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலன்எனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்றான் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான்

"மற்றவன்தன் உடம்பினைஅக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கியர்காண, 'நம்பர்அரு ளாலேஆ
உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன்'என உணர்கின்றார்.

"இவனுயிர்பெற் றெழிலன்றி ஆக்களிடர் நீங்காஎன்(று)
அவனுடலிற் றம்முயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்முடம்புக்(கு) அரண்செய்து தாம்முயன்ற
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினார்.

"பாய்த்தியபின் திருமூல ராய்எழலும் பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளிப்பின்
நீத்ததுய ரினவாகி நிரைந்துபோய் மேய்ந்தனவால்."

என்னுந் திருத்தொண்டர் புராணத்திலுள்ள திருமூல நாயனார் புராணத்துப் பாடல்களால் அறிக. இப்பாடல்களுள் இரண்டாவதிற் காணப்படும் "நம்பரருளாலே ஆ உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன்" என்னுந் தொடரிற் காணப்படும் நுட்பமான கருத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். யோக வலிமையால் எட்டுச் சித்திகளும் கைவரப்பெற்ற அப்பெரியாரும் 'இறைவன் திருவருளைப் பெற்று அந்த வலிமையால் இந்தப் பசுக்களின் துன்பத்தைப்போக்குவேன்,' என்று கருதினார் என்பதுதான் அக் கருத்தாகும். சாதாரண மக்களைவிடப் பெருமக்கள் தாம் தம் குறைபாடுகளை நன்கு அறிந்தவர்கள்; அவனருள் வலிமையின்றி ஓர் அணுவையும் அசைக்கமுடியாதெனத்

திட்டமாக உணர்ந்தவர்களாதலால் ஓர் உயிர் படுந்துன் பத்தைப் போக்கக் கருதினுல், அதற்குரிய வலிமையை ஆண்டவனை வேண்டிப் பெறுவார்கள். இது பெரியோர் களின் கருத்து என்பதை,

"உடல்தனைக் கழிக்க ஓற்ற உலகத்தில் உயிர்கட் கெல்லாம்
இடர்தனைக் கழிக்கவேண்டின் இறைவனை யேத்துமின்னே."

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தாலும் அறிக. இன் னும், சென்ற நூற்ருண்டிலிருந்த இராமலிங்க அடிகளார் கருத்தும் இதுதானென்பதை அவர் பாடியருளிய,

"மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும் வருத் தத்தை ஒருசிறிதேனும், கண்ணுறப் பார்த்தும் செவி யுறக் கேட்டும் கணமும்நான் சகித்திட மாட்டேன், எண் ணுறுமெனக்கே நின்னருள் வலத்தால் இசைத்தபோ திசைத்தபோதெல்லாம், நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க நல் வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்!"

என்னும் பாடலால் அறியலாம். இவ்வாறு அவர்கள் கருதியதற்குக் காரணம் 'சிற்றறிவும், சிறு வலிமையும், சிறு தொழிலுமுடைய எம்மால் மற்ருேருயிர் படுந் துன் பத்தை எவ்வாறு போக்க முடியும்? பேரறிவு முதலிய எண்குணங்களையுடைய இறைவன் திருவடிகளை வணங்கி, அவன் அருளைப் பெற்று, அந்த ஆற்றலாலே தான் அதனைப் போக்க வேண்டும்," என்று கருதியதே யாகும். இன்னும் நம்மை அத்துறையில் வழிப்படுத்த வேண்டியதினிமித்தம் நம் முன்னேர்களாகிய பெருமக் கள் கூறியருளியதொன்றையும் இங்கு நாம் அறிந்து கொள்ளவேண்டியவர்களாகிருேம்.

அப்பெருமக்கள், தாம் கூறியருளிய அறிவு நூல் வாயிலாக இறைவனுக்கு இரண்டு நிலைகள் உண்டு எனத் தெரிவித்தார்கள். அவற்றுள் ஒன்று, அவன் சிறப்பு நிலை; மற்ருென்று, பொது நிலை. முன்னுள்ளதைச் சொருப நிலை என்றும், பின்னுள்ளதைத் தடத்த நிலை என்றும் சாத்திரங்கள் கூறும். சிறப்பு நிலை இலக் கணங்களுள் ஒன்று, 'இறைவன் சச்சிதாநந்த சொருபன்' என்பது. இதில், சத்து, சித்து, ஆநந்தம், சொருபன்

என்ற நான்கு சொற்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றின் பொருள் 'சத்து-அழியாதிருப்பது; சித்து-அறிவாயிருப்பது; ஆநந்தம்-இன்பமாயிருப்பது; சொரூபன்-வடிவத்தையுடையவன்' என்பது. எனவே, இறைவன் அழியாத—அறிவுமயமான—இன்பமயமான வடிவத்தை உடையவன் என்பது பொருள், 'அழியாமை' அறிவு, இன்பம் இம்மூன்றும் இறை நிலைக்கு இன்றியமையாதனவாயிருப்பினும், சத்து சித்து ஆநந்தம் என்று முறைப்படுத்தியது எதற்கு? இம்முறையை மாற்றிக் கூறினால் என்ன?' என்ற கேள்விகளை எழுப்பி விடை காண்போமாயின், அப்பெருமக்களின் அறிவு நுட்பமும், தமக்குப் பின்னே வரும் நம்மனோரிடத்தில் அவர்கள் காட்டிய கருணையும் வெளியாகும்.

மக்களின் முதல் விருப்பம் தாங்கள் அழியாதிருக்க வேண்டுமென்பதுதான். 'சாதலின்இன்னாததில்லை' என்ற குறட்பாவும், அதன் விரிவும் 'வாயுறை வாழ்த்து' என்ற கட்டுரையிற்கண்டோம். அழியாதிருத்தல் உறுதிப்பட்டால், அறிவாளிகளாக இருக்கவேண்டுமென்று விரும்புவதும், அஃது உறுதி பெறின் இன்பமாக இருக்க அவாவுறுவதும் மக்கள் இயற்கை. இந்த உண்மையை உலக நிகழ்ச்சிகளுள் ஒன்றில் வைத்துக் காணலாம். கோடீசுவரன் ஒருவன்; அவனுக்கு ஐந்து ஆண்டு நிரம்பிய ஆண் மகவு ஒன்றுதான்; அவனுக்குப்பின் குழந்தைகள் தோன்றுதவாறு தாயின் உடல்நிலை மாறிவிட்டது. தந்தை அதனையறிந்தும், 'நமக்கு ஒரு பிள்ளை போதும்' என்ற மன அமைதியோடு, மற்றொரு பெண்ணை மணஞ் செய்துகொள்ளாமல் வாழ்க்கை நடத்தி வந்தான். இந்த நிலையில் மகனுக்குப் பித்தவாத ஜுரம் வந்துவிட்டது; வெப்பு நோய் நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போயிற்று; பார்த்த மருத்துவர்களெல்லாம் நம்பிக்கை தெரிவிக்கவில்லை. தந்தையின் உள்ளமும் தாயின் உள்ளமும் எப்படிக் கொதித்திருக்குமெனச் சொல்ல வேண்டியதில்லையல்லவா! என்ன செய்வான் அந்தக் கனவான்! 'உலகத்து மருத்துவர்களிற் சிறந்தவர் யார்?' எனக் கேட்டறிந்தான்; உடனே அவருக்குத் தந்தி மூலம் செய்தியைக் கூறி ஆகாய விமானமூலம் வரச்செய்தான்.

உடனே பிணிவாய்ப்பட்டு வருந்தும் அருமைப் புதல்வனிருக்கும் இடத்திற்கு அழைத்துச்சென்று காட்டினன். தாயும் தந்தையும் படித்தவர்களாயிருந்தும் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'மருத்துவரையா, எம் கைப்பொருள் முழுவதும செலவாகிவிட்டாலும் யாம் அதைப் பொருட்படுத்தமாட்டோம். எங்கள் பிள்ளை பிழைத்து, அவன் இருக்கிறான் என்ற அளவிலிருந்தாற் போதும்; அவன் படிக்கவேண்டா; பொருளீட்டவேண்டா; பிள்ளை ஒருவன் எங்களுக்கு இருக்கிறான் என்ற பெயரளவிலிருந்தால் அதுவே எங்கட்குப் போதும்,' என்று சொன்னார்கள். நல்வினையும், மருத்துவர் கொடுத்த மருந்தும் காரணமாக, பிள்ளை பிழைத்துக்கொண்டான். செல்வம் நிறைந்த குடும்பம் ஆதலாலும், ஒரே மகவு ஆதலாலும் சத்துள்ள உணவைக் கொடுக்கக் கொடுக்க அதனை உண்ட அவன் ஆறு திங்களுக்குள் நல்ல கட்டான உடலுடையவனாய் வீதியில் விளையாடிவந்தான்; பள்ளி செல்ல மறுத்தான். 'பிள்ளை இருந்தாற்போதும்' என்று கருதிய தாயும் தந்தையும் இப்பொழுது அந்த மகனைப் பார்த்து, "நீ இப்படி மூடனாக இருப்பதைவிட அப்பொழுதே மாண்டிருந்தாயானால் ஒரு முழுக்கோடு கவலையின்றி இருந்திருப்போமே! படித்த பரம்பரையிலே தோன்றிய நீ, அந்தப் பரம்பரைக்கே ஓர் இழுக்கைத் தேடிவைப்பாய்போலிருக்கிறதே! பள்ளிக்கூடம் சென்று படியடா பாவி," என்று சொன்னார்கள். புதல்வன், 'அம்மா, அப்பா என்பொருட்டு நீங்கள் உளம் வருந்த வேண்டா; நாளை முதல் யான் ஒழுங்காகப் பள்ளி சென்று படித்து வருகிறேன்,' என்று சொன்னான். அவ்வாறே பள்ளி சென்று இடையறு முயற்சியுடன் படித்து, ஒவ்வோராண்டிலும் தேர்ச்சி பெற்று, பெரிய பட்டம் பெற்றான். திங்களொன்றுக்கு முந்நூறு ரூபா வாங்கும் ஓர் உத்தியோகமும் பெற்றான்; திருமணமும் நடந்தது; அழகிய ஆண் குழந்தையும் பிறந்தது; அதற்கு ஓர் ஆண்டும் நிரம்பியது. விரைவில் மேலுத்தியோகம் பெறவேண்டுமென்ற கருத்துடைய அவன், "மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்——கருமமே கண்ணாயினார்" என்னும் பாடலுக்கு இலக்கியமாகக் கடுமையான

உழைப்பை மேற்கொண்டான். அவன் காலை ஆறு மணிக்கே அலுவலகம் போவான். அப்போது வயது முதிர்ந்த பெற்றோர்களும், அவன் குழந்தையும் உறக்கத்தினின்றும் விழிப்பதில்லை. இரவு பத்து மணிக்கு அவன் வரும்போது அவர்கள் தூங்கிவிடுவார்கள். 'பிள்ளை இரவு எத்தனை மணிக்கு வந்தான்' என்று மருமகளைக் கேட்பார்கள். 'பத்துமணிக்குத்தான் ஒவ்வொரு நாளும் வருகிறார்' என்பாள். ஒரு நாள் இரவு மகன் வருகிறவரையில் விழித்திருந்தார்கள். அவன வழக்கம்போல வந்து விழித்திருக்கும் பெற்றோர்களைப் பார்த்துத் திடுக்கிட்டு, "அம்மா, அப்பா, உடலுக்கு ஏதேனும் நலிவு உண்டா? ஏன் உறங்காதிருக்கின்றீர்கள்?" என்று வினவ, அவர்கள், 'நீ சாப்பிட்டுவிட்டுவா. முக்கியமான செய்தி ஒன்று உனக்குச் சொல்லவேண்டும்,' என்றார்கள். அவன் விரைவிலே உணவு உண்டு வந்தான். பெறறோர், அவனைப் பாாத்து, 'நீ நாளைக்கே உத்தியோகம் வேண்டா' என எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிடு," என்றார்கள். மகன், 'வயது முதிர்ந்துவிட்டதால் தன் பெற்றோர்க்கு மூளையில் ஏதேனும தளர்ச்சி ஏற்பட்டிருக்குமோ!' என ஐயுற்று அவர்களை வணங்கி, 'அப்பா, அம்மா, உங்கள் வாயினால் அப்படி இன்னொரு முறை சொல்லவேண்டாவென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த திங்களிலிருந்து நானூறு ரூபா வருவாயுள்ள பெரிய உத்தியோகம் கிடைக்கப்போகிறது' என்று மனமகிழ்வோடு சொன்ன மகனைப் பார்த்து, 'ஆயிரம் ரூபா வருவதாயினும் அந்த உத்தியோகம் வேண்டா; மனிதன் ஓடி ஓடி உழைத்தும் பொருளிட்டுவதெல்லாம் இன்பமாக இருப்பதறகுத்தானே? உனக்கு ஏதேனும் இன்பம் உண்டோ? "மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு,' என்று மக்களைப் பெருதவள்ளுவர் சொன்னார்; அந்த மகப்பேறு உனக்கு வாய்த்திருந்தும் ஒருநாளேனும் அக்குழந்தையை நீ தூக்கி, முத்தமிட்டு, இன்பம் நுகர்ந்தாயா? இன்ப நுகர்ச்சிக்கு இடையூறாயுள்ள அலுவலில் எத்துணைக் கோடிவரினும் நமக்கு அது வேண்டா; வேண்டா," என்று பெற்றோர்கள் சொன்னார்கள் என்னும் அநுபவத்தைக் காண்

கிறோம். 'முதலில் இருந்தாற்போதும்' என்று கருதியவாகள், அஃது உறுதியான பின் 'அதனுல் மட்டும் பயனில்லை; அறிவோடிருக்க வேண்டும்' என்று கருதினர்கள். அதுவும் சித்தித்த பிறகு இன்பத்தை யவாவினர்களென்பதை நோக்கும் போது, முதலில் அழியாதிருத்தலையும், பின்னர் அறிவைப் பெறுதலையும், அதன்பின் இன்பம் நுகர் தலையும் விரும்புவது மக்களியல் பென்பதை அறிறோம். இவ்வியல்பினை நம் முன்னோர்களாகிய பெருமக்கள் நன்கு உணர்ந்திருந்ததனலே தான், இறைவன் வடிவத்தைச் சொல்லுங்கால் முதலில் சத்தையும், அடுத்துச் சித்தையும், பின்னர் இன்பத்தையும் கூறிவைத்தனரென அறிக. சாகாதிருக்க விரும்புபவர்கள் அழியாதிருக்குமியல்பினனையும், அறிவுடையவர்களாக இருக்க அவாவுகின்றவர்கள் அறிவே வடிவாக உள்ளவனையும், இன்ப நுகர்ச்சியைக் கருதுபவர்கள் இன்பமயமாக உள்ளவனையும் அடைந்தாலன்றி அவர்கள் விருப்பம் நிறைவேறுதல்லவா! இக்கருத்தையொட்டியே, 'பிறவி துன்பம் என்று கருதுகிறவர்கள் அத்துன்பம் இயல்பாகவே இல்லாதவனிடம் சென்று வேண்டி, அத்துன்பத்தைப் போக்கிகொள்ள வேண்டும்' என்பதைத் திருநாவுக்கரசர்,

"தரியா வெகுளிய னய்த்தக்கன் வேள்வி தகர்த்துகந்த
எரியா ரிலங்கிய சூலத்தி னன்இமை யாதமுக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப் பானென்றும் நல்பிறப்பை
அறியான் அவனடிக் கீழதன் றோஎன்றன் ஆருயிரே?"

என்ற பாடலால் கூறியருளினர்.

பலர் அறிந்துகொள்ளவேண்டியது இக்கருத்தாதலால் கட்டுரைக்குத் தொடர்பில்லாதிருந்தும் சிறிது விரித்தெழுத நேர்ந்தது.

இனி, மேலே காட்டிய குறளுக்கு உரைகண்ட சேக்கிழார் பெருமான், "ஒருயிர் துன்பப்படுமானல் அதனை நீக்கும் ஆற்றிலில்லாதவர்கள் அவ்வுயிரின் துன்பத்துக்குக் காரணம் எதுவோ, அதனைத் தாம் மேற்கொண்டாலன்றி, அத்துன்பம் அவர்கள் அநுபவத்திற்கு

வாராது'' எனக் கருதி அவ்வாறு செய்த திருத்தொண்டரோருவரைக் காட்டுகின்றதைக் காண்போம்:

திருக்கடவூர் என்னும் பதியுள் மறையவர் குலத்திலே தோன்றியவர், அறுபத்து மூன்று நாயனமார்களுள் ஒருவர்; அவர் பெயர் குங்குலியக் கலயர் என்பது. அவர் மேற்கொண்ட தொண்டு இறைவன் திருக்கோயிலிற் குங்குலியத் தூபம் இடையறுது போட்டுக்கொண்டிருப்பது. வருவாயைப்பற்றிச் சிந்திக்காமல் நாள்தோறும் இப்பணி செய்து வந்தமையால், வீட்டில் வறுமை தாண்டவமாடுகிறது. ஆனல், இதுபற்றி அவர் சிந்திக்கவேயில்லை. இறைவனிடங் கொண்ட அன்பு எல்லாவற்றையும் மறந்து அவன் அத்திருப்பணியில் ஈடுபடச் செய்துவிட்டது. இதனை "எல்லாம் அயர்த்தெழும் அன்பு பொங்க" என்ற அடியால் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். இந்த நிலையில் இரண்டு நாட்கள் அவர் தமது வீட்டிற்கு வரவில்லை. வீட்டில் மனைவியாரும், மக்களும், அவரால் ஆதரிக்கப்பெற்ற சுற்றத்தார்களும் அந்த இரண்டு நாட்களிலும் உணவின்றி வருந்துகின்றனர். தம் மைந்தரையும் சுற்றத்தார்களையும் நோக்கி மனமுடைந்திருந்த மனைவியார், குங்கிலியம் தீர்ந்து போயினமையால், தமது வீட்டிற்குள் வந்து நுழைந்த கணவரைப்பார்த்து, தமது மங்கல நாணுகிய தாலியைக் கழற்றிக்கொடுத்து, "இதனை விற்று நெல் வாங்கிக் கொண்டு வாரும்," என்று வேண்டிக்கொண்டார் என்பதை,

"யாதொரு செயலு மின்றி இருபகல் உணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யாரும் கணவனர் கலய னர்கைக்
கோதில்மங் கலநாற் ருலி கொடுத்துநெற் கொள்ளும் என்ருர்''

என்ற பாடல் உணர்த்துகின்றது.

'தாலியைக் கொடுக்குங் காலத்தில் சினத்தோடு துன்ப வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தாரோ!' என்னும் ஐயத்திற்கு இடந்தாராமற் "காதல்செய் மனைவியாரும்'' என்று ஆசிரியர் கூறும் நுட்பம்சிந்திக்கத் தகுந்தது. இவ்வாறு உலகியலில் வைத்துக் கற்புடைப்

பெண்கள் செயலையும் உலகத்தார் ஐயுறுவர் எனக் கருதி, அவ்வாறு ஐயுருவண்ணம் அடைமொழி புணர்த்துக் கூறுதல் நம் பேராசிரியர் மரபு என்பதை, இளங்கோவடிகள் தாமியற்றிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் கண்ணகி என்னும் கற்புத் தெய்வத்தின் செயலுள் ஒன்ருகவைத்துக் கூறுவதையும் காணலாம்.

கோவலன் கைப்பொருள் முழுவதையும் இழந்து, மாதவியைப் பிரிந்து, கண்ணகியிடம் வந்து, "குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த, இலம்பாடு நாணுத் தரும் எனக்கு," என்று கூறி வருந்தினன். மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாது வருந்துவதாகக் கருதிய கண்ணகி, "சிலம்புள கொண்ம்" என்று கூறிக் கொடுத்தாளெனச் சொல்லக் கருதிய இளங்கோவடிகள், 'வருந்திய உள்ளத்தோடு சினக்குறிப்போடு வன்மொழி கூறிக் கொடுத்திருப்பாளோ' என உலகியலுள் வைத்து ஐயுருவண்ணம் "முறுவல் நகை முகம் காட்டிச் சிலம்புள கொண்ம்" என்று கூறிக் கொடுத்ததாகச் சொல்லுகிருர். அப்படிச் சொல்வதிலும் ஒரு குறைபாடிருப்பதாகக் கருதுகிருர். அக்குறைபாடு யாதெனின், 'உள்ளம் கனல் போல் வெதும்ப, முகத்தில் மட்டும் நகையைக் காட்டிக் கொடுத்திருப்பாள்' எனக் கருதுவது. அதை நீக்க "நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டி" என்று கூறுவது சிந்தித்து மகிழ்தற்குரியது.

நாயகர் செயலால் வறுமை நேர்ந்து இரண்டு நாட்கள் மக்களோடு உணவின்றி வருந்தியும், அக்கணவரிடத்திற் 'காதல் செய்மனைவியார்' கொடுத்த தாலியைக் கொண்டு சென்ற கலயர், எதிரே மாட்டின்மேல் குங்குலியப் பொதியை ஏற்றிக்கொண்டு ஒரு வணிகன் வருதலைக் கண்டு, அவனல் அது குங்குலியமென உணர்ந்து, மனைவியார் குழந்தைகளின் பசியைப் போக்குதற்காக நெல் வாங்கும்பொருட்டுக் கொடுத்த தாலியைத் தந்து அந்தக் குங்குலியத்தை வாங்கிக்கொண்டு திருக்கோவிலுக்குச் சென்று தமது திருப்பணியில் ஈடுபடுவாராயினர். இறைவன் திருவருளால் அவர் இல்லத்திற் செல்வம் குவிந்தது. அதனைக் கண்ட அம்மையார் இறைவன் திரு

வருவே வியந்து தம் கணவனாருக்குத் திருவமுது அமைத்துக்கொண்டு அவரை எதிர்பார்க்கிறார். கலய நாயனார் காதில் விழுமாறு இறைவர் அசரீரியாக, "சாலநீ பசித்தாயுன்றன் தடநெடு மனேயில் நண்ணிப், பாலினின் அடிசி லுண்டு பருவரலொழிக" என்றருளிச் செய்தனர். அவர் கட்டளையை மறுப்பதற்கஞ்சி நாயனார் தமது திரு மனைக்கு வந்தார்; "இருநிதிக் குவைகளார்ந்த செல்வத் தைக் கண்டு நின்று திருமனேயாரை நோக்கி, 'வில் லொத்த நுதலாயிந்த விளேவெலாமென்கொல்?' என்ன, 'அல்லொத்த கண்டனெம்மான் அருள் தர வந்தது' என் ருர். "அதனேக் கேட்ட கலயனார், மனையின் ஒவ்வொரு பகுதியிலும் குவிந்து கிடக்கும் பொருளேப் பார்த்தார்; வியந்தார்; 'ஒன்றுக்கும் பற்ருத சிறியேனேயும் ஆட் கொள்ளுந் தன்மையுடையதா எங்கள் ஆண்டவன் அருள்?' என்று கருதி விம்மிதமுற்று, இரண்டு கைகளே யும் தலேமேற் குவித்து வணங்கினார். இதனே, "என்னேயும் ஆளுந் தன்மைத் தெந்தை எம்பெருமா னிசன், தன்னரு ளிருந்த வண்ணமென்று கை தலேமேற் கொண்டார்" என் னும் சேக்கிழார் திருவாக்கா லுணர்க. கற்புடை மனைவி யாரும் தம் கணவராம் கலயனாருக்கு, அன்புடன் அமுது படைக்க உண்டு மகிழ்ந்திருக்கின்ருர்.

அப்போது திருப்பனந்தாளிலுள்ள சிவலிங்கமானது நேரே நில்லாமல் குனிந்திருத்தலேக் கண்ட அரசர் பெரு மான் அஞ்சி, அதனே நேர் நிறுத்திக் காணும் முயற்சியில் ஈடுபட்டு அந்த இலிங்கத்திற் சங்கிலியைப் பூட்டித் தம் யானேகளேக் கட்டி இழுத்தும் பயன்படாமையால், உண வின்றி இரவும் பகலும் நீங்காத கவலேயுடையவராயிருக் கின்ருரென்பதைக் கலயனார் அறிந்து, அந்த மன்னரைக் கண்டு, மகாலிங்க மூர்த்தியையும் வணங்கும் பேரார்வம் உடையவராய் அங்குச் சென்ருர்.

சென்ற அவர், இறைவனே நேரே நிமிர்த்திக்காண வேண்டுமென்ற பேரன்பு காரணமாக அரசர் அடைந் துள்ள வருத்தத்தையும், அவர் கட்டளேப்படி இறை வன் திருமேனியோடு பிணேக்கப்பட்ட சங்கிலியை இழுத் திழுத்துச் சேனேகளும் யானேகளும் இளேத்து வீழ்ந்து தம் வசமின்றிக் கிடந்து வருந்துதலேயும் நோக்கினர்.

அவ்வருத்தத்தை நீக்கவேண்டுமானால் சிவலிங்கத்தை நிமிர்த்த வேண்டும். அது தம்மால் முடியாத செயல். ஆயின், அந்த வருத்தத்தைத் தாம் மேற்கொள்ள வேண்டும்; அதற்குரிய காரணமாகிய இழுத்தலை மேற்கொண்டாலன்றி, அத்துன்பம் தமது அனுபவத்திற்கு வாராது என்பதை அறிந்த நாயனார், ஓர் வலிய கயிற்றினால் தமது கழுத்தையும் சிவலிங்கத்தையும் பிணைத்து இழுத்தார். அது நிமிர்ந்தது; அவர் இழுத்தது சிவலிங்கம் நிமிரும் என்ற கருத்துடனன்று; அச்செயலை மேற்கொண்ட உயிர்கள் படுந்துன்பத்தை நீக்கும் ஆற்றலில்லாத தாமும் அதனை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். இக்கருத்துக்களைக் கீழ் வரும் பாடல்களால் அறிக. அவை,

"காதலால் அரசனுற்ற வருத்தமும் களிற்றி னோடு
தீதில்வன் சேனை செய்யும் திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே யெய்த்து வீழ்ந்திளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்தம் எய்தி,

"சேனையும் யானை பூண்ட திரளும்எய்த் தெழாமை நோக்கி
யானுமிவ் விளைப்புற் றெய்க்கும் இதுபெற வேண்டு மென்று
தேனலர் கொன்றை யார்தம் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்த லுற்றார்.

"நண்ணிய ஒருமை யன் பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யிளைத்தபின் திரம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்"

என்பன.

இனி, இதற்கு இலக்கியமாகச் சேக்கிழாரால் காட்டப் பெறுகின்ற மற்றொரு பெருமகனார், 'மநுநீதி கண்ட சோழர்' என்பவர். "தலைப்பு, 'திருக்குறளுட்சிலவும் திருத்தொண்டருட்சிலரும்' என்பதல்லவா! மநுநீதிச் சோழர் திருத்தொண்டர் வரிசையுள் உள்ளவரல்லரே! அவரை இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமுடையதாகுமா?" என்னும் ஐயம் தோன்றலாம். நம்பியாரூரர் அருளிய திருத்தொண்டத் தொகையுள் ஒருவராக அச்சோழர்பெருமான் கூறப்படாவிடினும், அத்தொண்டருள் இவரும் ஒருவராகச் சேர்க்கப்படுந் தகுதியுடையவ

ரெனக் கருதியே சேக்கிழார் பெருமான் உய்த்துணர வைப்பாக 'மநுநீதி கண்ட புராணம்' என்னும் பெயர் கொடுத்துக் கூறினர். ஏனைய நாயன்மார்கள் வரலாறு களெல்லாம் 'புராணம்' என்ற பெயராலேயே கூறப்பட் டிருத்தலையும் காண்க. இக்கருத்தை உணராத பிற் காலத்துப் பதிப்பாசிரியர்கள், 'திருநகரச் சிறப்பு' முதலிய தலைப்புக்களைக் கொடுத்துப் பெரிய புராணத்தைப் பதிப் பாராயினர். நாவலரவர்கள் பதிப்பில் 'மநுநீதி கண்ட புராணம்' என்றே இருத்தலையும் காண்க.

ஒரு காலத்தில் ஓர் குறிப்பிட்ட இடத்திலிருந்தவர் களோ—இருப்பவர்களோ தாம் இறைவன் திருவடியை அடைந்தவர்களென்றோ அடையுந் தகுதியுடையவர்க ளென்றோ கருதும் குறுகிய நோக்கம் நம் பெருமக்க ளிடத்தில் இல்லையென்பதை, "அப்பாலும் அடிச்சார்ந் தார் அடியார்க்கும் அடியேன" என்று திருத்தொண்டத் தொகையுள் வன்றொண்டப் பெருந்தகையார் அருளிய தால் அறியலாம்.

இனி, இத்தொடரிலுள்ள 'அப்பால்' என்ற சொல் லுக்குத் தமது நுண்மாணுழைபுலத்தாற் பொருள் கண்டு விரித்து உரை கூறிய வகையால் தமது பரந்த நோக் கத்தை வெளிப்படுத்திய சேக்கிழாரின் தெய்வப் புலமை நினைக்குந்தோறும் வியப்பையும் மகிழ்வையுந் தருவதாகு மாதலால் அதனைக் காண்போம்.

'அப்பால்' என்ற சொல் இடத்தையும் உணர்த்தும்; காலத்தையும் உணர்த்தும், உலக வழக்கிலும் அச் சொல் இந்த இரு பொருளிலும் வழங்குவதைக் காண லாம். முதலில் அச்சொல்லை இடப் பொருளாகக் கொண்டு "மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக் கப்பால் முதல்வனு ரடிச்சார்ந்த முறைமையோரும்" என்று குறிப் பிட்டார். பின்னர்க் காலப் பொருளாகக் கொண்டு, அக்காலத்தையும் இறந்த காலமும் எதிர் காலமாகவும் கொள்ளுகிறார். அப்பால் என்ற சொல் எதிர்காலத் திலும் வருமென்பதை, பின்னே நிகழப்போவதொன்றை ஒருவன் கூறும்போது அவன் பக்கத்திலுள்ளவன்

'அதை அப்பாற் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்வதைக் கொண்டும் அறியலாம். 'அன்று' என்ற சொல்லும் எதிர்காலத்தில் வருவதை "அன்றறிவா மென்னுதறம்செய்க" என்ற திருக்குறளாலும் அறியலாம் எனவே, அப்பால் என்ற சொல் இறப்பு, எதிர்வு இரு காலங்களையும் உணர்த்துவதாகக் கொண்ட அவர், "நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற்கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்" என்று கூறுகின்றார். அச்செய்யுள்,

"மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியார் அடிச்சார்ந்தார்ந் தோரும்
செப்பிய அப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே."

என்பது.

இவ்வாறு எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் பிறந்த மக்களனைவரும் இறைவன் திருவடிப்பேற்றுக் குரியவர்களே எனக் கருதும் பரந்த நோக்கமுடைய அப் பேராசிரியர் மநுநீதிச் சோழரை ஒரு தொண்டராகக் கருதினுரென்பதில் சிறிதும் ஐயமில்லையல்லவா! எனவே, அத்தொண்டரையும், மேலே காட்டிய, "அறிவினுனுகுவ துண்டோ" என்ற குறட்பாவிற்குத் தாம் கொண்ட உரையின் இரண்டாவது பகுதிக்கு இலக்கியமாகக் காட்டு கின்ருர் அந்நூலாசிரியர்.

அச் சோழமன்னர் வரலாறு பலரும் அறிந்த தொன்று. அக் காவலர் தவப் புதல்வன் வீதி விடங்கனென்பான் தேரின்மீ தேறிச் செல்லுங்கால் இளைய பசுவின் கன்று ஒன்று யாவரும் அறியாதவாறு துள்ளிக் குதித்து அவன் சென்ற தேர்க்காலிற் பட்டு இறந்தது. தாய்ப்பசுவானது தாங்கமுடியாத துயர முடையதாய் அரசர் வாயிலிற் கட்டியிருந்த ஆராய்ச்சி

மணியைத் தனது கொம்பினுல் அசைத்து அடித்தது. அவ்வொலியைக் கேட்ட வளவர், வாயிலில் வந்து, அச் செயல் அங்கு நின்ற பசுச் செய்தது என்பதை வாயிற் காவலாளரால் அறிந்து, அருகில் நின்ற அறிவுடை அமைச்சரை நோக்கி, 'இப்பசுவிற்கு நேர்ந்த இடையூறு யாது? என இகழ்ச்சிக் குறிப்போடு வினவினர். முன்னரே இதனையறிந்தவனும், முதிர்ந்த கல்வி கேள்வியுடையானும், சொல் வன்மையையுடையவனும், அமைச்சர் பரம்பரையில் வந்தவனுமாகிய ஓர் அமைச்சன் கூறுவதாக, சோழருக்கு முதலமைச்சராய் இருந்து வந்த அருள் மொழித் தேவர் (சேக்கிழார்) சொல்கிருர். அது,

"வளவநின் புதல்வ ஞெங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாம் தெருவிற் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தஇத் தன்மை என்ருன்."

என்பது.

இச்செய்யுளில் 'வளவ' என்று விளித்து நின், புதல்வன்' என்றதனுல் அவன் தேரில் ஏறிச் செல்லும் உரிமையுடையானென்பதையும்; 'மணி கட்டிய தேர்' என்ற பொருளில் 'மணித்தேர்' என்றமையால் அந்த மணிகளின் ஒலியைக் கேட்டவுடனே இளஞ்சிருர்களைப் பெற்ருேரும், மாடு, கன்று முதலியவைகளையும் புரப்போரும் அந்த வழியில் வாராவாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதையும்; 'நெடுந்தேர்' என்றதனுல் மணி ஒலி கேட்க முடியாத தூரத்தில் வருகினறவர்களும் செவிடர்களும் கண்டு ஒதுங்க வேண்டியவர்களென்பதையும்; 'அளவில் தேர்த்தானை' என்றதனுல் அவன் தனியே போகவில்லை என்பதையும்; 'சூழ' என்றதனுல் அவன் தெருக்கு நாற்புறத்திலும் தேர்கள் சென்றன என்பதையும்; 'அரசுலாம் தெரு' என்றதனுல் அரசவீதியிற் சென்ருனேயன்றி வேறு தெருக்களிற் செல்லவில்லை என்பதையும்; 'இளைய ஆன் கன்று' என்றதனுல் அதன் விதியேயன்றிப் பருவமும் ஒரு காரணம் என்பதையும்; 'தேர்க்காலிடைப்புகுந்து' என்றதனுல் அது தானே ஓடி வந்து

புகுந்தது என்பதையும் குறிப்பாலுணர்த்தி 'எந்த வகையாலும் அரசிளங்குமரன் குற்றவாளி அல்லன் எனக் காட்டிய நுட்பம் சிந்தித்து மகிழ்தற்குரியது. இவ்வாறு மந்திரி கூறியதைக் கேட்டவுடனே அந்தப் பசுவின் துன்பத்தை அரசர் அடைந்தாரென்பது, "அவ்வுரை கேட்ட போதே ஆவுறுவது துயரமெய்தி" என்ற அடியினலறியபடுவது. ஆனால், அத்துன்பம் பசுவின் துனபம் போல நீடித்து நில்லாதல்லவா! எனவே, அரசர் 'இதற்கு என்ன செய்யலாம்?' என வினவிய காலை, மந்திரிகள், அதற்குக் கழுவாயாக அறநூலிற் கூறியவற்றையெல்லாம் எடுத்துக்கூறி, அவ்வாறு செய்வதே அறமாகும் என்றூர்கள். நீங்கள் சொல்லியவாறு செய்தால், அச்செயல் இந்தப் பசுவின் துன்பமாகிய நோயைப் போக்குகின்ற மருந்தாகுமோ?' எனக்கூறி, மேலும் மேலும் அமைச்சர்கள் கூறிய அனைத்தையும் மறுத்துக்கூறி, ஒரு முடிவுக்கு வருகின்ற அரசர், 'இந்தப் பசுப் படுந்துன்பம் நீங்கவேண்டுமாயின், இதன் இறந்த கன்று எழவேண்டும்; அதற்கு உயிர் கொடுத்து எழுப்பும் ஆற்றலெனக்கில்லை; அத்துன்பத்தை நீக்க முடியாத யான் என்ன செய்ய வேண்டும்? இதன் துன்பத்தை யான் மேற்கொள்ள வேண்டும்; ஆயின், இதன் துன்பத்திற்குக் காரணம் எதுவோ, அதனை யானும் மேற்கொண்டாலன்றி, அத்துன்பம் என் அனுபவத்திற்கு வாராதன்றே கன்றை இழந்ததனல் நேர்ந்த இதன் துன்பத்தை யான் மேற்கொள்ளவேண்டுமாயின், என் மகனை இழக்கவேண்டும்,' என்ற முடிவுக்கு வந்தாரென்பதை,

"எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ்வான்
மனமழியும் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே கருமமென
அனகனரும் பொருள்துணிந்தான் அமைச்சரும்அஞ்
சினரகன்றூர்"

என்னும் செய்யுளால் நூலாசிரியர் காட்டுகின்றூர். பின்னர் நிகழ்ந்தவற்றை,

"மன்னவன்றன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை,
முன்னிவனை யவ்வீதி முரன்டேர்க்கால் ஊர்கவென

அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன்ஆ ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்"

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மநுவேந்தன்
அருமந்த அரசாட்சி யரிதோமற் றெளிதோதான்."

என்ற செய்யுட்களால் உணர்க. பின்னர் இறைவன் திருவருளால் இறந்த உயிர்கள் பிழைத்து எழுந்தன என்று சொல்லும் போதும் ஆசிரியர் கூறும் நயம் சிந்திக்கத் தகுந்தது. முதலில் பசுவின் கன்றும் அடுத்து அரசிளங்குமரனும், பின்னர் அமைச்சனும் எழுந்ததாகக் கூறுகிறார். இவ்வாறு கூறுதல் காரணகாரிய முறைபற்றி மன்னவர், தம்புதல்வனை மடித்தது ஆன் கன்றுக்காக; மந்திரி மடிந்தது மைந்தனுக்காக. எனவே, முதலிலே கன்று எழாமல் காவலர் மகன் எழுந்தால், அஃது அவ் வரசரால் பொறுக்க முடியாத செயலாகும்! மைந்தன் எழுதற்கு முன் மந்திரி எழுந்தால், அவன் மீண்டும் தற் கொலைக்குத் துணிவான். தெய்வப்புலவர் திருவாக்குக் களில் இந்த நயங்கள் தேனும் பாலாறுமாக ஓடுதலை உய்த்துணர்ந்து மகிழ்க.

"தினைத்துணையாம்" என்று தொடங்கும் குறளும், திருக்குறிப்புத் தொண்டரும்

இனி, திருக்குறிப்புத் தொண்டரென்பவர் தம் செயல் எந்தத் திருக்குறளுக்கு இலக்கியமாயமைந்தது என் பதனைக் காண்போம்:

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவைப் பிராட்டியாரால் பாராட்டப்பெற்ற தொண்டை நாட்டின் தலை நகரமாய் விளங்கிய காஞ்சிமா நகரத்தின் ஓர் ஒதுக்குப் புறத்தில் ஏகாலியர் மரபிலே தோன்றிய இப்பெரியார், தமது குலத்தொழிலை இந்நிலவுலக வாழ்க் கைக்குப் பயன்படுத்தக் கருதாமல், அப் பரவுலக வாழ்க்

கைக்குப் பயன் படுத்தக் கருதினர்; ஆதலால், நகர மக்களிடம் கூலி பெற்றுத் துணி வெளுத்துக் கொடுப்பதில்லை. சிவனடியார்கள் யாரேனும் கண்ணிற்படுவார்களானல், அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவர்கள் உடைகளை வெளுத்துக் கொடுப்பார். இவ்வாறு அந்த அடியார்களின் குறிப்பறிந்து தொண்டு செய்யும் இயல்பினுல் 'திருக்குறிப்புத்தொண்டர்' என்னும் காரணப் பெயர் பெற்ருர். இவ்வாறு இவர் தொண்டுசெய்து வருங்காலை, இறைவன், 'இவர் செய்யும் தொண்டின் சிறுமை நோக்கி இவரை மதிப்பிடாமல், அதற்கு அடிப்படையாய் உள்ள உள்ளப் பண்பாடு நோக்கி மதியுங்கள்' என்று உலகத்தாருக்கு அறிவிக்கும்பொருட்டு, 'கருமேகமென அழுக்குக் கந்தை' ஒன்றை உடுத்துக்கொண்டு, இளைத்த உடலோடு ஓர் அடியாராய் வந்தார். தொண்டர் அவரைக் கண்டு, கீழே வீழ்ந்து வணங்கி, 'அடிகேள், திருமேனி இளைத்திருக்கிறதே! காரணம் யாதோ? இக்கந்தையைக் கொடுத்தருளும். கழுவித்தருகின்றேன்,' என்ருர். அதைக் கேட்ட அடியார், 'தொண்டரே, இக்கந்தையில் அழுக்கு ஏறியிருப்பதைப் பார்த்தால், இது கையினுலே தொடுவதற்குக்கூடத் தகுதியற்றதாகும்; எனினும், மாற்றுடை வேறில்லாமையாலும், என் இளைத்த உடல் குளிரைத் தாங்கும் ஆற்றலுடையதன்று ஆதலாலும் இதனை யான் விடுவதில்லை' ஞாயிறு மறைவதற்குள் தருவீரானல், இப்பொழுதே கொடுக்கின்றேன்,' என்ருர். தொண்டர்,

"தந்தருளும் இக்கந்தை தாழாதே யொலித்துமக்கின்(று)
அந்திபடு வதன்முன்னம் தருகின்றேன்"

என்றனர். அடியார் கேட்ட கேள்விக்குச் சொல்லுக்குச் சொல் உடன்பட்ட பிறகு அந்த அடியார் உடையை அவிழ்த்துக் கொடுக்கவேண்டியதைத் தவிரப் பேச வேண்டியதில்லை. ஆனல் பேசுகிருர்; அது,

"கந்தையிதை யொலித்துணக்கிக் கடிதின்றே தாரிரேல்
இந்தவுடற் கிடர்செய்தீர் என்றுகொடுத் தேகினர்"

என்பது. இதிலுள்ள நுட்பமான பகுதிகளை ஆராய்ந்து அறியாமற்போனல் முன் சொன்னதையே மறித்தும் அவ்

வடியார் கூறினர் எனக் கருதப்பட்டுப் 'பிசைந்த மாவைப் பிசைதல்' எனத் தருக்கநூலார் சொல்லும் குற்றத்தின் பாற்படும். அவ்வாறு குற்றப்படக் கூறுதல் தெய்வப் புலமைச் சேக்கிழார் இயல்பன்ருதலால், இதிற் காணப் படும் புதிய கருத்துக்கள் எவை என்பதைக் காண்போமாக: இரண்டு கருத்துக்கள் காணப்படுவன: ஒன்று, 'உணக்கி' என்பது; மற்ருென்று 'தாரீரேல் இந்த உடற்கிடர் செய்திர்' என்பது. முதலிற்காணப்படுவது, மந்திரியாராய் இருந்த நூலாசிரியரின் சட்டசம்பந்தமான பேரறிவைக் காட்டுவதாகும்; அஃது எவ்வாறு எனப் பார்ப்போம்:

முதலிலே அடியாரும் தொண்டரும் பேசிய பேச்சுக்களில் 'ஒலித்து' என்ற சொல் காணப்பட்டதேயன்றி 'உணக்கி' என்ற சொல் காணப்படவில்லை. 'ஒலித்தல்' என்ற சொல்லுக்கு அழுக்கைப் போக்குதல் என்பது தான் பொருள். காயவைத்தல் என்ற பொருள் அந்தச் சொல்லுக்கு இல்லை. ஆனல், அத்தொழிலாளரிடத்தில் உடைகளைப் போட்டு, 'வெளுத்துக் கொடுங்கள்' என்போமானல் அவர்கள் காயவைத்துத்தான் கொடுப்பார்கள். என்ருலும் அத்தொழிலாளருள் ஒருவர் ஒலித்து அதாவது வெளுத்து ஈரத்தோடு கொண்டுவந்து கொடுத்தாரானல், அவரிடம் உடையைக் காயவைத்துத்தான் கொடுக்க வேண்டும் என்று திருப்பிக் கொடுத்தல் இயலாது. எனவே, அடியாருக்கும் தொண்டருக்கும் ஏற்பட்டுள்ள அந்த உடன்படிக்கையில், 'காயவைத்து' என்ற பொருளைத் தருகின்ற 'உணக்கி' என்ற சொல் எத்துணை இன்றியமையாதது என்பது கூர்ந்து நோக்குவார்க்குப் புலனுகும். சிறுத்தொண்ட நாயனர் புராணத்துள் தொண்டருக்கும் அவரிடம் வந்த அடியாராகிய ஆண்டவனுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையுள் ஒரு சொல் இல்லாமையால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை அந்நூலில் ஆராய்ச்சி வல்ல புலவர் வாய்க் கேட்டுணர்க. இவ்வாறு உடன்பாட்டு வகையாலும் எதிர்மறை வகையாலும் மக்களுக்கு அறிவு புகட்டுவது பெரியாரியல்பாகும்.

இரண்டாவது செய்தி, 'அவ்வாறு நீர் செய்யா விட்டால் நீர் அடையும் கேடு இன்னது' என்பதாகும். தொண்டர் இத்தொண்டுக்குக் கைம்மாறு கருதாதவராதலால் குறித்த பொழுதிற் கொடுத்துவிட்டால் அவரடையும் பயன் இது என அந்த அடியாரால் கூறப்படவில்லை. தொண்டு செய்தலே அவர் குறிக்கோளாதலால் 'என் செயலாலன்றி, தெய்வச் செயலாலே இன்று மாலைப் பொழுதிற்குள் உடையை வெளுத்துக் காயவைத்துக் கொடுக்கமுடியாவிட்டால், அதற்கு யான் பொறுப்பாளி அல்லன்' என்றும் தொண்டர் கேட்டுக்கொள்ளவுமில்லை. இவ்வாறு உடன்பட்ட தொண்டர், அடியாருடைய உடையைக் கொண்டுபோய்ப் புழுக்கிப் பிரித்து வெளுக்கத் தொடங்கிய போது இறைவன் திருவருளால் மழை பொழியத் தொடங்கியது. 'மழை விடும் விடும்' என்று கருதித் தொண்டர் அங்கேயே அசைவற நின்ருர். மழை விடவில்லை. பகற்பொழுது போய் இரவு வந்துவிட்டது "யான் இசைந்தவாறு நடந்துகொள்ளத் தவறிவிட்டமையால் அடியாரொருவரின் திருமேனி குளிரிஞலே துன்புற நேர்ந்ததல்லவா! இனி யான் இவ்வுடலோடு இருப்பது தகாது!" எனக் கருதித் தற்கொலை செய்துகொள்ளும் முடிவுக்கு வந்தார். இந்நிலையில் படிப்போருக்கு ஓர் ஐயந் தோன்றலாம். 'மழையைப் பெய்வித்தலோ, தடுத்தலோ நம்மாலாகக்கூடியதன்று; அஃது இறைவன செயல்; அங்ஙனமிருக்க, மழையிஞல் நேர்ந்த இச் செயலுக்காகத் தற்கொலை செய்துகொள்ளத் துணிவது அறிவுடைமையாகுமா?' என்பது அந்த ஐயம். இது யாரும் ஒத்துக்கொள்ளக் கூடியதுதான். ஆனல், இது பற்றித் தொண்டர் என்ன கருதுகிருரென்பதைப் பார்ப்போம்.

மற்றவர்களைவிடப் பகல் முழுவதும் வெளியே நின்று வேலை செய்யும் வண்ணுர் முதலியோர்களுக்கு மழையின் அநுபவம் மிகமிக நன்ருய்த் தெரியும். இன்னின்ன திசையில் மேகங் கூடிப் பெய்யத்தொடங்குமாயின் அஃது இவ்வளவு நேரம் பெய்யுமென்பதைத் திட்டமாக உணர்ந்தவர்கள் அவர்கள்; அஃது அவர்கள் சொந்த

அநுபவத்தாலும், அவர்கள் முன்னோர்கள் சொல்லி வந்தமையாலும் பெற்ற அறிவு. அன்று வந்த மழையோ, "திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாம் மிடைந்து, மிசைசொரியும் புனற்றாரை விழிநுழையா வகைமிடைய" என்று பேசப்படுகின்றது. 'இந்த நிலையிலே வந்த மழை இன்று பகல் முழுவதும் விடாது என்பதை என அனுபவ அறிவால் உணர்ந்து இந்த உடையைக் கொண்டுபோய் வீட்டுக் காற்றில் உலர்த்தியிருக்க வேண்டும்; அவ்வாறு செய்யாமைக்குக் காரணம் எனது அறிவுக் குறைவே. ஆதலால் யானினி இருப்பது தகாது' எனத் தம்மீது ஒரு குற்றத்தைச் சாட்டிக்கொண்டே தற்கொலைக்குத் துணிந்தார் ஆதலால், அஃது அறிவுடைமையே! இனி 'இச்சிறு தவற்றுக்காகத் தமது அரிய உயிரை விடத் துணியலாமா?' என்பது அடுத்து வருங் கேள்வி. 'ஒருவன் செய்த குற்றம் பெரிதா சிறிதா? அவன் அதை என்ன கருத்தோடு செய்தான்?' என்று ஆராய்ந்து முடிவுகாண்பது, முற்கால, தற்கால வழக்கு மன்றங்களின் அலுவலாகும்; ஏன்? அவனைத் தண்டிக்கும்பொருட்டு. ஆனால், அறநூல் என்ன சொல்கிறது? 'குற்றம் செய்தவன் அறிவினது உயர்வு தாழ்வுகட்கேற்பவே அக்குற்றம் பெரிதும் சிறிதுமாகிறது,' என்று சொல்கிறது. எனவே, சிறந்த அறிவுடையவன் ஒருவன, அவ்வறிவின பயனாசத் தன்மீது ஒரு தினையளவு பழியும் வரலாகாது என்னும் குறிக்கோளுடன் வாழும் நாளில் ஒரு தினையளவு பழி வரினும், அதனைப் பனையளவாகக் கருதுவான். ஆனால், சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய கயவனொருவன் மலையளவு குற்றம் தான் செய்யினும், அதனைக் கடுகளவாகக் கருதுவான். இவ்வுண்மையை,

> "தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழிநாணு வார்."

என்னும் தமிழ் மறையாலறிக. இத்திருக்குறளுக்கு எதிர்மறை வடிவம் கொடுத்தால்,

> "பனைத்துணையாம் குற்றம் செயினும் தினைத்துணையும்
> கொள்ளார் பழிநாணு தார்."

என்று சொல்லலாமன்றோ! எனவே, பழி நாணும் இயல்

புடைய தொண்டர், நம்மனோர் கருத்துக்குச் சிறியதாகத் தோன்றும் அக்குற்றத்தை மிகமிகப் பெரியதாகக் கருதி உயிர்விடத் துணிந்தாரென்றமையால், மேலே காட்டிய திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் இத்திருத் தொண்டரென்றறிக.

இனி, அவ்வாறு தற்கொலைக்குத் துணிந்தவர், வேறொரு வகையைக் கருதாமல், அடியார்களின் உடைகளை வெளுத்த அந்தக் கற்பாறையிலே தமது தலையை மோதி உயிர்விடத் துணிந்தாரென்பதிலும் ஓர் சட்ட சம்பந்தமான நயம் உண்டு. எந்த உறுப்புத் தீங்கு செய்ததோ, அது தண்டிக்கப்பட வேண்டுமென்பது அக்கால விதி; 'மழை இன்றுவிடாது; வீட்டுக் காற்றில் உலர்த்த வேண்டும்' என அறிவிக்கவேண்டுவது மூளை; அறிவிக்கத் தவறியது அதன் குற்றம்: அஃது இருக்குமிடம் தலை; ஆதலால் அதனைக் கல்லில் மோதி உடைத்து உயிர் விடக் கருதினாரென்பது. நமது பழைய நூல்களில் இது போன்ற நயங்கள் பலப் பல.

இவ்வாறு துணிந்த அன்பர், தமது தலையை மோதுங்கால் இறைவன் தனது திருக்கரத்தாலே தடுத்து ஆட்கொண்டருளினனென்பது வரலாறு. இவற்றைக் காட்டும் சில பாடல்களாவன:

"ஓவாதே பொழியுமழை ஒருகால்விட் டொழியுமெனக்
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார் விடக்காணார்
மேவார்போற் கங்குல்வர 'மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆவாஎன் குற்றேவல் அழிந்தவா!' எனவிழுந்தார்."

"விழுந்தமழை யொழியாது மெய்த்தவர்சொல் வியஎல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக் காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தம் திருமேனி குளிர்காணும் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே'செயல்," என்று
துணிந்தெழுந்தார்."

"கந்தைபுடைத் திடஎற்றும் கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தஎடுத் தெற்றுவன்!"என் றணைந்துசெழும் பாறைமிசை
தந்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை"

என்பன.

இனி, மற்ருெரு திருக்குறளையும், அதற்குப் பரிமேலழகர் கொண்ட பொருளையும், அதற்கு மாறுன வேறு பொருளையும், அப்பொருளுக்கேற்ப வாழ்க்கை நடாத்திய திருத்தொண்டர் ஒருவரையும் காண்போம்.

'வித்துமிடல்' என்று தொடங்கும் குறட்பாவும் இளையான்குடி மாறரும்

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்?"

என்னும் திருக்குறள் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்துட்காணப்படுவது. இக்குறளுக்கு, "விருந்தினரை முன்னர் உண்பித்து எஞ்சியதைத் தானுண்பவன் நிலத்தில் வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா; அது தானே விளையும்," என்று பொருள் கண்டார் பரிமேலழகர். இனி, 'அவன் நிலத்தில் வித்தினையிட்டு, அது விளையுங்காறும் எதிர்பார்த்திருப்பானே? யாரேனும் விருந்தினர் காலமல்லாத காலததில் வந்தால் அவரை உண்பிப்பதற்கு வேறு வகையில்லாவிடத்துப் பகலிலே தன்னுடைய நிலத்தில் விதைத்த விதையை அள்ளிக் கொண்டுவந்து அவரை உண்பிப்பான்' என்று பொருள் கொண்டால், அப்பொருளுக்கு முற்றும் பொருத்தமாக வாழ்க்கை நடாத்தியவர் இளையான்குடிமாறர் என்னும் தொண்டர். அறநூலாகிய திருக்குறளில் இல்லறத்தார் கடமையாகக் கூறப்படுகின்ற 'விருந்தோம்பல்' என்ற இந்த அறமானது, சைவ சமயத்தவர்களால் 'மாகேசுரபூசை என்றும், மறையவர்களால் 'சமாராதனை' என்றும் கூறப்படும். எனவே, இளையான் குடிமாறரென்பார் மாகேசுரபூசையாகிய விருந்தோம்பலைத் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு நடத்தி வருங்கால், 'இவருடைய இந்த அறச் செயலுக்கு இவர் உள்ளம் காரணமேயன்றி, இவரிடமுள்ள பொருள் காரணமன்று' என உலகத்தாருக்கு உணர்த்தும்பொருட்டு, இறைவன் அவருக்கு வறுமை உண்டாகுமாறு திருவுளங்கொண்டான். வறுமையும் வந்தது. இக்கருத்தை,

"செல்வமேவிய நாளிலிச்செயல் செய்வதன்றியும் மெய்யினல்
அல்லல்நல்குர வானபோதிலும்வல்லரென்றறி விக்கவே
மல்லல்மேவிய செல்வம்மெல்ல மறைந்துநாடொறு மாறிவந்து
ஒல்லையில்வறு மைப்பதம்புக உன்னினார்நில்லை மன்னினர்."

என்னும் செய்யுளால் அறிகிறோம். அவ்வாறே வறுமையும் வந்தது. வளம் சுருங்கியதேயன்றி அவர் உளம் சுருங்கவில்லை. நில முதலிய அனைத்தையும் விற்று விருந்தோம்பி வருகிறார். ஒரு நாள்முழுவதும் உணவின்றிக் கடும்பசியுடன் மாரிக்காலத்து இரவு ஒன்றில், கதவையடைத்துப் படுத்தபின், இறைவன் ஓர் அடியார்போல வந்து கதவைத் தட்டினான். தொண்டர் கதவைத் திறந்து அடியாரை வரவேற்று உபசரித்து, அவருக்கு எப்படி உணவு அமைத்துக்கொடுப்பதென்று மனைவியாரோடு சிந்தித்து, அந்த அம்மையார் கூறியபடி, தாம் அன்று பகலிற் கொண்டுபோய் நாற்றங்காலிலே தெளித்த விதையை அள்ளிக்கொண்டுவந்து மனைவியார் கையிற் கொடுக்க, அம்மையார் அவ்விதையை வறுத்து, மெல்லக் குற்றி அரிசியாக்கிச் சமைத்து அடியவரை உபசரித்தாரென்பது வரலாறு; எனவே, மேலே காட்டிய குறளுக்கு இலக்கியமாக நடந்து காட்டியவர் அத்தொண்டரென்பதை அறிக.

சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்துட்காணப்படும் திருத்தொண்டர்களுள் எவ்வெத்தொண்டர்கள் எந்த எந்தத் திருக்குறளுக்கு இலக்கியமாக நடந்தார்களென்பதை அறிந்தோம். இனி, தொண்டர்சீர்பரவுவாராகிய அச்சேக்கிழாரும் ஓர் திருத்தொண்டரல்லரா! அவர் செயலொன்று எந்தத் திருக்குறளுக்கு ஒத்திருக்கிறது என்பதையும் காண்போம்.

சேக்கிழாரும் திருக்குறள் ஒன்றும்

அவர் பாடிய நாயன்மார்களுள் சண்டேசுர நாயனாரென்பவரும் ஒருவர். அவரைப் புதல்வராகப் பெறுதற்குத் தவம் செய்தவன் எச்சதத்தனென்னும் மறையவன். அவனுடைய பண்பாட்டை நோக்குங்கால் மிகமிகச்

சிறந்தவனைக் காணப்படுகின்றான். தன் மகனாகிய விசாரசருமரென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய சண்டேசுரர் மாணவப் பருவமுடையவராயிருக்குங்கால் பசுக்களை மேய்க்கும் ஆயனொருவன் ஓர் பசுவை அடித்துத் துன்புறுத்தலைக் கண்டார். பசுக்களின் தெய்வத் தன்மை முதலியவெல்லாம் உணர்ந்து, 'இனி இப்பசுக்களை நாமே மேய்க்கலாம். இஃதோர் பெரிய அறச் செயலாகும்,' என்று கருதினர். அக்கிராரத்துட்சென்று பசுக்களுக்குரிய மறையவர்களைப் பார்த்து, 'உங்கள் பசுக்களை நாளை முதல் யானே மேய்க்கிறேன்' என்று கேட்டுக்கொண்டார். அவர்களும் 'ஆயனுக்குக் கொடுக்கும் கூலி நமக்கு மிச்சந்தானே' என்று கருதி உடன்பட்டார்கள். விசாரசருமர் அன்று முதல் பசுக்களை மேய்க்கும் பணியை மேற்கொண்டார். 'இஃதோர் பேரறச் செயல்' என்று கருதியவராதலால், அவற்றை நல்ல புற்கள் அடர்ந்துள்ள புலங்களில் மேய்த்தும், நல்ல தண்ணீரைக் குடிக்கச் செய்தும், வெயில் நேரத்தில் மர நிழலிற் படுத்திருக்குமாறு செய்தும் பேணி வந்தமையால், பசுக்களனைத்தும் நன்கு பருத்துக் கொழுத்துப் பால் அதிகமாகக் கறத்தலைக் கண்ட மறையவர்களெல்லாம் மனமகிழ்வெய்தினர். அப்பசுக்களோ, தம் கன்றுகளைக் காணாதிருந்தாலும் இருக்குமேயன்றித் தம்மைப் பேணிவரும் அந்த மறைக்கன்றாகிய விசாரசருமரைப் பார்க்காமல் இரா. நாளடைவில் அவற்றின் அன்பு முதிர அதன் பயனாக மறைச்சிறுவரைக் கண்டவுடனே கனைத்துப் பாலை ஒழுகவிடலாயின. அச்செயலைக் கண்ட சிறுவர் 'ஒழுகும் பாலைக் கறந்து இறைவனுக்குத் திருமுழுக்குச் செய்யலாமே!' எனத் திருவுளங்கொண்டார். அப்படியே மண்ணியாற்றங் கரையிலே ஓர் சிவலிங்கம் அமைத்துப் பால் அபிடேக முதலியன செய்து நாடோறும் இறைவனை வழிபடலாயினர். இவருடைய வழிபாட்டிற்குப் பால் கொடுக்கும் பசுக்கள் வீட்டிலும் குறையாமற் கறந்தன ஆதலால் மறையவர்கள் இச்செயலை அறியார்கள்.

ஒரு நாள் இந்நிகழ்ச்சியைக் கண்டவழிப்போக்கனொருவன் அம்மறையவர்களிடம் வந்து, "உங்கள் மாடுகளை

மேய்க்கும் சிறுவன் பாலைக்கறந்து மணலில் ஊற்றி விளையாடுகிறான்,'' என்று சொல்லிப் போயினன். அதனைக் கேட்ட அவர்கள் ஒருங்கு கூடி எச்சதத்தனை அழைத்து, ''உமது மகன் எங்கள் பசுக்களைக் கறந்து மணலில் ஊற்றி விளையாடுகிறான்; அக்குற்றத்திற்கு நீர் என்ன சமாதானம் சொல்லுகிறீர்?'' என்று கேட்க. அந்த எச்சதத்தன், ''ஐயன்மீர், என் மகன் செய்யும் இந்தத் தவற்றை இதுவரை யான் அறியேன்; ஆதலால் மன்னித் தருள்க; நாளை முதல் இத்தவறு நடந்தால், அதற்கு நானே பொறுப்பாளியாவேன்,'' என்று சொல்லித் தன் இல்லம் சென்று தனது குடிக்கு ஓர் தீராத பழி வந்து விட்டதெனக் கவன்று, அன்றிரவு தன் அருமை மகனாரோடு பேசாமல், உறக்கமுமின்றி, மறுநாட்காலை விசாரசருமர் மாடுமேய்க்கும் இடம் சென்று அவரறியாதபடி ஓர் குரா மரத்திலேறி ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தான். சிறுவர், வழக்கம் போலப் பசுக்களைக் கறந்து, மற்றும் வேண்டியவற்றையும் அமைத்துக்கொண்டு இறைவனை வழிபடத் தொடங்கி, பாலை எடுத்து இறைவன் திருமுடிமேல் விட்டார். இதனைக் கண்ட தந்தை கடுஞ்சினங் கொண்டு மகனாருக்குப் பின்புறம் வந்து சுடுமொழி பல சொன்னான். சிறுவர் மனம் இறைவன் வழிபாட்டில் அழுந்தி நின்றமையால் அவர் காதில் அச்சுடு சொற்கள் ஏறவில்லை. தன்னை அலட்சியம் செய்வதாகக் கருதிய அவன், கையிலுள்ள கோலால் முதுகிற் புடைத்தான். அதையும் அவர் பொருட்படுத்தாது வழிபாட்டிலுறைத்திருந்தார். அவர் உள்ள நிலையை அறியாத அவன், தனது காலாலுதைத்துப் பாற்குடங்களை உடைத்துப் பால் நிலத்திற் சிந்துமாறு செய்தான். இறைவன் திருமுழுக்குக்குரிய பாலை அவன் சிந்தியவுடன், தொண்டர், தம் நினைவு வந்தவராய், அவ்வாறு செய்த அவன் தமது தந்தையென அறிந்தும், அவன் கால்களைத் துண்டிக்கவேண்டுமென்ற கருத்துடையவராய், மாடு மேய்த்தற்கு வைத்திருந்த தமது கழியைக் கீழேயிருந்து கையிலெடுத்தார். உறைத்த சிவசிந்தையுடையவராயிருந்தாராதலால், அத்தண்டு மழுவாயிற்று. அதனை வீசினர். அவன் கால்களிரண்டையும் அம்மழு துண்டித்து

விட்டது, இச்செய்திகளை,

"மேலாம் பெரியோர் பலகாலும்
வெகுண்டோன் அடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனமாட்டும்
பணியிற் சலியா ததுகண்டு
மாலாம் மறையோன் மிகச்செயிர்த்து
வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலால் இடறிச் சிந்தினன்
கையாற் கடமைத் தலைநின்றான்"

"சிந்தும் பொழுதில் அதுநோக்கும்
சிறுவர் இறையிற் றியோனைத்
தந்தை யெனவே அறிந்தவன்றன்
தாள்கள் சிந்துந் தருதியினால்
முந்தை மருங்கு கிடந்தகோல்
எடுத்தார்க் கதுவே மூறைமையினால்
வந்து மழுவா யிடஎறிந்தார்;
மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்"

"எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை யிருதாளும் துணித்த மைந்தர்..........."

என்னும் செய்யுட்களாற் காண்க.

இவ்வாறு தந்தையின் கால்களைத் துணித்த மைந்தர், தமது இறைவழிபாட்டில் மீண்டும் புகுதலும், இறைவன் காட்சியளித்து அவரைத் தன் மைந்தராக்கிச் சண்டேசுரர் என்னும் பெயரும், அப்பதவியும் அளித்தருளினனென்பது. அந்த நாயனார் தாம் சிவன் கோயிலில் இறைவனது இடப் பக்கத்திலுள்ள பிரகாரத்திற் கோயில் கொண்டிருப்பவர்.

இனி, இவ்வரலாற்றிலுள்ள ஒரு பகுதியைக் கொண்டு, எச்சதத்தன் எத்துணை மேம்பாடுடையவன் என்பதை அறியலாம். விசாரசருமர், பசுக்களுக்குரிய பார்ப்பனரிடம் சென்று, 'யான் இந்தப் பசுக்களை மேய்க்கிறேன்' என்று கேட்ட போது, அவர்கள் செய்திருக்க வேண்டியது என்ன? அவர் மிகச் சிறுவர்; அவரது பருவநிலையை நோக்கி எச்சதத்தனை அழைத்து, "ஐயா, உமது மகன் விசாரசருமன் எங்கள் பசுக்களைத் தான் மேய்ப்பதாகச் சொல்கிறான! அவன் மாடு மேய்த்துக்

கொண்டிருந்தால் எவ்வாறு படிக்கமுடியும்? உமது கருத்தென்ன? சிறுவனாகிய அவன் சொல்வதை நம்பி நாங்கள் பசுக்களை விடமுடியாது; நீர் உடன்பட்டால் விடுகிறோம்'' என்று கேட்டிருக்கவேண்டுமல்லவா? அப்போது, தமக்குண்டாகும் கூலி மிச்சமாகிய பயன் ஒன்றையே கருதிவிட்டார்கள்; அவ்வாறு செய்த அவர்களுக்கு மகன் குற்றம் செய்கிறானென்று தந்தையை அழைத்துச் சொல்ல உரிமை உண்டா? கடமையைக் காற்றிற் பறக்க விட்டவர்கட்கு உரிமை ஏது? ஆனால், அவர்கள் எச்சதத்தனை அழைத்து, அவன் புதல்வர் செய்ய குற்றத்தைச் சொன்னபோது அவன் என்ன சொல்லியிருக்க வேண்டும்? ஆனால் என்ன சொன்னான் என்பதை அறிவதற்குள் சில ஆண்டுகளுக்கு முன் நமது தேசத்தில் நடந்த ஒன்றை நினைவுக்குக் கொண்டுவருவோமாக.

'உள்ளத்தாற் பொய்யா தொழுகி' அதன் பயனாக 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம்' குடியிருப்பவராகிய மகாத்துமா காந்தியடிகளின் மூத்த மகனார் சிலகாலம் மகமதிய மதத்தைச் சார்ந்து, 'அப்துல்லா காந்தி' என்ற பெயர் பெற்றவர். அவர் செய்த செயல்களுள் ஒன்று, தாம் பெரிய வணிகம் ஒன்று தொடங்கப்போவதாக விளம்பரம் செய்து பலரிடம் பங்குத்தொகைகள் வாங்கி, பின்னர் வியாபாரம் செய்யாது அத்தொகைகளை மோசம் செய்தது. பங்குதாராகிய ஏமாறுபவர்களுட் சிலர், நமது இந்தியத் தந்தையாராகிய மகாத்துமாவுக்குக் கடிதம் எழுதினார்கள். 'உங்கள் மகனார் பங்குத் தொகை கேட்கிறாரே என்று கொடுத்தோம்; அவர் எங்களை மோசம் செய்துவிட்டார்,' என்பது கடிதத்திற் கண்ட வாசகம். வழக்கறிஞராகிய மகாத்துமா அதற்கு என்ன பதிலளித்தார்? 'என்னுடைய மகன் என்பதைக் கருதி நீங்கள் கொடுத்தது உண்மையானால், என்னைக் கேட்டுக்கொண்டல்லவா கொடுத்திருப்பீர்கள்? உங்களில் ஒருவரேனும் என்னைக் கேட்கவில்லையே! உங்கள் கருத்து அது அன்று; 'காந்தி மகன் வியாபாரம் செய்தால் தந்தை பெயருக்காக நிறைய வியாபாரம் நடக்கும்: இலாபம் ஏராளமாக வரும்' என்ற எண்ணத்தோடு கொடுத்தீர்கள். தொகை போன பின் எனக்குக் கடிதம் எழுதுகிறீர்கள். நல்லெண்ணத்

தோடு கொடுக்கப்படாத உங்கள் தொகை போனதைப் பற்றி யான் சிறிதும் வருந்தவில்லை; ஆனால், அஃது என் மகனென்னும் ஒருவன் வாயிலாக நடந்ததே எனச் சிறிது வருந்துகிறேன்!' என்று பதிலளித்தார்.

அது போல எச்சதத்தனும் "என்னைக் கேட்டுக் கொண்டா பசுக்களை என் மகனிடம் மேய்ச்சலுக்கு விட்டீர்கள்? அப்போது 'மேய்ப்போனுக்குக் கொடுக்கும் கூலி நமக்கு மிச்சம்' என்று கருதிய உங்களுக்கு என்னிடம் சொல்ல வாயுண்டா?" என்று கேட்டால் அதில் ஒரு சிறிதும் குற்றமில்லை. அவ்வாறு கேட்பது தமிழரின் பண்பு அன்று. தன்மீது ஒருவன் குறை சொன்னால், அந்தக் குறை தன்னிடத்திருக்குமானால், அதனை ஒப்புக் கொண்டு, அதை நீக்கவும், மீண்டும் அக்குறை தன்னிடம் நேராதிருக்கவும் முயல்வது அறிவுடைய தமிழ் மகன் பண்பாகும். அங்ஙனமன்றி, தன்மீது குற்றம் சொல்பவன்மீது, அக்குற்றமேனும், வேறு குற்றமேனும் இருக்கின்றதா என அறிந்து சொல்வதும், தனது தவற்றுக்குச் சமாதானம் கூற முயல்வதும் அழகன்று; "ஏதிலார் குற்றம்போற் றங்குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?" என்பது தமிழ் மறை.

இவ்வாறு அம்மறையவர்கள் செய்த தவற்றினைத் தனது சிந்தனைக்குக்கூடக் கொண்டு வாராமல், தன் குற்றத்தையே ஒப்புக்கொண்டு, அதன் பொருட்டுத் தனது தவப் புதல்வரைக் கழிகொண்டும் தாக்கிய குற்ற மற்ற குணசீலனாகிய எச்சதத்தனைத் தொடக்கத்திலிருந்தே நூலாசிரியராகிய சேக்கிழார் பெருமான்,

"அருமை மணியும் அளித்ததுவே
நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம்
எச்ச தத்தன் உளனானான்."

என்றும், 'அறிவழிந்து' எனவும், 'மாலாம் மறையோன்' எனவும், 'காலாலிடறிச் சிந்தினான் கையாற் கடமைத் தலைநின்றான்' எனவும்; 'தீயோன்' எனவும் சுடுமொழிகளாற் குறிப்பிடுவதற்குக் காரணம் யாதெனக் காண வேண்டும்.

உலகத்திற் சிறிதும் குற்றமின்றிக் குணமே வாய்ந்தவரோ, அல்லது ஓர் அணுத்துணையும் குணமில்லாது குற்றமே உடையவர்களோ இருக்க முடியாது' மக்களாகப் பிறந்தவர்களனைவரும் குணம் குற்றம் இரண்டும் உடையவர்களே! ஆனால், ஒவ்வொருவரிடமும் அவ்விரண்டினுள் ஒன்று மிகுந்தும், மற்றொன்று குறைந்துமிருக்கும். ஆதாலாலேதான், அரசர்கள் தமது ஆட்சிக்கு உறுதுணையாளராக வைத்துக்கொள்ளும் அமைச்சர் முதலானவர்களைப் பல வகையாலும் நன்கு சோதித்துத் தெளிய வேண்டும் எனத் திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியலில் 'தெரிந்து தெளிதல்' என்னும் ஓரதிகாரத்தை வகுத்தருளினார். அந்த அதிகாரத்துட் காணப்படும் திருக்குறள் ஒன்று,

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்பது. இதற்கு நுண்மாண் நுழைபுலமுடைய பரிமேலழகர் கண்ட உரையாவது: 'குணம் நாடி – (குணம் குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தின்மையின்) ஒருவன் குணங்களை ஆராய்ந்து, குற்றமும் நாடி—ஏனைக் குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகை நாடி—பின் அவ்விரு பகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து, மிக்க கொளல்—அவனை அம்மிக்கவற்றாலே அறிக' என்பது. இந்த உரையால் அறியப்படுவது, ஒருவனுடைய குணங்களையும் எண்ணி, குற்றங்களையும் எண்ணி, எது அதிகமாக உள்ளதோ, அதனால் கொள்ளுதலும் தள்ளுதலும் செய்யக்கடவர் என்பதாம். இதனை ஊன்றி நோக்கின் ஓர் ஐயம் தோன்றும். ஒருவனிடம் பத்துக் குணங்களும் பத்துக் குற்றங்களும் இருந்தால் அவனைக் கொள்ளுவதா அல்லது தள்ளுவதா? அன்றியும் ஒருவனிடம், சிறுசிறு குற்றங்களாகப் பலவும் சிறந்த குணமாக ஒன்றும் இருந்தால், அல்லது சிறு சிறு குணங்களாகப் பத்தும் மிகப்பெரிய குற்றமாக ஒன்றும் இருந்தால் அவனைக் தள்ளுவதா கொள்ளுவதா என்பதே அந்த ஐயம்.

பரிமேலழகர், தமது விளக்க உரையால் இந்த ஐயத்தை நீக்குகிறார். 'மிகையுடையவற்றை மிகை

யென்றார். அவையாவன: தலைமை யானும, பன்மையானுக உயர்ந்தன' என்பது அவ்விளக்கம். எனவே, ஒருவன் சிறுசிறு குணங்கள் பலவற்றை உடையவனாயினும் பெருங்குற்றம் ஒன்று அவனிடமிருப்பின் தலைமை பற்றித் தீயவனே! சிறுசிறுகுற்றங்கள் பல ஒருவனிடமிருந்தாலும் 'வாய்மை' போன்ற குணமொன்றும் அவனிடமிருக்குமாயின் தலைமை பற்றி அவன் உயர்ந்தவனே! இவ்வாறு கொள்ள முடியாதவற்றைப் பன்மை பற்றிக் கொள்க என்பதாம்.

இனி எச்சதத்தனென்பவன் நல்ல குணங்கள் பல உடையவனாய் இருந்தும் ஒரு குற்றம் தலைமைபற்றியதாக நின்று அவன் குணங்களையெல்லாம் விழுங்கித் தான் மேம்படலாயிற்று.

அவன் மறைவர் குலத்திலே தோன்றியவன்; அவன் கோத்திரச் சிறப்பை நூலாசிரியர் குறிக்குங்கால், 'தருமம் நிலவு காசிப கோத்திரத்துத் தலைமைசால் மரபு' என்று புகழ்கிறார். எனவே, அவன், ஏனையோரினும் இறைவழிபாட்டின்(சிவபூஜையின்) நுட்பத்தையும், பயனையும் நன்கு உணர்ந்தவனாதல் வேண்டும். அங்ஙனமிருந்தும், தன் புதல்வர் செய்யும் வழிபாட்டின் அருமை அறியாதவனானன். அது மட்டும் அன்று; பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர், தமது முதுகிலே பல காலும் அடிவிழுந்தும், அதனைச் சிறிதும் தாம் அறியாதிருக்கும் நிலையை ஒரு மூடன் காணினும் இச்சிறுவருடைய உள்ளம் எதையோ ஒன்றைப்பற்றி அழுந்தி நிற்கின்றது' என்று அறிவானன்றோ? அந்த எளிய உண்மையை அறியாதது மட்டும் அன்று; மேலும் அறிவிழந்து' சினத்துக்காளாகிப் பால் வைத்திருந்த திருமஞ்சனக் குடத்தைக் காலாலுதைத்துச் சிந்திய குற்றத்தை நோக்க அது தலைமை பற்றியதாக நின்று அவன் குணங்களை யெல்லாம் விழுங்கிவிட்டதாதலால், அவன் நூலாசிரியரால் இகழப்படுகிறான். எனவே, மேலே காட்டிய திருக்குறளுக்கும், அதற்குப் பரிமேலழகர் கண்ட உரைக்கும் பொருத்தமாக உள்ளது சேக்கிழாரென்னும் திருத்தொண்டர் கருத்து என்க.

இவ்வரலாற்றிற் காணப்படும் பகுதி ஒன்று சேக்கிழார் பெருமானின் அரசியலறிவு அல்லது சட்டஞானத்தைக் காட்டுவதாகலின் அதனைக் காண்போம். எந்த உறுப்புத் தீங்கு செய்ததோ, அது தண்டிக்கப்படவேண்டுமென்பது அக்கால விதி என்பதைத் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிற்கண்டோம். அந்த விதிப்படி பாற்குடத்தை இடறிய காலை வெட்ட வேண்டுமென்று கருதினர். ஆனால் உதைத்துச் சிந்தியது ஒரு கால்தானே! அங்ஙனமிருக்க, 'அவன்றன் தாள்கள் சிந்தும் தகுதியினால்' என்று ஆசிரியர் குறிப்பிடுதல் எதற்கு? குற்றம் செய்தவன், அவன் அக்குற்றம் செய்வதற்கு இன்றியமையாத உறுதுணையாயிருந்தவன் ஆகிய இருவர்களும் தண்டிக்கப்பட வேண்டியர்களல்லவா! அந்த முறைப்படி ஒரு காலைத் தூக்கி உதைப்பதற்கு மற்றொரு கால் நிலத்தில் ஊன்றி நின்று ஆதரவளித்ததால் 'தாள்கள்' என்று பன்மையாற் கூறப்பட்ட நயத்தை அறிந்து மகிழ்க.

இனி, அப்பூதியடிகள் நாயனாரின் செயல் ஒரு திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழ்தலைக் காண்போம். இவர் வரலாற்றின் முற்பகுதி 'எது செல்வம்?' என்ற கட்டுரையிற் கண்டோம்.

திருநாவுக்கரசர் திங்களூர் சென்று அப்பூதியடிகள் இல்லத்தை அணுக. அப்பூதியார், யாரோ ஓர் சிவனடியார் என்று கருதி வணங்கி, "அடிகளே! ஏழையேன் மனைக்கு எழுந்தருளிய உங்களுக்கு அடியேன் செய்ய வேண்டிய பணி யாதோ!" என்று வினவ, அதற்கு ஆளுடைய அரசர், "ஐயா, இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பழனத்தை வணங்கிப் பிற பதிகளையும் வணங்கும்பொருட்டு வருங்காலை, நீங்கள் வைத்து நடத்தும் தண்ணீர்ப்பந்தரைக் கண்டு மகிழ்ந்தேன். அதிலே, உங்களுடைய பெயரை எழுதாமல் வேறொரு பெயரை எழுதுவதற்குக் காரணம் என்ன?" என்று வினவினர். இதனை,

"ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றேம் வழிக்கரையில் நீர்வைத்த வாய்ந்தவளம்

தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவும் கேட்டணைந்தோம்" எனப்புகல்வார்:

"ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்?
கூறுமென எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்"

என்னும் செய்யுட்களாற் காண்க. 'வேறொரு பேர்' என்று அடிகள் கூறியது, அப்பூதியடிகளுக்குப் பெருஞ்சினத்தை உண்டாக்கியது. சினத்தின் இயல்பு என்ன? தான் வரும்போதே அறிவைத் தன் வயப்படுத்திக்கொண்டு தான் வரும். "உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்" என்பர் நன்னெறியாசிரியர். எனவே, சினம் வந்தவர்களுக்கு அறிவிருக்காது என்பதாம். சினத்தை மேற்கொண்டு அதனாலே தமது அறிவை இழந்தவர்கள் வாயிலிருந்து வரும் தீய சொற்களால் அவர்கள் சுற்றத்தார்களும் விலகிவிடுவாராதலாலே தான்,

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்."

என்றார் பொய்யாமொழியார். 'வெகுளாமை' என்னும் அதிகாரம் துறவற இயலுள் இருப்பதால், அவ்வதிகாரத்திலுள்ள இக்குறளுக்கு இயலுக்கேற்ற பொருளைப் பரிமேலழகர் கொண்டாராயினும், பொதுவாக நோக்குமிடத்து, மேற்கூறிய பொருளும் பொருந்துமாறறிக. இந்த இலக்கணமுடைய சினத்துக்கு ஆளான அப்பூதியடிகள் கூறிய கடுஞ்சொற்கள் யாவை எனக் காண்போம்.

"நின்றமறை யவர்கேளா நிலையழிந்த சிந்தையராய்,
'நன்றருளிச் செய்திலீர்; நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர்!" எனவெகுள்வார்.
"நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதெனை என்போல்வா ரும்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி,
"பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே!

மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் ? நீர்தாம்யார் ? இயம்பும்'' என இயம்பினர்.''

இந்த மூன்று பாடல்களும் அப்பூதியடிகளுக்கு வந்த சினத்தையும், அதன் காரணமாக அவர் பேசிய சுடுசொற்களையும் காட்டுகின்றன. 'நிலையழிந்த சிந்தையர்' என்றது அறிவை அழித்துவந்த சினத்தை உணர்த்தியது. அதன் பயனாக வந்த சொல் 'நன்றருளிச் செய்திலீர் என்பது. அதன் பின்னர், அவர் பெருமைகளில் ஒரு பகுதியைக் கூறி, 'அவர் பெயரா வேறொரு பேர்?' என்று கூறி, மேலும் வெகுள்வாராயினர். அவ் வெகுளியின் பயனாக, 'வெம்மை மொழி யான் கேட்க விளம்பினீர்' என்றார். இறுதியில் அப்பெரியாரின் செயற்கரிய செயல்களுள் தலைநிற்பதாகிய—எதிரிகள் கல்லோடு பிணித்துக் கடலிலே தள்ளியபோது அக் கல்லையே தெப்பமாகக்கொண்டு கரையேறிய செயலைப் 'பொங்கு.........யாருளர்' என்று கூறி, 'ஒருகால் நீர் வேறு சமயத்தைச் சார்ந்தவராயின், அதையறியாதிருக்கலாம்; அல்லது மறைத்துப் பேசலாம். அப்படி நினைப்பதற்கில்லையே! உம்முடைய நெற்றியிலே திருநீறும், கழுத்து முதலியவற்றில் அக்கமணியும் காணப்படுகின்றனவே! அப்படியிருந்தும், நீர் இவ்வாறு கூறினீரே! நீர் இருப்பது எவ்விடம்? நீர் யார்?' எனக்கேட்டார். இன்னும் நூலாசிரியர், தமது தெய்வப் புலமைத் திறத்தாற் கூறிய இரண்டு சொற்களாலும், அவருடைய சினத்தைக் குறிப்பிடுகின்றார். அவை இரண்டாவது பாட்டின் இறுதியிலுள்ள 'விளம்பி' என்பதும், மூன்றாவது பாடலின் இறுதியிலுள்ள 'இயம்பினர்' என்பதுமாகும். இந்த இரண்டு சொற்களாலும் அக்குறிப்பை எவ்வாறு புலப்படுத்துகின்றாரென்பதை அறிவதற்கு முன்னரே ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும்; அஃதென்னவெனின், நமது தமிழ் மொழியில் ஒரு பொருள்குறித்துப் பல சொற்கள் வருமாயினும, ஒவ்வொரு சொல்லும் தத்தமக்குரிய சிறப்புப் பொருளையும் தந்து நிற்கும் என்பது. அந்த முறையில், நவின்றான், புகன்றான், கூறினான், விளம்பினான், இயம்பினான் என்ற சொற்களெல்லாம் 'சொன்னான்' என்ற பொதுப் பொருளைத் தருமாயினும்,

அவற்றுள் 'விளம்பல்' என்பது, ஒருவன் உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லுதல். பண்டைக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மணலைப் பரப்பி, 'அ' என்னும் எழுத்தை எழுதி, 'அதன் மேல் விரலை வைத்து விளம்பு' என்று ஆசிரியர் மாணவனுக்குக் கட்டளையிடுவார்; அவன் உடனே, 'அ; அ;' என்று 'னகர'ச் சாரியை சேர்த்து வாயினாற் சொல்லிக் கொண்டே அந்த எழுத்தின்மேல் விரலை வைத்துப் பல காலும் எழுதிப் பழகுவான்; இதற்கு 'விளம்புதல்' என்பது பெயர். சினவுணர்ச்சிவயப்பட்ட அப்பூதியடிகள் "வெம்மை மொழியான கேட்க விளம்பினீர்" என்னும் தொடரைப் பலகாலும் சொன்னாரென்பது தோன்ற 'விளம்பி' என்று ஆசிரியர் கூறுகின்றார். இனி, "மங்கலமாம் திருவேடத்துடனின்றிவ்வகை மொழிந்தீர்; எங்குறைவீர்? நீர்தாம் யார்? இயம்பும்" என்ற தொடர்களை உரத்த ஒலியோடு கூறினாரென்பது தோன்ற 'இயம்பினார்' என்று கூறுகின்றார். 'இயம்புதல்' என்பதற்கு, 'உரத்த குரலிற் சொல்லுதல்' என்பது சிறப்புப் பொருள். 'சொல்லுதல்' என்பது பொதுப்பொருள். திருக்கோயில் முதலியவற்றில் அடிக்கப்படுகின்ற ஒரு கட்பறை, இரு கட்பறை முதலியவற்றிலிருந்து பேரொலி உண்டாதலாலேதான் அவற்றுக்கு 'இயம்' என்பதும் பெயராயிற்று.

இத்துணைக் கோபத்தோடு பேசிய அப்பூதியடிகளின் சொற்களிலே தீயசொல் ஒன்றேனும் காணப்படுகின்றதா என்று பாருங்கள்; ஒன்றும் அகப்படாது; எதனால்? அவர் ஒழுக்கமுடையவராதலாலேதான். இவர் செயலை,

"ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்."

என்னும் திருக்குறளோடு ஒப்பிட்டு மகிழ்க.

இக்கட்டுரையிற் காணப்படும் தொகைப் பொருள்களாவன:

தமிழ் நூல்களிற் சிறந்தனவற்றைப் பேசுங்கால் திருக்குறளும் திருத்தொண்டர் புராணமும் பேசப்படுகின்றன என்பதும், அவற்றுள் மக்கள் மக்களாக வாழ்வதற்கு வழி வகுத்தது திருக்குறள் என்பதும், அவ்வழி

யில் நடந்த திருத்தொண்டரைக் காட்டுவது திருத்தொண்டர் புராணம் என்பதும், 'சில' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்பதும், அச்சொற்பொருளின்படி இரண்டு குறட்பாக்களைக் காட்டி, அவற்றுக்கியைந்த இரண்டு தொண்டர்களைக் காட்டினும் இக்கட்டுரை நிரம்பிவிடும் என்பதும், 'செல்லிடத்து', 'நுணங்கிய', 'சொல்லுக', 'கற்க கசடற' என்ற தொடக்கங்களையுடைய குறட்பாக்களுக்கியைய வாழ்க்கை நடத்தியவர் திருநாவலூரர் என்பதும், அவர் முன்னோரிடம் காட்டிய மரியாதைச் செயல்களால், நமது நிகழ்காலத்திலும், நமக்குப் பிற்காலத்திலுமுள்ள மக்கள் நம்மை மதிக்க வேண்டுமாயின் நாம் எங்ஙனம் நடக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்கிறோம் என்பதும், பரிமேலழகர் 'நற்றாள்' என்றதற்குப் 'பிறவிப் பிணிக்கு மருந்தாதலால் 'நற்றாள்' என்றார்', என்று கூறிய உரைநுட்பத்தை மறவாது நூலிற்புகுந்தால் எத்துணைப் புதைபொருள்கள் நமக்கு விளங்குகின்றன என்பதும், 'அறிவினன்' என்று தொடங்கும் திருக்குறளுக்குச் சேக்கிழார் காணும் பொருள் யாது என்பதும், அப்பொருளுக்கியைய எவ்வெத்தொண்டர்களைக் காட்டுகிறார் என்பதும், நமது முன்னோர்களின் அறிவு நுட்பத்தால் நம்மை ஆற்றுப்படுத்த அவர்கள் இயற்றிய அறிவு நூல்களில் இறைவனது சிறப்பியல்பைச் 'சச்சிதானந்த சொரூபன்' என்று கூறிப் போந்தனர் என்பதும், 'எந்த இடத்திற் பிறந்தாரும் இறைவனடியையடையும் உரிமையுடையவர்களே' என்று கருதும் பரந்த நோக்கமுடையவர்கள் நமது முன்னோர்கள் என்பதும், திருக்குறிப்புத் தொண்டர் துணிந்த தற்கொலைக்கு ஆதரவளிப்பது எந்தத் திருக்குறள் என்பதும், மக்கள் செய்துகொள்ளும் உடன்படிக்கையில் எத்துணை விழிப்போடிருக்கவேண்டும் என்பதும் 'வித்துமிடல்' என்று தொடங்கும் குறட்பாவின் மற்றோர் உரையும், அதற்கியைய இளையான்குடிமாறர் வாழ்க்கை அமைந்திருந்தது என்பதும், சேக்கிழாரும் 'குணம்நாடி' என்று தொடங்கும் திருக்குறளுக்கியைய நடந்தார் என்பதும், அவருடைய சட்ட ஞானம் எத்துணைச் சிறந்திருந்த

தென்பதும், 'ஒழுக்கமுடையார்க்கு' என்ற முதற்குறிப்பை யுடைய திருக்குறளுக்கு எத்துணைப் பொருத்தமுடைய தாக இருந்தது அப்பூதியடிகள் வாழ்க்கை என்பதும் பிறவுமாம்.

'தமிழ்மொழியாலாக்கப்பட்ட இலக்கியங்களிற் காணப்படும் உவமையால் உண்டாகும் சுவை' என்பது இத்தொடரின் பொருள். இந்த உவமைச் சுவை, நகைச் சுவை முதலிய எட்டு அல்லது ஒன்பது சுவைகளுள் ஒன்றன்று; எனினும் ஐம்புலனுக்கோ, அறிவுக்கோ இன்பந்தருவனவற்றையெல்லாம் 'சுவை' என்று கூறும் வழக்குப்பற்றி, கற்போருக்கும் கேட்போருக்கும் இன்பந் தந்து, அவர்களை மகிழ்விக்கும் 'உவமை'யையும் சுவை என்று கூறுகின்றோம்.

உவமை என்பது என்ன ? அதன் பிரிவும் பயனும் யாவை ?

உவமை என்பது, ஒரு பொருளோடு மற்றொரு பொருட்கு ஒப்புமை தோன்றக் கூறுவது. இதனை 'உள்ளுறை உவமம்' என்றும், 'ஏனை உவமம்' என்றும் இலக்கண நூலார் பிரித்தனர். முன்னது செய்யுளுக்கே உரியதாதலின் அதனை விடுத்து, செய்யுள், வழக்கு என்னும் இரண்டுக்கும் உரிய ஏனை உவமமே இங்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இதனை வெளிப்படை உவமமென்ற பெயராலும் கூறுவர். பண்டைப் புலவர் பெருமக்கள் அகமும் புறமும் பற்றிப் பாடிய செய்யுட்களிற் பொருளைப் புலப்படுத்துதற்குச் சிறந்த கருவியாக இந்த உவமம் எடுத்தாளப்பட்டது. இஃது அணிவகைகளில் ஒன்று எனவும், அன்று எனவும் கூறும் கருத்து வேற்றுமை பண்டைய உரை ஆசிரியர்களிடம் உண்டு. இதன் தோற்றத்திற்கு அடிப்படையாக உள்ளன வினை,

பயன், வடிவம், நிறம் என்னும் நான்குமாகும். 'புலி போலப் பாய்ந்தான்' என்றால், பாய்தலாகிய தொழிலால் வந்த உவமமாதலால், இது வினை பற்றி வந்த உவமம் என்று கூறப்படும். 'மழை போலும் வண்கை' என்றால், மழையின் பயனாகிய விளையுளும், வள்ளல்களின் கையின் பயனாகப் பரிசிலர் பெற்ற பொருளும் ஒத்தனவாதலால் இது 'பயனுவமம்' என்னும் பெயர்பெறும். 'துடியிடை' என்புழி மேலும் கீழும் அகன்று நடுவே சுருங்கியிருத்தலால் இது வடிவம் பற்றி வந்தது. 'குயிலொத்த குஞ்சி கொக்கொத்து' என்னும் தொடர், 'குயில் போன்று கருநிறமுடையதாய் இருந்த குஞ்சி, கொக்குப் போன்று வெளுத்து' என்னும் பொருள் தருதலால் இது நிறம் பற்றி வந்ததாகும். எனவே, இந்த நான்கில் யாதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டுதான் உவமானங்கள் தோன்றும். சில உவமைகளில் ஒன்றுக்குமேல் மூன்று வரையில் வருதலும் உண்டு. இவற்றை,

"வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்."

எனவும்,

"விரவியும் வரூஉம் மரபின என்ப."

எனவும் வரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் உணர்க.

உவமம் புலமையை அளப்பதற்குரிய கருவிகளில் ஒன்று

பண்டைக்காலத்திற் புலவர்களின் பரந்த புலமையை அளப்பதற்குரிய கருவிகளுள் இந்த உவமை ஓர் சிறந்த கருவியாகப் பயன்பட்டதென அறிய இடமுண்டு. அவர்கள் கூறிய உவமைச்சுவையில் ஈடுபட்டு, அவர்களிற் சிலருக்கு அவர்கள் சொன்ன உவமையையே பெயராக இட்டு வழங்கிவந்தார்களென்றால், அதன் பெருமையை அறிவதற்கு இதனினும் சிறந்த சான்று ஒன்று வேண்டுவதில்லையன்றோ!

'குறுந்தொகை' என்னும் சிறந்த சங்க இலக்கியத்திற் காணப்படுவன, கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு பாடல்கள். இவற்றைப் பாடியவர்கள் பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல், அம்மூவனார் இறுதியாக உள்ள இருநூற்று புலவர்கள். இவருள் பதின்மூவரின் பெயர்

கள் அவர்கள் பாடலிற் கூறிய உவமைகளாலேயே வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம். 'செம்புலப் பெயல் நீரார்' என்பது அவருள் ஒரு புலவர் பெயர். முன்பு யாதொரு தொடர்புமில்லாமல் எதிர்ப்பட்ட ஓர் தலைவன் உள்ளமும், தலைவி உள்ளமும் ஒன்றுபட்டதற்குச் செம்மண் நிலத்துப் பெய்த மழைநீரானது அம்மண்ணோடு கலந்து, அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்றுபடுவதை உவமையாக்கி,

"செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே."

எனக் கூறியதனுல் செம்புலப்பெயனிரார் எனவே வழங்கப்பட்டார். அப்பெயர், அவர் இயற்பெயரையே மறைந்தொழியச்செய்தது. மற்றைப் புலவர்கள் பன்னிருவர் பெயரையும் இங்ஙனமே காண்க.

உவமையைச் சுவைப்பதற்குரிய வழி

உவமங்களிற் பெறப்படும் உறுப்பு நான்கு: அவை, உவமானம், உவமேயம் அல்லது பொருள், உவம உருபு, உவமைக்கும் பொருளுக்குமுள்ள பொதுத் தன்மை என்பன. இவற்றுள் உருபும் பொதுத் தன்மையும் விரிந்தும் வரலாம். மறைந்தும் வரலாம். 'பால்போலும் இனிய சொல்' என்ற தொடரில், பால் உவமம்; சொல் உவமேயம்: போலும், உவம உருபு; இனிய என்பது பாலுக்கும் சொல்லுக்குமுள்ள பொதுத்தன்மை. இந்தப் பொதுத் தன்மை ஓர் உவமையில் ஒன்ருகவும் இருக்கலாம்; ஒன்றுக்கு மேற்பட்டும் இருக்கலாம். இது மறைந்து வருங்கால் 'பால்போலும் சொல்' என்று வரும். படிக்கின்றவர்கள் மறைந்திருக்கும் அப்பொதுத் தன்மையை அறிந்தாலன்றி அந்த உவமையைச் சுவைக்கமுடியாது. அத்தன்மை ஒன்றுக்கு மேற்பட்டிருப்பதை ஆழமாகச் சிந்தித்தாலன்றி அறியமுடியாது. எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம்: சேக்கிழார் தாமியற்றிய பெரிய புராணத்தில் மநுநீதி கண்ட சோழனைச் சொல்லுமிடத்து,

"மண்ணில் வாழ்தரும் மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்."

என்று சிறப்பிக்கின்ருர்.

இதில், 'நிலவுலகத்துள்ள உயிர்களனைத்திற்கும் கண் போலவும் உயிர் போலவும் உள்ள காவலன்' என்று குறிப்பிடுமுகத்தால், அப்புரவலன் கண்போன்றவனென்றும், உயிர் போன்றவனென்றும் இரண்டு உவமைகள் குறிப்பிடுகின்ருர். ஆழ்ந்து சிந்தித்து அதன் நுட்பத்தை அறியவேண்டும். முதலிற் கண்ணை எடுத்துக்கொள்வோம்

காவலன் கண்போன்றவன் என்றதனுல், அவன்கீழ் வாழும் உயிர்களெல்லாம் மற்ற உறுப்புக்கள்போன்றவை. கண்ணின் இயல்பு மற்ற உறுப்புக்களுள் எதற்குத் தீங்கு நேருமாயினும், தான் அதனைப் பொருது கலங்கி, நீர் வடித்து வருந்துவதைக் கண்கூடாகக் காண்கின்ருேம். இதனை "மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக் கண்டு கலுழுமே கண்" என்பர் நன்னெறியாசிரியர். எனவே, எந்த உறுப்புக்குத் தீங்கு நேரினும் அதைத் தனக்கு வந்ததுபோலக் கருதிக் கலங்கும் இயல்புடையது கண். அதுபோன்றே அரசனும், தன்ஞற் பாதுகாக்கப்படுகின்ற உயிர்களுள் எதற்குத் துன்பம் நேரினும் அதனைத் தனக்கு வந்ததாகவே கருதி வருந்த வேண்டும் என்பது. முதலாவதாகவுள்ள இப்பொதுத் தன்மை துன்ப நீக்கத்திற்காக வந்தது. இனி, இன்ப ஆக்கத்தின்பொருட்டு வரும் மற்ருெரு பொதுத் தன்மையும் காண்போம். காது, கழுத்து, கை, விரல் முதலிய உறுப்புக்களெல்லாம் பலவேறு வகையான அணிகலங்களையணிந்து, தான் பார்த்து மகிழுமேயன்றி, தனக்கு எந்த அணிகலத்தையும் வேண்டாது கண். (சாதி ஒருமைபற்றிக் கண்ணை ஒருமையாகவே கூறிவருகிருேம்). எந்த உறுப்பில் அணிந்த எந்த அணிகலத்தையும் பார்த்து மகிழ்வது கண்ணுதலினுலேதான், "கைப் பூண் பார்க்கக் கண்ணுடி வேண்டுமா?' என்னும் பழமொழியும் உண்டாகியது. நமது அறிவுக் குறைவாலும், நமது தமிழிலக்கியங்களை மதித்துப் படிக்காமையாலும், வேற்றுமொழி, நாகரிகத்தை மேலானவை என்று கருதினமையாலும் அந்தப் பழமொழி, 'கைப்புண் பார்க்கக் கண்ணுடி வேண்டுமா?" என நம்மவர்களிடைப் புதுமொழியாய் வழங்குகின்றது. எந்தப் புண்ணையேனும் கண்ணுடியிற் பார்க்கும் வழக்கமிருந்தாலல்லவா, "கையிலுள்ள

புண்ணைக் கண்ணாடி கொண்டா பார்க்கவேண்டும்" என்ற புதுமொழி பொருந்தும்? காதில் அல்லது கழுத்தில் புதிய அணிகளை அணிந்தால், அதைப் பார்த்து மகிழக் கண் வசதியில்லையே என்று வருந்திக் கண்ணாடி உதவி கொண்டு அவைகளைக் கண்டு மகிழ்வார்கள். அவர்களே கையிலோ, அதிலுள்ள விரல்களிலோ அணி அணிந்து கொள்வார்களானால், அதைப் பார்ப்பதற்குக் கண்ணாடி தேடமாட்டார்களல்லவா! காலஞ்சென்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடி, தமது மாணவர் வல்லூர்த் தேவராஜ பிள்ளையவர்கள் பாடியதாக வெளியிட்ட 'குசேல உபாக்கியானம்' என்னும் இலக்கியத்தில் இந்தப் பழமொழி மேலே காட்டியுள்ளபடியே ஆண்டிருத்தலைக் காண்க. 'பூண்' என்ற சொல் 'புண் என்று' குறைந்து வந்ததுபோலவே, 'காட்ட' என்ற சொல் 'கட்ட' என்று குறைந்து, தார்க்கிகர் சொல்லும் 'அசம்பவம்' என்னும் குற்றத்திற்கு இலக்கியமாக வழங்கும் புதுமொழி ஒன்றும் இங்கு அறிந்துகொள்ளவேண்டியது. அது "கல்யாண ஆரவாரத்தால் தாலி காட்ட மறந்தார்" என்பது 'கட்ட மறந்தார்' என வழங்குவது. காட்டுதல், வந்திருப்பவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக மாங்கலியத்தை மஞ்சள் முதலியவற்றோடு ஒரு தாம்பாளத்தில் வைத்து ஒவ்வொருவரிடமும் காண்பித்தல்; அஃது இக்காலத்திலும் காணப்படுவதொன்று. ஆனால், அந்தத் தாலியூட்டுதற்குரிய நல்லோரை நெருங்கிவிட்டால், ஆசீர்வாதத்திற்காக அதைக் காட்டுதல் முதலிய சில சடங்குகள் மறந்துபோதல் இயல்பு. எக்காரணம் பற்றியும் 'தாலி கட்ட மறத்தல்' எக்காலத்திலும் எங்கும் இல்லாததொன்று. இத்தவறுகளெல்லாம் ஆழ்ந்து சிந்திக்காமையினால் வருவன. இவற்றால் இழப்பு எதுவும் இல்லையாயினும், அந்நிய மொழி அறிஞனொருவன் இத்தவறுகளை உணராமல் இப்புதுமொழிகளையே பழமொழியாகக் கருதுவானாகில், 'தமிழ் மக்கள் அறிவுக்குப் பொருந்தாத பழமொழிகளை வழங்குகின்றார்கள்; ஆதலால் அவர்கள் அறிவு குறைந்தவர்களே,' என்ற முடிவுக்கு வருவானன்றோ! இன்னும் இவ்விஷயத்தில் நாம் செய்யும் மற்றொரு பெருந்தவறும் உண்டு. அது சோம்பேறியாக

உள்ள ஒரு தனி மனிதனோ, அல்லது, உழைப்பின்றிப் பிறரை ஏமாற்றி உண்டு உடுத்துவரும் ஓர் கூட்டமோ, தங்கள் வாழ்க்கைக்கு அநுகூலமாக ஓர் மொழியைக் கட்டிவிடுவார்கள்; அதனை, 'நமது பண்பாட்டுக்கு ஒத்ததா?' என்று கருதாமல் நாமெல்லோரும் சொல்லத் தலைப்படுவோம். அது நாளடைவில் பழமொழியாகி விடும். எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம்:

"பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து" என்பது ஓர் பழமொழியாகக் கருதப்பட்டுத் தமிழ் மக்கள் பலராலும் சொல்லப்படுகிறது. இது தமிழர்களின் பண்பாட்டுக்கு ஒத்ததா என்று சிந்திக்கின்றோமா! இதனைச் சிந்திப்பதற்கு முன்னே, இற்றைக்குச் சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஓர் தமிழ் வீரன் கூறியதொன்று, 'புறநானூறு' என்னும் சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றது. அவன் "என்னை எல்லா வகையிலும் மதித்துப் பேணி வந்த அரசனை, யான் நேற்று வரையில் மிக மிகச் சிறந்தவன் என்று கருதி, ஏமாறி என் வாழ்நாளை வீணாள் ஆக்கிவிட்டேன்; இன்றுதான் அவன் மிகக் கொடியவன் என்று உணர்ந்தேன்; 'காரணம் என்ன?' என்றால், நேற்று வரையிலும் என நாட்டின் மீது பகைவர் யாரும் படையெடுக்கவில்லை; அது வரை, நன்றாகக் கலங்கிய மதுவை எனக்குக் கொடுத்து முன்னே உண்ணச்செய்து, பின்னர்த் தான் தெளிந்த மதுவை உண்பான்; அதனாற் சிறந்தவனென்று கருதியிருந்தேன்; இரவு பகைவர் வந்து என் நாட்டை வளைத்துக்கொண்டார்கள். இந்த நிலையில் என்னை முன்னே போருக்குப் போகச்சொல்லாமல், 'பின்னர் நீவா' என்று சொல்லிவிட்டுத் தான் முன்னே போய் விட்டான்; ஆதலால், அவன் கொடியவனென்று இப்பொழுது அறிகிறேன்," என்று கூறுகிறான். அவன் சொன்ன அனைத்தையும் சுருங்கச் சொல்லவேண்டுமானால், "என்னைப் பந்திக்கு முன்னே போகச்செய்து படைக்குப் பின்னேவா என்றானாதலால், அவன் பொல்லாதவன," என்று கூறியதாகச் சொல்லிவிடலாம். இந்தக் கருத்தையுணர்ந்தும் அப்பாடல்,

"எமக்கே கலங்கல் தருமே; தானே
தேறல் உண்ணும் மன்னே; நன்றும்
இன்னான் மன்ற வேந்தே யினியே
நேரார் ஆரெயில் முற்றி
வாய்மடுத் துரறிநீ முந்தென் னானே."

என்பது. இப்பாடலில் 'முற்றி' என்னும் எச்சத்தை 'முற்ற' என்னும் எச்சத்திரிபாகக்கொண்டு பொருள் கூறப்பட்டது. இனி, அதனைத் திரிபாகக்கொள்ளாமல் அப்படியே கொண்டால், 'பகைவருடைய மதிலைத்தான் வளைத்து' என்று பொருள் கொள்ள வேண்டும். எப்படிக் கொள்ளினும், தன்னை உணவுக்கு முந்தச்செய்து, போருக்குப் பிந்தச்செய்தானாதலால் அம்மன்னன் தக்கவனல்லன் என்ற கருத்தில் வேற்றுமையில்லை. இவ்வாறு கூறிய தமிழ் வீரனுடைய வழியில் வந்த நாம் மேலே காட்டிய "பந்திக்குமுந்து; படைக்குப்பிந்து', என்ற பழமொழியைக் கூறுகின்றோமென்றால், நமது வீழ்க்காட்டுக்கு இதனினும் வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா! ஒரு சமுதாயத்தை அளப்பதற்குரிய கருவிகளுள், அச்சமுதாயத்தார் வழங்கும் பழமொழியும் ஒன்றாதலால், அப்பழமொழிகளை நன்கு சிந்தித்து நாட்டின் பெருமையைக் கெடுக்கக்கூடியவற்றை ஒழித்து நல்லவற்றைப் பயன்படுத்தல் கற்றோர்களின் கடமையாகும்; அதனோடு பாமர மக்களிடமும் அதனைப் பரப்ப வேண்டும் என்ற கருத்தால். இதனைச் சிறிது விரித்து எழுத நேர்ந்தது.

எனவே, மற்ற உறுப்புக்கள் அணிந்துள்ள அணிகளைக் கண்டு தான் மகிழுமேயன்றித் தனக்கோர் அணிகலம் வேண்டாது கண். "மின்னுமணி, பூணும் பிற வுறுப்பு, பொன்னேயதுபுனையாக், காணும் கண் ஒக்குமோ காண்" என்ற நன்னெறிப் பாடற்பகுதியாலும், மற்ற உறுப்புக்கள் அணிகலங்கள் அணிவதையும் கண் அதனை விரும்புவதில்லையென்பதையும் அறிகின்றோம். அதுபோல அரசனும் தன் கீழ் வாழும் குடிகளுக்கு எவ்வெப்போது என்னென்ன நலங்கள் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து, தான் பார்த்து மகிழ வேண்டுமேயன்றி, தனக்கென ஓர் நலம் தேடலாகாது

என்பதை உணர்த்தி, துன்பத்தை நீக்குவதோடு அமை யாது இன்பத்தை ஆக்கவும் வேண்டும் என்று குறிப் பிப்பதாயிற்று.

இனி, மூன்ருவதாக உள்ள ஓர் பொதுத் தன்மையும் காண்போம். மாதவச்சிவஞான யோகிகள், தமது சிவ ஞானபோத விருத்தியுரையுள், ஐம்பொறிகளுள் கண்ணை யொழித்த மற்ற நான்கு பொறிகளும் நின்று பற்றுகின்ற பொறிகளென்றும், கண் மட்டும் சென்று பற்றுகின்ற பொறி என்றும், தடை விடைகளால் மிகவும் விரிவாக எழுதி விளக்கியுள்ளார்கள். அதாவது, செவி முதலிய பொறிகள் தாம் இருக்கும் இடத்திற்கு ஒலி முதலிய விஷயங்கள் வந்தால், அவற்றை அறியுமெனறும், கண் மட்டும் பொருள் இருக்குமிடத்துக்குத் தானே சென்று அறியுமென்றும் கூறுகின்ருர். இக்கருத்தைத் தற்கால விஞ்ஞானிகள் ஒத்துக்கொள்வதில்லையெனினும், அவ் வாராயச்சி இன்னும் முற்றுப்பெறவில்லையாதலாலும், சென்ற நூற்ருண்டு விஞ்ஞான முடிவு இந்த நூற்ருண்டில் மறுக்கப்படுவதாலும், அது உறுதியாகும வரையிலும் நமது முன்னேர்கள் கொண்ட கருத்தை நாம் தழுவிச் செல்வது குற்றமாகாதன்ருே! எனவே, சென்று பற்றும் பொறி கண்ணுதலால், அதுபோன்ற அரசனும், தனது குடிகளின் இன்னலை அவர்களே வந்து சொன்ன பின் அறிந்து அதனை நீக்கக் கருதாமல் தானே மாறுவேடம் பூண்டு, இரவிலே தன் நகர் முழுதும சுற்றிப் பார்த்து, யார்யாருக்கு என்னென்ன இன்னல் நேர்ந்திருக்கிறது என அறிதல் வேண்டுமாதலால் அவன் கண் போன்றவனுஞன்.

இவ்வாறு அரசன் மாறுவேடம் பூண்டு இரவில் நகரைச் சுற்றி வந்து குடிகளின் செயலை அறிதல் பண் டைக் காலத்தில் உண்டு என்பதைப் பொற்கைப் பாண் டியன் வரலாற்ருல் அறிக. அது,

“ உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்
அரச வேலி யல்ல தியாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து

மன்றத் திருத்திச் சென்றீர் அவ்வழி
இன்றவ் வேலி காவா தோளனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சிநடுக் குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடி ... ..."

எனச் சிலப்பதிகாரத்திலும்,

"எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவன்; காணார்
எனச்செய்யார் மாணா வினை."

எனப் பழமொழியிலும்,

"நாடுவிளங் கொள்புகழ் நடுதல் வேண்டித்தன்
ஆடுமழைத் தடக்கை யறுத்து முறைசெய்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்."

எனத் தொல்காப்பியம், களவியல், இளம்பூரணத்திலும்,

"திமைசெய் தாய்போற் செங்கை
குறைத்தாய்! முறையேயோ?"

எனத் திருவிளையாடற்புராணத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க. எனவே, கண்ணுக்கும் காவலனுக்குமுள்ள மூன்றாவது பொதுக்குணம் நின்றறியாமற் சென்றறிதலாகும் என அறிக.

இனி, உயிர் போன்றவன் அரசனென்னும் உவமையைச் சிந்திப்போம். உயிர் தனக்கு இடமாகவுள்ள உடலுக்கு நோய், வறுமை முதலியவற்றால் எத்துணை இன்னல்கள் நேரினும் அவ்வுடலை விட்டுத் தான் நீங்கக் கருதாமல், எவ்வாற்றானும் அத்துன்பங்களை நீக்கி, அந்த உடலை நல்ல நிலையில் வைத்துத் தான் மகிழும் இயல்புடையது என்பதனை, "வாயுறை வாழ்த்து" என்னுங் கட்டுரையில் விரித்துக் கூறியிருப்பதால் அறிக. அரசனும் தனக்கு உடல்போன்றுள்ள மக்களுக்கு எத்துணை இன்னல்கள் வரினும், அவற்றைப் போக்கி, அவர்களை

நல்ல நிலையில் வைத்து, அதனைக் கண்டு மகிழும் இயல்புடையவனாதலால் உயிருக்கு உவமிக்கப்பட்டான். எனவே, உயிராகிய உவமைக்கும், மன்னனாகிய உவமேயத்துக்குமுள்ள பொதுத் தன்மை, தமக்கு இடமாக உள்ள உடலையும், மக்களையும் நல்ல நிலையில் வைத்துக் கண்டு மகிழுதல் என்பது பெற்றாம். அரசன் ஒருவன், தான் இந்த உலகமாகிய உடலுக்கு உயிர் என்பதை நன்கு அறிந்திருக்கவேண்டுமென்றும், அஃது அவன் கடமை என்றும் புறநானூற்றில் உள்ள

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே."

என்னும் 'மோசிகீரனார்' பாடலால் அறியலாம்.

இக்கருத்து,

"நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர் இரண்டும் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங்க களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி என்றான்."

எனச் சீவக சிந்தாமணியிலும் வருதல் காண்க.

இன்னும் அரசன் தான் உலகிற்கு உயிர் என்பது,

"உலகிற் கோருயிர்ப் பெற்றியான் பயாபதி என்னும்பேருடை
வெற்றிவேல் மணிமுடி வேந்தர் வேந்தனே"

எனச் 'சூளாமணி'யிலும்,

"மன்னுயிர் ஞாலக் கின்னுயிர் ஒக்குமுறை"

எனப் 'பெருங்கதை'யிலும்,

"உலகினுக் குயிரா யிருந்தனன் இறைகுலோத் துங்கன்"

எனத் திருவிளையாடற் புராணத்திலும்,

கூறப்பட்டிருத்தல் காண்க. எனவே, உவமையிலுள்ள நயங்களைக் கண்டு சுவைத்து மகிழவேண்டுமென்றால், உவமைக்கும் பொருளுக்குமுள்ளனவும், மறைந்திருப்பனவுமாகிய பொதுத்தன்மைகளை இவ்வாறு ஆழ்ந்து சிந்தித்து அறியவேண்டுமென்பதை அறிக. இவ்வாறு சிந்திக்கச் சிந்திக்கப் பல பொருள்கள் தோன்றுவதாலே

தான், காலஞ்சென்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் "பழைய நல்லிசைப் புலவர்கள் பாடல் களெல்லாம் மாதுளம் பழம்போலுள்ளன," என்றார். அப்பழத்தை அரிந்து பார்த்தால், உள்ளே பல வேறு அறைகளில், மாணிக்கம் போன்ற பல விதைகள் வெண் தோல்களால் மூடிக்கொண்டிருக்கும்; தோண்டத் தோண்ட அவை வெளியாகும். இனி, 'புதுப் புலவர்கள் பாடல்களுக்கு உவமை தேடுவாரே; கிடைக்காவிட்டால் அவர் என்ன செய்வார்? திருவள்ளுவர்கூட வறுமை யைப்போலத் துன்பம் தருவது எது என உவமையைத் தேடித்தேடி அகப்படாமையால், அதற்கு அதுவேதான் உவமை என்பார், 'இன்மையினின்னாததியாதெனின் இன் மையின், இன்மையே இன்னா தது,' என்று கூறினா ரல்லவா! நமது பிள்ளையவர்களுக்கு அந்தக் குறைபாடு வேண்டா" என்று கருதிப்போலும், இயற்கைக்கு விரோ தமாக ஓர் பொருளைப் படைத்தான் இறைவன். அப் பொருள் யாது? அதுதான் முந்திரிப்பழம்; கொடி முந் திரியன்று; மரமுந்திரியே. அதில் இயற்கை விரோதம் யாதுளது? கொட்டை என்பது பழத்துக்குள்ளேயிருப் பதுதான் இயல்பு; அதற்கு மாறாக அந்த முந்திரிப் பழத்தில் மட்டும் கொட்டை வெளியே இருக்கும். மாதுளம்பழத்திலிருப்பது போலப் பல விதைகளில்லை. இருப்பது ஒரு கொட்டைதான்; அதுவும் பழத்திற்கு முன்னே ஒட்டித் தொங்கிக்கொண்டிருக்கும். எனவே, பாடல் பெரிதாகவும் சிறிய பொருளாக ஒன்றேயுள்ள தாகவும், அப்பொருளும் பாடலைப் பார்ப்பதற்கு முன்னே தெரிவதாகவுமுள்ள புதுப் புலவர் (சென்ற நூற்றாண்டி லிருந்தவர்கள்) பாடல்களுக்கு அப்பழத்தை உவமையா க்க் கூறியது எத்துணைப் பொருத்தமுடையதென்பதை எண்ணி எண்ணி மகிழ்க. முந்திரிப்பழம்போல் தற்காலம் வெளிவரும் பாடல்கள், 'எளிமை' என்ற பெயரால் போற் றப்படுகின்றன. இதனைப் பார்த்து ஆற்றாதவனாய், பழம் பாடல்களின் சுவை கண்ட புலவனொருவன், தன் வயி றெரிந்து பாடிய பாடல் ஒன்றும் இங்கு அறியத்தக்கது; அது,

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
வேடிக்கை யாக்கவிதை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெலாம் புலவரெனத் திரிய லாமே."

என்பது.

எந்தெந்த உவமையால் எவ்வெவற்றை அறியலாம்?

மேலே காட்டிய ஏனையுவமம் என்ற வெளிப்படை உவமத்தை நமது புலவர் பெருமக்களும், அப்புலமையோடு ஆண்டவன் அடித்தொண்டும் பூண்ட அடியார்களும், தாமியற்றிய காவியங்களிலும், அறநூல்களிலும் நீதி நூல்களிலும், தோத்திரப் பாடல்களிலும், சாத்திர நூல்களிலும் எடுத்தாண்டிருக்கும் நிலையைச் சிந்தித்தால், அது, பிறர் கூற்றுவமை, தம் கூற்றுவமை என இரு திறப்படுதலை அறியலாம். அவற்றுள் முன்னது, ஓர் புலவன் தனது நூலில் வரும் கதைத்தொடர்புடைய மக்களுள் ஒருவன் மற்றொருவனுக்கு ஓர் விஷயத்தைச் சொல்லுங்கால் அதனை ஓர் உவமவாயிலாகச் சொல்லுவது: பின்னது அப்புலவன் தன் கூற்றாகச் சொல்வது. முன்னது புலவனது சிறந்த புலமை நுட்பத்தை அளப்பதற்குச் சரியான கருவியாகும். தம் கூற்றுவமையால், அப்புலமையோடு, அப்புலவர்களின் உளள நிலை, அதையொட்டிய வாழ்க்கை நிலை, அவ்வாழ்க்கையின் குறிக்கோள் முதலியன அறியப்படும். பிறர் சொல்லுவதாகப் புலவன் கூறும் உவமைகள், சொல்லுகின்றவர்களின் மரபு, தொழில், பழக்கம், சுற்றுச்சார்பு முதலியவற்றால் அவர்கள் அறிந்த பொருள்களிலே இருக்கவேண்டுமாதலால், அவையனைத்தையும் நன்கு தெரிந்துவைத்திருந்தாலன்றி, அப்புலவன் அவற்றுக்குப் பொருத்தமாகக் கூறமுடியாதன்றோ! ஆதலால் அந்த உவமை அவனது பரந்த புலமையைக் காட்டுவதாயிற்று.

இனி, புலவர்களும், தொண்டர்களும் கூறும் தம் கூற்றுவமைகளோ, 'மன நலம் மாற்ற முரைக்கும்' என்றபடி, அவர்கள் உள்ளத்தின் உயர்வையும், தூய்மையையும் வெளிப்படுத்தி, அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளையும் காட்டி, 'உலக நிகழ்ச்சிகளை எத்துணைக் கூர்ந்து நோக்கியிருக்கின்றார்கள்' என்பதைப் புலப்படுத்துமுகத்தால், அவர்களது பரந்த புலமையையும் காட்டுகின்றன.

பிறர் கூற்றாகக் கூறும் உவமை

விரைவில் மணஞ்செய்துகொள்ளும் கருத்து இல்லாதவனை, களவொழுக்கத்தையே விரும்பியொழுகும் தலைவனிடம் தோழியானவள், "நீ எங்கள் தலைவியைப் பிறர் அறிய விரைவில் மணஞ்செய்துகொள். இன்றேல், அவள் இறந்து படுவாள்" என்று சொல்பவள், தன் தலைவியினது உயிரின் சிறுமையும், அதைப்பற்றி நிற்கும் காமநோயின் பெருமையுமாகிய இவற்றுக்கு, மலைப்பக்கத்திலுள்ள பலாமரத்தினது கொம்பின் சிறுமையையும், அதைப்பற்றித் தொங்குகின்ற பலாப்பழத்தினது பெருமையினையும் உவமமாக்கி,

"... ... ... சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது! காமமோ பெரிதே!"

எனக் கூறினாள் என்பது, 'குறுந்தொகை' என்னும் சங்க இலக்கியத்தால் அறியப்படுவதொன்று. இங்ஙனம் உவமை கூறிய அத்தோழியானவள் குறிஞ்சி நிலத்திலுள்ளவள்; அந்நிலத்தின் கருப்பொருள்களுள் ஒன்றாகிய பலாமரத்தின் சிறு சிறு கொம்புகளில் பெரிய பெரிய பலாப்பழங்கள் தொங்குவதைப் பலகாலும் கண்டு பழகியவளாதலால், அப்பொருளையே உவமமாகக் கூறுகின்றாள் என ஆசிரியர் பாடியது பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது.

இனி, திருக்குறளுட் காணப்படும் பிறர் கூற்றுவமங்களுள் இரண்டினை எடுத்துச் சுவைப்போம். அந்நூலுள் அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் தம் கூற்றுவமைகள் காணப்படுமேயன்றிப் பிறர் கூற்றுவமைகள் காணப்

படா. காமத்துப்பாலிலேதான் தலைவன், தலைவி, தோழன், தோழி முதலியவர்கள் 'கூற்று' வருவதால் அதில் மட்டும் பிறர் கூற்றுவமங்கள் காணப்படும். அவற்றுள் ஒன்று தோழியின் வினவிற்கு விடையாக அமைந்துள்ள தலைவியின் கூற்று. "நமது தலைவன் பிரிந்திருக்கும்போது, அவனிடம் பல குறைகள் இருப்ப தாகக் கூறி வருந்துகின்ற நீ, அவனைக் கண்டபோது, அவற்றுள் ஒன்றேனும் கூறிப் பிணங்காமைக்குக் கார ணம் யாது?" என்பது தோழியின் வினா; அதற்கு உவமை வாயிலாகத் தலைவி சொல்லும் விடையாவது, "கண் ணுக்கு மைதீட்டும் அஞ்சனக் கோலினது இயல்பை, அது கண்ணோடு பொருந்தாது தனித்திருக்கும்போது காணும் கண், அது கண்ணோடு சேர்ந்து ஒன்றி நின்று மைதீட்டுங்கால் காண்பதில்லை; அதுபோல என் நாயகன் என்னை விட்டுப் பிரிந்திருக்குங்கால் அவன் குற்றங் களெல்லாம் புலப்படுகின்றன; ஆனால், அவன் எனக்கு நேரே வந்துவிட்டால், அவற்றுள் ஒன்றேனும் புலப் படுவதில்லை," என்பது. அத் திருக்குறள்,

"எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து."

என்பது. தலைவி செல்வத்தாற் சிறந்தார் வீட்டுப் பெண்ணாதலால், தன் தலைவன் கண்டு மகிழுமாறு, மை யிடுதல் முதலியவற்றால் எப்பொழுதும் தன்னை ஒப்பனை (அலங்காரம்) செய்துகொண்டிருக்கும் இயல்பினளாத லால் அந்த ஒப்பனையுள் ஒன்றாகிய கண்ணுக்கு மை எழு தும் செய்தியையே இங்கு உவமையாக்கினாள் என ஆசிரி யர் கூறுந்திறம் போற்றத்தக்கது.

மற்றொன்று, தோழி கூற்றாகத் தலைவிக்குச் சொல் வது. நாயகன்மீது பிணங்கியிருக்கும் தலைவியை நோக் கித் தோழியானவள் அதனை நீக்கும்பொருட்டுச் சொல்வதில், "புலவி என்பது மகளிர்க்கு இன்றியமை யாததுதான்; அஃது ஒர் அளவோடு இருத்தல் வேண் டும்; அப்படியிருந்தால், அது நாம் உண்ணும் கறி முதலிய வற்றுள் அவற்றிற்கு வேண்டுமளவில் உப்பினை இட்டுச் சமைத்தது போலும்; இனி அப்புலவி அளவிற்கு மேற்

படுமாயின், அது அக்கறி முதலியவற்றிக்கு அந்த உப்பை அளவுக்குமேல் போட்டதுபோலாகும்'' என்றீ உப்பை உவமமாக்கிக் கூறியதற்குக் காரணம், அத்தோழி சமைத்தலாகிய தொழிலை மேற்கொண்டவளாதலால், அத்தொழிலிலே தான் கண்ட அநுபவமாகிய ஒன்றையே கூறுகிருள் என்று கூறிய அழகு ஆசிரியரின் புலமைத் திறத்தைக் காட்டுவதாகும்; அக்குறள்,

> "உப்பமைந் தற்றூற் புலவி; அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்."

என்பது. இவ்வாறு தலைவி கூற்றாக வந்த உவமையிலும், தோழி கூற்றாக வந்த உவமையிலும், சமைத்தலாகிய தொழில் தலைவிக்குத் தெரியாததொன்றென்னும், தோழிக்குத்தான் அஃது உரியதென்றும் பெறப்பட்டு, அக்கருத்து, 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில் முதற்குறளாகத் திருவள்ளுவர் கூறிய "மனைத் தக்க மாண்புடையளாகி" என்ற தொடருக்கும், அதற்கு மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கையுடையாளாய்" என்று பொருள் கூறி, "நற்செய்கைகளாவன, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலியன" என்று பரிமேலழகர் கூறிய விளக்கத்திற்கும், இன்னும் அப்பொய்யாமொழியார், தமது மனைவியார் இறந்தபோது வருந்திப் பாடிய "அடிசிற்கினியாளே" என்ற தொடருக்கும் முரணாகக் காணப்படுகிறதே; இன்னும்,

> "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
> கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
> குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
> தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
> இனிதெனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."

எனவரும் குறுந்தொகைப்பாடலோடும், உலகியலோடும் முரண்படுகிறதோ?' எனின், தேவர் கூறிய உவமங்கள் அகப்பொருளோடு தொடர்புடையனவாய், காமத்துப் பாலிற் கூறப்படுவன என்றும், அகப்பொருள் சம்பந்தமாகக் கூறப்படுவன அனைத்தும் மெய்யெனக் கொள்ள

லாகா என்றும், அவை, "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்று தொல்காப்பியரே கூறுகிருர் என்றும், அகப்பொருள் பற்றி வருகின்ற தலைவன், தலைவியாகிய இவர்கள், புலவர்களின் கற்பனையில் ஆக்கப்பட்டவர்கள் என்றும் அறிந்தால், அம்மாறுபாடு தோன்ற இடமில்லையென்க. அப்பொருள் பற்றி நூலுள் புலவர்கள் கற்பித்துக் கொண்டு கூறுவனவற்றை உண்மையென்று கருதி, 'நம் தமிழ் நாடு முற்காலத்தில் அப்படியிருந்தது,' என்று முடிவு செய்து 'அந்த நிலைக்கு வரவேண்டும் என்று. யாரேனும் கருதினல், அது பகற்கனவாகவே முடியுமென்பது ஒருதலை. அகபபொருட்கருத்துக்கள் பெரும்பாலும் நாடக வழக்கைத் தழுவியன என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம் :

தலைவன், தனது தலைவி இறந்துபடப்போகிருளென்றும், சாப்பறைகள் ஒலிக்கப்போகின்றன என்றும் கவலைப்படுகிருன்; 'தலைவி இறந்தபடுமாறு வந்த நோய் யாது? அந்த நோயைப் போக்கக்கூடிய மருத்துவர் இல்லையா? அவரைக்கொண்டு நோயாளியைப் பார்க்கலாகாதா? பரிகாரம் ஒன்றும் தேடாமல் ஏன் அந்த முடிவுக்கு வந்தான் தலைவன்?' என்ற கேள்விகள் எழலாமல்லவா! நோய் வேருென்றுமில்லை; அவள் தானே தேடிக்கொண்டது. அது, அனிச்சமலரின் அடியிலுள்ள காம்பை எடுக்காமலே தலையிற் சூடிக்கொண்டதுதான். அந்தப் பாரத்தைத் தாங்க முடியாமல் அவள் இடை முறிந்துவிடுமாம் அதற்குச் சாப்பறைகள் ஒலிக்குமாம். இவ்வாறு தலைவன் கூற்ருக வைத்து வள்ளுவர் கூறும் திருக்குறள்,

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை."

என்பது. 'இது பொய்யாமொழியாரின் பொய்யா மொழியாயிற்றே! அப்படி மென்மையான பெண் இருந்துதானே அவர் சொல்லியிருக்கிருர்? எனவே, அம்மாதிரியுள்ள பெண்ணைத்தான் யான் மணந்துகொள்ளப்போகிறேன்'. என்று ஓர் இளைஞன் கருதிப் பெண் தேட ஆரம்பித்

தான் எனின், விநாயகப் பெருமானுக்குத் திருமணமான மறுநாள் அவனுக்கும் ஆகும். இதனால் வள்ளுவனார் கூறிய 'இல்லறவியல்' உலகியல் என்றும், காமத்துப் பால் நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்ததென்றும் அறிக.

இனி, புலவர்களாலே 'தண்டமிழ்ச் சாத்தன்' என்று புகழப்பெற்ற சித்தலைச் சாத்தனார் தாமியற்றிய ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையிற் கூறிய பிறர் கூற்றுவமங்களுள் ஒன்றை அறிந்து சுவைப்போமாக:

கோவலன் பிரிந்தபின் உலக வாழ்க்கையையே வெறுத்திருந்த மாதவியின் மனத்தைத் திருப்பித் தன் மரபுத்தொழிலிற் புகுத்தக் கருதிய அவளுடைய தாய் 'சித்திராபதி' என்பாள், தன் புதல்வியாகிய மாதவியை நோக்கி, 'என் அருமை மகளே, யாழ் வாசிக்கும் ஒருவன் இறந்துபடுவானானால், அவனோடு அவன் வாசித்த யாழும் இறந்துபடுதலை நீ எங்கேனும் கண்டதுண்டா? பின்னும் அது, தன்னை வாசிக்கின்றவன் கையிற்சேர்ந்து பயன் படுதலை யாரே அறியாதார்? நமது மரபின் இயல்பும், பொருள் கொடுக்கும் ஒருவனைச் சார்ந்து வாழ்க்கை நடாத்தி, அவன் பொருளாலேயோ, உடலாலேயோ இறந்துபடுவானானால், பொருள் கொடுக்கும் மற்றொரு வனைச் சார்ந்து வாழ்க்கை நடத்துவதால் அந்த யாழின் தன்மை போன்றதாகும்,' எனக் கூறினாளென்பதை,

> "பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
> யாழினம் போன்ற வியல்பினம்"

என்னும் மணிமேகலையடிகளால் அறிகிறோம்.

சித்திராபதி என்பாள் விலைமகள். அம்மரபுப் பெண்கள் பலரும், தமது வலையில் வீழாத செல்வ இளைஞர்களை வீழவைக்கவும், வீழ்ந்தவர்கள் பொருள் அவர்களைக் கைவிடும் வரையிலும், தம்மை அவர்கள் கைவிடாதிருக்கவும் மேற்கொள்ளும் வழி, யாழ் வாசித்தல் ஆடல், பாடல் முதலிய கலைகளிலே தேர்ச்சி பெற்றிருத்த லன்றோ! கோவலன் மாதவி வலையிற் சிக்கியதற்கும் காரணம் அந்த ஆடல் பாடல்தாமே! எனவே, தனக்குக்

கைவந்த ஒன்றையே சித்திராபதி என்பாள் உவமை யாக்கிக் கூறினாள் எனச் சாத்தனார் சொல்லும் அருமை சிந்தித்துச் சுவைத்தற்குரியது.

இனி, அந்த ஐம்பெருங்காப்பியங்களுள் மற்றொன்றாகிய சீவக சிந்தாமணியிற் காணப்படும் பிறர் கூற்றுவமம் ஒன்று, இலக்கியச் சுவையையுணரும் ஆற்றலை முன்னைத் தவத்தாற் பெற்ற அறிஞர் பலரும் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது. 'நந்தகோன்' என்னும் இடையர் தலைவன், வேடர்களாற் கொண்டுபோகப்பட்ட தன் பசுக் கூட்டத்தை மீட்டுக்கொடுத்த சீவகனென்பானுக்குத் தான் பறைசாற்றி அறிவித்தவாறு, தன் ஒரே மகளாகிய கோவிந்தையென்பாளை மணஞ்செய்து கொடுக்கக் கருதியவன், அச்சீவகன் அரசிளங்குமரனைக் காட்சியளித்தலைக் கண்டு, தன் மகளும் அவனுக்கு ஏற்றவள்தான் எனப் புலப்படுத்துமுகத்தால், அவளுடைய உடலின் மென்மைக்கும், சொல்லின் சுவைக்கும், உடலின் நிறத்திற்கும், தன் வாழ்க்கையிலேயே பலகாலும் கண்டு கண்டு பழகிய வெண்ணெய், பசுவின்பால், உருக்கிய பசு நெய் இவற்றையே உவமைகளாக்கி, அச்சீவகனிடம் கூறினான் என்பதை,

"வெண்ணெய்போன் றூறினியள் மேம்பால்போற்
றீஞ்சொல்லள்
உண்ண உருக்கிய ஆனெய்போல் மேனியள்"

எனத் 'திருத்தக்க தேவர்' கூறியிருப்பது அவர் கூறிய பசுவின் பாலைவிடத் தெவிட்டாத சுவை அளிக்கிறதன்றோ!

இனி, பெரிய புராணத்துட் காணப்படும் பிறர் கூற்றுவமங்களுள் ஒன்றை எடுத்துச் சுவைப்போமாக: கண்ணப்ப நாயனார், நாணன் என்னும் வேடனோடு காளத்தி மலையிலேறினார். அங்குள்ள இறைவனைக் கண்டார்; அன்பால் விழுங்கப்பட்டார்; தம்மை மறந்தார்; வரம்பின்றி எழுந்த அன்பால் அவ்விறைவனைத் தழுவிக் கொண்டார்; அன்பொழுகும் சொற்கள் பல சொன்னார்; நாணன் என்னகூறியும் அந்தப்பெருமானை விட்டாரில்லை. பின்னர் அந்த ஆண்டவனுக்கு உணவு கொண்டுவருதற்

பொருட்டுக் கீழே இறங்கினர். நாணனும் உடனிறங்கினன். கண்ணப்பரால் கொல்லப்பட்ட பன்றியொன்றை அவர் ஆணைப்படியே பாதுகாத்துக்கொண்டிருந்தகாடன் என்னும் வேடன் அவர்களை நோக்கி, "என் இத்துணைக் காலந் தாழ்த்து வந்தீர்கள்? யாம் ஊருக்குப் போக வேண்டாவா?" என வினவினன். அது கண்ணப்பர் திருக்காதில் ஏறவேயில்லையாதலால்; அவர் அதற்கு விடை கூறவில்லை. நாணன் விடை கூறுகின்ருன். கேட்கும் அவனும் சொல்லும் அவனும் வேடர்கள். அவர்கள் வாழ்க்கையில், எத்துணை முயற்சி செய்தாலும் தளராது தான் பிடித்த பிடியை விடாமலிருக்கும் உடும்பைத்தானே கண்டிருப்பார்கள்? ஆதலால், அந்நாணன் "மரப்பொந்தைப்பற்றிய உடும்பானது, அதை விடுதற்கு நாம் எத்துணை முயற்சி செய்தாலும் விடாதல்லவா? அதுபோல, அங்குக் குடுமித்தேவரைக் கண்டவுடனே கட்டிப்பிடித்துக்கொண்டு, யான் எத்துணை சொல்லியும் கேளாது விடமாட்டாதவனாய்விட்டான்; இங்கு அவன் வந்ததும் அத்தேவர் தின்பதற்கு இறைச்சி கொண்டு போதற்கேயன்றி, வீட்டிற்குப் போதற்கன்று," என்று கூறியதாகச் சேக்கிழார் பெருமான்,

"அங்கிவன் மலையிற்றேவர் தம்மைக்கண் டணைத்துக்கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்
இங்குமத் தேவர் தின்ன இறைச்சிகொண் டேகப்போந்தான்"

என்று கூறுவதைத் திருத்தொண்டர் புராணத்துட் காண்கின்ருேம். வேடன் கூற்ருக வரும் இதற்கு இந்த உவமையைத் தவிர, வேறு எந்த உவமை கூறினும், அஃது ஆசிரியரின் பரந்த புலமையைக் காட்டாதல்லவா!

இனி, 'கம்பராமாயணம்' என்னும் கனி நிறைந்த சோலையுட்புகுந்து ஒரு கனியைச் சுவைத்துப் பார்ப்போம்:

விசுவாமித்திர முனிவன் என்பான் தவத்தாற் சிறந்தவன்: அதனல், அயன் படைப்புக்கு மாருகத் தனியுலகத்தையும் படைக்கும் ஆற்றல் பெற்றவன்; அவன், தன்னை வழிபட்ட திரிசங்கு என்ற மன்னன் இறந்த பின், அவன் உயிர்க்கு அறவுடலை (பூதசார தேகத்தை)க் கொடுத்துத் தேவர் உலகிற்கு அனுப்பிய காலை, அத்

தேவர்கள், 'நீ இங்கு வருவதற்கேற்ற அறஞ்செய்யவில்லை யாதலால், உனக்கு இங்கு இடமில்லை,' என்று தள்ளி விடத் திரிசங்கு, 'முனிவரே, அபயம்!' என்று விழும் போது, தான் தனியே ஓர் சுவர்க்கத்தைப் படைத்து அதில் இருக்கச்செய்தான் என்றும், அதற்குத் 'திரிசங்கு சொர்க்கம்' என்பது பெயர் என்றும் புராணங்கள் கூறும்' இரண்டு இடங்களில் யாதேனும் ஒன்றில் நிலைத்தில்லாதவனை 'அவன் நிலை திரிசங்கு சொர்க்கம்' என்று இன்றும் மக்கள் சொல்வதைக் காணலாம். அம் முனிவன் வரலாற்றைப் பாரதம், காசி காண்டம் முதலிய நூல்களிற் காணலாம். அவன் தவம் செய்யத் தொடங்கிப் பலமுறை வெற்றி பெறுமல் தோல்வியேயுற்றான். அதற்குக் காரணம், அவனுடைய காமம் வெகுளி இரண்டுமே! தாடகை என்னும் அரக்கியைக் கொல்லும் பொருட்டு இராமபிரானைத் தசரத மன்னனிடம் பெறச் சென்றவன்,

"தருவனத்துள் யாமியற்றும் தவவேள்விக் கிடையூறுத்
தவம்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென.........,'

எனத் தன் அனுபவத்தையே உவமமாக்கிக் கூறினன் எனக் கம்பநாடர் சொல்வது, கருதி மகிழத்தக்கது. புலவர்களின் பரந்த புலமையை அளப்பதற்குச் சிறந்த கருவியாகிய பிறர் கூற்றுவமை ஒவ்வொன்றை ஒவ்வொரு சிறந்த நூலிலிருந்து எடுத்து, 'ஒருபானைச் சோற்றில் ஒரு பருக்கையைப் பதம் பார்ப்பது' (ஸ்தாலி புலாகம்) என்ற நியாயப்படி பார்த்துச் சுவைத்தோம். இதனை ஓர் வழிகாட்டியாகக் கொண்டு, நல்லிசைப் புலவர்களியற்றிய நூல்களுட் காணப்படுவனவற்றைப் பலமுறை படித்து, படிக்கின்ற காலத்திலும், அதனைப்பற்றிச் சிந்திப்பதற்குரிய காலத்தை அதிகமாக்கி உணர்ந்து சுவைத்து மகிழக்கடவர்.

தம் கூற்றுவமை

இனி, அப்புலவர் பெருமக்கள் தம் கூற்ருகக் கூறும் உவமைகள் சிலவற்றைக் காண்போம்:

தேவர் திருவாக்கில் வரும் தம் கூற்றுவமை

திருவள்ளுவர், 'மானம்' என ஓர் அதிகாரம் வகுத்

துள்ளார். மானம் என்னும் அச்சொல் மிகமிக வியத்தற்குரியது. நாம் பேசுங்கால் அடிக்கடி கையாளப்படுவது. தன் பெயரைக் கேட்டவுடனே ஆணோ பெண்ணோ, முதியவர்களோ இளைஞர்களோ, அறிஞர்களோ மூடர்களோ இவர்கள் அனைவருக்கும் பேதமில்லாமல் மகிழ்ச்சியையோ, சினத்தையோ மூட்ட வல்லது. 'மானமுடையவர்கள்' என்றால் மகிழ்ச்சியுறுவதையும், 'மானமகெட்டவர்கள்' என்றால் சினங்கொள்ளுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம். சிறுவர் இருவர் தெருவிலே விளையாடுகின்றனர். ஒருவன் உடல் வலியுள்ளவன்; மற்றவன் அஃதில்லாதவன். முன்னவன் அவ்விளையாட்டில் முறைமாறுதலைக் கைக்கொண்டான். அதனைக்கண்டு பொறாத பின்னவன், "போடா மானங்கெட்ட பயலே, உனக்கு இதுவே வழக்கமாகிவிட்டது," என்றான். அச்சொல்லைக் கேட்டவுடனே முன்னவனுக்குச் சினம் மூண்டது; கண்கள் சிவந்தன. உடல் வலிமையுள்ளவனாதலால் ஓங்கி ஓர் அறை கொடுத்தான். அடிபட்டவன் எதிர்த்து அடிக்கும் வலிமையில்லாதவனாதலால் அதனைப் பொறுக்கலாற்றாது விம்மி விம்மி அழுதான். மறித்தும் அடிப்பதற்குக் கையை ஓங்கினான் முன்னவன். இக்காட்சியைக் கண்டார் ஓர் முதியவர்; இரக்கம் கொண்டார். அடிக்கச் சென்றவனைத் தடுத்து நிறுத்தி, 'தம்பி, அவன் மெலிந்த உடலுடையவனாயிற்றே! அவனை இப்படி அடிக்கலாமா?' என்று அவன் சினத்தைத் தணிக்க முயலுகிறார், உடனே அவன், "இந்தப் பயல் என்னை 'மானங்கெட்ட பயல்' என்று திட்டினான் தாத்தா! இதனோடு விடுவேனா இவனை; விடுங்கள் என்னை; இவனை நொறுக்கிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்!" என்று ஆரவாரம் செய்கிறான். அடிபட்டவனை நோக்கி, "நீ என்ன செய்தாய்?" என்றார் அப்பெரியவர். "யான் ஒன்றும் செய்யவில்லை தாத்தா! முறை பிசகாக விளையாடினான்; அதற்காக 'மானம் கெட்ட பயலே' என்றுமட்டுந்தான் சொன்னேன்," என்றான். அதற்கு முன், தம் வாழ்நாளில் எத்தனையோ முறை தாம் சொல்லியும், பிறர் சொல்லக்கேட்டும் இருந்தாலும், இன்று அப்பெரியவருக்கு அச்சொல்லைப்பற்றி ஓர் சிந்தனை தோன்றி, தம்

முள்ளே "மானம் கெட்டவன் என்ருல் இத்துணைச் சினம் இவனுக்கு வருவானேன்?" என்று எண்ணி அடித்தவனை நோக்கி, 'அப்பா! மானம் கெட்டவனே என்ற சொல்லைக் கேட்டவுடனே உனக்கு இத்துணைக் கோபம் வந்ததே! மானம் என்பது என்ன? என்று கேட்டார். அவன், 'அது என்னவோ தாத்தா, எனக்குத் தெரியாது; அதை என்னுல் பொறுக்க முடியாது; ஆதலால் அடித்தேன்' என்ருன். அடிபட்டவனை நோக்கி, 'மானம் என்ருல் என்ன?' என வினவ, அவன் 'தெரியாது தாத்தா. பெரியவர்களெல்லாம் சொல்கிருர்களாதலால் யானும் சொல்லிவிட்டேன்' என்ருன். இருவருக்கும் தெரியாதது வியப்பன்று. கேட்ட அப்பெரியாருக்கும் அதன் பொருள் தெரியாது. இங்ஙனம் நாம் பேசும்போது அடிக்கடி மேற்கொள்ளப் படுவதாக இருந்தும், தன் பொருளை எல்லோரும் அறிந்து கொள்ள முடியாதவாறு மறைத்து வைத்திருப்பதனுலேதான் அதனை 'வியத்தற்குரியது' என்று கூறினேம். இங்ஙனம் எளிதாக நம்மால் வழங்கப்படுவனவும், உணர்ச்சியை எழுப்பக்கூடியனவும், ஆனுல் பொருள் விளங்காதனவுமாகிய சொற்கள் சிலவற்றையும், அவற்றின் பொருள்களையும் நம் முன்னேர்களாகிய புலவர் பெருமக்கள் நம்மீதுள்ள இரக்கங் காரணமாகத் தேடி வைத்த வைப்பு நிதியாகிய பழைய இலக்கியங்களிலும், கருவி நூல்களாகிய இலக்கணம் தருக்கம் முதலியவற்றை முறையாகக் கற்றுப் பின்னர் அந்த இலக்கியங்களைப் பல முறை படித்து ஐயம் திரிபற உணர்ந்து தமது நுண்மாணுழைபுலத்தால் ஆசிரியர்கள் எழுதிய உரைகளிலும் விளங்கக் காணலாம்.

அந்த 'மானம்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர், 'எஞ்ஞான்றும் மக்கள் தம் நிலையினின்று தாழாமையும், தெய்வத்தால் (ஊழ்வினை) தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்' எனப் பொருள் விரிக்கிருர். இவ்வாறு அவர் பொருள் காண்பதற்குக் காரணமாய் இருந்தது ஓர் திருக்குறளே தான்! அது,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்."

என்பது. இதற்குப் பரிமேலழகர் கண்ட பொருளாவது, 'மயிர்நீப்பின் =(தனது மயிர்த்திரளில்) ஒரு மயிர் நீங்கி னும்; வாழா = உயிர்வாழாத; கவரிமா அன்னார் = கவரி மாவை ஒத்தவர்; மானம் வரின் = (உயிர்நீக்கத்தால்) மானம் எய்தும் எல்லை வரின்; உயிர் நீப்பர் = அதனைத் தாங்காது இறப்பர்' எனப் பதவுரை கூறி, விளக்கவுரை யில் "உயிரும் மானமும் உடனில்லாமைக்கண் (அதாவது அவ்விரண்டில் ஒன்றை விட்டாலன்றி மற்றொன்று நிலை பெறாது என்ற நிலைமை நேருமாயின் என்றபடி) பின்னும் போவதாய உயிரை நீத்து, என்றும் நிற்பதாய மானத்தை எய்துவர் எனபதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பதை விளக்கி நின்றது," என்பது. இந்தக் குறளின் திரண்ட கருத்தை எடுத்துக் கற்பனைக் களஞ் சியமாகிய சிவப்பிரகாச அடிகளார்,

"மானமும் உயிரும் ஒருங்குநில் லாத
வழியுயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளா மானமே கொளும்"

எனப் பிரபுலிங்கலீலையிற் கூறுகிறார். இனி, அக்குறளாற் பெறப்படும் கருத்துக்குமேல் "தெய்வத்தால் (ஊழ்வினை) தாழ்வு வந்துழி" என்று பரிமேலழகர் கூறுதற்குக் காரணம் "அத்துணைப் பெருமையுடையார், தமது பெரு மையில் ஓர் அணுத்துணையும் குறைதற்குரிய வினையை இப்பிறப்பிற்செய்யார்; (இந்த வினையை ஆகாமியவினை என்று அறிவு நூல்கள் கூறும்) எனவே, தாழ்வு நேருமா யின் அதற்குக் காரணம் அவர் முன் செய்த ஊழ்வினை என்று துணிந்தமைதான். இஃது ஒவ்வொரு மகனும் தன் வாழ்க்கையில் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்று தான். தனக்கு ஓர் துன்பம் வருமானால் 'இது இப்பொ ழுது யான் செய்துகொண்ட வினையால் விளைந்ததா, அன்றிப் பழவினையால் வந்ததா?' என்று சிந்தித்தால், புது வினை, அல்லது பழவினை காரணம் என்பதை அறிந் துகொள்ளலாம். உலக சிந்தனையின்றித் தியானத்தி லுறைத்திருந்த பட்டினத்தடிகள் என்னும் துறவிமேல் ஒரு திருட்டுக் குற்றத்தை ஏற்றிக் கழுமரத்திலேற்றிவிட் டார்கள். கழுமரத்திலே தொங்கும்போது இவர் தியா னம் கலைந்தது. தாம் கழுமரத்தில் ஏற்றப்பட்டிருப்பதை

அறிந்தார்; உடனே "இவ்வுடம்பெடுத்த, பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு, முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே!" என்று பாடியதாக அவர் சரித்திரத்தாலறிகிறோம். இதனாலே தான் பரிமேலழகர் அவ்வாறு துணிந்தார். இனி, மேலே காட்டிய திருக்குறளிலுள்ள உவமையின் நுட்பம் ஒன்று சிந்தித்து அறிதற்குரியது. திருவள்ளுவர் முதலடியில் மட்டும் அக்குறளில் உவமையை அமைத்தார். தன் மயிர்த்திரளில் ஒரு மயிர் போனாலும் கவரிமா உயிர் வாழ்வதில்லை; அஃது அதற்கு இயல்பு. அது போல, தமது மலைபோன்ற பெருமையில் ஓர் அணுவளவு இழக்கும்படியான மானக்கேடு நேர்ந்தாலும் பெருமக்கள் இறந்துபடுவார்கள். அஃது அவர்க்கு இயல்பு என்பது அவ்வுவமையால் விளக்கப்பட்டது. அடுத்த அடியில் ('உயிர்நீப்பர் மானம் வரின்') அவ்வுவமையாற் பெறப்படுகின்ற பொருளைக்காட்டிலும் ஒருபடி மேலே கொண்டு போகிறார். எங்ஙனமென்று காண்போம். கவரிமாவின் இயல்புடையார்கள் மானம் போனபின் உயிரை விடுதற்குக் கருதாமல் அம்மானத்தை நிலைநிறுத்துதற்கு உயிரை விடுவார்கள். அதாவது, ஒரு தராசின் இரு தட்டுக்களில் ஒன்றில் மானத்தையும், மற்றொன்றில் உயிரையும் வைத்து நிறுத்துக்கொண்டேயிருப்பார்கள். அவ்விரண்டில் ஒன்றை விட்டாலன்றி மற்றொன்று நிலைக்காது என்னும் ஓர் நிலைமை ஏற்படுமானால், உயிரை விட்டு மானத்தை நிலைக்க வைப்பார்களேயன்றி, மானத்தை விட்டு உயிரை வைத்திருக்கமாட்டார்களென்பதாம். எனவே, கவரிமா, மயிரை இழந்த பின் உயிரை விடும். அவ்வியல்புடைய பெரியார் மானத்தை இழக்க நேரின், அது நிலைநிற்குமாறு தம் உயிரை விடுவார் என்றபடி. இதற்குக் காரணம், மானமிழக்கும் சமயத்தையறியும் பகுத்தறிவு அவருக்கு இருத்தலும், கவரிமாவுக்கு அஃது இல்லாமையுமே. இங்ஙனமன்றி, 'அவர்களும் அந்தக் கவரிமாவைப்போல மானம் அழிந்தபின் வாழமாட்டார்கள்' என்று சொல்லக் கருதின்,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் அழிவ்."

என்று வள்ளுவர் குறளமைத்திருப்பாரென்று அறிக. இவ்வாறு கூறியும், மானத்தை இழந்த பின்னும் உயிர் வைத்திருக்கும் மாக்களை, அம்மானத்தையே அருங்கல மாகக்கொண்டு வாழும் மக்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதற்கு அவ்வதிகாரத்திலே கூறும் தம் கூற்றுவமை ஒன்று மிக மிக அருமையும் சுவையுமுடையது; அத்திருக்குறள்,

> ''தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை.''

என்பது. மயிரானது, தனக்கு நிலைக்களமாகவுள்ள தலையிலிருக்கும் போது வாசநெய் முதலிய ஊட்டப்பெற்றுப், பேணி வளர்க்கப்படுதலையும், அந்நிலையினின்றும் தவறினால் அருவருத்து இகழப்படுதலையும், தவறி, உண்ணும் உணவிற்கிடந்துவிட்டால், உண்பவர்கள் சமைத்தவர்கள்மேற்பாய்ந்து சீறுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம். சற்று நேரத்திற்குமுன் (தன்னிலையில் இருக்கும்போது) புகழ்ந்து பேணப் பெற்றது, இப்போது இகழ்ந்து கூறப்படுவதைக் கண்ட வள்ளுவப் பெருந்தகையார், அதனை, தம் நிலையிலிருந்து தாழாதிருக்கும் வரை புகழப்பெற்று, அதினின்று தாழ்ந்தும் உயிர்வைத் திருந்தால் இகழப்படும் மாக்களுக்குச் சரியான உவமை யாகுமெனக் கருதிக் கூறியது, ஓர் வகை நகைச்சுவை யோடு பொருந்தி, அப்புலவர் பெருமான், தமது வாழ்க்கையில் மானத்தை உயிரினும் சிறந்ததாகக் கருதி ஓம்பி வந்திருக்கவேண்டும் என்பதையும் புலப்படுத்துகிற தல்லவா! எவனும், தன் வாழ்க்கையில் உறுதியாகக் கொண்டு போற்றப்படாததொன்றைப் பிறருக்கு வற்புறுத்திக் கூறமாட்டான் என்பதும், அங்ஙனம் கூறினும் அக்கூற்றுப் பிறரால் எள்ளி நகையாடுதற் கிடமாதலோடு, ஒரு பொருளாய் மதிக்கப்படாதென்பதும் நம்மாலறியப்பட்டனவே! திருவள்ளுவர் இவ்வுண்மையை நன்குணர்ந்தவராதலால், 'கேள்வி' என்ற அதிகாரத்துள் ''சேற்று நிலத்தில் நடப்பாருக்கு ஊன்றுகோல் உதவுவது போல, நிலவுலகத்தில் இயங்கும் மக்களுக்கு உதவுவது 'கற்றார் வாய்ச்சொல்' என்றே, 'நாவன்மையுடையார்

வாய்ச்சொல்' என்றோ, பிறவோ கூறாது "ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுவதை,

"இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்."

என்ற குறட்பாவா லறிகிறோம். இதனையே குமரகுருபர அடிகள்,

"கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரை"

என்று, நீதி நெறி விளக்கத்திற் கூறுகிறார். இனி, நமது இந்தியத் தந்தையாராகிய மகாத்துமா காந்தியடிகளும் 'ஆரோக்கிய வழி' என்னும் தமது நூலில், "என் அநுபவத்திற்குக் கொண்டு வந்து நன்மை தீமை பாராத ஒன்றை யான் மக்களுக்குச் சொல்லுவதில்லை," என்று கூறியிருக்கும் அறவுரையும் இங்கு அறிந்து கோடற்குரியது.

இனி, 'தலையினிழிந்த' என்னும் அக்குறட்பாவிற் காணப்படும் உவமையால் வள்ளுவனாருக்கு ஏற்படும் குறைபாடும், அதை நீக்கும் முறையும் மற்றொரு தலைப்பிற் காண்போம்.

மணிவாசகனார் அருளிய தம் கூற்றுவமையுட்சில,

இவர் அமைச்சராய் இருந்தவராதலால், பண்டைய அரசர்களின் பொழுதுபோக்கிற்குரிய விளையாட்டுக்களுள் ஒன்றாகிய யானைப்போரை நன்கறிந்தவர். அந்த யானைகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொள்ளுங்காலை, அவற்றின் நடுவே அகப்பட்ட குறுந்தூறுபடும் பாட்டையே உவமையாக்கித் தாம் ஐம்புலனாலே தாக்கப்பட்டு அலமருதலை உவமேயமாக்கி, "யானை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனாலரிப்புண், டேனை எந்தாய் விட்டிடுதி கண்டாய்" எனவும், அப்புலன்களாலே தாம் துன்புறுதற்கு எறும்புகள் பலவற்றின் நடுவில் அகப்பட்ட நாங்கூழ் என்னும் ஒருவகைப்புழுப் படும்பாட்டை உவமமாக்கி, 'எறும்பிடை நாங்கூழெனப் புலனாலரிப்புண்டலந்த, வெறுந்தமியேனை விடுதிகண்டாய்" எனவும்; இன்னும் அதற்கே, "மத்துறு

தண்டயிரிற் புலன் தீக்கதுவ'' எனவும், இன்னும் இவைபோலக் கூறும் பலவும் அவர் ஐம்புலனை அடக்குதலாகிய குறிக்கோளைக் கொண்டவர் என்பதையும், உலகப் பொருள்களை எத்துணை உற்று நோக்கி அறிந்திருந்தார் என்பதையும் காட்டுகின்றன. இன்னும் அப்பெரியார் தாம் பாடியருளிய கருவாசம் போக்கும் திருவாசகத்துள், தம்மை 'நாய் போன்றவன்' என்று பல இடங்களிற் கூறுகின்றார். சில இடங்களில் 'நாயினும் கடைப்பட்டவன்' என்று தம்மைச் சொல்லிக்கொள்கிறார். சற்றேறக்குறைய ஐம்பத்தொன்பது இடங்களில் இச்சொற்கள் காணப்படுகின்றன. ஒரே இடத்தில் ''நாயிற் கடையாம் நாயேன்'' என்று கூறுகிறார். இத்தொடரின் பொருள், ''நாயினும் கடைப்பட்ட நாயை ஒத்த நான்'' என்று கொள்ளப்பட்டு, முரணாகத் தோன்றுகிறதல்லவா! அது தோன்றுவாறு ''நாயினிடத்துள்ள சிறந்த குணங்கள் என்னிடத்தில் இல்லாமையால், அதனிலும் கடைப்பட்டவனாயுள்ளேன்; அதன் இழிந்த குணங்கள் என்னிடம் இருத்ததால் அதை ஒத்தவனாய் இருக்கின்றேன்'' என்று கூறுகிறார் எனக் கொண்டு, அதன் விளக்கத்தையும் தெரிந்துகொண்டால் அந்த முரண் தோன்றாது ஒழியும். நாயினிடமுள்ள சிறந்த குணங்களாவன :

1. தனது தலைவன்போலவே ஆயிர மக்கள் உடை உடுத்துக்கொண்டு ஒரே கூட்டத்திலிருந்தாலும் உள்ளே சென்றவுடனே ஐயந்திரிபற அவனைக் கண்டுகொள்ளும் ஆற்றல் நாய்க்கு உண்டு.

2. தனக்கு எப்பொழுதேனும், யாரேனும் ஒரு பிடி சோறு போட்டிருந்தாலும், தன் உயிர் உள்ளவரையிலும் அவனைக் கண்டால் தன் வாலைக் குழைத்து நன்றி அறிவைக் காட்டும்.

3. தன்னை வளர்த்தவன் சினங்காரணமாக வேற்படை கொண்டு குத்திவிட்டாலும் அப்படை தன்னுடம்பிலே தைத்திருக்கும்போதும் அவன்மீது சிறி விழாமல் தனது வாலைக் குழைத்து நன்றியறிவைக் காட்டும்.

4. தன்னைப் பாதுகாப்பவன், ஓர் புலிமீது ஏவினாலும், அதனால் தன் உயிருக்கு ஊறு விளையுமே என்று

கருதாமல், அதன்மேற் பாய்ந்து அவன் கட்டளையை நிறைவேற்றும்.

5. தன்னை யாரேனும் கல்லால் அடித்தால், தன் மீது பட்டுத் துன்புறுத்தியது இந்தக் கல்லல்லவா என்று கருதி அதனைக் கடிக்காமல், வீசினவன்மீது பாய்ந்து, காரணங் காணும் தனது ஆற்றலைப் புலப் படுத்தும்.

மக்களிடம் இந்தக் குணங்கள் காணப்படுவது மிக மிக அரிது என்பதைக் காண்போம்:

1. ஒவ்வொரு மகனும், தனக்கு உண்மையான தலைவன் யாரென அறிந்துகொள்வதில்லாதது மட்டு மன்று; பலர் அவ்வாறு ஒருவன் உளன் என்பதையே அறியார்கள். சிலர், தாம் பிறந்த சமயத்தில் (மதம்) பற்றுடையராயிருந்தும், தெளிவும் உறுதியும் இல்லாத வர்களாதலால், மிக எளிதில் மதம் மாற்றப்படுகிறார்கள். நம் நாட்டில் இது கண்கூடாகக் காணப்படுவதொன்று. இதனால் அவர்களும் தங்கள் தலைவனைத் தெளிய உணர்ந்துகொள்ளவில்லையென்பது அறியப்படுகிறது; எனவே. இந்த வகையில் நாய் மேலானது.

2. ஒரு பிடி சோறு ஒரு காலத்திற் போட்டவனைத் தன் ஆயுள்வரை நினைப்பது நாய். மக்களாகிய நமக்கு இந்த உடலைக் கொடுத்து, மனமுதலிய அந்தக்கரணங் களையும் அளித்து, அவ்வுடல் தங்குவதற்கு உலகத்தை யும் உதவி, அது நுகர்வதற்குப் போகப் பொருள்களையும் அருளியவன் ஒருவன். இந்த நான்கையும் தநு, கரணம், புவனம், போகம் என்று அறிவு நூல்கள் கூறும். ‘உடலும் உயிரும் வெவ்வேறு’ என்றும், ‘இரண்டும் ஓரினப்பொருள் அல்ல’வென்றும், ‘உடல் அசேதனம்’ (அறிவில்லாதது) என்றும், உயிர் ‘சேதனம்’ (அறிவுள் ளது) என்றும், ஆனால் ‘இவ்விரண்டையும் என்று சேர்த் தது வேறொரு சத்தி’ எனறும், ‘அஃது அவ்வாறு சேர்த் தது தன்னலத்துக்காக அன்று; உயிர்களின் நலத்திற் காக’ என்றும் நம் முன்னோர்கள் தருக்க முறையில் ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளார்கள். இந்தத் தத்துவ

ஞானம் முதல் முதலில் நம் தமிழ் மக்களிடத்திலேதான் உண்டாயிருக்கலாமென்றும், அது கைவந்தபின்னர்த் தான் தமிழ் எழுத்துக்களுக்கு உயிர், மெய் எனக்காரணம் பற்றிய பெயராக இட்டார்கள் என்றும் அறிவதற்குப் பல சான்றுகள் உண்டு. உயிர். தானும் இயங்கி, மெய்க் குள்ளே புகுந்து அதனையும் இயக்கும் இயல்பினையறிந்த நமது முன்னோர்களாகிய தமிழர்கள், தானும் தனித்து இயங்கி, மெய்யெழுத்துக்களுட்புகுந்து அவற்றையும் இயக்கும் எழுத்துக்களை 'உயிர் எழுத்து' என்னும் பெயரிட்டுக் கூறியது வியத்தற்குரியது. இன்னும் அந்த ஆன்மாவுக்கு உயிர் என்று பெயர் வைத்ததும், அதனைத் தாங்கி நிற்கும் மெய்க்கு உடல் என்று பெயர் வைத்ததும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் வியப்பைத் தருகின்றது. "உயிர்ப்பை உடையதால் அதற்கு உயிர் என்ற பெயர் வந்தது," என மாதவச் சிவஞான சுவாமிகள் 'சிவஞானமாபாடிய'த்துள் கூறியருளினார்கள். ஆனால், தத்துவஞானம் கைவரப்பெற்ற பின்னரே எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்ற பெயரிட்ட முன்னோர்கள், இறைவன் இந்த உயிரை உடலோடு சேர்த்து இயங்குமாறு செய்ததன நோக்கம், அந்த ஆன்மா வானது உய்தி பெறுதற்கு, அதாவது ஈடேறுவதற்குத் தான் என்றறிந்த அவர் 'உய்' என்ற பகுதியின் அடியாக அந்த உயிர் என்ற பெயர் கொடுத்திருக்க வேண்டு மென்று கருதினல்; அது தவருகாதன்ருே? இங்ஙனமே 'எழுத்து' என்ற சொல்லும் எழுதப்படுதலால் வந்தது என்று முதலிற்கருதப்பட்டது. பின் ஆராய்ச்சியில் 'ஒலியெழுத்துத் தோன்றிய நெடுங்காலத்திற்குப் பின் னர்த்தானே வரி எழுத்து வந்திருக்க வேண்டும்? அது வரை அந்த ஒலியெழுத்துக்கு என்ன பெயரிட்டிருந்தார் கள்? எனவே, 'எழுதப்படுதலால் எழுத்தெனப்படும்' என்ற கருத்துப் பொருத்தமுடையதன்று. ஒலியெழுத் துக்கள் வெளிப்படுதற்குச் செவிப்புலனும் அணுக்கள் பல கூடி எழுந்தாலன்றி முடியாததலால், "எழு என்ற பகுதியடியாகத்தான் எழுத்து என்ற பெயர் வந்திருக்க வேண்டும்" என்று முடிவு காணப்பட்டது.

இனி, 'உடல்' என்ற சொல்லும் 'உடு' என்ற முதனிலையடியாகப் பிறந்தது. அந்த உயிருக்கு உடைபோலுள்ளது என்பது அதன் பொருள். உடையானது நைந்து போய்விட்டால் அதனை எறிந்துவிட்டுப் புதிய உடையை ஒருவன் உடுத்துக்கொள்வதுபோலவே, ஒருயிரானது தனது உடையாகிய உடலுக்கு மூப்புப் பருவம் என்னும் நைதல் ஏற்படுமானால் அதைநீக்கி வேறு புதிய உடலை எடுத்துக்கொள்கிறது. இவ்வாறு விதுரன் என்பான், தனது தமையனாகிய திருதராட்டிரன் தன் மைந்தர்களாகிய துரியோதனன் முதலியோரை இழந்து துன்புறுங்காலை, அத்துன்பத்தைப் போக்குமுகத்தால்

''நைந்த தூசினை நீக்கியோர் கோடிநன் னியபோல்
வந்த மூப்பினை நீக்கியோர் சனனத்தில் மருவும்
இந்த வாறுமூப் பொழிந்தொழிந் தெடுத்திடும் சனனம்
அந்த மாதியை அறிந்தவ னேதன்னை அறிந்தோன்''

என்று கூறியதாக, அஷ்டாவதானம் அரங்கநாதக் கவிராயர், தாம் பாடிய பாரதத்தில் கூறுகின்றார். இன்னும் அவ்விறைவன் செய்யும் உபகாரத்தை, காணும் உபகாரம் என்றும் காட்டும் உபகாரம் என்றும் பல படக் கூறுவார்கள். நம் கண்ணுக்குப் பார்க்கும் ஆற்றலுண்டு; அதற்குச் சாதனமாகச் சூரியன் ஒளியும் விளக்கொளியும் இருக்கின்றன; எனினும் அக்கண்ணுக்கு ஆன்மபோதமானது (உயிரின் அறிவு) உதவினாலன்றிப் பொருளைக் காணாது. நாம் ஒரு பொருளைப் பார்த்துக்கொண்டேயிருப்போம். ஆனால் அப்பொருளைக் கண் காணாது. ஏன்? சிந்தனை வேறொன்றைபபற்றியிருப்பதால்; அதாவது; ஆன்மபோதம் துணை செய்யாமையால். அதுபோல நம் உயிருக்கு அறியும் ஆற்றல் இருப்பினும் இறைவனது அருட்சத்தி துணையாக இருந்து உதவினாலன்றியறியாது. எனவே, நாம் ஒரு பொருளை அறிதற்காக, அச்சத்தியானது தான் அறிந்து அறிவிப்பதைத்தான் காணும் உபகாரமென்றும் காட்டும் உபகாரமென்றும் அறிவு நூல்கள் கூறும்.

இன்னும் இதன் விரிவைச் 'சிவஞானபோதம்' முதலிய அறிவு நூல்களுட்காண்க,

இந்த உயிரானது இறைவன் தன் பேரருளால் அருளிய உடலை எடுத்து உலகத்தில் உலாவத் தலைப்படுமுன் இருந்த நிலையையும், அதன் பின்னுள்ள நிலையையும், அவ்வுடலோடு உலாவுங்கால் அவ்விறைவன் வகுத்த கட்டளைப்படி நடக்காவிட்டால் நடைபெறுந் தண்டனையையும், முடிவில் அப்பொருமான், 'நீ அடைய வேண்டிய குறிக்கோள் இது,' என அருளுவதையும் கீழ் வரும் தாயுமான அடிகளாரின் ஊனையும் உயிரையும் உருக்க வல்ல பாடலாற்காண்க. அது,

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாம்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதம்ஊட்டிப்
பெரியபுவ னத்திடைப் போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட்
டிடருற உறுக்கியிடர்தீர்த்(து)
'இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மின்' என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணு மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!"

என்பது.

எனவே, இத்துணை உதவிகள் செய்த இறைவனை நினையாத மக்களைவிட நாய் சிறந்ததல்லவா!

3. மூன்றாவதாகக் காட்டிய நாயின் நற்குணத்தை "யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார், கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்; யானை, அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல், மெய்யதா வால் குழைக்கும் நாய்," என்ற நாலடியாராலும் அறிக.

திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி வரும் மக்கள் ஆயிரம் பேரை எடுத்துக்கொண்டால், 'கூடுமன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்' என்னும் பெரிய புராணப்படி யாதொரு பயனையும் வேண்டாதபடி வணங்குபவர் அவருள் ஒருவரேனும் உண்டா என்பது உறுதி அன்று. எல்லோரும பயனை விரும்பித்தான் போகிறார்கள். ஜனவரித் தொடக்கத்திலிருந்து மார்ச் வரை திருக்கோயில்களில் மாணவர்கள் கூட்டமும், பெற்றோர்கள கூட்டமும் மிகுதியாகக் காணப்படும். காரணம், பள்ளியிறுதித்தேர்வு முதலிய தேர்வுகளுக்குத் தொகை கட்டியிருப்பார்கள்; தேர்வு பெறுதற்குத்தான் பெற்றோர்கள் நாள்தோறும் வந்து தேங்காய் உடைத்து, "பெருமானே! என் பிள்ளையைத் தேர்ச்சி பெறும்படி செய்தருள வேண்டும்," என்று தனித்தனி வேண்டிச் செல்வார்கள். மகன தேர்ச்சி பெறவில்லையாயின், கடவுளுக்கு என்ன கிடைக்குமென்பது நாமறிந்ததே! ஒரு பயன் கருதிச் செய்யும் பத்தியானது, அது கிடைக்காவழி மாறி விடுமாதலாலேதான் 'நிராசையின்றேல் தெய்வம் உண்டோ?' எனத்தாயுமான அடிகள் கூறியருளுகின்றார். மேலே காட்டியவாறு எத்துணையோ உதவிகளை உயிருக்குள் உயிராய் இருந்து செய்துவரும் இறைவன், தான் இரண்டு திங்கள் உடைத்துத் தன் வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோன தேங்காய்க்காகத் தன் மகனைத் தேர்ச்சி பெறச் செய்யவில்லை என்பதற்காக வசைமாரி பொழியும் மனிதனைவிட, தன்னை வளர்த்தவன் குத்திய வேலானது தன் உடலிலே தைத்திருக்கும்போது நன்றி அறிவைக் காட்டும் நாய் எத்துணைச் சிறந்தது என்று சொல்லவும் வேண்டுமா!

4. தன் தலைவன் ஏவியதைச் செய்வது நாய்

இத்துணை உதவி செய்யும் அவ்விறைவன், மக்கள் நடப்பதற்குரிய வழிகளை வகுத்துத்தந்தான். இதனைத் திருவள்ளுவர், "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி" என்று கூறி, அவ்வழியில் நிற்பவர் பெறும் பயன் வீடுபேறே என்பார், "நின்றார் நீடு

வாழ்வார்" என்றார். அவ்வழி 'இன்னது செய்' என விதி முகமாகவும், 'இன்னது செய்யற்க' என விலக்கு முகமாகவும் இருக்கும். திருமூலரும் இதனை,

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்;
நெறியில் வழுவில் நெருஞ்சில்முட் பாயும்;
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முள் பாயகில் லாவே."

என்று திருமந்திரத்தில் கூறி, நெறியில் செல்லாதவர்க்கு நேரும் கேட்டையும் தெரிவித்தருளுகின்றார். அவ்விறைவனும், அவன் அருள் பெற்ற பெரியோர்களும், அறநூல் வாயிலாகவும், நீதிநூல் வாயிலாகவும் நமக்குப் பிறப்பித்த கட்டளைகள் நம்மாற் செய்யக் கூடியனவே. அவற்றைச் செய்தால் சிறந்த பயனையும் அடைவோம். ஆனால், நாம் அவ்வழியிற் செல்வதில்லை. எளியவற்றை மேற்கொண்டு, நல்லபயனை அடையக் கருதாதமக்களை விட, தன் உயிர்க்கு இறுதி நேருமென்றறிந்தும், எஜமானனுடைய கட்டளை என்பதொன்றையே கருதி, புலிமேலேயும் பாயும் நாய் எத்துணைச் சிறந்தது என்பது சிந்திப்பாருக்குத் தெரியாததொன்றன்று.

5. காரணம் காணும் இயல்புடையது நாய்

நாயின் இந்த இயல்பினைக் கூறி, மக்களிடம் அது காணப்படவில்லையே என்று, 'ஞானமிர்தம்' என்ற நூல் கூறுகிறது. அஃது எங்ஙனமென்று காண்போம், நமக்கு வரும் இன்பத் துன்பத்திற்கு மூலகாரணமாக உள்ளது நாம் முன் செய்த வினையே. ஆனால், அவ்வினை, உயிர்கள் மூலமாகத்தான் அப்பயனைத்தரும். எனவே, நமக்கு ஒரு மனிதன் மூலமாகத் துன்பம் வருமாயின அதற்குக் காரணம் நாம் செய்த தீவினையென்று உணராமல், துன்பம் செய்தவன் மீது சீற்றம் கொள்கிறோம். அவன், நாய் மேற்பட்டு அதற்கு ஊறு விளைத்த கல்லைப் போன்றவன்; நமது வினை, அந்நாய்மேற் கல்லை வீசியவனைப் போன்றது; எந்த நாயும் கல்லைக் கடிப்பதில்லை; 'பகுத்தறிவுள்ளோம்' எனப் பெருமையடித்துக் கொள்ளும் நாமோ, அந்த மனிதன்மீது சினம் கொள்கிறோம்; எனவே, நாம் நாயினும் கடைப்பட்டவர்களாகிறோம்.

"இளையோன் துரந்த குனில்வாய்ச் செல்லாது
இளையோர்ச் சினவும் வளைவாய் ஞமலியின்
அளியரோ அளியர் என்னை
ஒளிகொள் காரணம் உன்னு தோரே."

என்பது ஞானமிர்தம்.

இங்கே ஐயந்தோன்றலாம். அது என்னவெனில், 'அவ்வாறு ஊறு செய்தவனுக்கு அது பாவமாகாதா?' என்பது. அவன் தானே அதைச் செய்துவிட்டதாகச் செருக்குற்றுத் தன்மேல் அந்த வினையையேற்றிக் கொள்கிறான் என அறிக.

இங்ஙனம் மேலே காட்டப்பட்ட நாயின் குணங்கள் ஐந்தும மக்களிடம் காணப்படாமையால், மக்கள் அதனினும் கீழானவராகக் கருதப்படுகின்றார்கள்.

இனி, 'நாயனையேன்' எனத் தம்மை நாய்க்கு உவமிப்பதற்குரிய பொதுத் தன்மை என்னவென்று பார்ப்போம்: நாயானது தான் உண்டு கக்கிய மிச்சிலைப் புதிதாக ஓர் உணவை உண்பது போன்று சிறிதும் அருவருப்பு இன்றி உண்ணும். வேறு எந்தப் பிராணிகளிடத்திலும் இதைக் காண முடியாது. ஆனால், மக்களாகிய நாம் நுகர்ந்த பொருளிலே சிறிதும் வெறுப்பின்றி மேலும் மேலும் அதையே நுகர்கிறோம். இக்கருத்தை,

"உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவநாள் எல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற் றிருக்கும்
விழவரு வீதிவெண் காடா!
அண்டரே போற்றும் அம்பலத் தாடும்
ஐயனே! உய்யுமா றருளே."

என்ற பட்டினத்தடிகள் திருவாக்கால் அறிக. எனவே, நாயிடத்தும் நம்மிடத்தும் காணப்படும் பொதுத் தன்மை நுகர்ந்த பொருளில் வெறுப்புக் கொள்ளாதிருத்தல்.

இனி இரண்டாவதாக நாயினிடத்துக் காணப்படும் குற்றம், குறிக்கோளில்லாது அலைந்துகொண்டிருத்தல்.

இது பற்றித்தான் 'நாய்க்கு வேலையுமில்லை; ஓட்டத்திலே குறைவுமில்லை,' என்ற பழமொழியும் தோன்றி வழங்குவ தாயிற்று. மக்களிற் பலரும் குறிக்கோளில்லாது இயங்குபவர்கள். 'இலட்சியமின்றி யாரும் எதையும் செய்யமாட்டார்களே!' எனின் அஃதுண்மைதான்; ஆனால் அக்குறிக்கோள் மிக மிகத் தாழ்ந்ததாக இருக்கும். நாயின் ஓட்டத்திலும் அக்குறிக்கோளிருக்கும். அஃதென்னை? குடுகுடுவென்றோடி. அங்குள்ள கட்டுத் தறியோ, கல்லோ கண்ணிற்பட்டதொன்றை மோந்து பார்த்துச் சிறுநீர் கழிக்கும். எனவே, நாயினிடத்தும் மக்களிடத்தும் காணப்படும் பொதுத்தன்மை சிறந்த குறிக் கோளின்றி அலைதல். மக்களிடம் அஃதில்லாமையை,

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் வயல்கள் சூழ்ந்த திருக்கொண்டீச் சுரத்துளானே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தாலும் அறிக. இன்னும் அறிஞர்கள் சிந்திப்பார்களானால், 'கடைப்பட்டவன்' என்று கூறியதற்குக் காட்டிய காரணங்கள் ஐந்தைத் தவிர, வேறு காரணங்களும், 'அனையேன்' என்றதற்குக் காட்டிய இரண்டு காரணங்களைத் தவிர வேறு காரணங்களும் தோன்றலாம்.

இனி, "மாணிக்க வாசகர், பட்டினத்தடிகள், திருநாவுக்கரசர் என்னும் இவர்கள் தங்களிடம் அக்குறைபாடுகள் உள்ளனவென்று பாடல்களிற் சொல்லியிருக்க, அவற்றை ஏனைய மக்களிடம் ஏற்றிக் கூறுவதற்குக் காரணம் என்ன?' என்று சிலர் ஐயுறலாமன்றோ! மெய்யறிவு பெற்ற பெருமக்கள் பாடல்களில், "எம்மிடம் நிறையக் குறைபாடுகள் உள்ளன" என்று அவர்கள் பாடியிருப்பதற்குக் காரணம் இரண்டு: ஒன்று, தம் வாழ்க்கையில் ஓர் அணுவும் தோல்வி ஏற்படலாகாதென்த் திட்டமிட்டு வாழுங்கால் ஓர் அணுவளவு தோல்வி ஏற்படினும், அதனை மலையளவாகக் கருதி இறைவனிடம் முறையிடுதல்; இரண்டாவது, 'மக்களிடம்

காணப்படும் தீய செயல்களைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு சொல்லுதல். இவ்வாறு கொள்ளாவிட்டால் பல தவறுகள் நேரும்.

இங்ஙனம் ஐம்பத்தொன்பது இடங்களிலே, தம்மை "நாயினும் கடைப்பட்ட நாய் போன்றவன்" என்று சொல்லிக்கொண்ட திருவாதவூரடிகள், "அத்துணை இழிந்த என்னை ஓர் பொருளாகக் கருதி இறைவன் ஆட்கொண்டதற்குக் காரணம் அவன் பேரருளே அன்றி என் தகுதி அன்று" என்று திருவாசகத்துட் பல இடங்களிற் கூறி, அவன் தனக்குச் செய்த சிறப்பு "நாய்க்குத் தவிசிட்டதுபோலும்" என்றும், "நாய்மேலே தவிசிட்டது போலும்" என்றும், "நாயைச் சிவிகையில் ஏற்றுவித்தது போலும்" என்றும் ஆறு இடங்களிற் கூறியருளுகின்றார். திருவாசகத்திலுள்ள இறுதிப் பாடலும் "செம்மை நலமறியாத" என்று தொடங்கி, "நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த, அம்மை எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே" என்று முடிக்கின்றார். இங்ஙனம் ஆறு இடங்களில் உவமை வடிவமாக மூன்று விதமாகக் கூறியதன் கருத்தும் பொருளும் யாவை எனக் காண்போம். "நாய்மேற் றவிசிடுதல்" எனபது நமது நாட்டில் வழங்கும் பழமொழிகளுள் ஒன்று. பழமொழிகளை எடுத்து உவமையாக ஆளுதல் புலவர்களின் இயல்பு. அப்பழமொழியின் கருத்தைக் கூற வந்த, 'பழமொழி வெண்பா' என்னும் நூலாசிரியர்,

> "பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
> சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
> பூமேல் இசைமுரலும் நாட! அதுவன்றே
> நாய்மேற் றவிசிடு மாறு."

என்று கூறுகின்றார். எனவே, தகுதியுடைய ஒருவருக்குச் செய்யக்கூடிய சிறப்பு ஒன்றினை, அத்தகுதி சிறிதுமில்லாத ஒருவனுக்குச் செயதுவிடுதலே அப்பழமொழியின் கருத்து எனபது பெறப்பட்டது. இனி, "நாய்க்குத் தவிசிட்டது; நாய்மேற்றவிசிட்டது; நாயைச் சிவிகையில் ஏற்றுவித்தல்" என்றமூன்றுதொடர்களுக்கும், முறையே

"அரசனுக்கு, அல்லது பெரியோருக்கு இடத்தகுந்த ஆசனம் ஒன்றை நாய்க்கு இடுதல்" என்றும், "யானை மீது இடவேண்டிய அம்பாரி ஒன்றை நாய்மேல் இடுதல்" என்றும் "அரசர்களை ஏற்றுவிக்கும் சிவிகையில் நாயை ஏற்றுவித்தல்" என்றும் பொருள் காண்க.

இனி, இவர் கூறும் உவமை நலத்தை மற்றொரு தலைபபிற் காண்போம்.

சேக்கிழார் செப்பும் தற்கூற்றுவமை

தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்துட் காணப்படும் தம் கூற்றுவமைகள் பலப்பல; அவற்றுட்சில:

கண்ணப்ப நாயனார் புராணத்தில், பிறர் கூற்றுவமைக்கு உதாரணமாக, நாணனாகிய வேடன், காடனாகிய வேடனுக்குச் சொன்னதிலுள்ள உவமை ஒன்றைக் காட்டி அப்பெருமானது பரந்த புலமையை அறிந்தோம். அந்தப் புராணத்திலே காணப்படும் தம் கூற்றுவமையொன்று, அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளை உணர்வதற்குச் சிறந்த கருவியாக உள்ளதாதலால் அதனைக் காண்போம். வேடர்கள் ஓர் இடத்தில், தாங்கள் வளர்க்கும் பார்வைவிலங்குகளை நிறுத்தி, மற்றைக் காட்டு விலங்குகள் மறைந்து எங்குத் தங்கியிருக்குமோ, அந்த இடம் வரை மரங்களை வெட்டி வழி உண்டாக்கித் தங்கள் ஆரவார ஒலியால் அவ்விலங்குகளைக் கிளப்பிவிடுவார்கள்; அப்போது அப்பார்வை மிருகங்கள் கத்தும்; அதைக் கேட்ட அவ்விலங்குகள் தங்களினம் அங்கு இருப்பதாகக் கருதி ஓடி, அங்கே அவர்கள் கட்டியிருக்கும் வலைகளில் அகப்பட்டுக்கொள்ளும். வலிய விலங்குகள் சில அவ்வலையை அறுத்துக்கொண்டு ஓடுங்கால், அவர்களால் அங்கு நிறுத்தப்பட்ட நாய்கள் அவைகளைப் பற்றிக்கொள்ளும். வலையை அறுத்துக்கொண்டு ஓடும் விலங்குகளை நாய்கள் பற்றிக்கொண்டன. இச்செயலுக்கு ஆசிரியர் கூறும் உவமையாவது: ஓர் ஆன்மாவானது இந்நிலவுலகத்தில், தன்னைப்பற்றியுள்ள நல்வினை தீவினையாகிய வலையை அறுத்துக்கொண்டு இறைவனை நோக்கி ஓடும் போது, அதனுடைய மனத்

தைத் தமக்கு உறுதுணையாக்கிக்கொண்டு, அது வாயிலாக அவ்வான்மாவைப் பற்றிக்கொள்ளும் ஐம்புலன்கள்'' என்பது. இதனை உணர்த்தும் செய்யுள்,

''பலதுறை களின்வெரு வரலொடு பயில்வலை யறநுழைமா
உலமொடு படர்வன தகையுற உறுசின மொடுகவர்நாய்
நிலவிய இருவினை வலையிடை நிலைசுழல் பவர்நெறிசேர்
புலனுறு மனவிடை தடைசெய்த பொறிகளின் அளவுளவே.''

என்பது.

இன்னும், ஏனாதிநாத நாயனாருடன் அதிசூரன் என்னும் பகைவன் எதிர்த்துப் போர்செய்யும் போது, அவனுக்குத் துணையாய் வந்த வீரர்களுள் நாயனார் வாளுக்கு இரையானவர்கள் போக, மற்றவர்களெல்லாம் அஞ்சி ஓடிவிட்டார்கள். இதற்கு உவமை சொல்ல வந்த ஆசிரியர் 'சிங்கத்தைக் கண்ட யானைகள் ஓடுவது போல ஓடினார்கள்' என்பது போன்ற உலகியல் உவமைகள் எத்துணையோ சொல்லலாமன்றோ! ஆனால், ஆசிரியர் அவ்வுவமைகளில் யாதுங் கூறாமல், ''ஒருவனுக்கு நிலையான மெய்யுணர்வு உதிக்குமாயின், அவனிடமுள்ள உட்பகையாகிய காமம், குரோதம் முதலியவைகள் ஓடுவது போல ஓடினார்,'' எனக் கூறுவது அவரது தூய வாழ்க்கையின் குறிக்கோளைக் காட்டுகின்றது. அச்செய்யுள்,

''தலைப்பட்டார் எல்லாரும் தனிவீரர் வாளிற்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போல் ஆயினார்.''

என்பது.

இன்னும் இளையான் குடி மாறநாயனாரென்பார், இரவிலே தமது வீட்டிற்கு வந்த அடியாரை, (இறைவனே அடியாராய் வந்தான்) உண்பித்தல் வேண்டி, தமது இல்லில் யாதொரு பொருளுமில்லாமையால், நற்குணம் நிறைந்த கற்புடைய மனைவியாரோடு ஆலோசித்து, அன்று பகலில் நாற்றங்காலிலே தெளித்த விதை நெல்லை அள்ளிக்கொண்டு வந்து, மனைவியாரிடம் கொடுத்துவிட்டு, 'ஏதேனும் கறி செய்ய வேண்டுமே!'

என்ற கருத்துடையவராய்க் கொல்லைப்புறம் சென்று, குழி நிரம்பி மேலே வாராத கிரையைப்பறித்தார். அதைப் பறித்த செயல் ஆசிரியருக்கு இலைக்கறி பறிப்பதாகக் காட்சியளிக்காமல், பிறவிக்குக் காரணமாக உள்ள பாசத்தை விளைக்கின்ற ஆணவ மலத்தை வேரோடு பிடுங்கியதாகக் காட்சியளிக்கிறது. இதனை,

"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

என்னும் செய்யுளால் அறிக.

இன்னும், ஏகாலியர் மரபிலே தோன்றிய திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்கள் உடைகளை வாங்கி வெளுப்பதை,

"தேசுடைய மலர்க்கமலச் சேவடியார் அடியார்தம்
தூசுடைய துகள்மாசு கழிப்பார்போற் றொல்லைவினை
ஆசுடைய மலமூன்றும் அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளில்......

என்ற செய்யுளாற் கூறுகின்றார். எனவே, அவர் தம் கூற்றாகச் சொல்வதாக மேலே காட்டிய உவமைகளெல்லாம் அவருடைய புலமை நுட்பத்தைக் காட்டுவதோடு, அவரது வாழ்க்கையின் குறிக்கோள் எது என்பதையும் காட்டுகின்றன என்பதை அறிக.

உவமைகளைக் குற்றங்களைந்து ஆளுதல்

பழைய இலக்கிய ஆசிரியர்களுட்பலர், தமக்கு முற்காலத்திலிருந்தே கையாண்டு வரும் உவமையையாதல், தாமே புதிதாக அறிந்த உவமையையாதல் தம் நூலிற் கூறக் கருதினால், அதைத் தம் கூர்த்தமதியில் வைத்து நன்கு ஆராய்வர். அவ்வாராய்ச்சியால், அந்த உவமையில் தருக்கநூலார் கூறும் 'அதிவியாப்தி' முதலிய குற்றங்கூற இடமுண்டு என அறிவாராயின், அங்ஙனம் கூறுதற்குரிய பகுதியை விலக்கி, அதனைத் தூய்மைப் படுத்தியே கையாளுவர். இன்றேல் அப்படியே ஆளுவர். இந்த முறையிலே சில உவமைகளைச் சிந்திப்போம்: திருவள்ளுவர் தம் கூற்றாகக் கூறிய "தலையினிழிந்த மயிரனையர்" என்ற உவமையை மேலே அறிந்தோம்;

அப்பகுதியிலேயே, இந்த உவமை நயத்தை மற்றொரு 'தலைப்பிலும் காண்போம்'' என்று கூறினேமாதலால் முதலில் அதையே எடுத்துக்கொள்வோம்.

'சுக்கிரநீதி என்னும் நூலில், அவ்வாசிரியர், '' அரசர்கள் தம் நிலையிலிருந்து தவறி (மானம் இழந்து) வாழ்வார்களாயின்' தலையிலிருந்து தவறிய மயிரைப்போலவும் வாயிலிருந்து நழுவிய பல்லைப்போலவும், விரலிலிருந்து அகற்றிய நகத்தைப்போலவும் கருதப்படுவார்கள்'' என்று கூறினர். நம் செந்நாப்போதார், சுக்கிரநீதி ஆசிரியருக்குக் காலத்தாற் பிற்பட்டவராயின், அந்நூலைப் படித்து அதனை அறிந்திருக்கலாம். முற்பட்டவராயின் தம் நுண்ணறிவால் ''ஒரு மகன் தனக்குரிய மக்கட்டன்மையை உடையவனயிருக்கும்போது, அறிஞர்களால் எவ்வாறு மதிக்கப்படுகின்றான்? அவன் அந்நிலையிலிருந்து தவறிவிடுவானயின் எங்ஙனம் அவமதிக்கப்படுகின்றான்?'' என ஆராய்ந்தால் மேலே காட்டிய மயிர், பல், நகம் என்னும் மூன்றையும் அறிந்து ஆண்டிருக்கலாமல்லவா? அங்ஙனம் ஆளாமல், பல், நகம் இரண்டையும் நீக்கி மயிரை மட்டும் எடுத்தாண்டிருப்பதற்குக் காரணம் யாதாயிருக்கலாமென அறிய வேண்டும். 'சுக்கிரநீதி ஆசிரியருக்குத் தோன்றிய அவை, திருவள்ளுவருக்குத் தோன்றவில்லை' என ஓர் காரணம் கூறதாம். அஃது உலகத்தார் உள்ளமனைத்தையும் அளந்தறிந்து ஒன்றே முக்கால் அடியாற்கூறிய அவரது பரந்த புலமைக்குப் பொருந்தாது. அடுத்தது தம்மால் நீக்கப்பட்ட பல், நகம் என்னும் இரண்டும் தம் கருத்துக்குப் பொருந்தாமல் விட்டிருக்க வேண்டும் என்பது. அவை உவமையாதற்குப் பொருந்தாமையைச் சிந்தித்துக் காண்போம்.

முதலாவது :— மக்கள் நிலை உயர்ந்த நிலை. அந்நிலையினின்று தவறியவர்களுக்குக் கூறும் பொருளும் உயர்ந்த நிலையிலிருந்து தவறியதாக இருக்கவேண்டும். அக்கருத்தோடு நோக்கின், மயிர் முதலிய மூன்று பொருள்களுள் மயிரே உயர்ந்த இடத்திலுள்ளது. மற்றைய இரண்டும் அதனிலும் தாழ்ந்த இடத்திலே உள்ளன.

இரண்டாவது:—மக்கள் தம் நிலையினின்று தாழாமல் இருப்பார்களேயானால் எல்லோராலும் போற்றப்படுகின்றார்கள். மயிரும் தன் நிலையாகிய தலையிலிருக்கும் போது எல்லோராலும் எண்ணெய் இடுதல் முதலியவற்றாலே போற்றப்படுகிறது. மற்றைய இரண்டையும், அவை தத்தம் நிலையிலிருக்கும்போதுகூடப் போற்றுவாரைக் காணோம். 'பல்லுக்குத் தங்கப்பூண் கட்டியிருத்தலைக் காண்கின்றோமே' எனின், அவ்வாறு செய்வார் மிகச்சிலரேயன்றிப் பலரல்லர். அவர்களும் பற்களில் ஆட்டம் காணப்படும்போது அவை ஆடாமல் உறுதிப்படுத்தும்பொருட்டுச் செய்வதேயன்றி அழகுக்காகச் செய்துகொள்வதில்லை. அதுவும் இக்காலத்திற் காணப்படுவதொன்று.

மூன்றாவது:—மக்கள் தம் நிலையினின்று தவறினால் நூல் வழக்கு, உலக வழக்கு என்னும் இரண்டிலும் மிக மிக இகழப்படுதலைக் காண்கின்றோம். நூலில் இகழப்படுதலை, இராவணன் முதலிய தீச்செயலுடையாரைக் கம்பர் முதலிய புலவர் பெருமக்கள், இராமாயண முதலி நூல்களுட் கூறுவதாலும், உலகவழக்கில் அவர்கள் எள்ளப்படுதலை மக்கள் கூறும் பழிச்சொற்களாலும் அறிகின்றோம். மயிரும் தன் நிலையினின்றும் தவறுமாயின் அவ்விரண்டு வழக்கிலும் இகழப்படுதலை நுனித்து அறிக. எனவே, இக்காரணங்களாலேதான் பொய்யாமொழியார், நகம் பல் இரண்டையும் நீக்கினரேயன்றி, வேறு காரணமில்லையென்பதை அழுத்தமாக உணர்ந்துகொள்ளக்கடவர்.

மணிவாசகத்துட்காணப்படும் மாசற்ற உவமைகள்

இனி, இங்ஙனமே முன் கூறி வந்த பழமொழி வடிவமாக உள்ள உவமை ஒன்றைத் தம் கருத்துக்குப் பொருந்துமாறு தூய்மையாக்கித் திருவாசகத்துள் மணிவாசகனார் ஆளும் திறத்தைக் காண்போம்:

'இருதலைக்கொள்ளி எறும்பு' என்பது நம் நாட்டில் வழங்கும் பழஞ்சொற்களுள் ஒன்று, இதனை எடுத்து உவமையாக ஆளுதலை நூல் வழக்கு உலக வழக்கு என்னும் இரண்டிலும் காணலாம். எந்த நிலையில் இந்த

உவமை எடுத்தாளப்படுகின்றதென்பதை நோக்கின், ஓர் மகன் ஓர் இடையூற்றில் அகப்பட்டு அதனினின்றும் தப்புவதற்கு ஒரு வழியுமின்றிக் கலங்கும் நிலைமைக்கு எடுத்தாளப்படுகின்றதென்பது புலனாகும். அங்ஙன மாயின் இந்த உவமையின் இயல்பு என்ன ?

ஒரு கோலின் இரண்டு முனைகளிலும் நெருப்புப் பிடித்து எரியுங்கால், அதன் நடுவில் அகப்பட்ட எறும் பானது தப்ப வழியின்றித் தவிப்பது, எந்த முனைப்பக்கம் சென்று தப்பலாம் எனினும், அங்கு நெருப்பு இருக் கிறது. எனவே, அது தப்ப வழியின்றி இருபுறத்து முள்ள தீயானது நெருங்க நெருங்கத் துன்பம் மிகப் பெற்று இறுதியில் அழிந்துவிடும். ஆதலாற்றான் இது மேற்காட்டிய நிலைக்கு உவமையாகியது.

இந்த உவமையை எடுத்து ஆளக்கருதிய மாணிக்க வாசகர், இதனை அப்படியே எடுத்து ஆளாமல், சிறிது வேறுபடுத்தி ஆள்கிறார். அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து காண்போம். கீழே கிடக்கும் கோல் ஒன்றின் இரண்டு முனைகளிலும் பிடித்து எரியும் நெருப் பானது நெருங்கி வரவர, அதன் நடுவே உள்ள எறும் பானது, சூடு தாக்கப்பெற்று உடல் துடிக்கப்பெற்றுக் கீழே இறங்கிவிடும். அந்நிகழ்ச்சி அதன்கண் இயல்பா கவே நிகழ்வது ஒன்று. வெம்மை மிகுதியால் உடல் துடிக்குங்காலை அக்கோலில் அதற்கு இருந்த பிடிப்பு விட்டுப்போகும். விட்டால் அக்கோலிலிருந்து அது கீழே விழும். விழுந்தாலும் அது இறக்காது.

'அக்கோல் கீழே கிடக்கும் நிலையிலன்றி நிறுத்தப் பட்டதாக இருப்பின் அதன் நடுவே உள்ள எறும்பானது துடித்துக் கீழே விழுங்கால் மேல் நோக்கி எரியும் நெருப் பிற்பட்டு மாய்ந்துவிடுமே!' எனின், அதற்கு இருதலைக் கொள்ளி ஒன்பது பொருந்தாதென அறிக. என்னை? கீழே கிடக்கும் கோலினது இரு முனையையும் தலை யென்று சொல்லலாமேயன்றி, நட்டிருக்கும் கோலின் இரண்டு பகுதியையும் இருதலை என்று சொல்லப்படா மையால் எனக. 'பின் எவ்வாறு கூறலாம்?' எனின், அடிநுனியென்றுதல், மேல், கிழ் என்றுதல் சொல்லலாம்.

இனி, 'பத்து அடிக்கு மேலே, உத்திரமுதலியவற்றால் தாங்கப்பட்டுக் கிடக்கும் கோலின் இரு தலையிலும் நெருப்புப்பிடித்து எரிந்தால் அதன் நடுவில் அகப்பட்ட எறும்பு அழியுமல்லவா?' எனின், அப்பொழுதும் அது சாகாது. துடித்துக் கீழே விழும். எலும்பற்ற பிராணியாதலால் அது சாவதில்லை. நமது வீட்டின் மேல் பாகத்திலிருந்து சில சமயம் பல்லி என்னும் பிராணி கீழே விழும். விழுந்த உடனே ஒரு நொடிப்பொழுது கிடந்த உடனே விரைவாக ஓடுவதை நம்முட்பலர் பார்த்திருக்கக்கூடும். அவ்வளவு உயரத்திலிருந்துநாம் விழுந்தால் உடனே சாக்காடோ, அல்லது மருத்துவசாலைக்கு எடுத்துப் போகப் பெறுதலோ நேரும். எனவே, இருதலைக்கொள்ளி எறும் பானது சிறிது துன்புற்றுப் பிழைத்துக்கொள்ளுமே யன்றிச் சாகாது என அறிகிறோம்.

இனி, அந்த உவமையை எடுத்து ஆளக்கருதிய வாதவூர் வள்ளல் இறுதி வரையிலே பெருந்துன்பத்தை யடைந்து முடிவிலே அழிவையும் பெறுதற்கு அதனைச் சிறிது வேறுபடுத்தி ஆள நினைக்கின்றார். எவ்வாறெனின், அக்கோல், மூங்கில் அல்லது கொட்டைத்தண்டுபோல உள்ளே துவாரம் இருக்க, அதில் ஓர் எறும்பு அகப்பட்டுக் கொண்டகாலை, இரண்டு முனையிலும் நெருப்புப் பிடித்து எரிந்தால் அது பெருந்துன்பமுற்று இறுதியிலே சாதல் ஒருதலை. எனவே, 'இருதலைக்கொள்ளி எறும்பு' என்னும் தொடரைக் கொள்ளி என்னும் சொல்லுக்குப்பின் 'உள்' என்ற சொல்லைச் சேர்த்து,

> "இருதலைக் கொள்ளியின் உள்எறும்பொத்து நினைப்பிரிந்த
> விரிதலை யேனை விடுதிகண்டாய்"

எனத் தமது அருமைத்திருவாசகத்திற் கூறியிருப்பது, ஆழமாகச்சிந்தித்து அறியுமாறு நம்மை ஊக்குவதோடு, அப்படி அறிந்த பின் நம்மை அது பேரானந்தப் பெருங் கடலினுள்ளே திளைக்குமாறு செய்தலையும் அறிக. இது 1936-ஆம் ஆண்டு, பெரிய புராண நிறைவு விழாவில் என்னாற்பேசப்பெற்று, 1943-ஆம் ஆண்டு 'இந்திரா' என்னும் பத்திரிகையில் வெளி வந்ததுமாகும். இதனைத் தம் கருத்தாகப் பின்னர்ச் சிலர் எழுதிக்கொண்டார்கள்.

இன்னும் இப்புலவர் பெருமான் இறைவனைக் கடலாக உருவகப்படுத்திக் கூறும் பகுதிகள் பலவற்றைத் திருவாசகத்துட் பல இடங்களிற் காணலாம். உருவகம் என்பது உவமையின்மற்ருெரு வடிவமேயன்றிவேறன்று. உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் கூறுதல் உருவகமாகும். 'சிங்கம் போன்ற வீரன்' என்பது உவமானம். அத்தொடரையே 'வீரனாகிய சிங்கம்' என்று கூறினால் அஃது உருவகமாகிவிடும். இறைவனைக் கடலாக உருவகம் செய்து கூறப்புகுந்த ஆளுடைய அடிகள், உவமையிற் காணப்படும் குற்றங்களைக் களைந்து ஆளுதல் போல, தாம் கூறும் அவ்வுருவகத்திலும் அவற்றைப்போக்கி ஆளும் திறன் நினைந்து நினைந்து மகிழத்தக்கது. கடலிற் காணப்படும் குற்றங்கள் (அதாவது நமது நுகர்ச்சிக்கு இடையூருக உள்ளவை) யாவை? ஒன்று, அலைமோதுதல்; மற்ருென்று, நிலை மாறுதல்; வேருென்று, உப்பாய் இருத்தல். அலையால் உளதாகும் தீங்கினைச் சொல்லவேண்டுவதேயில்லை. "சமுத்திரத்தின் அலை ஓயப்போவதுமில்லை; தம்பி மூழ்கித் தர்ப்பணம் செய்யப்போவதுமில்லை," என்னும் பழமொழியே அதனை விளக்குவதற்குப் போதியதாகும்.

கடல் நிலை மாறுதலை வரலாற்று நூல்களால் அறியலாம். மலைகளுட்பெரிதாக மதிக்கப்படும் பனி மலையானது ஒரு காலத்தில் நீருள் மூழ்கியிருந்ததென்றும், குமரிக்குத் தெற்கே இப்பொழுது நீர்ப்பரப்பாகக் காணப்படும் சுமார் எழாயிரம் கல் தொலைவுள்ள இடம் நிலப்பரப்பாக அப்போது இருந்ததென்றும் தக்க சான்றுகள் காட்டி ஆராய்ச்சியாளர் முடிவு செய்துள்ளனர். அதனால் மக்களுக்கு ஏற்படுந் துன்பம் என்னவெனில், நிலை மாறுங்காலத்து உண்டாகும் பேரிடையூற்றையன்றி, பிற்காலத்து ஒருவன், அதன் மாறுதலையறியாமல் முன்னிருந்த இடத்திலே இருக்குமென்று கருதி நீராடுதற்கோ அல்லது கண்டு களிக்கவோ செல்வானாயின், அஃது அங்கு இல்லாமையால் ஏமாற்றமடைதல்.

கடலில் உப்பிருத்தல் அதன் பெயர்களுள் ஒன்ருகிய 'உவரி' என்ற சொல்லாலே புலப்படுகிறது. அத

ணல், துளி நீர் கூடப் பருகுவதற்கு அது பயன்படாது. வையை நதி கடலோடு கலக்காததற்கு ஏதுத்தற்குறிப் பேற்றமாகக் காரணம் சொல்லுமிடத்துப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணத்துள் இதனையே கூறு கின்றார் என்பதை,

"தொடுத்தவறு மையும்பயனும் தூக்கிவழங் குநர்போல
அடுத்தவயற் குளம்நிரப்பி அறம்பெருக்கி அவனியெலாம்
உடுத்தகடல் ஒருவர்க்கும் உதவாத உவரிஎன
மடுத்தறியாப் புனல்வையைக் கரையுளது வாதவூர்."

என்னும் செய்யுளால் அறிக.

அதிலுள்ள முதலிரண்டு அடிகளிலுள்ள உவமை நயத்தையும் அறிந்து மகிழ்க.

எனவே, கடவுளைக் கடலாக உருவகம் செய்து பாடக்கருதிய புலவர் பெருமானாகிய மணிவாசகனாருக்கு இக்குறைபாடுகள் சிந்தனைக்கு வந்து, இவற்றை நீக்கி.

"திரைபொரா மன்னும் அமுதத்தெண்கடலே" என அழைக்கும் நுட்பத்தைக் கண்டு மகிழ்க. 'திரைபொராக் கடல்; மன்னும் கடல்; அமுதக் கடல்' எனக்கொண்டு கூட்டப்பெற்று, 'அலைமோதாத கடலே, நிலைபே றுள்ள கடலே, அமுதம் நிரம்பிய கடலே' எனப்பொருள் காணப்படுதலால் அக்குற்றங்கள் நீங்குமாறு அறிக. இன் னும் அப்பெருமானார், தம் கூர்த்த மதியால் கடலுக்குள்ள குறைபாடுகளனைத்தையும் நுணித்தறிந்து மற்றோரிடத் தில் "பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அள வில்லா மாளா இன்ப மாகடலே" என்று கூறுமுகத்தால் அக்குறைபாடுகளையெல்லாம் நீக்குகின்றார். இக்கருத்து, படிப்போர் உள்ளத்தை அக்கடலினுள்ளேயே மூழ்கச் செய்கின்றதல்லவா! இத்தொடரால் கடலுக்குப் பெயர் தலும், ஒழிதலும், பிரிதலும், மறக்கப்படுதலும், நினைக் படுதலும், அளக்கப்படுதலும், மாளுதலும், துன்கப் பந்தருதலும், சிறுமையும் உண்டென்பது பெற்றும்.

திருநாவுக்கரசரின் சீரிய உவமை ஒன்று

'அப்பரே' எனத் திருஞானசம்பந்தப் பெருமானால் முறைப்பெயராகக் கருதி அழைக்கப்பெற்ற சொல்வேந்தர் திருக்குறளுட்காணப்படும் உவமை ஒன்றைச் சிறிது

மாற்றிக் கூறியருளுகிறார். அவ்வுவமைகள் யாவை? மாற்றுதற்குரிய காரணம் என்ன என்பதை அறிவதற்குமுன், அப்பெருமான் திருக்குறட் பயிற்சியுடையாரா என அறிதல் நலம். திருக்குறளைப் படிக்காத எந்தச் சமய குரவரோ, புலவர்களோ, நமது நாட்டில் இருக்க முடியாது. சமய குரவர் நால்வருள் முதல்வராகிய திருஞான சம்பந்தர்மட்டுந்தான் ஓதாதுணர்ந்தவர். இது அவர் பாடிய திருவெண்காட்டுத் தேவாரமாகிய "கண்ணுதலான்" என்று தொடங்கும் திருப்பாடலில், "பிரமபுரம் தொழ விரும்பி எண்ணுதலாம் செல்வத்தை யியல்பாக அறிந்தோமே" என்னும் அடிகளால் அறியப்படுவது. 'இறைவன் திருவடியை நினைக்கும் செல்வத்தையல்லவா அவர் சொல்கிறார்? அஃது எப்படிக் கல்விக்கு ஆகும்?' எனின், "கற்றதனால் ஆய பயன், வாலறிவன் நற்றாள் தொழாதல்" ஆதலால், காரணத்தைக் காரியமாகக் கூறியதென்றுணர்க. மற்ற மூன்று பெருமக்களும் நன்கு பயின்றவர்கள். எனவே அவர்கள் திருக்குறளைப் படிக்காமல் இரார். அவருள் நம்பியாரூராரின் திருக்குறட் பயிற்சியைத் 'திருக்குறளுட்சிலவும் திருத்தொண்டருட் சிலரும்' என்ற கட்டுரையிற் கண்டோம். அதுபோல வெளிப்படையான சான்றுகள் திருநாவுக்கரசர் பயிற்சிக்குக் கிடைக்காவிடினும், குறிப்பாகக் காணப்படும் சான்றுகள் இல்லாமற்போகவில்லை. ஒத்த கருத்துள்ள நூல்களைத்தெரிவிக்கக் கருதிய ஔவைப்பிராட்டியார்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்னும் வெண்பாவாலே தெரிவிக்கின்றார். தேவர் முற்காலத்திலும் மூவர் பிற்காலத்திலுமிருந்தவர்களாதலால், அவர் நூலைப்படித்து அதில் உள்ள சிறந்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவற்றைத் தம் பாடலினும் ஆண்டிருப்பார்களன்றோ! "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று தேவதேவனைத் தேவர் கூறினார். இக்கருத்தை "வென்றான் புலனைந்தும்", மறுத்தான்

புலனைந்தும்'' என்றும், இதுபோன்ற வேறு பல தொடர்களாலும் திருநாவுக்கரசர் வெளியிடுகின்றார். இன்னும் "பற்றுக பற்றற்றான்பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு'' என்னும் திருக்குறட் கருத்தை "இருளவா அறுக்கும்எந்தை இணையடி நீழல்'', "பற்றற்றார் பற்றும் பவள அடி'' என்பன போன்ற தொடர்களால் எடுத்தாளுகின்றார். மற்றொன்று, நுனித்துச் சிந்தித் தறியவேண்டுவது. மருந்து என்ற அதிகாரத்துள்,

> "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்(று)
> அப்பால்நாற் கூற்றே மருந்து.''

என்பது ஒரு குறள். இதற்குப் பரிமேலழகர், நோயாளியும், மருத்துவனும், மருத்துவன்கூட இருந்து அவன் சொற்படி மருந்து செய்பவனும் ஆகிய மூவரும் மருந்து என்றும், மருத்துவனாற் கொடுக்கப்படும் மருந்தோடு சேர்த்து நான்கு பகுதியாக உள்ளது அம்மருந்து என்றும், அஃதொவ்வொன்றும் நான்கு பகுதியையுடையது என்றும் பொருள் கூறி, இலக்கண அமைதியும், ஒவ்வொன்றுக்கும் உள்ள நான்கு பகுதிகள் என்னென்ன வென்றும் விரிவாகக் கூறிச் செல்கின்றார். உடற் பிணியை நீக்கும் மருத்துவர் முதலியோரைப் பற்றிய குறிப்பு இது.

இனி, உயிரைப்பற்றிய பிறவியென்னும் பிணியை, 'மந்திரமும், தந்திரமும், மருந்துமாகித் தீராத அந் நோயைத் தீர்ப்பவனாகிய' வைத்தியநாதனைப்பற்றிச் சிந் திப்போம். மருத்துவனும் அவனே; மருந்தும் அவனே. இவ்வுண்மையை நாம் உணரும்பொருட்டே 'வைத்தீசுரன் கோவில்' என்னும் 'புள்ளிருக்குவேளூரி'ல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவன் தனக்கு 'வைத்தியநாதன்' என்றும், திருவான்மியூரில் உள்ள தனக்கு 'மருந்தீசன்' என்றும் பெயர் சூட்டிக்கொண்டிருக் கின்றான் என்று அறிக. பக்குவ முதிர்ச்சியாற் பிறவியை நோயென்று அறிந்து அதைப் போக்கும்பொருட்டுத் தலையிலே தீப்பற்றிய ஒருவன் தண்ணீரைத் தேடுவதைப் போல ஞானசிரியரைத் தேடியலையும நன்மக்களுக்காக 'வைத்தியநாதன்; மருந்தீசன்' என்னும் பெயர்களை

வைத்துக்கொண்டிருக்கும் அப்பெருமான், 'உலகத்திலே தோன்றியது உண்பதற்கும் பிறவற்றுக்குந்தான்' என்ற முடிவையுடைய மாக்களையும் அவர்கள் கருத்தின் வழியே செலுத்தி, அச்செலவில் ஏற்படும் துன்பங்களை உணருமாறு செய்து காப்பாற்றுவதும் அவன் கடமையன்றோ! இவ்வுண்மையை,

"குணக்கும்தென் திசைக்கண்ணும் குடபாலும் வடபாலும்
கணக்கென்ன அருள்செய்வான் கழிந்தோர்க்கும்
ஒழிந்தோர்க்கும்."

என்றும்,

"பரவுவா ரையும்உடையார் பழித்திகழ்வா ரையும்உடையார்
விரவுவா ரையும்உடையார்."

என்றும் வரும் திருஞான சம்பந்தர் தேவாரங்களால் உணர்க. மக்களும், மாக்களுமாகிய அவ்விரு திறத்தாருள், முன்னவர் 'எங்கே நன்மக்கள் இருப்பார்கள்?' என்று கருதித் தேடுபவர்களாதலால், அவ்வாறு பெயர் வைத்துக்கொண்ட அவ்விறைவன், அவருள் பின்னவர் 'எந்த ஊரில் நல்ல சோறு (நெய், பால் கலந்தது) கிடைக்கும்?' என்று அலைபவர்களாதலால், அவர்பொருட்டுத் தன் ஊரில் ஒன்றுக்குச் 'சோற்றுத்துறை' என்றும், மற்றொன்றுக்கு 'நெய்த்தானம்' என்றும், வேறொன்றுக்குப் 'பாற்றுறை' (பால்-துறை) என்றும் பெயர் வைத்துக் கொண்டான் என்பதையும் உணர்ந்தால், அவன் உயிர்களிடம் எத்துணைப் பேரிரக்கம் கொண்டவன் என்பதை நன்கு அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம், மூலநோயும், பிற மருத்துவர்களாலே தீராத நோயுமாகிய பிறப்பென்னும் பெருநோயைத் தீர்க்கும் அவ்விறைவன், மருத்துவனென்னும் மருந்தும் உழைச்செல்வானாகிய மருந்தும், அம்மருத்துவனால் நோய் நீக்கத்திற்குக் கொடுக்கப்படும் மருந்தும் தானேயாக இருக்கின்றான் என்பதைச் சொல்லவந்த திருநாவுக்கரசர்,

"நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்."

என்று பாடும் பாடலில் 'மருந்துகள்' என அவனைப் பன்மையால் உணர்த்தியவாறு அறிக. இதுகாறும் பொதுவகையாலும் சிறப்புவகையாலும் கூறியவாற்றல் திருநாவுக்கரசர் திருக்குறளைப் படித்தவர் என்பதை அறிந்தோம்.

திருக்குறளில் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தில், 'உலக நடையினை விரும்பிச் செய்யும் பேரறிஞன் ஒருவனிடத்துச்செல்வம் நிறைதல், ஊரரால் நீருண்ணப் படும் குளத்தின்கண் நீர் நிறைந்தாற்போலும்' என ஓர் அழகிய உவமை வாயிலாக வள்ளுவர் கூறுவதை,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு."

என்னும் திருக்குறளால் அறிகிறோம். அவ்வுவமையை ஆண்டவனுடைய அருட்செல்வத்திற்கு உவமையாக்கக் கருதிய திருநாவுக்கரசருக்குச் சில தடைகள் தோன்றுகின்றன. 'ஊருணி' என்ற சொல்லே 'ஊராரால் உண்ணப்படுவது' என்னும் பொருளை உடையதாய், செயப்படுபொருட்பெயராய் உள்ளது. இன்றும் ஆறில்லாத சிறு கிராமங்களில் அவையிருப்பதைக் காணலாம். அக்குளங்களில் மக்கள் தூய்மையான குடம் முதலியவற்றால் தண்ணீரை முகந்துகொண்டு போகலாமேயன்றி, நீராடுதல், உடையைத் துவைத்தல் முதலியன செய்யலாகாது. மாடு, ஆடு முதலிய பிராணிகள் அவற்றுள் இறங்கி நீர் அருந்தலாகாது. இவை நடக்காதபடி அச்சிற்றூராரால் ஏற்படுத்தப்பெற்ற காவலாளி, அக்குளக்கரையிற் சிறு குடில் ஒன்று அமைத்துக்கொண்டு இரவும் பகலும் காத்து வருவான். எனவே, ஊருணிக்குக் காவல் உண்டு. மக்கள் மட்டும் அந்த நீரை உண்ணலாம்.

இறைவனிடம் நிறைந்துள்ள அருட்செல்வமோ, காவலுடையதுமன்று; மக்களுக்கு மட்டும் பயன் தருவதுமன்று; எல்லாப் பிராணிகளுக்கும் பயன் தருவது. அதனாலே காவலுடையதன்றென்பதும் பெறப்பட்டது. பிராணிகள் அனைத்திற்கும் பயன் தருவதென்பதை,

"ஏனக் குருளைக் கருளினை போற்றி," "கருங்குருவிக் கின்றருளினை போற்றி," "புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி" என வரும் மணி மொழிகளால் அறிக.

இன்னும், நம் தமிழ் நாட்டில் இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் சிலவற்றின் பெயர்களே இதற்குச் சான்றாக உள்ளன. சி-சிலந்தி; காளம்-பாம்பு; அத்தி-யானை இந்த மூன்றும் வழிபட்டு அருள்பெற்றமையால் அப்பதிக்குச் 'சீகாளத்தி' என்றும், குரங்கும் அணிலும் காக்கையும் வழிபட்டமையால் 'குரங்கணில் முட்டம்' என்றும், ஆடும், யானையும் வழிபட்டமையால் 'திருவாடானை' என்றும், யானை வழிபட்டமையால் 'திருவானைக்கா' என்றும், எறும்புகள் வழிபட்டமையால் 'திருவெறும்பியூர்' என்றும், ஈக்கள் வழிபட்டமையால் 'திருவிங்கோய் மலை' என்றும் பெயர் வந்தமை காண்க இன்னும் இவைபோன்ற பதிகளும் உள்ளன. இப்பதிகள் தோறும் சென்று 'கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனிய'னாக அங்கெழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கிப் பாடியருளிய திருநாவுக்கரசருக்கு, இப்பிராணிகள் வழிபட்டு அவ்விறைவனது திருவருட்செல்வத்தைப் பெற்று நுகர்ந்தமை சிந்தனையில் தோன்றுமன்றே! அவ்வருட்செல்வ நிறைவுக்கு உவமை 'ஊருணியில் நீர் நிறை'வைச் சொல்லுதல் பொருந்தாதெனத் திருவுளங் கொண்ட அவருக்கு, ஒருபெரியஏரியும், அதில் நிறைந்து கரையில் அலைமோதிக்கொண்டு கிடக்கும் நீரும், அதில் பறவைகளும் விலங்கு முதலிய எல்லாப் பிராணிகளும் வந்து இறங்கி நீராடியும் நீர் பருகியும் செல்லும் செலவும், மக்களும வந்து நீராடித் தண்ணீர் எடுத்துச் செல்லுதலும், மக்கள் பருகி நீர்வேட்கையைத் தணித்துக் கொள்வதாகிய அப்போழ்துக்கு மட்டும் அடையும் சிறு பயன் போலாது, நன்செய் நிலத்திற் பாய்ந்து உணவுப் பொருளை விளையச்செய்தலால் உண்டாகும் பிற்காலப் பெரும்பயனுமாகிய அனைத்தும் புலனாகின்றன. எனவே, அந்த ஏரி நிறைவுதான் பொருத்தமான உவமையென்றறிந்து, "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" எனக்கூறியிருப்பது, அந்த ஏரியின் நீர்ப்பெருக்கைப்

போல நமது உள்ளத்தில் இன்பப் பெருக்கை உண்டாக்கு கின்றதல்லவா! அத்திருப்பாட்டின் முழு வடிவமுங் கீழே காண்க.

“மூரி முழங்கொலிநீர் ஆனான் கண்டாய்
முழுத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையும் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே,”

சேக்கிழார் திருந்தி ஆளும் உவமை

ஆடவர்கள் கண்ணுக்குக் கூறப்படும் உவமைகளில் ஒன்று தாமரை மலர். திருமாலின் பெயர்களுள் ஒன்று ‘செந்தாமரைக் கண்ணன்’ என்பது. இதில் தாமரை என்ற சொல், ஆகுபெயராக மலரை உணர்த்திச் செந் தாமரை மலரைப்போன்ற கண்களையுடையவன் என்ற பொருளைத் தரும். காப்பாற்றும் கடவுளாகிய அவருக் குக் காரணம் பற்றி வந்த அப்பெயரை மக்கள் இடுகுறி யாகத் ‘தாமரைக் கண்ணன்,’ ‘கமலக் கண்ணன்,’ ‘தாம ரைக் கண்ணி’ என்று தமக்கு இட்டுக்கொள்கின்றார்கள். திருமாலுக்கு இப்பெயர் உண்டென்பதை,

“தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு?”

என்னுந் திருக்குறளால் அறிக. “கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ண” என்பர் கம்பர். அவ்வுவமை வண் ணம் பற்றியதுமன்று; வடிவம் பற்றியதுமன்று; என்னை? முழுவதும் கண் சிவப்பாயிராமையாலும், வட்டவடிவமா யிராமையாலும் என்க. பயன்பற்றி வந்த உவமை அது. தாமரை மலரிலே தேன் இருக்கும். அதை உண்ணும் பொருட்டு வண்டுகள் வரும். அதுபோல மக்கள் கண் ணில் கண்ணோட்டம் (இரக்கக் குறிப்பு) இருக்கவேண்டும். அஃதில்லையேல், அது கண்ணன்று எனப் பொய்யா மொழியார் கூறுவதை,

"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்."

என்னுந் திருக்குறளாலுணர்க. இன்னும் 'கண்ணோட்டம்' என்ற அதிகாரத்தில் அவர் கூறும் பிற குறள்களையும் காண்க. கண்ணோட்டத்தோடு கூடிய பார்வையை 'விருப்புப் பார்வை' என்றும், வெறுப்போடு கூடிய பார்வையை 'வெறுப்புப் பார்வை' என்றும் இரண்டுமல்லாத பார்வையை "நொதுமற்பார்வை' என்றும் நூல்கள் கூறும். இவற்றுள் 'வெறுப்புப் பார்வை மக்களுக்கு இருத்தலாகாது' எனத் தேவர் கூறுவதை,

"மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

என்னுந் திருக்குறளால் அறிக. இவ்வாறு பயன் பற்றி வரும் அவ்வுவமையைச் 'சேரமான் பெருமாள் நாயனார்' என்கின்ற 'கழறிற்றறிவார்' கண்ணுக்குக் கூற வந்த தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் "காலை மலர் செங்கமலக் கண்கழறிற் றறிவார்" என்று கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தகுவது.

தாமரை மலர்கள எட்டு நாட்கள் வரையிலும் காலையில் மலர்ந்து மாலையில் குவியும் இயல்புடையன. ஒவ்வொரு நாளும் புற இதழ்கள் ஒவ்வொன்று கருகும். ஆனல் முதல் நாள் மலர்ச்சியிலேதான் தேனிருக்கும். அன்று அதை வண்டுகள் அருந்திவிடும். மறுநாள் முதல் அதில் தேன் இராது. எனவே, தாமரை மலர் போன்ற கண்' என்று கூறினல், அது முதல் நாள் மலர்ந்து குவிந்த மலருக்கும் செல்லுமன்றே! தேனில்லாத அம்மலருக்குச் செல்லின், எந்தக் கருத்தோடு அஃது உவமையாக எடுக்கப்பட்டதோ, அஃது அதிலில்லாமையால், அந்த உவமை குற்றமுடையதாகிவிடும். ஆனல், முதல் நாளோ, அதற்கு முதல் நாளோ மலர்ந்து குவிந்த மலர்களெல்லாம் சூரியன் ஒளியை வேண்டாமல் வைகறைப்போதிலே மலர்ந்துவிடும். அன்று புதிதாக மலரும் மலருக்குக் கதிரவன் ஒளி வேண்டுமாதலால், அது வைகறையில் மலரும் பழைய மலர்கள் போலாது

காலையிலேதான் மலரும். அம்மலர்தான் உவமைக்குப் பயன்படும். இத்துணையும் கருதியேதான் சேக்கிழார் "காலை மலர் செங்கமலக் கண்" என்று கூறியருளினா ரென்பதை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உள்ளத் தின்கண் உவகை ஊற்றெடுத்துப் பெருகுமன்றே!

இனி, மேலே காட்டிய அடியில், 'மலர்ச் செங்கமலக் கண்' என்ற பாட பேதமும் சில பதிப்பிற் காணப்படு கின்றது. அதற்குக் 'காலைப்போதில் மலர்தலையுடைய செந்தாமரை மலர்' என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகக் கொண்டு பொருள் காண்க. 'மலர் செங்கமலக்கண்' எனச்'ச'கர ஒற்று மிகாத பாடமாயின் அதனை வினைத்தொகையாகக் கொண்டு, 'மலர்ந்த' எனப் பொருள் காண்க. இரண்டும் பொருள் கூறும் முறையில் வேறுபடுமேயன்றி, கருத்து வகையில் வேறுபடாமையும் நுனித்து உணர்க. அவ் வடியையுடைய பாடலின் முழு வடிவமும் கீழே காண்க:

"மூல மான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வ ராயிந்த
ஞால முய்ய எழுந்தருளும் நம்பி தம்பி ரான்தோழர்
காலை மலர்செங் கமலக்கண் கழறிற் றறிவா ருடன்கூட
ஆல முண்டார் திருக்கயிலை அணைந்த தறிந்த படியுரைப்பாம்"

இளங்கோ அடிகளின் உவமைப்புரட்சி ஒன்று

பெண்களின் கற்புக்கு உவமை கூறுவதாயின் அருந்ததியின் கற்பையே கூறுவது மரபாகி வந்து விட்டது. இம்மரபு, இளங்கோவடிகள் காலத்திற்கு முன்னரே தோன்றிய 'புறநானூறு' 'கலித்தொகை' முதலிய சங்க இலக்கியங்கள் பலவற்றுள் காணப்படுவதொன்றா யிற்று. "வடமீன்புரையும் கற்பின் மடமொழி, அரிவை" எனப் புறநானூற்றிலும், "வடமீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினாள்" எனக் கலித்தொகையிலும் வருதல் காண்க. "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி உவமானம உயர்ந்தது; உவமேயம் அதனினும் தாழ்ந்தது. இது பொது விதி. இறைவனது பெருங்கருணைக்குத் தாயினது அன்பை உவமை சொன்னால் அங்கே இவ்விதியைப் பயன்படுத்தலாகாது.

அருந்ததி கற்பு உவமையாதற்குரிய உயர்வை அடைந்த தற்குரிய காரணம் யாது என அறிதல் நலம்.

முருகப்பெருமான் திருவவதாரம், பிற்காலத்திற் 'கச்சியப்ப சிவாசாரியர்' அவர்களாற் பாடப்பெற்ற கந்த புராணத்தில் உள்ளவாறு இப்போது எங்கும் பேசப்படு கிறது. ஆனல், பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படை யிலும் அது வேருகக் காணப்படுகிறது. இறைவன் கருவை எழு முனிவர்களும் வாங்கி, தங்கள் வேள்வித் தீயிற்போட்டு, அதைத் தங்கள் மனைவிமார்களிடம் கொடுக்க, வசிட்ட முனிவன் மனைவியாகிய அருந்ததி யொழிய மற்ற அறுவரும் உண்டதாகவும், அவர்கள் கருவிற்ருேன்றி ஆறு குழந்தைகளாக வளர்ந்த பின் ஒன்ருனதாகவும் அந் நூல்களால் அறியப்படுகிறது. அருந்ததியொழிய மற்ருேர் உண்டதை,

"வடவயின் விளங்கால் உறையெழு மகளிருட்
கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்."

என்னும் பரிபாடல் அடிகள் உணர்த்துகின்றன. 'கடவு ளருளிய கருவாயினும் கற்புடைய காரிகை அதனை ஏற்றுக்கொள்ளுதல், அவள் கற்புக்கு இழுக்காகும்' எனக் கருதியதால், அருந்ததியின் கற்பு உவமைக்குரிய தாயிற்று. கண்ணகியைப்போல அருந்ததி பல கடுமை யான சோதனைகளுக்கு இலக்காகி, வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. கதிரவனும் அஞ்சித் தன் கேள்விக்கு விடை சொல்லப்பெற்றவளும், மதுராபதி என்னும் தெய் வமும் நேரே வந்து பேசுதற்கு அஞ்சப்பெற்றவளும், இன்னும் செயற்கரிய செயல்பல செய்தவளுமாகிய கண்ணகியின் கற்புக்கு அருந்ததி கற்பை உவமையாகக் கூற ஒருப்படாத உள்ளத்தையுடைய இளங்கோவடிகள், மரபையும் விட்டுக்கொடுக்க மனமில்லாதவராய் ஓர் புரட் சியை மேற்கொண்டார். அப்புரட்சியாவது, உவமா னத்தை உவமேயமாக்கியது. அதை உணர்த்தும் அடி,

"தீதிலா வடமீனின் திறமிவள் திறம்"

என்பது. உவமானம் உவமேயமாக மாற்றப்பட்டால்

அஃது அவ்வுவமைக்கு எத்துணை இழிவென்பதைச் சிவப்பிரகாச அடிகள் பிரபுலிங்க லீலையில் கூறிய ஒன்றால் அறியலாம். மாயை என்ற மங்கையைத் தோழியர் ஒப்பனை செய்கின்றனர். அவருள் ஒருத்தி ஒரு முத்துப் புல்லாக்கை எடுத்து மாயையின் மூக்கின் நடுத்தண்டி லுள்ள துளையில் மாட்டித் தொங்கவிட்டாள். அம் முத்து அவள் பற்களுக்கு நேரே தொங்குகிறது; அக் காட்சியைத் தம் அகக்கண்ணாற் பார்க்கின்றார்; அம்முத்து நான்றுகொண்டு தொங்குவதாக முடிவு செய்கிறார். 'ஏன் அது தூக்கிட்டுக்கொண்டு தொங்கவேண்டும்?' எனின், "இம்மாயை பிறப்பதற்கு முன் புலவர்களெல்லாம் பேரழகு வாய்ந்த பெண்கள் பற்களுக்கு உவமை சொல் லுங்கால், 'முத்துப் போன்ற பல்' என்று உவமை சொல்வது வாயிலாக எம்மினத்திற்கே பெருமையளித்து வந்தார்கள். இவள் தோன்றிய பின் உவமையாய் இருந்த எம்மை 'மாயையின் பற்போன்ற முத்து' என்று உவமேய மாக்கி எங்கள் பெருமையைக் குறைத்துவிட்டார்கள்; யாம் தமிழ்நாட்டு முத்து; மானமிழந்து உயிர் வாழ்தல் எமக்கு இயல்பன்று; எம் பரம்பரைப் பெருமை போனதற்குக் காரணம் இவள் பல்லல்லவா! ஆதலால், அதற்கு எதிரே நான்றுகொண்டு உயிரை விடுகிறேன்" என்று கருதியே அவ்வாறு செய்துகொண்டதாக, 'ஏதுத்தற்குறிப் பேற்றமாக' அவர் பாடிய பாடல்,

"தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழி சார
மன்னி யங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னி றந்திடு வேனென ஞான்றுகொள் முறைமை
என்ன வெண்மணி மூக்கணி யொருத்திநின் றிட்டாள்."

என்பது.

"நிந்தை செய் — (புலவர்கள் பெண்கள் பல்லுக்கு உவமானமாக இருந்த எங்கள் இனத்தை உவமேயமாக்கி) இழிவு படுத்தற்கேதுவாக உள்ள" என விரித்துப் பொருள் காண்க. ஞான்று கொள்ளுதல் — உயர்ந்த மரக்கிளை முதலியவற்றிற் கயிறொன்றைக் கட்டி, அதன் அடிப்பாகத்திற் சுருக்கிட்டு, அச்சுருக்கிற் கழுத்தை

மாட்டிக்கொண்டு தொங்கி உயிரை விடுதல். (இஃது இக்கால உலக வழக்கில் 'நாண்டு கொள்கிறது' என வழங்கப்படுகிறது.)

இனி, பிற்காலத்தில் சிறந்த புலவர்களாகவும், இறைவனருள் பெற்றவர்களாகவுமுள்ள குமரகுருபர அடிகள், சிவப்பிரகாச அடிகள், சாந்தலிங்க அடிகள் கூறியனவும், கற்றவர்களேயன்றி மற்றவர்களும் அறிந்து மகிழும் எளிமையுடையனவுமாகிய சில உவமைகளை எடுத்துச் சுவைத்து இக்கட்டுரையை முடிப்போமாக.

குமரகுருபரரின் கோதிலா உவமை

குமரகுருபரர், தாம் அருளிய 'சிதம்பர மும்மணிக் கோவை' முதற்பாவில் கூறுவது: தில்லையிலே திருக் கூத்தாடும் சிவபெருமானை நோக்கி, "அற்புதக் கூத்த, நின் அமுதவாக்களித்த, நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில, இல்லறம் துறவறம் எனச்சிறந் தனவே" என்று தொடங்கி, இல்லறத்தார் மேற்கொண்டு செய்யவேண்டிய கடமைகளையும், துறவறத்தார் மேறகொண்டொழுகும் செயல்களையும் விரிவாகக் கூறி, "இந்நிலையிரண்டும் எம்மனோர்க்கியலா நன்னிலையாகலின் அந்நிலை நிற்றற்கு, உரனும் ஆற்றலும்" இல்லாதவனாகை இருக்கின்றேன் எனக்கூறி, "சில பெரியோர்களைப் பார்த்து, "பெரியிர், மக்கட்பிறப்பின் குறிக்கோளை அடைவதற்கு இல்லறம் துறவறம் என இரண்டு வழிகள் உள்ளன; அவ்வழியிற் செல்லும் ஆற்றல் எனக்கு இல்லை. 'எளிதினிற் றமியேன் அரியது பெறுதற்கு, உளதோ நெறியொன் றுணர்த்துமின் நீர்' எனக் கேட்டேன்; அவர்கள் 'திருவாரூரிற் பிறந்தால் முத்தி; காசியில் இறந்தால் முத்தி; தில்லையைத் தெரிசித்தால் முத்தி' என்று கூறினார்கள். 'திருவாரூரில் பிறத்தலென்பது இயல்பாக வாய்த்தாலன்றி, யானே செய்துகொள்ளக்கூடியதன்று. இனி, காசியிற்சென்று தங்கி, அந்தத் திருப்பதியிலே இருக்க வேண்டிய முறையிலிருந்து உயிரை விடுவதென்பதும் என்னால் ஆகாத செயல். எனவே, 'சிற்றுயிர்க்கிரங்கும் பெரும்பற்றப் புலியூர், உற்றநின் திருக்கூத் தொருகால் நோக்கிப், பரகதி பெறுவான் திருமுன்

பெய்தப், பெற்றனன் தமியேன்.' ஆனால், என்னிடம் அன்பில்லை என்பதை அடியேன் மறைத்துப்பேச விரும்பவில்லை; அதை ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக 'அன்பிலை கொடியையென்றருளாயல்லை, நின்பதம் வழங்குதி நிமல.' அன்பில்லாதவன் என்று என்னை நீ தள்ளிவிட முடியாது. அங்ஙனம் செய்தல் உனக்கு இயல்பன்று; எங்ஙனமெனில், அதனை ஓர் உவமை வாயிலாகக் கூறுகின்றேன்; கேட்பாயாக:

“மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி ஒருவன் அருவருப் புறீஇத்
தன்முகஞ் சுழித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்திக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்கும்
தீப்பிணி மாற்றுதல் திண்ணம்”

என்பதை நீ மறுக்கமுடியுமா! அதுபோல உன்னை வந்து வணங்கினவர்கட்கு நீ வீடுபேறு அருள வேண்டுமேயன்றி, 'இவன் அன்போடு வணங்கினான்; இவனுக்குத்தான் என் திருவடியைக் கொடுப்பேன்; அவன் வந்து வணங்கினான்; ஆனால் அன்பின்றி வணங்கினான்; ஆதலால், அப்பேற்றை அவனுக்குத் தர இயலாது' என்று சொல்லுதற்கு உனக்கு வாயுண்டா?” எனக் கேட்கின்றார். நடராஜப் பெருமான் முற்றறிவுடையவனாய் இருப்பினும் இந்த உவமையை மறுக்க இயலாதன்றே! இவ்வுவமையில் வெறுப்போடு மருந்துண்பவனுடைய மெய்ப்பாடு எத்துணை அருமையாகக் காட்டப்பட்டிருக்கிறதென்பதையும் அறிந்து மகிழ்க.

இனி, சாந்தலிங்க அடிகளின் உவமை ஒன்றைக் காண்போம்:

தம்து உடலை ஓர் கருவியாகக் கொண்டவர்கள், தத்துவ ஞானம் கைவரப்பெற்ற நமது முன்னோர்கள்; கருவி என்பது ஒரு காரியத்தை முடித்துக்கொள்வதற்குச் சாதனமாக இருப்பது. இந்த உடலாகிய கருவி, இனிப் பிறவாமலிருக்கும் காரியத்தைச் செய்து முடிப்பதற்கு நமக்குக் கடவுளாற் கொடுக்கப்பட்டது. எனவே, இக்கருவியைக் கொண்டு விரைந்து காரியத்தை முடித்துக்

கொள்பவனே அறிவாளியாவான். அங்ஙனமன்றி, அக்கருவிக்கு ஒப்பனை முதலிய செய்து பார்ப்பதற்குச் சாந்தலிங்க அடிகள் கூறும் உவமையாவது:—

சோமசுந்தரமும் சுந்தரராமனும் நெருங்கிய நண்பர்கள். சோமசுந்தரமென்பவர் பல அலுவல்களை மேற்கொண்டவர். சுந்தரராமனென்பார் பெரிய எழுத்தாளர்; ஆதலால், இரவும் பகலும் எழுதிக்கொண்டேயிருப்பார். ஒரு நாள், முன்னவர் தம் நண்பர்கட்கும் உறவினர்கட்கும் நான்கு கடிதங்கள் எழுதி, அன்றைய அஞ்சலிலேயே சேர்க்கவேண்டும். தமது எழுதுகோல் அன்று காலையிலே தவறிவிட்டது. ஆதலால் அதே தெருவிலுள்ள நண்பர் சுந்தரராமன் இல்லத்திற்கு ஏகினர். அவரும் இவரை அன்புடன் வரவேற்றார். சோமசுந்தரம், 'தோழரே, யான் இன்று காலை என் எழுதுகோலைத் தொலைத்துவிட்டேன். நான்கு கடிதங்கள் இன்றே எழுதி நண்பர்கட்கு அனுப்ப வேண்டும்; தயவு செய்து உங்களுடைய எழுதுகோலைத் தந்தால், யான் விரைவில் என் வேலையை முடித்துக் கொண்டு அனுப்பிவிடுகிறேன்,' என்றார். சுந்தரராமன், 'நண்பீர், யான் இடையறாது எழுதிக்கொண்டிருக்கும் இயல்புடையவன் என்பது நீங்களறிந்ததொன்று; எனினும், தருகிறேன்; இப்பொழுது மணி மூன்று; நீங்கள் எப்போது கொடுப்பீர்கள்?' என்றார். அவர், 'நான்கு மணிக்குக் கொடுத்துவிடுகிறேன்,' என்றனர். 'தயவு செய்து நாலரை மணிக்குள் கொடுத்துவிடுங்கள்,' என்று அரை மணி நேரம் அதிகமாகவே சொல்லித் தமது கருவியைக் கொடுத்தார் சுந்தரராமன். சோமு அதை வாங்கிக்கொண்டு தமது இல்லத்திற்கேகி, ஒருகடிதத்தை எடுத்து அதன் தலைப்பில் ஊர்ப்பெயரையும் நாளையும் குறித்து, 'அன்பார்ந்த நண்பீர்,' என்று எழுதினார். மை கொட்டுதலோ, அடைத்தலோ இன்றி முத்து முத்தாக எழுதுவதைக் கண்டார்; தாம் அது கொண்டு செய்யவேண்டிய காரியத்தை மறந்தார். அக்கருவியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்; சிந்தனையில் ஆழ்ந்தார். 'என் நண்பர் இதை வாங்கிப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாயினவே! யான் அதன் பிறகு ஐந்து எழுதுகோல்

வாங்கித் தொலைத்திருக்கின்றேனே! அவற்றுள் ஒன்றேனும் இவ்வளவு அழகாக எழுதவில்லை; எங்கு வாங்கியிருப்பார்? எந்த முறையில் இதைப்பேணுகிருர்? அவர் எல்லாவகையிலும் அதிர்ஷ்டசாலி; நான் எல்லா வகையிலும் துரதிர்ஷ்டமுள்ளவன்,' என்று எண்ணுகிருர். நேரம் போனதை நெஞ்சிற்கொண்டாரில்லை. நாலரை மணிக்குமேல் ஒரு நிமிடம் ஆகிவிட்டது. சுந்தரராமன் எமன் போல வந்துவிட்டார். வந்தவர், "நண்பரே, உம் செயல் உமக்கே அழகிது. நான்கு மணிக்குத் தருவதாகச் சொன்னீர்; யான் அரை மணி நேரம் கூடுதலாகக் கொடுத்தேன்," என்று உரத்துக் கேட்டபொழுதுதான், தமது சிந்தனையிலிருந்து மீண்டார். 'தோழரே, வருக! வருக! இதை நீர் எங்கு வாங்கினீர்? எப்படி வைத்திருக்கின்றீர்? தயவு செய்து சொல்லும்,' என்று வினவ, சிறிது சீற்றம் கொண்ட சுந்தரராமன், 'அந்தக் கதைகளெல்லாம் யான் வேலையின்றி இருக்கும் போது என் வீட்டுக்கு வந்து கேளும்; சொல்லுகிறேன்,' என்று கூறி அவர் கையிலிருக்கும் கருவியை வெடுக்கென்று பிடுங்கிகொண்டு போய்விட்டார். எனவே, சோமசுந்தரம் செய்த அறியாச்செயலையே மேலே காட்டிய செயலுக்கு உவமையாக்கிக் கூறுவதை:

"கருமமொன் றியற்றப் பிறர்கையிற் கருவி
கவர்ந்துளோன் பினும்அவர் கொளுமுன்
விரைவின்எண் ணியசெய் யாதுமற் றதையே
மிகச்சிறப் பித்துநோக் குதல்போல்
புரையில்விட் டின்பம் அடைகுவான் அதற்குப்
பொருந்திய அருந்தவம் புரியா(து)
ஒருகண மேனும் நிலையிலிவ் வுடல்வைத்
தொப்பனை செய்துநோக் குதலே."

என்னும் செய்யுளால் அறிக.

அவர் கூறும் மற்றேருவமை

இன்னும் அப்பெரியார், தொடக்கப் பள்ளியிற் கல்வி பயிலும் மாணவர்களிடையிலே சிறிது முற்பட்ட காலத்திலே மிகுதியாகவும், இக்காலத்திலே குறைந்தும்

காணப்படும் நிகழ்ச்சி ஒன்றை ஓர் பெரிய-அரிய விஷயத்திற்கு உவமையாக்கி, அந்த விஷயம் அச்சிறுவர்களுக்கும் விளங்குமாறு செய்வது அறிந்து மகிழத் தக்கது. மக்களுக்கு நேரும் துன்பத்திற்கு அவர்கள் முன் செய்த தீவினை காரணமன்றி வேறன்று. இதனை இக்கட்டுரையில் 'நாயிற் கடையாம் நாயேனே' என்னும் உவமையை விரித்துப் பொருள் காணும் முறையில் நாயினிடமுள்ள ஐந்தாவது குணமாகக் காட்டியிருக்கின்றோம். மூல காரணமாகிய அதனை மறந்து, தமக்கு யார் வாயிலாக அத்துன்பம் வந்ததோ, அவர்களிடத்துப் பகை கொண்டு, அவர்களுக்குத் துன்பம் விளைக்கக் கருதுவோரைப் பார்க்கின்றோம்.

ஆசிரியர் வருவதற்கு முன் மாணவர்கள் வந்து பள்ளியிற் கூடிவிடுவார்கள். அவர்கள் விளையாடல்கள் பலவற்றுள் ஒன்று கீழ் வருவது:

பிள்ளைகள் ஒருவரோடொருவர் நெருங்கி உட்கார்ந்திருப்பார்கள். அவருள் உடல் வலி குறைந்த மாணவனொருவன், அந்நெருக்கத்தினிடையிலமர்ந்து புத்தகத்தை விரித்துப் பார்த்துக்கொண்டிருப்பான. அந்தச் சமயம் பார்த்து, வலியவன் ஒருவன் அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்து, அவன் நிமிர்ந்தவுடனே, அவனிலும் வலிமை குறைந்தவனாய் அவன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் ஒருவனைச் சுட்டிக்காட்டி 'இவன் தான் உன்னைக் குட்டினான்' என்று குட்டியவன் சொல்வான். உடனே குட்டுப்பட்ட அவன் குட்டினவனைற் காட்டப்பட்ட அவனை அறைந்து துன்புறுத்துவான். வயது நிரம்பாத அச்சிறுவர்களின் விளையாட்டுக்களில் ஒன்ருகிய இதனை மேலே காட்டிய விஷயத்திற்கு உவமையாக்கி விளக்குவதை,

"தன்னருகுறுசெய் சிரத்தொரங்குலியாற்
றுன்புடைத் தொருவன்மீ தொருவன்
சொன்னமாத் திரத்தில் அவனை அச் சேயும்
துனிவுகொண்ட டெழுந்தறை குதல்போல்

முன்னவன் விளையாட் டாயஐந் தொழிற்கும்
முன்னிலை யாயசி வனைப்பார்த்(து)
இன்னல்செய் சாபம் இட்டுமா தவரும்
என்கொலோ தவமிழப் பதுவே!"

என்னும் செய்யுளால் அறிக.

சிவப்பிரகாசரின் சீரிய உவமைகளுட் சில

சாந்தலிங்க சுவாமிகளென்னும் இப்பெரியாருக்குத் தமது தங்கையாராகிய ஞானம்பிகை அம்மையாரைத் திருமணஞ்செய்து கொடுத்த சிவப்பிரகாச அடிகளின் உவமைகள் சில, புலவர் பெருமக்கள் உலகத்தில் நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளை எத்துணை உற்று நோக்கி அவற்றைத் தாம் கூறக் கருதும் பொருளுக்கு உவமையாக்கிக் கூறுகின்றாரென்பதைக் காட்டுகின்றன! அவற்றுள் ஒன்று காண்போம்:

இக்காலத்தில் மத்தளம் அடிக்கின்ற பலரை நாம் காண்கின்றோம். அவருள் ஒருவரேனும், அதனை அடிப்பதற்குக் கருவியாக உள்ள தம் கை விரல்களுக்கு மட்டும் வேலை கொடுத்து மெய்க்கு வேலை கொடாமல் இருக்கின்றாரைக் கண்டோமில்லை. ஒவ்வொரு சமயம், மதுரையிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அங்கயற் கண் அம்மையின் திருமுன். கலைமகள் விழாக்காலத்துப் பேய் பிடித்தாடும் பெண் மக்களைப் போல, தம் குடுமி (இருந்தால்) அவிழ்ந்து கீழே தொங்கத்தொங்க ஆடி அஞ்சத்தகுந்த காட்சியளித்தலைக் காண்கின்றோம். அவர்கள் அத்தண்ணுமையிலிருந்து, தமது வலிமை மிகுந்த விரல்களால் எழுப்பும் ஒலி, நமது செவியுட் புகுந்து விளைக்கும் இன்பத்தைக்காட்டிலும், அவர்களின் பேயாட்டம் நம் கண்ணுக்குப் புலனாகி விளைக்கும் துன்பம் மிகுதிப்படுதலாலே, அவ்வின்னொலியைக் கேளாமல் மீளுதற்கும் உள்ளம் இடங்கொடாமல், 'ஒரு திரை போட்டு மறைத்தேனும் கேட்கலாமா!' என்று எண்ணுகின்றோமல்லவா! இக்குற்றமின்றி 'அல்லமப் பிரபு' என்பவர், மத்தளம் அடித்ததற்குத் தாமியற்றிய 'பிரபுலிங்கலீலை' என்னும் காவியச்சுவை நிறைந்த

நூலின்கண் அச்சிவப்பிரகாச அடிகள் எடுத்தாண்ட உவமை நாம் சிந்தித்து மகிழ்வதற்குரியது.

குளங்களிலும், வாய்க்கால் முதலிய நீர் நிலைகளிலும் மீன் பிடித்து உண்ணும்பொருட்டு மீன் குத்திப் பறவைகள், அந்நீர் நிலைக்குச் சிறிது மேலே பறந்துகொண்டிருத்தலைப் பலர் பார்த்திருக்கலாம். ஆனால், அந்நிகழ்ச்சியை உற்று நோக்குபவர் சிலரினும் சிலரே! அதனை இப்போது நினைவுக்குக் கொண்டு வருவோம். தண்ணீருக்கு மேலே பறக்கும் அது, தன் அலகைக் கீழே இறக்கி, நீருள் இருக்கும் மீன்மீது வைத்த குறி தவறாமற் பார்த்துக்கொண்டு சிறகுகளை மட்டும் ஆட்டி, மற்ற உறுப்புக்களை ஒரு சிறிதும் அசைக்காமற் பறக்கும்; அப்படிப் பறக்கும் நிலையிலிருந்து சிறிது நேரத்திற்கு ஒரு முறை அது ஒரு முழ அளவில் மேலே சென்று, மீண்டும் அந்நிலையில் வந்து தங்கிப் பறக்கும், இந்நிகழ்ச்சியை இது வரையிலும் பாராதவர்கள் இதைப் படித்த பின் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இந்நிகழ்ச்சி, மெய் அசையாமல் நின்று மத்தளத்தின் இருபுறத்தும் வைத்த கைவிரல்களை மட்டும் இடைவிடாது அசைத்து, சிறிது நேரத்திற்கொரு முறையோ, இருமுறையோ அதினின்றும் பேரொலியை எழுப்பும்பொருட்டு, அக்கைகளைச் சிறிது மேலே தூக்கி அடிக்கும் நிகழ்ச்சிக்கு உவமையாதற்கு எத்துணைப் பொருத்தமுடையதென்பதை நன்கு சிந்தித்துப்பாருங்கள். இதனை ஊன்றியறிந்த அடிகள், இதனை அந்த அல்லமன் மத்தளம் அடிப்பதற்கு உவமையாக்கி,

"சிரலசைந் தாடாநின்ற சிறகர்போல் மத்த ளத்தை
விரலசைந் தறைத லன்றி மெய்யசை யாமல் நின்றான்"

எனக்கூறி நம்மைச் சுவைக்குமாறு செய்கின்றார்.

'சிரல்—மீன்குத்திப் பறவையின், அசைந்து ஆடா நின்ற சிறகர் போல்—சிறகுகள் அசைந்தாடுதலைப்போல, மத்தளத்தை—தண்ணுமையை, விரல் அசைந்து அசைதல்; அன்றி—விரல்கள் அசைந்து தாக்குதலேயல்லாமல், மெய் அசையாமல் நின்றான்—தன் உடம்பானது (சிறிதும்) அசையாமல் நின்றான்' என்பது இவ்வடிகளின் பொருள்.

இன்னும் அப்புலவர் பெருமான் அப்பறவையின் இயல்பை மன்ருென்றுக்கும் உவமையாக்கிக் கூறும் செய்தி ஒன்று, அவர் முதல் முதலியற்றியதும், திருவண்ணுமலையை வலம் வருவதற்குள் இயற்றியதுமாகிய 'சோணசைல மாலை' என்னும் சிறு நூலுட்காணப்படுகின்றது. அவர் இறைவனை நோக்கி, 'பெருமானே, நீரின் மேற்பாகத்தில் உலாவுகின்ற மீனைக்கொத்தி எடுத்து உண்ணும்பொருட்டு மீன்குத்திப் பறவை பறப்பதைப் போல, என் உயிரை உண்ணும்பொருட்டுக் கூற்றுவன் வந்து உலவுகின்ருன்; அப்பறவையின் குறிக்கு அம்மீன் தப்பிப் பிழைக்கவேண்டுமாளுல், அத்தண்ணீருள் மூழ்கி உள்ளே சென்றுவிடல் வேண்டும்; அதுபோல மறலியின் குறிக்கு யான் தப்ப வேண்டுமாயின், சிவானந்தக் கடலுள் மூழ்கிவிடல் வேண்டும். அவ்வாறு யான் செய்யும்படி நீ அருள்செய்ய வேண்டும்' என்பதை,

"வந்துமா மறலி எனதுயிர் உண்பான்
மயிலைஉண் சிரலின்நிற் கின்ருன்;
முந்துநீ எனையா நந்தவா ரிதியுள்
மூழ்குற விடுத்தருள் புரியாய்."

என்னும் செய்யுளால் அறிகிருேம்.

'கற்பனைக் களஞ்சியம்', 'கற்பனை ஊற்று' என்று புலவர்களாற் பாராட்டப்படுகின்ற அப்புலவர் பாடிய நூல்களுள் ஒன்று நாற்பது வெண்பாக்களையுடைய 'நன்னெறி,' என்பது. புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள பொம்மைய பாளையம் மடத்தில் இவர் தங்கியிருக்கும் பொழுது, ஒரு நாள் பேதிக்குச் சாப்பிட்டுவிட்டுக் காலையிற் கடற்கரையில் உலாவியதாகவும், அதுவரையிற்கூடக் காலத்தை வீணுக்கக் கருதாமல், மணலைத் துப்புரவு செய்து ஒரு சிறு கோலால் அம்மணலில் நாற்பது வெண்பாக்களை எழுதிவிட்டு, மடத்துக்கு வந்து தம் தம்பியாராகிய கருணைப்பிரகாசரை நோக்கி, அப்பாடல்களை எழுதி வரும்படி சொல்ல, அவ்விளவலார் அப்படியே எழுதிக்கொண்டுவந்தார் என்றும், அதுதான் நன்னெறி எனறும் அவர் வரலாறு கூறுகின்றது. அந்த நாற்பது வெண்பாக்களின் பொருள்களனைத்தும் உவமைகளாலே

விளக்கப்பட்டுள்ளன. கடற்கரையிலிருந்து எழுதிய தென்றதற்கேற்ப, அவற்றுள் பன்னிரண்டு வெண்பாக்களில் கடல் நீரும், அதிற்காணப்படும் பிற பொருள்களும், பிற இடங்களிற் காணப்படும் வெள்ளம் முதலியவுமே உவமையாகக் காணப்படுகின்றன.

இனி, அவர் இளவலாகிய கருணைப்பிரகாசரும் ஓர் சிறந்த புலவராதலால், அவர் பாடிய 'சிகாளத்திப் புராண'ப் பகுதியிற் காணப்படுகின்ற உவமை ஒன்றைக் காண்போம்:

அவர் நம்பியின் அரிய உவமை

ஒரு பெண், அடியார்களிடம் அளவற்ற அன்பு பூண்டவள்; அரசன் உண்ணும் பரிகலத்தைத் தூய்மை செய்து, அவன் உண்ணும் இடத்திற் கொண்டுவந்து வைக்கும் பணியை மேற்கொண்டவள். ஒருநாள் அரண்மனைக்கு அவள் பணி செய்யப் புறப்படும்பொழுது, ஓர் அடியார் அங்கு வந்தார். அவரைத் தன் இல்லத்தில் வரவேற்று உண்பித்தலை மேற்கொண்ட அவள், அரசன் பணியை மறந்தாள். மன்னன் நீராடி, வழிபாட்டை முடித்துக்கொண்டு உண்ணும் இடத்தில் வந்து அமர்ந்து விட்டான். ஆனல், உண்கலம் அங்கு வைக்கப்படவில்லை. இந்த நிலை ஏற்படுமானல் இடம் பொருள் முதலிய வசதிகள் இல்லாதவர்களுக்குக்கூடச் சினமுண்டாதல் இயல்பு. காவலனுக்கு வருஞ்சினத்தைக் கருதவும் முடியாதல்லவா! தண்டலாளரை அழைத்து, 'அவள் கூந்தலைக் களைந்துவிடுக' என்று கட்டளையிட்டான். அடியாருக்கு உணவு படைக்கப்புகுஞ்சமயம், தண்டலாளர் வந்து அவளைத் தள்ளிக்கொண்டு போய்க் காவலன் கட்டளையை நிறைவேற்றிவிட்டார்கள். அதையும் பொருட்படுத்தாது அவள் அடியாருக்கு உணவு படைக்கும்பொருட்டு விரைந்து தன் வீடு சேர்ந்தாள். அவ்வடியார் 'அம்மே, நீ போம்போது நீண்ட கூந்தலோடு சென்றாயே! யார் இவ்வாறு செயதவர்கள்?' என்று தமது கரத்தால் அவள் தலையைத் தடவினர். முன் போன்று கூந்தல் வளர்ந்துவிட்டது. அப்போது அவள் அடைந்த மகிழ்ச்சியை மூன்று உவமைகளால் அவர்

விளக்குகிறார். அவற்றுள் ஒன்று, இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்கின்றவர்கள் சுவைப்பது; மற்றொன்று, வறுமை மிகுதியால் உணவின்றி வாடுகின்றவர்கள் அறிந்து மகிழ்வது; வேறொன்று, புலவர்கள் எண்ணி எண்ணிச் சுவைப்பது. அம்மூன்றையும் முறையே,

“கனல்வெஞ்சுரன் இடைவந்தெழு கார்காண்மயில் எனவும்
தினமும்பசி சுடநொந்தொரு தினமுண்பவர் எனவும்
புனையும்தொடர் பினில்நுண்ணிய பொருள்கண்டவர் எனவும்
வனைமென்குழல் உவகைக்கடல் வாய்மூழ்கினள் அன்றே.”

என்னும் பாடலால் அழகுற அமைத்துக் காட்டியிருப்பது நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது.

பெயரறிய முடியாத புலவர் ஒருவரின் பேருவமை ஒன்று

இறுதியாக, பெயர் அறிய முடியாத, சிறந்த புலவர் பெருமகனார் ஒருவராற் பாடப்பெற்றதும், தஞ்சாவூர் ‘சரஸ்வதி மாலி’லிருந்து அகப்பட்டு ஒரே ஓலையில் எழுதப்பெற்றுக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரால், தமது ‘தமிழ்ப் பொழில்’ என்னும் திங்கள் வெளியீடு வாயிலாக வெளிப்படுத்தப்பெற்றதுமாகிய, ஓசை இனிமை ஆழமுடைமை முதலிய எல்லா அழகும் நிறைந்த பாடல் ஒன்றில் காணப்படும் உவமை ஒன்றைச் சுவைத்து இக்கட்டுரையை முடிக்கலாமென எண்ணுகின்றேன்.

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவனை நோக்கித் தோழி கூறுவதாக அமைந்தது அச்செய்யுள். தலைவன் பாண்டியனாதலால், ‘செந்தமிழ் நாடுடையாய்’ என்று தோழியால் விளிக்கப்படுகிறான். ‘செந்தமிழ் வழங்கும் நாடு’ என்று சிறப்பித்ததோடு அமையாமல் “தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்” என்றாள். தமிழும் தென்றலும் ஒத்துணைப் பெருமையுடையன எனப் பரஞ்சோதி முனிவர், தாம் இயற்றிய திருவிளையாடற்புராணத்துள் ஒரு செய்யுளாற் குறிப்பிடுகின்றார். நடராஜப் பெருமான் ஆடுகின்ற திருவாலங்காட்டுச் சபைக்கு அரதன சபை என்றும், சிதம்பரத்திலுள்ளதற்குப் பொற்சபை என்றும், மதுரையிலுள்ளதற்கு

வெள்ளிச்சபை என்றும் பெயர் கூறுவர். ‘அரதன சபையிலாடிய ஒருவன் அதனினும் குறைந்த பொற்சபையில் ஆடியது எதற்கு? ஒரு சமயம் பொன்னால் அணிகளமைத்து மாணிக்கக் கற்களை அவற்றிற் பதித்தால், அவ்வணிகள் மிகுந்த மதிப்போடு காணப்படும் என்ற கருத்தால் இருக்கலாம்; மேலும், அவற்றினும் குறைபாடுடைய வெள்ளிச்சபையில் வந்து ஆடுவதுஎற்றுக்கு?’ என்ற ஒரு கேள்வியை அந்த நூலாசிரியர் எழுப்பிக் கொண்டு, அதற்கு விடை கூறுகிறார். ஐந்தொழிலும் நடப்பதற்கு இடையறாது ஆடும் இயல்புடைய அப்பெருமான் மேற்கூறிய இரண்டு சபைகளிலும் ஆடியதால் ஏற்பட்ட இளைப்பு நீங்குவதற்கு என்ன செய்யலாம் என எண்ணினார். ‘நல்ல தென்றற்காற்று முகத்திற் படுதலும், அழகான செந்தமிழ்ச் சொற்கள் செவியிற் புகுதலும் நேருமாயின் இந்த இளைப்பு நீங்கும்’ என முடிவு செய்து, அதன் பொருட்டுத்தான் அரதன சபை, பொற்சபையை விட்டு, மதுரையிலுள்ள வெள்ளிச்சபைக்கு வந்து தெற்கு நோக்கி ஆடுகின்றார் எனக் கூறுவதை,

“கடுக்க வின்பெறு கண்டனும் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வும்தமிழ் திருசெவி மாந்தவும் அன்றோ?”

என்ற பாடலாற் காண்க. எனவே, விருப்பு வெறுப்பற்ற இறைவனுக்குக்கூட விருப்பத்தைத் தரும் தென்றலையும் செந்தமிழையும் தனக்கே உரிமையாகப் பெற்ற நாட்டையுடையவனே என்று விளித்த குறிப்பு, ‘கடவுள் விருப்பத்தையும் நிறைவேற்றிவைக்கும் நாட்டையுடைய உனக்கு, என் தலைவியின் விருப்பத்தை நிறைவேற்றல் எளிதேயன்றி அரிதல்லவே?’ என்பது. இனி, அத்தென்றல் அசைந்து வருதற்கு உவமை கூறப்படுகிறது. அது “சேயிழையார் நடைபோற் றென்றல் அசைந்து வரும்” என்பது. ‘அந்நடையையுடைய பெண் யார்?’ எனின், “மன்னவர் கன்னியர்” எனவே. அரசகுமாரி. ‘அவளுக்குத் திருமணம் நடந்துவிட்டதா?’ என்னுமகேள்விக்கு “மங்கல மங்கையர்” என்பது விடை. ‘திருமணம் நடந்த பின் சத்தியவான் சாவித்திரி போலக் காடுறை

வாழ்வா?' இல்லை; இல்லை. "வாழ்வினராய்" உள்ளவர். 'இன்னும் ஏதேனும் சிறப்புண்டா?' உண்டு. 'அஃது என்னே?' 'கருத்தரித்தவர்.' அஃது ஆணு, பெண்ணு?' 'ஆண்.' 'அக்கருவிலிருப்பது ஒன்ரு இரண்டா?' என்னும் வினவுக்கு "மைந்தர் வயிற்றினர்" என்பது விடை. 'அக்கரு எத்துணைத் திங்கள் நிரம்பியது?' ஒன்பது திங்களும் நிரம்பியதென்பதைத் "திங்கள் நிறைந்துவரும் சேயிழையார்" என்னும் தொடர் விளக்குகிறது. எனவே, 'பெண் நடைபோல்' என்று பொதுவாகச் சொல்லிவிட்டால், அது, நிலம் அதிரும்படி நடக்கும் அரக்கியர் இயல்பு வாய்ந்த பெண்ணையும் குறிக்குமன்றே! அதை நீக்கும் பொருட்டு, 'அரசிளங்குமரி; மற்ருேர் அரசிளங் குமரனுக்கு வாழ்க்கைப்பட்டு, நல்வாழ்வு வாழ்பவள்; கருத்தரித்தவள்; அதுவும் இரண்டு ஆண் சிசுக்கள் உள்ளது; ஒன்பது மாதம் நிரம்பப் பெற்றவள்; அதோடு அணிகலங்களையும (சேயிழையார்) அணிந்தவளாகிய ஒரு பெண்ணின் நடையை உவமையாக்கிய புலவரின் புலமைத்திறத்தை எங்ஙனம் வியந்து எப்படிப் பாராட்டுவோம்! இக்கருத்துக்களையுடைய அப்பாடலின் ஒருபகுதி,

"மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே
திங்கள் நிறைந்துவரும் சேயிழை யார்நடைபோற்
றென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்!"

என்பது.

இது பாடலாதலால், மேலே காட்டியபடி பொருளமைதிக்கு ஏற்றவாறு கொண்டு கூட்டிப் பொருள் செய்யப்பட்டது. இப்பாடலின் பின்னிரண்டடிகளும் ஆழமான கருத்து உடையவை. ஊன்றி உணர்ந்து மகிழக்கடவர். இதன் பிற்பகுதி,

"கங்கையின் நன்கணவா! காவிரி யின்கொழுநா!
கன்னியின் நாயகனே! சென்னிநன் ஞடுடையாய்!
எங்கள் இளங்கொடிதான் உங்களி ளம்பிறையால்
எத்தனை கோடியிரா இப்படி வாடுவதே!"

என்பது.

தென்றல் அசைவது போலப் பாடலின் ஓசையும் அமைந்திருத்தலை அறிந்து அந்த இன்னொலியோடு பாடி மகிழ்க.

இக்கட்டுரையிற் காணப்படும் பொருள்களாவன :— உவமையால் உண்டாகும் மகிழ்ச்சியைச் சுவை என்பது எதனால் என்பதும், அது என்ன என்பதும், அதன் பிரிவுகள் யாவை என்பதும், பயன் என்ன என்பதும், அஃது எதனை அளப்பதற்குக் கருவியாக உள்ளது என்பதும், அவ்வுவமைகளாலே பெயர் பெற்றனர் சில புலவர் என்பதும், பிறர் கூற்றுவமை எதை அளப்பதற்குக் கருவியாக உள்ளதென்பதும், அதற்குக் காரணம் என்ன என்பதும், தம் கூற்றுவமையால் எதை அறியலாம் என்பதும் பிறர் கூற்றுவமையால் தம் புலமையைப் புலப்படுத்திய புலவர் பெருமக்கள் யார் யார் என்பதும், தம் கூற்றுவமையால் புலமையோடு தம் வாழ்க்கையின் குறிக்கோளையும் காட்டிய தொண்டர்களும் புலவர்களும் யார் யார் என்பதும், பழைய உவமைகளைச் சிறிது மாற்றியோ, புரட்சி செய்தோ சில பெருமக்கள் ஆளுதற்குக் காரணம் என்ன என்பதும், அந்த முறையைக் கையாண்டவர் யார் யார் என்பதும், போதிய கல்வியறிவில்லாதவர்களும் எளிதில் அறிந்து சுவைக்கக்கூடிய உவமைகளைக் கூறியவர்கள் யார் என்பதும், பிறவுமாம்.

பொய்யாமொழி

★ ✲

'பொய்யாமொழி' என்பது பொய்யாத மொழி என விரிக்கப்பட்டு முக்காலத்திலும் பொய்படாத மொழி என்னும் பொருளைத் தருவதாகும். பெய்யாத மொழி என விரிதலால், அஃது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தொடர் என்னும் பெயர் பெறும். பொய் என்ற சொல் வழக்கத்தில் மிகமிகப் பயின்று வருவதாயினும், அதன் பொருளை நம்மிற் பெரும்பாலோர் உணருவதில்லை. இப்படியே நாம் பேசும் மொழியிற் காணப்படும் சொற்கள் சில, தம்மைக் கேட்போருக்கு ஓர் உணர்ச்சியை விளைவித்து, தம் பொருளை மட்டும் எல்லோருக்கும் வெளிப்படையாக உணர்த்தாமல் மறைத்துக்கொண்டுள்ளன. 'மானம்' என்ற சொல் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது எனத் 'தமிழ் இலக்கியங்களிலுள்ள உவமைச்சுவை' என்ற கட்டுரையில் விரித்துக் கூறப்பட்டது. பொய் என்ற சொல் மானம் என்னும் சொல்லைப்போன்று பொருளே தெரியாததாக இல்லாமல், தவருன பொருளைத் தந்துகொண்டிருக்கிறது. தவருன பொருள் 'நடவாததைச் சொல்வது பொய்' எனக் கொள்வதாகும். 'மெய்' என்ற சொல்லும் அங்ஙனமே நடந்ததைச் சொல்லுதல்' எனப் பொருள்கொள்ளப்படுதலால் தவறுடையதாகிறது. இக்குற்றம் அச்சொற்களைச் சார்ந்ததன்று: நெடுங்காலமாக நம் தாய் மொழியிற் பற்றுக் குறைந்து பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்காமற் புறக்கணித்து வந்த நமது குற்றமேயாகும். 'பொய்' என்ற சொல் 'உள்ளீடு இல்லாமை' என்ற பொருளையுடையது. 'பொய்க்காற் குதிரை' முதலிய உலக வழக்குச் சொற்கள்

இப்பொருளையே உணர்த்தி வருதல் காண்க. 'உள்ளீடு' என்பது சத்து. நெல்லுக்கு உள்ளீடு அரிசி; அஃதின்றேல் அதற்குப் 'பதர்' என்னும் பெயர் கொடுக்கப்படும். நெல்லுக்கு அரிசி உள்ளீடாதல் போல, மக்கள் சொல்லுக்கு உள்ளீடு பிற உயிருக்கு நலம் செய்வது. அவ்வுள்ளீடில்லாத—அதாவது பயனில்லாத சொற்களைப் பேசுகின்றவர் மக்களுக்குள்ளே பதராவர் என்பது பொய்யாமொழியாரின் மெய்யான கருத்து என்பதை,

> "பயனில்சொல் பாராட்டு வானை மகெனனல்;
> மக்கட் பதடி எனல்."

என்ற திருக்குறளால் அறிக.

பயனற்ற அதாவது பிற உயிருக்கு நலந்தருதலாகிய உள்ளீடில்லாத 'சொற்களைச் சொல்கின்றவன் மட்டும் அன்றி, அவற்றைப் பாராட்டிப் பேசுகின்றவனும் பதர் தான் என்று இக்குறளுக்குப் பொருள் காணின் அதிலே தவறொன்றுமில்லையல்லவா!

மெய்க்கும் பொய்க்கும் பொய்யாமொழியார் கண்ட பொருள்

'வாய்மை' என்ற அதிகாரம் 'துறவற இயலி'ல் உள்ளது. இது போன்றே 'கள்ளாமை' 'வெகுளாமை' என்னும் அதிகாரங்களும் துறவற இயலிலே வைத்து வள்ளுவர் கூறுகிறார், இவை இல்லறத்தாருக்கு முற்றக் கடியும் குற்றமன்மையின். இடம், பொருள், ஏவலை முன்னைத் தவத்தாற் பெற்று நல்லறமாகிய இல்லறம் நடத்துபவர்கள், தங்கள் புதல்வர்களையோ ஏவலாளர்களையோ அவர்களிடம் தவறு கண்டவழி இன்சொற்களாலே திருத்த முயலுவர். திருந்தாவிடில், வெகுளியின் பயனாகிய வன்சொல் முதலியவற்றை மேற்கொள்ள நேருமன்றே! இதுபோற் பிறவும் காண்க. துறவிகளுக்கு இச்சூழ்நிலை இல்லையாதலால், அவ்வதிகாரங்களை அவ்வியலிற் கூறவேண்டியதாயிற்று.

இனி, அவ்வாய்மை என்ற அதிகாரத்திலுள்ள முதலும் அடுத்ததுமாகிய குறட்பாக்கள்,

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."

என்பன.

இவ்விரண்டு குறட்பாக்களையும் ஆழமாக—அகலமாக—நுட்பமாகச் சிந்தித்துப்பார்த்தால், மெய் பொய் என்ற சொற்களுக்கு உலகத்தார் என்ன பொருள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும், அப்பொருள் எவ்வாறு திருவள்ளுவரால் மறுக்கப்படுகிறதென்பதும் நன்கு விளங்கும். முதற்குறளை எடுத்துக்கொள்வோம். அதன் பொழிப்புரையாவது, "வாய்மை என்று அறிவொழுக்கஞ் சான்ற பெருமக்களாலே சிறப்பித்துச் சொல்வப்படுவது யாது எனின், அது பிறிதோர் உயிர்க்குச் சிறிதும் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதல்" என்பது. 'அறிஞர்களாற் சிறப்பித்துச் சொல்லப்படும் வாய்மையின் இலக்கணம் இது' என்ற குறிப்பால், அறிவு குறைந்தவர்கள் 'நடந்ததைச் சொல்லுதலே மெய்' என்று கருதிச் சொல்கிறார்கள் என்பதும் அதுதானும் பிற உயிருக்குத் தீங்கு பயவாதாயின் மெய் என்றும், தீங்கு பயப்பின் பொய் என்றும் கொள்ளக் கிடக்கிறது.

இனி, இரண்டாவது குறளை எடுத்துக்கொள்வோம். அதன் பொழிப்புரையாவது, "நிகழாததைக் கூறுதல் பொய் என்று சாதாரண மக்கள் கருதும் பொய்ச் சொற்களும், பிறருக்குச் சிறந்த நன்மையைத் தருமாயின், அவை மேலே சென்ன வாய்மையேயாகும்" என்பது. இதிலுள்ள "பொய்மையும்" என்ற சொல்லால் உலகத்தார் அதற்கு என்ன பொருள் கொண்டிருக்கிறார்கள் என்பதைக்காட்டி, பிற உயிர்க்குத் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறுதலாகிய மெய்யோடு, அவ்வுயிர்க்குச் சிறந்த நன்மை அதாவது அதற்கு நேர்ந்த கேடோ, சாக்காடோ, நிகழாததைக் கூறுவதால் நீங்குமாயின் அதனைச் செய்யும் சொல்லும் மெய்யாகவைத்து அறிஞர்களாற் கருதப்படும் என்கிறார். எனவே, இந்த இரண்டு திருக்குறட்பாக்களாலும் மெய் இரண்டு என்றும் பொய் இரண்டு என்றும்

வள்ளுவர் பிரித்துக் காட்டுகிறார். அவை, பிற உயிருக்குத் தீங்கு தாராத நிகழ்ந்ததைக் கூறுதலும், பிற உயிருக்கு ஒப்பற்ற நலத்தைத் தருகிற நிகழாததைக் கூறுதலும் மெய்யாகும் என்பதும், பிறவுயிருக்குத் தீங்கு தருகிற நிகழ்ந்ததைக் கூறுதலும் அதற்கு நன்மை தாராத நிகழாததைக் கூறுதலும் பொய்யாகும் என்பதுமாம். இவற்றால் தேவர் தமது திருவுள்ளத்தைத் தெள்ளத் தெளியக் காட்டிவிட்டார். அவ்வுள்ளமாவது உயிரிரக்கம் (ஜீவகாருண்யம்) என்பது. எனவே, ஒருவனுடைய அறிவுக்கு உள்வீடு எதுவெனின், உயிரிரக்கமேயாகும். இன்னும் சத்தியம் என்ற பொருளைத் தருதற்கு உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற மூன்று சொற்களைத் தமிழர்கள் கையாண்டனர். இம்மூன்று சொற்களும் பொதுவகையில் சத்தியம் என்ற பொருளிலும் வருவனவாயினும், சிறப்பு வகையில் தனித்தனிப் பொருளைக்காட்டி, நமது முன்னோர்களின் உயர்ந்த வாழ்க்கையைக் காட்டுகின்றன. 'மை' என்பது தன்மைப்பொருளைக் குறிக்கும் விகுதியாதலால், உண்மை என்பது, உள்—மை என்று பிரிக்கப்பட்டு உள்ளத்தின் தன்மை என்ற பொருளையும்; வாய்மை என்பது வாயின் தன்மை என்ற பொருளையும்; மெய்ம்மை என்பது உடம்பின் தன்மை என்ற பொருளையும் தந்து', உள்ளத்தாற் பிற உயிர்களுக்கு நலந்தருகின்ற எண்ணங்களை எண்ணியும், அங்ஙனம் எண்ணிய எண்ணங்களை வாயினாற் சொல்லியும், சொன்ன நல்லவற்றை மெய்யாற் செய்தும் முடிக்கின்றவன் எவனோ, அவன்தான் முழுச் சத்தியவான ஆவான் என்ற கருத்தை விளக்குதற்கன்றோ அந்த மூன்று சொற்கள் எழுந்தன? எனவே, மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்களாலும் பிற உயிர்கட்கு நலம் செய்து வாழ்தலே, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதாகும்' என்று கூறுவது வள்ளுவர் நூலாதலால், அதற்குரிய பதினான்கு பெயர்களுள் 'பொய்யாமொழி' என்பதும் ஒன்றாயிற்று. அந்நூலுக்கு அப்பெயரிட்டவர் வெள்ளி வீதியார் என்னும் புலவர் பெருமான். அப்பாடல்,

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா

அதற்குரியார் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியார் அல்லாதார் இல்."

என்பது. முக்காலத்திலும் பொய்யாத மொழி கூற வேண்டுமானல், அது தெய்வப்புலமை உடையாருக்கே யன்றி ஏனையோருக்கு இயலாததொன்று. திருவள்ளுவமாலையிற் காணப்படும் 'நப்பாமுதற்பாவால்' என்ற முதற் குறிப்பையுடைய வெண்பாவின் ஈற்றடியில், அதனைப் பாடிய 'கீரந்தையார்' என்னும் புலவர், திருவள்ளுவரைத் 'தெய்வத்திருவள்ளுவர்' என்று கூறுதல் காண்க. தெய்வப்புலமையுள் உலகியற்புலமை அடங்கும்! ஆனல், உலகியற்புலமையுள் தெய்வப்புலமை அடங்காது.

பொய்யாமொழியில் ஒன்று

உலகத்தில் மக்களுடம்போடு காணப்படுகின்றவர்களெல்லாம் மக்களாகிவிடமாட்டார்கள் என்றும், அறிவும் அதனாற் பெற்ற மக்கட்பண்புமுடையவர்களே மக்களாக அறிஞர்களாலே மதிக்கப்படுகின்றார்கள் என்றும், அவ்வறிவுதானும், மணற்கேணியைத் தோண்டத்தோண்ட நீரூறுவதுபோலக் கற்கவேண்டிய நூல்களைக் கற்கக் கற்கப் பெருகுகிறதென்றும், அப்படிப் பெருகிய அறிவுடையாரே எல்லாமுடையவர் என்றும், அஃதில்லாதார் வேறுள்ள எல்லா நலமும் உடையராயினும் வறுமையாளராகவே கருதபபடுவாரென்றும் திருவள்ளுவர் கருதுகிறார் என்பதை,

"மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்."

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."

என்னும் திருக்குறட்பாக்களால் அறியலாம். அத்துணைச் சிறப்பாகக் கருதப்பெற்ற அறிவுதானும், உயிர்களுக்குத் தீமை செய்யாமைக்கும் நன்மை செய்தற்கும் காரணமாயுள்ள அருளோடு சேர்ந்து பெருகினலன்றி

அவ்வறிவாற் பயனில்லை என்பது வள்ளுவனாரின் தெள்ளிய கருத்து என்பதை,

> "அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
> தந்நோய்போற் போற்றாக் கடை?"

என்னும் பொய்யாமொழி அறிவிக்கின்றது. இத்திருக் குறளுக்குத் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமான் எவ்வாறு பொருள் கொண்டார் என்றும், அந்தப் பொருளுக்கேற்ப வாழ்க்கை நடாத்திய திருத்தொண்டர் களாக யார் யாரைக்காட்டினார் என்றும், 'திருக்குறளுட் சிலவும் திருத்தொணடருட்சிலரும்' என்ற கட்டுரையில் விரிவாக அறிந்தோம். அதிற் கூறாத கருத்தொன்றை இங்குச் சிந்தனைக்குக் கொண்டு வருவோமாக.

செந்நாப்போதாரின் தீந்தேனன்ன இத்திருக்குறளை ஊன்றி நோக்கினால், 'அருளோடு வளராத அறிவினா லாகுவதுண்டோ?' என்ற தொடர், அவ்வறிவாற் பயனில்லை என்னும் பொருளைத் தருதலோடு 'அழிவதுண்டு' என்ற பொருளையும் குறிப்பால் உணர்த்துமல்லவா! அது 'நல்ல படாஅ பறை' என்ற திருக்குறளின் தொடர், 'நல்ல பறைகள் ஒலிக்கமாட்டா' என்ற பொருளைத் தருதலோடு 'சாப்பறைகள்' ஒலிக்கும் என்ற பொருளைத் தருதல் போல. இன்னும் ஆக்கியோர் கருத்து 'நல்ல பறைகள் ஒலிக்கமாட்டா என்ற பொருளை வலியுறுத் தாமல் 'சாப்பறைகளே ஒலிக்கும்' என்ற கருத்தையே வலியுறுத்தி நிற்றல் போல, 'ஆகுவதுண்டோ?' என்ற தொடரும் 'பயனில்லை' என்ற கருத்தை உறுதி செய்யாமல் 'அழிவுதான் உண்டு' என்ற கருத்தையே வலியுறுத்தி நிற்கின்றது என்று கொள்ளின், அதில் இழுக்கொன்றும் இல்லையல்லவா? அங்ஙனம் கொள்ளின் அது இக்கால நிகழ்ச்சியோடு பொருந்திப் பொய்யா மொழியாதலை நன்கு உறுதிசெய்து காட்டுகிறதென்பதை அறியலாம்.

இந்த நூற்றாண்டிலேயே உலகப் பெரும்போர் இரண்டு நிகழ்ந்து முடிந்தன. அவை முடிந்துவிட்டா லும், இன்றும் நினைத்தால் நெஞ்சு திடுக்கிடும்.

இன்றுள்ள உலக நிகழ்ச்சிகளை (போரைப் பற்றியன) எண்ணினாலும் உணவு உட்கொள்ள முடியாதன்றோ! இத்துணை அச்சத்திற்கு மூலகாரணம்-என்ன? மனித சமுதாயத்தில் வளர்ந்த-வளர்கின்ற விஞ்ஞான அறிவல்லவா! அவ்வளர்ச்சியின் பயனாகப் புதிய புதிய போர்க் கருவிகள் உண்டாயின. 'பரமாணுப் புராணம்' எனப் புராணமும் அறிவுடையோரால் எழுதப்பெற்றது. அவ் வணுக்குண்டு முதலிய புதிய போர்க்கருவிகளால் எந்த நேரத்திலே உலகத்திற்கு அழிவு ஏற்படுமோ என, அறிவோடு அருளையும் வளர்த்த பெருமக்கள் பலரும் எண்ணி ஏங்குகின்றனர். "வல்லரசுகள் ஒன்றோடொன்று மோதிப் போர் தொடுத்தல் அரசியல் நெறியில் வந்த அறநெறி தானே!" எனச் சிலர் ஐயுறலாம். முடியுடை மன்னராகிய சேர சோழ பாண்டியராகிய மூவரும், குறுநில மன்னர்களும்,—ஏன்?—வரையாது கொடுத்த வள்ளல்கள்கூடப் போர் செய்த செய்தி புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. ஆனால், அஃது அரசியல் நெறி: அந்நெறியிற் பொது மக்களுக்கு யாதோர் ஊறும் நேராது. அக்காலத்து அரசர்கள் பகைவர் நாட்டில் படையெடுத்துச் சென்றால், அந்நாட்டு மக்களுக்கு 'எம் அம்பை விடப்போகிறோம். நீங்கள் வெளியே போய் விடுங்கள்' என எச்சரிக்கை செய்வார்களென்பதை,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதலவர் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும்"

எனவும்,

"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்"

எனவும் வரும் புறநானூற்றடிகளால் அறியலாம்.

"சிறப்புடை அரசியலாவன: மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறாதோனையும் மயிர்குலைந்தோனையும் அடிபிறக்கிட்டோனையும் பெண்பெயரோனையும் படையிழந்தோனையும் ஒத்த படை எடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொரு

தலும் முதலியனவுமாம்"; "மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தர்க்கு மறத்துறையினும் அறமே நிகழும்" என வரும் தொல்காப்பியப் புறத்திணையியல் நச்சினார்க்கினியர் உரைப்பகுதிகளாலும் இவ்வுண்மை வெளியாகின்றது. முதல் நாட்போரில் எல்லாப் படைகளையும் இழந்து தனியனாகப் போர்களத்தில் நின்ற இராவணன் மீது இரக்கங்கொண்ட இராமன் சொன்ன செய்தியை,

> "ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
> பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
> நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகில்
> வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

என்னும் கம்பராமாயணப் பாடலாலறிகிறோம்.

இன்னும் வேடர்கள் தங்கள் குலத்தொழிலாகிய வேட்டையாடுதலிற்கூட அறத்தை மேற்கொண்டொழுகினரென்க. அவ்வறச் செயலாவது உடுக்கை போன்ற சிறிய அடிகளையும், மடிந்த சிறு காதுகளையுமுடைய யானைக்குட்டிகளையும், தங்கள் ஆரவாரத்தால் வெருண்டு ஓடுகின்ற மான் கன்று முதலியவற்றையும், கருத்தரித்தன வாய் மெல்ல அடியெடுத்து வைக்கும் பெண் விலங்குகளையும் கொல்லார் என்பது. இதனை,

> "துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
> வெடிபடவிரி சிறுகுருளைகள் மிசைபடுகொலை விரவார்
> அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அலையார்"

என்று கூறிய சேக்கிழார் பெருமான் 'இவ்வாறு அறத்தொழிலை மேற்கொண்டொழுகியவர்கள் யார்?' என்ற கேள்விக்கு விடையளிப்பார் போல,

> "கொடியனஎயிர் முடுகியுமுறு கொலைபுரிசிலை மறவோர்"

என அவர்கள் மறத்தன்மையையும் (வீரம்) 'கண்ணப்ப நாயனார் புராணத்துட் காட்டுவாராயினர். எனவே, மறத்தொழிலையே தங்கள் குலத் தொழிலாகக் கொண்டவர்களின் செயலிலும் அறச்செயல் ஊடுருவி நின்றதென அறிகின்றோம். நமது முன்னோர்களாகிய பெருமக்கள் இங்ஙனம் வாழ்ந்து வந்த

நாட்டிலுள்ள நாம் அமைதியாய் இருந்து வாழ்க்கை நடதத இடமுண்டா? இல்லை! ஏன்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனத்தோடு திருவள்ளுவர் கூறிய பொய்யாமொழியாகிய அருளோடு கூடி வளராமல் தான் மட்டும் வளர்ந்த விஞ்ஞான அறிவினல் அல்லவா! அப்பெருமான் திருவுள்ளப்படி அவ்வறிவு அருளோடு கூடி வளர்ந்திருக்குமானல் உலக முழுவதும் தேனும் பாலாறும் அன்றே ஓடாநிற்கும்? இதனலன்றே, சர்.சி.வி.ராமன், கனம் சி. இராஜகோபாலாசாரியார் முதலிய பேரறிவாளர் பலரும் "விஞ்ஞான அறிவை ஆக்கவேலைக்குப் பயன்படுத்தவேண்டுமேயன்றி, அழிவு வேலைக்குப் பயன் படுத்தலாகாது; அதற்குப் பயன்படுத்தினல் உலக முழுவதும் நாசமாகிவிடும்," என்று எங்கும் பறை சாற்றி வருகின்றனர்? எனவே, திருக்குறள் 'பொய்யாமொழி' என அறிஞர்களாலறிந்து போற்றப்படுதற்கு மேலே காட்டிய 'அறிவினன்' என்று தொடங்கும் திருக்குறள் எத்துணை வலியுடையதாய் இருந்து சான்று பகர்கின்றது என்னும் உண்மையைக் காண்பீர்களாக.

இக்கருத்தை உணர்ந்தே "பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்' ஆரும் துறக்கை யரிதரிது" எனத் தாயுமான அடிகளாற் பாராட்டப்பெற்ற முற்றத் துறந்த பட்டினத்தடிகள், இறைவனை அன்போடு வணங்குவார்க்கு என்னென்ன பேறுகள் வாய்க்கும் என்பதை,

"பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன் பார்க்கும் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்."

எனத் 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யிற் கூறியருளினர். இதனலும் நம் முன்னோர்கள் அழிவு வேலைக்குப் பயன்படுகின்ற வறட்டு அறிவை மட்டும் விரும்பாமல் அருளோடு கூடிய அறிவையே விரும்பினர்கள் என்பதை அறியலாம்.

மற்ருெரு வகையாலும் 'பொய்யாமொழி'யாதலை அறியலாம்

மதம் வேறு, அரசியல் வேறு; மதக்கோட்பாடுகள் அறத்துப்பாலிலும், அரசியற்கோட்பாடுகள் பொருட்பாலிலும் பேசப்படும். மதம் அல்லது அறம் என்பது ஒவ்வொரு மகனும் தனது ஆன்ம முன்னேற்றத்தைக் கருதி மேற்கொள்வது. அரசியல் அல்லது நீதி என்பது பல மக்களுக்குத் தலைவனாக உள்ள காவலன் முதலியோரால் தம்மால் பாதுகாக்கப்படுகின்ற மக்கள் நலத்தைக் கருதி மேற்கொள்ளப்படுவது. ஆதலால், அரசியல் அனைத்தும் அறச் செயலாகும். ஆனால், அறங்கள் நீதிகளாகா. இந்த முடிவை உறுதிப்படுத்திக்கொண்டு பார்க்காவிட்டால், திருக்குறளிலே பல ஐயங்கள் தோன்றலாம்.

"வலியார்முற் றன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து"

என்பது ஒரு குறள். இதன் பொருள், "தன்னை விட வலிமையுள்ளவர்கள், தன்னைத் துன்புறுத்த வந்தபோதோ, அல்லது துன்புறுத்தியபோதோ, தான் பட்ட பாட்டினை, தன்னினும் மெலியவனை நலியப்போம்போது நினைக்கக்கடவன்" என்பதாம். 'அருள் பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது' எனப் பரிமேலழகர் விளக்கம் கூறுகிருர்.

"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை."

என்பது மற்ருெரு குறள், இதன் பொருள், "தம்மைவிட வலிமையுள்ளார்க்குப் பகையாக எதிர்தலைச் செய்யற்க; ஏனை மெல்லியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக," என்பதாம். இந்த இரண்டு குறட்பாக்களும் ஒன்றுக்கொன்று எத்துணை முரண்பாடுடையன என்று விரிக்க வேண்டுவதில்லை. 'பொய்யாமொழியார் கூறுவன அனைத்தும் மெய்யாமொழியன்ருே! அதில் இம்முரண் வரலாமா?' எனின், முதற்குறள் துறவற இயலில் 'அருளுடைமை' என்னும அதிகாரத்திலுள்ளது; எனவே, அது மதசம்பந்தமுடையது. இரண்டாவது குறள் பொருட்பாலில் 'பகை மாட்சி' என்ற அதிகாரத்திலுள்

ளது; எனவே அது, அரசியல் சம்பந்தமுடையது. சமயத்தின் அடிப்படையாக உள்ள அருளுடைமையை அரசியல் மேற்கொள்ளுமானால், அது விரைவில் அழிவது உறுதி. எக்காரணம் பற்றியும் அருளுடைமை (அஹிம்ஸை)யை அரசியலிற் புகுத்தலாகாது. இக் கருத்தை மற்றொரு பொய்யாமொழியுள் அழகுபடக் கூறுகிறார் செந்நாப்போதார். அம்மலரினின்றும் ஒழுகிய தேன் துளி ஒன்று,

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்."

என்பது. இது அரசியலிற் 'செங்கோன்மை' என்னும் அதிகாரத்திலுள்ளது. இதன் பொருள்; "அரசனொருவன் கொலைத் தண்டனைக்குரிய குற்றம் செய்தவர்களை அக்கொலையால் ஒறுத்துத் தக்காரைக் காத்தல் எது போலும் எனின், உழவன் ஒரு களையைப் பிடுங்கிப் பசிய பயிர்களைக் காத்தல் போலும்" என்பது. உழவன் களை எடுக்கும்போது அந்த வயலின் வரப்புவழியாகச் சென்றார் ஒரு ஜீவகாருண்ய மூர்த்தி. அவர் அவ்வுழவனைப் பார்த்து, 'அப்பன், என்ன செய்கிறாய்?' என்றார். 'அடிகளே, களை பிடுங்குகிறேன்,' என்றான் அவன். 'களையென்பது யாது?' என அந்த அஹிம்ஸா மூர்த்தி வினவ, அவன் பிடுங்கிய புல் முதலியவற்றைக் கையிலெடுத்துக் காட்ட, அதைப் பார்த்தவுடனே, "அர அர! பாவம் பாவம்! பாவி, இறைவனாற் படைக்கப்பெற்ற இவற்றை அழிப்பதற்கு உனக்கு அதிகாரம் உண்டா? இனி அவ்வாறு செய்யாதே! இவற்றைப் பிடுங்கிய இடத்திலே நட்டுவிடு; அப்படிச் செய்துவிட்டு ஆண்டவனிடம் மன்னிப்புக் கேள். இன்றேல், நீ மீளா நிரயத்திற்கு ஆளாகுவாய்!" என்று சொன்னால், அவரைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள பைத்தியக்காரர்களின் மருத்துவ நிலையத்திற்கு அனுப்புவதைத்தவிர, வேறு செய்யத்தகுந்த செயலுண்டோ? இல்லை, அதுபோல அரசன் ஒருவன் நீதியோடு பொருந்திய செயலைச் செய்யும்போது அதனை அஹிம்ஸா தர்மத்திற்கு விரோதமானது என எவரும் கருதலாகாது. செல்வாக்கு மிகுந்துள்ளவரும், அவ்

வரசனாலே குருவாகக் கருதி வழிபடப்பெற்ற மகாத்துமா வாயுள்ளவருமாக ஒருவர் இருப்பினும், அவரும் அச்செயலைத் தடுத்தலாகாது. தடுத்து, அதனை அரசன் ஏற்றுக்கொள்ளின, விரைவில் அந்த அரசியல் அழிந்துவிடும். இன்றேல், அவ்வுபதேச கருத்தர் மரணத்திற்குள்ளாவர்.

இனி, அவ்வரசன், தன் தனிப்பட்ட முறையில் தான் மேற்கொண்ட சமயக் கோட்பாட்டின்படி நடக்கலாம். ஆனல், அதனை அரசியலிற்புகுத்த லாகாது.

இக்கருத்தை 'மெய்ப்பொருள் நாயனர்' என்னும் குறுநில மன்னரின் வரலாற்றிற் பரக்கக் காணலாம். அவர் 'சிவவேடமே மெய்ப்பொருள்' என்னும் கொள்கையை உறுதியாகக் கொண்டவர்; தமது கொள்கையும் உயிரும் சமமாக நில்லாமல் ஒன்றைவிட்டாலன்றி மற்றொன்று நிலைக்காது என்னும் ஓர் நிலை ஏற்படுமானல் உயிரை விடுத்துக் கொள்கையை நிலை பெறச் செய்வார்களேயன்றி, கொள்கையை விட்டு உயிரை வைத்திருக்க மாட்டார்கள். இது தொண்டர்களின் பொது இயல்பு. அந்த முறையிற 'சிவ வேடமே மெய்ப்பொருள்' என்ற கொள்கையையுடைய அவரை, அவரிடம் போர் செய்து பல முறை தோற்று ஒடிய 'முத்தி நாதன்' என்னும் பகைவனொருவன் அச்சிவ வேடந் தாங்கி வந்து வஞ்சகமாக் கொன்றுவிட்டான். அவ்வஞ்சகன் வாளினல் அவரைக் குத்திய பொழுதும், அவர் தம் கொள்கையைப் பேணிய அவ்வுறுதிப்பாட்டை "மெய்த்தவ வேடமே மெய்ப் பொருளெனத் தொழுது வென்ருர்" என்னும் அடியாலே சேக்கிழார் குறிப்பிடுகின்ருர். அம் மட்டுமன்றி, தம் வாயிற்காவலனாகிய தத்தனென்பவன் இந்நிகழ்ச்சியையறிந்து அங்கு வந்து, அம்முத்திநாதனைக் கொல்லுவதற்கு வாளை ஓச்சியபோது, 'தத்தா, நமர்' எனத் தடுத்து, அவன் "யாதுநான் செய்கேன்?" என்ன, "எம்பிரான் அடியார் போக மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய்விடு நீ" என்று கூறி, அந்த நிலையிலும் தமது கொள்கையைப் பொன்னேபோலப் பாதுகாத்து உயிர் நீத்தனர் என்று அறிகிரும். ஆனல்,

அஃது அவர் தனிப்பட்ட கொள்கையேயன்றி அரசியற்கொள்கையன்று என்பதை நாம் மறந்துவிடலாகாது. அரசியற்கொள்கையும் அவருக்கு அதுவேயாக இருக்குமானால், பன்முறை எதிர்த்துத் தன் படைகளையெல்லாம் இழந்து பரிபவப்பட்டு ஓடிய முத்தி நாதனென்னும் பகைவன், ஒரு சில மக்களுக்குச் சிவ வேடம் (திருநீறு தரித்து, உருத்திராக்கம் அணிந்து, சடைமுடி தரித்தல்) புனைவித்துத் தானும் அவ்வாறே செய்து கையில் ஆயுதங்களோடும் வந்து எதிர்த்திருப்பான். அத்தொண்டரும் 'சிவ வேடத்தோடு வந்தார்கள்' என்று கருதித் தம் படையுடன் சென்று, அவர்களை வணங்கி, 'சிவனடியார்களே, எங்களனைவரையும் கொன்று நீங்களே இந்த ஆட்சியை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்லியிருப்பாரன்றே! பகைவனுடைய அலுவலும் எளிதில் முடிந்திருக்குமல்லவா! அவர் அரசியற் கொள்கை அது அன்று. ஆதலாலேதான், அவன் அவ்வாறு வரவில்லை. நமது பண்டைய அரசர்களின் கோட்பாடு இதுதான். அவர்கள் தமது தனிப்பட்ட கொள்கையை அரசியலிற்புகுத்தக்கருதாததற்குக் காரணம் யாதாயிருக்குமெனக் கூர்ந்து சிந்தித்தால், அஃது அறிய முடியாததொன்றன்று. இக்காலத்தில் 'ஜனநாயக ஆட்சி' என்றும் 'குடியாட்சி' என்றும் சொல்லப்படும் ஆட்சியின் இலக்கணங்களைத்தும், அக்காலத்திற் செயல் முறையில் (சொல்முறையிலன்று) கொள்ளப்பட்டுப் பெயர்மட்டும் 'முடியாட்சி'யாய் இருந்தது. அம்மன்னர்களைப் பழைய இலக்கியங்கள் பெரும்பாலும் 'காவலன்' என்ற பெயராலும் 'புரவலன்' என்ற பெயராலுமே கூறுநிற்கும். இச்சொற்களின் பொருள் முறையே 'காத்தலில் வல்லவன' என்பதும் 'புரத்தலில் (காத்தல்) வல்லவன்' என்பதுமாகும். எனவே, வல்லவன் என்ற சொல்லிலுள்ள 'வன்மை' என்பது அவன் அறிவு, குணம், ஒழுக்கம் முதலியவற்றைச் சார்ந்து அறிவு வலிமை, குணமேன்மை, ஒழுக்கச்சிறப்பு முதலியவற்றைக் குறித்தலால், எல்லா வகையாலும் சிறந்த காவற்காரன் என்னும் பொருளைத் தருவதாகும். அவனால் ஆளப்படுகின்ற நிலப்பரப்பை எடுத்துக்கொண்டால்,

அஃது ஓர் தோட்டம்; அங்குள்ள மக்களனைவரும் அத்தோட்டத்தின் சொந்தக்காரர்; மன்னன் அத்தோட்டத்தைப் பாதுகாக்கும் காவற்காரன். அவன் காத்தலாகிய தன் கடமையைச் சிறக்கச் செய்து, அக்காவற்குக் கூலி எது உண்டோ, அதைத் தனக்கு உரிமையாகக்கொண்டு வாழ்க்கை நடாத்தும் இயல்பினன். தோட்டத்தின் சொந்தக்காரர் இசைவின்றி எந்தப் பொருளையும் எடுத்துக் கொள்ளும் உரிமை காவற்காரனுக்கு இல்லையன்றோ! அது போல உலக காவலனாகிய அரசனும் மக்களின் உடன்பாடின்றி எதையும் செய்யத் துணியமாட்டான். அம்மக்களனைவரும் சமயக் கோட்பாடுகளில் ஒரே வகையாக இருக்கமாட்டார்களாதலால், அரசன் தன் தனிப்பட்ட கொள்கையை அரசியலிற் புகுத்துவதில்லை. இதனாலேதான் அற நூல் வேறு, நீதி நூல் வேறாயிற்று. இதனை, இராமபிரான், 'இராவணனிடத்தில் யாரையேனும் தூதாக அனுப்பித் தேவியை விடுகிறானா அல்லது ஆவியை விடுகிறானா என்று அறியவேண்டுமென்று என் உள்ளம் கருதுகிறது; அறமும் அதுவே; நீதியும் அதுதான்,' என்று விபீடணனை நோக்கிக் கூறுகின்றான் என்னும் பகுதியில் அறியலாம். அச்செய்யுள்,

"தூதுவன் ஒருவன் றன்னை இவ்வழி விரைவிற் றூண்டி
மாதினை விடுதி யோஎன் றுணர்த்தவே மறுக்கு மாயின்
காதுதல் கடனென் றுள்ளம் கருதிய தறனு மஃதே
நீதியும் அஃதே யென்றான் கருணையின் நிலயம் அன்னான்"

என்பது.

அருளை அரசியலிற் புகுத்தலாகாதென்பதனைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பல இடங்களிற் பொய்யாமொழியுட் காணலாம். "பகைவன் வலிமை குறைந்தவனாயிருக்கும்போதே அழித்துவிடுக; அங்ஙனமன்றி அவன் வலியவனாயபின் செய்யப்புகுந்தால் அவன் உன்னை அழித்துவிடுவான்" என்ற கருத்தைச் சொல்லப் புகுந்த திருவள்ளுவர், 'பிறிதுமொழிதல்' என்னும் அணிவாயிலாக,

"இளைதாக முண்மரங் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து."

என்று கூறுகிறார். எனவே, முக்காலத்திற்கும் ஒத்த இப்

பொய்யாமொழிகளை அரசியலார் மேற்கொண்டொழுகு வாராயின் அது நிலைபெற்ற ஆட்சியாகி, மக்களுக்கு நலந்தருமென்பது முக்காலும் உறுதி.

மற்றொரு பொய்யாமொழி 'வினைபகை என்றிரண்டின் எச்சம் தெரியுங்கால், தீயெச்சம் போலத் தெறும்,'' என்பது. அதாவது, "ஒரு வினையைத் தொடங்கிச் செய்தவன் ஒருவன், 'இதிற் பெரும்பாலும் முடித்து விட்டோம்; எஞ்சியிருக்கும் சிறுபகுதியால் எந்தத் தீங்கும் நேராது,' என்று கருதி முடிக்காமல்விட்டால், அந்த எச்சமும்; பகையைக் களையத்தொடங்கிய மன்ன னொருவன் பெரும்பகுதி களைந்து சிறுபகுதியைவிட்டால் அந்த எச்சமும்; ஒருவன் தன் வீட்டிற்பற்றிப் பரவலாக எரிந்த நெருப்பைப் பெரும்பகுதி தணித்துவிட்டு, 'இச் சிறுபகுதி என்ன செய்யும்!' என்று விட்டால், அந்தத் தீயின் எச்சம் பரவி வீட்டை அழிப்பதைப்போலப் பரவி அழித்துவிடும்'' என்பதாம். இந்த உண்மையை 1914-ஆம் ஆண்டிற் பெரும்போர் தொடங்கி உலகத்தைக் கிடு கிடுக்கச் செய்த 'கெய்சரை' அடக்கிய ஆங்கிலேயர் அப்பகையை முற்றக் களையாமல் விடுத்த எச்சம் பின்னர் 'ஹிட்லர்' வடிவமாய் வந்து அழித்த செய்தியோடும் பொருத்திப் பார்க்கின் பொய்யாமொழி என்பது எத்துணைப் பொருத்தமுடையதென்பதை அறியலாம். எனவே, சமய சம்பந்தமான அறத்துப்பாலிலும், நீதி சம்பந்தமான பொருட்பாலிலும், திருவள்ளுவர் கூறிய அனைத்தும் எக்காலத்தும் பொய்யாமொழியே எனக் கொண்டு அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோமாக.

இக்கட்டுரையின் தொகைப் பொருள்களாவன

பொய்யாமொழி என்பதன் பொருள் என்ன என்பதும், பொய்க்கும் மெய்க்கும் திருவள்ளுவர் கண்ட பொருள் என்ன என்பதும், அவர் பொருள் கண்ட முறைப்படி திருக்குறள் எந்தெந்த வகையாற் பொய்யா மொழியாகக் காட்சியளிக்கிறது என்பதும், பிறவுமாம்.

தமிழ் வாழ்க!